T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLVI NO: 4

March 24th 1983

V211,31 N83
N83·46·4
136014

[வெளியீடு 19-12-1983] உள்ளடக்கம். [Issued 19-12-1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
31 மார் 1984
2662
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

(12)

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 24, 1983—தொகுதி XLVI எண். 4

Thursday the March 24th 1983 Volume XLVI No.4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600 009.

விலை ரு. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

V211,31 N83
N83.464
136014

## உள்ளடக்கம்.

**24-3-1983.**


1. வினாக்கள்—விடைகள்:

   உடுக்குறியிட்ட வினாக்கள் 725—753

2. ஒழுங்குப் பிரச்சினைகள்:

   (அ) பேரவையில் முதலமைச்சர் ஆற்றிய உரை மீது நீதி மன்றத்தில் தொடரப் பெற்றுள்ள வழக்கு. 754—759

   (ஆ) நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றவை பத்திரிகைகள் வெளியிடுவது. 759—761

3. தகவல் கோரல்:

   (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை. 761—762

   (ஆ) வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள—உண்ணாவிரதம். 762

4. ஒத்திவைப்புத் தீர்மானம்:
   வாரத்திற்கு இரண்டு இந்திய படம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப் பெறும் என்கிற அறிவிப்பு; 762—776

5. கவன ஈர்ப்பு:

   இராமநாதபுரம் மாவட்டம், பரளச்சி கிராமத்தில் பேருந்து, தண்ணீர் வசதி கோரி மறியல் செய்தவர்கள் மீது காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை. 776—784

6 வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

   (அ) கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.
   (ஆ) கோரிக்கை எண்.—6 பத்திரப்பதிவு
   (இ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்
   (ஈ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்
   (உ) கோரிக்கை எண். 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு } 784—848

   மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி 851—872

   திரு. பாபு ஜனார்த்தனன் 789—792
   784,785,787, 788,851—870

| | | |
|---|---|---|
| | திரு. ந. குலசேகரபாண்டியன் | 792—796 |
| | திரு. எல். இளையபெருமாள் | 796—801 |
| | திரு. ஏ. தங்கராசு | 801—804 |
| | திரு. டி. மணி | 804—807 |
| | திரு. ஆர். ரங்கசாமி | 807—811 |
| | திரு. செ. சிவசாமி | 811—815 |
| | திரு. பம்மல் நல்லதம்பி | 815—818 |
| | திரு. கே. உச்சி | 818—821 |
| | திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் | 811—829 |
| | திரு. கே. ஆர். கணபதி | 829—831 |
| | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 831—835 |
| | டாக்டர் கே. சமரசம் | 835—837 |
| | திரு. கு. அ. செங்கோட்டையன் | 837—840 |
| | திரு. வி. கிருஷ்ணமூர்த்தி | 840—848 |
| 7. | அறிவிப்பு: | |
| | பேரவை அலுவல் | 849—850 |
| 8 | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: | 872—873 |




## வியாழக்கிழமை, 1983 மார்ச் 24

பங்குனி 10, துந்துபி–திருவள்ளுவர் ஆண்டு 2014,

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

ஒரு செயலை அல்லது ஒரு தொழிலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம். ஆனால் சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவரும் மேல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

* வினா எண்- 481—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவரும் மேல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 1975–ம் ஆண்டு முதல் தேர்வு நிலை வழங்க அரசு ஆணையிட்டு இருந்தும் இதுநாள்வரை தேர்வுநிலை வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

(இ) இனி எப்போது தேர்வுநிலை வழங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவரும் மேல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, 1975–ம் ஆண்டு முதல் தேர்வு நிலை வழங்க அரசு ஆணையிட்டு இருந்தும் இதுநாள்வரை தேர்வு நிலை வழங்கப்படவில்லை என்பது உண்மை இல்லை.

(ஆ) மற்றும் (இ): வினாக்களுக்கு இடமில்லை

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அந்த ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையல்ல என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு சென்ற ஆண்டே அவர்கள் கோரிக்கைகள் வைத்தது உண்மையா? அந்தக் கோரிக்கைகளில் ஏதாவது ஒன்றை அரசாங்கத்தின் மூலமாகவே செய்வதற்கு ஏற்ற வகையிலே அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிற்பட்ட நலத்துறையின் கீழ் இயங்கும் 8 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2 மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவருகிற 10 மேல்நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களில் திருவாளர்கள் பி. சிவாஜி, ஐ. சௌந்தரபாண்டியன் இருவருக்கும் 1975 ஆம் ஆண்டிற்கு முன்பே தேர்வு நிலை வழங்கப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு திருவாளர்கள் எம். சந்தானம், பி. பரமன் ஆகிய இருவருக்கும் தேர்வுநிலை வழங்கப்பட்டுள்ளது. தேர்வுநிலை பெற்ற மேற்கூறிய நான்கு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் 4-12-1981 ஆம் நாளிட்ட சமூக நலத்துறை அரசு ஆணையின்படி புதிய சம்பள விகிதம் 1-4-1975 முதல் கொண்டே வழங்கப்பட்டிருக்கிறது. நாம் ஆணையிட்டது 1981 ஆம் ஆண்டு என்றாலும் அவர்களுக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய 1-4-1975 முதல் கொண்டே வழங்கப்பட்டு இருக்கிறது. பி. சிவாஜி உள்பட மேற்கண்ட நால்வருக்கும் அரசாணை 912, சமூக நலத்துறை 4-12-1981 இன்படி தேர்வுநிலைக்குரிய சம்பளம் நிலுவையில் உள்ள சம்பள பாக்கி முழுமையும் வழங்கப்பட்டு விட்டது. வரிசை எண் 10 இல் குறிப்பிடப்பட்ட திரு எஸ். பெருமாள்சாமி உடற்பயிற்சி ஆசிரியர், அவருடைய பணி 19-4-1966 முதல் ஒழுங்கு செய்யப்பட்டது. அவர் 1964 ஆம் வருடம் முதல் உடற்பயிற்சி ஆசிரியராக தெரிவித்து இருப்பதால் அதற்கான ஆதாரங்கள் வேண்டி அவருக்கு தேர்வு நிலை வழங்குவது குறித்து நடவடிக்கையில் உள்ளது என்று கள்ளர் சீரமைப்பு தனித்துறை ஆட்சியர் தெரிவித்துள்ளார். இதைத் தவிர மற்றைய நிலைமைகள் இல்லை.

## சென்னையில் கட்டப்படும் மீன்பிடித் துறைமுகத்துக்கு சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் பெயரிடும் திட்டம்.

* வினா எண் 485— திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரத்தில் கட்டப்பட்டுள்ள மீன் பிடித் துறைமுகத்துக்கு சிந்தனைச்சிற்பி சிங்காரவேலரின் பெயரிட அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத் துறைமுகத்துக்கு அப்பெயர் அமைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, மறைந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சிறந்த பகுத்தறிவுவாதி, நல்ல பொதுவுடைமைவாதி என்பதை என்னைவிட நாவலர் நன்கு அறிவார்கள். ஏன் என்றால் ஒரு கால கட்டத்திலே பகுத்தறிவை தெரிந்து கொள்வதிலும், பொதுவுடைமையைத் தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் காட்டியவர் என்பதை நான் நன்கு அறிவேன். ஆகவே சிங்காரவேலரைப்பற்றி அனைவரும் தெரிந் திருக்கிறோம். சிங்காரவேலருடைய பெயர் ஒரு படகு கட்டும் நிலையத்திற்கு வைத்திருந்தார்கள். அதையும் இப்போது மூடி விட்டதால் அந்த வாய்ப்பும் இப்போது இல்லை. நாம் பாரதி விழா கொண்டாடி இருக்கிறோம். பாரதியாருடைய இறுதி நாளில் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர் அவர் இன்னும் சொல்லப்போனால் அவருக்குப் பால் ஊற்றியது ஆகக்கூட சொல்கிறார்கள். அதற்குரிய நபர் 84 வயது மதிக்கத்தகுந்த முருகேசனார். ஏ. எஸ். அய்யங்காருடைய பகத்வுஹஸிலே இருக் கிறார். அவரே சாட்சி. ஆகவே பாரதியார் விழா கொண்டாடுகிற இந்த காலகட்டத்திலே பாரதியாரின் இறுதிக் காலத்திலே உறுதுணையாக இருந்த சிங்காரவேலருடைய பெயரை வைப்ப தோடு சென்னை துறைமுகத்திலே பாரதி டாக்ஸ் என்று வட கோடியிலே இருக்கிறது, அதற்கு அடுத்து மீன்பிடித் துறைமுகம் இருக்கிறது, பாரதியாருக்குப் பக்கத்திலே உள்ள மீன்பிடித் துறை முகத்திற்கு சிங்காரவேலருடைய பெயரை வைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்—இது மாநில அரசு வைப்பதல்ல, மத்திய அரசை வலியுறுத்தி—கட்டாயமாக வைக்கவேண்டும் என்று உடனடியாக வைக்கவேண்டுமென்று வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புதியதாக கட்டப்படுகின்ற மீன்பிடித் துறைமுகத் திற்கு மறைந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் பெயரை வைக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசிற்கு உண்டு அதைத் தவிர பல்வேறு அமைப்புகளும், மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல அவருடைய பெயரை வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றன. அவர்கள் மீனவர் சமுதாயத்தில் பிறந்து சிறந்த தேசபக்தராகவும், சிறந்த சுதந்திர போராட்ட வீரராகவும் இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் சிறந்த பகுத் தறிவு வாதியாகவும், விளங்கி சிறந்த சிந்தனையாளர் என்று பெயர் பெற்றவர். அவருடைய பெயரை அந்த மீன்பிடி துறை முகத்திற்கு வைக்கவேண்டுமென்ற எண்ணம்தான் அரசிற்கு இருக் கிறது. அதை மத்திய அரசிற்கும் தெரிவித்து இருக்கிறது. அதற்கிடையில் 10-12-1982 நாளிட்ட இந்த அரசின் கடிதத்தில்

அந்த மீன்பிடித் துறைமுகத்தினுடைய நிர்வாகப் பராமரிப்பை தமிழக அரசிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும் வேறு பல பகுதிகளிலும் இருப்பதைபோல இங்கும் இருக்கவேண்டும் என்றும் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை வருகிறபோது நாமே அந்தப் பெயரை வைத்து விடலாம். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாவிட்டாலும் கூட மத்திய அரசை வற்புறுத்தி அந்த பெயரை வைப்பதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே. மாண்புமிகு நாவலர் அவர்கள், இந்த மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் டிரஸ்ட் மேற்பார்வையில் போகப் போவதைப் போன்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாநில அரசு விட்டுக் கொடுக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். ஏனென்றால் அது நம்முடைய உரிமையைப் பறிப்பது போலாகும். இது மாநில சர்க்காருடைய பொறுப்பின்கீழ் வரவேண்டும். கன்ஸ்ட்ரக்ஷன் பாப்பஸ்தான் கவர்ன்மென்ட் ஆப் இண்டியா. ஃபைனான்ஸ் கூட அவர்கள் செய்யலாம். அனால் சூப்பர்விஷன் மற்றும் அட்மினிஸ்ட்ரேஷன் மாநில அரசிடம் தான் இருக்கவேண்டும். ஆகவே அந்த வகையில் மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்ற அந்த கருத்தை 10-12-1982 நாளிட்ட கடிதத்தில் மீன்பிடித் துறை முகத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பை தமிழக அரசிடம் விட்டுவிட வேண்டுமென்று அதற்கு இசைவைத் தரவேண்டு மென்று மத்திய அரசை கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேற் கொண்டு வற்புறுத்தி வருகிறோம். அவ்வாறு பல இடங்களில் அந்தந்த மாநிலங்களின் மேற்பார்வையின் கீழ் தான் வைத்திருக் கிறார்கள். அதையும் நாம் சுட்டிக்காட்டி இருக்கிறோம். அதற் காக வற்புறுத்தப்படும் என்பதையும் குறிப்பிட்டு கூறிக் கொள் கிறேன்.

திரு. இரா, கருப்பையா: தலைவர் அவர்களே, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்கள் சிறந்த தேசபக்தராக, பகுத்தறிவு வாதியாக இருந்ததோடு மட்டுமல்லாமல் அவர் தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்திய நாட்டிலே முதன் முதலாக பொது வுடைமை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் ஆவார்கள். அவர் பெயரில் இந்த துறைமுகத்திற்கு பெயர் வைக்க வேண்டுமென்று மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது காலதாமதமானாலும், சென்னையில் அவருக்கு நினைவுச் சின்னமாக ஒரு ஸ்தூபியை எழுப்புவதற்கு தமிழக அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த துறைமுகத்திற்கு சிந்தனையாளர் சிங்காரவேலர் பெயரை வைக்கவேண்டும் என்பதில் நாம் உன்னிப்பாக இருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று சொல்லியிருப்பதில் ஆட்சேபணை இல்லை. அதை தனியாக பரிசீலிக்க வேண்டும்.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரை இந்த மீன்பிடி துறை முகத்திற்கு வைக்க வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசிற்கு எழுதி அனுப்பியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அனுமதி பெறுவதில் காலதாமதம் ஆகிறது. மீனவர்கள் தினமும் கடலில் மீன் பிடிக்க செல்கிறார்கள். ஆகவே கடற்கரை ஓரத்தில் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் சிலையை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த துறைமுகத்தினுடைய நிர்வாகம், பராமரிப்பு போன்றவை தமிழக அரசிடமே வருகிறபோது இந்த பெயர் வைக்கிற தன்மையை நாம் எளிதாக செய்து முடித்துவிடலாம். ஆகவே அதற்காகத் தான் வற்புறுத்தி வருகிறோம்.

### குமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் துறைமுகம்

*வினா எண். 486—திரு. சு. முத்துகிருஷ்ணன், திரு. டி. மணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் சின்னமுட்டம் துறைமுகம் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இதற்கான முதலீடு என்ன?

(இ) இதிலிருந்து கிடைக்கும் மீன்களின் மீதான வருமானம் என்ன?

(ஈ) எத்தனை இயந்திர படகுகள் துறைமுகத்தில் நிற்க முடியும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) குமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம் பணியை தொடங்குவதற்கு தேவையான பொறியியல் மற்றும் வேறுபல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தை நிறை வேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வைப் பொறி யாளர் ஒப்பந்தப்புள்ளிகளை பெற்று வருகிறார். ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டு கட்டுமானப் பணி விரைவில் தொடங்க உள்ளது. சில்லரை கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

(ஆ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு ரூ. 234 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50 விழுக்காடு முதலீட்டை மைய அரசும் மீதமுள்ள 50 விழுக்காட்டை மாநில அரசும் ஏற்கும். இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 234 இலட்சம் செலவாகும் என்று 1979-80-ல் மதிப்பிடப்பட்டது. தற்போது வெகுவாக கூடியுள்ள விலைவாசியை கருத்திற்கொண்டு இதனை கட்டி முடிக்க ரூ. 396 இலட்சம் செலவாகுமென தற்போது மதிப்பிடப்பட்டு, இந்த திருத்திய மதிப்பீடு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மத்திய அரசு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று அதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டை அனுப்பக் கோரியுள்ளது. திருத்திய மதிப்பீடு தயாரிப்பது நடவடிக்கையில் உள்ளது.

(இ) ஆண்டுதோறும் சுமார் 8.[illegible] கோடி ரூபாய் மதிப்புள்ள 55,000 டன்கள் மீன் பிடிக்கப்படலாமென திட்டவரைவில் மைய அரசின் நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

(ஈ) இத்துறைமுகத்தில் விசைப்படகுகள் 240 மற்றும் பெரிய நாவாய்கள் 10 தங்க வசதியுள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்தில் ஆரம்பிக்கவிருக்கும் இந்தத் துறைமுகம் சம்பந்தமான பல்வேறு விவரங்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்றையதினம் மீனளத் துறை மானியத்தின் பொழுது குறிப்பிட்டார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே அது ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அரம்பிக்கப் படவில்லை. எனவே, துரிதமாக ஆரம்பிப்பதோடு, அந்த மாவட்டத்திலே சரியான மீன்கள் கிடைக்காத காரணத்தாலே, அடுத்த மாவட்டத்திற்கு மீனவப் பெருமக்கள் சென்று விடுகிறார்கள் சீசன் வருகிற நாட்களில். நான் கடந்த வருஷமே ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தேன். இதற்கடுத்தபடியாக, இதில் சிறிய படகுகளைக் கரை ஏற்றுவதற்கு தூத்தூரிலே ஒரு படகு நிலையத்தை ஆரம்பிப்பதற்கான திட்டத்திற்கு மாநில அரசு மத்திய அரசிடத்தில் வேண்டுகோளாக வைத்து, அமுல் நடத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்லறைக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஆனால், ஒப்பந்த வேலைகள் முடிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் துவக்கப்பட வேண்டும். அதற்காகத்தான், ஒப்பந்தப்புள்ளியை மேற்பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்த ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று, அதனுடைய திருத்திய மதிப்பீட்டை





அனுப்பும்படி மத்திய அரசு கேட்டிருக்கிறது. 1979-80-லே நாம் ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டிலே திட்டம் போட்டாலும், இப்பொழுது ரூ. 39 இலட்சமாக ஆகிவிட்டதன் காரணமாக, மத்திய அரசின் ஒப்புதல் வந்தபிறகு, — நாம் பாதி செலவும், அவர்கள் பாதி செலவும் ஏற்கவேண்டும். ஆகவேதான் பெரிய கட்டுமானப் பணி இன்னும் தொடங்கவில்லையென்றும் செயலாக்கப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டன என்றும் சொன்னேன். மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பிறகு இந்தத் திட்டத்தின் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் துறைமுக வேலைகள் முடிவடைய இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என கணிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அதைச் சொல்வதற்கில்லை. இந்தத் திட்ட மதிப்பீடுகள் மறுபடியும் வந்து, ஒப்பந்தம் தந்த பிறகு, அதை நிறைவேற்றுகின்ற சூழ்நிலைகள் துவக்கப்படும்போது வேண்டுமென்றால், எவ்வளவு காலத்திற்குள் அது முடியும் என்று சொல்லலாம்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக திருத்திய மதிப்பீடு அனுப்பப் பட்டிருக்கிறது. ரூ. 396 இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டு இன்றைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் காலதாமதம் ஆகிக் கொண்டே போகுமானால், அதனுடைய மதிப்பீடு, செலவு அதிகரிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு உடனடியாக, மத்திய அரசை அணுகி, இந்தத் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வாங்கி, உடனடியாகத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான அனுமதி சென்ற ஆண்டு இறுதியில்தான் நமக்குக் கிடைத்தது. அதற்குப் பிறகு தான் மறுபடியும் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, திருத்திய மதிப்பீடுகள் போட வேண்டி வந்தது. அந்த மதிப்பீட்டையும், ஒப்பந்தப் புள்ளியையும் பெற்று, அந்தத் திருத்திய மதிப்பீட்டைச் சேர்த்து அனுப்பும்படி மத்திய அரசு கேட்டிருக்கிறது. இனி மேல் அதில் சங்கடங்கள் அதிகம் இல்லை. அவர்கள் ஒப்புதல் கொடுத்ததற்குப் பிறகு விரைவிலே துவங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று காலந்தாழ்த்திச் செய்யக் கூடாது என்பதுதான் அரசினுடைய எண்ணம். காலம் தாழ்த்த, தாழ்த்த, விலைவாசிகள் இன்னும் ஏறும், செலவினம் ஏறும் என்பதை மனதில் வைத்துக் கொண்டுதான் விரைவிலே இதை முடிக்க, தக்க முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டம் துறைமுகத்திற்குத் தேவையான ரோடு அமைப்பதற்கு அந்தப் பகுதியில் இருக்கும் ஒருசிலர் தகராறு பண்ணுவதாக செய்தி அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? ஆமென்றால், அப்படி ரோடு அமைப்பதற்குத் தகராறு செய்யக்கூடியவர்களை அழைத்து, இந்தப் பிரச்னையைச் சுமுகமாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால், எப்படியும் சின்னமுட்டத் துறைமுகத்தை சிறப்பான முறையில் அமைக்க முன் வந்ததற்குப் பின்னால், அதற்கான சாலை வசதிகள் கட்டாயம் செய்துதான் தரவேண்டும். அதிலே எப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தாலும் அதை முறைப்படி தீர்த்து, நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தினுடைய சப்சிடி எவ்வளவு, அதாவது அவர்கள் எவ்வளவு போடுகிறார்கள், மாநில அரசாங்கம் எவ்வளவு போடுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், 50% மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. 50% மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. இதற்காக முன்பு 234 லட்சமாக இருந்தது. அதிலே பாதி மாநில அரசாங்கம், பாதி மத்திய அரசாங்கம் இப்போது 396 இலட்சமானதால் அதிலும் மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி.

ஓய்வுபெற்ற கிராம ஊழியர்களுக்கான சலுகை.

*வினா எண். 526—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓய்வு பெற்றுள்ள கிராம ஊழியர்களுக்கு, பதவி இழந்த கிராம அதிகாரிகளுக்கு வழங்க இருக்கும் ஓராண்டு பணிக்கு 15 நாட்கள் ஊதியம் போன்ற சலுகை வழங்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவி இழந்த கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக புதியதாக எத்தனை கிராம அதிகாரிகளை அரசு நியமித்திருக்கிறது? இன்னும் எத்தனை பேர் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இதுவரையிலும் 5246 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நியமிக்கப்பட வேண்டியவர்கள் 7,304 என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக நியமிக்கப்பட்ட கிராம முன்சீப்களுக்கு அரசு ஏதாவது டிரெய்னிங் கொடுக்கிறதா ? என்னென்ன வகையில் டிரெய்னிங் கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கிராம நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நில அளவை பற்றி ஒரு மாதமும், கிராமங்கள் விரிவாக்க ஆய்வு பற்றி 6 வார காலமும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சற்றைக்கு முன்னாலே சொன்ன பதிலிலே 5,246 கிராம உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும், 7,304 இன்னும் நியமனம் செய்ய இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். ஆக இன்றைக்கு தமிழகத்திலே பாதிக்கு மேல் கிராம உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்தால், கிராமத்தில் இருக்கின்ற அரசுக்குச் சொந்தமான மரங்கள் வெட்டப்பட்டும், கிராமங்கள் அரசிற்கு வரவேண்டிய கடன் பாக்கியை வசூலிக்கப்படாமலும் இருக்கின்ற சூழ்நிலையில், இன்னும் ஏன் அந்த 7,304 பேரை நியமனம் செய்வதில் காலதாமதம் ? அவர்களை எப்போது இந்த அரசாங்கம் பதவி நியமனம் செய்ய முடிவு செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தனை நிர்ணயச் கல்வித் தகுதி தேர்ந்தெடுக்கப்படாத முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு இல்லாமையால், அத்தனை பேரும் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களும் 6-12-82 டிவிஷன் பெஞ்ச் முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த ரிட் மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் கல்வித் தகுதியைக் குறித்த விவரங்களை உச்சநீதிமன்றத்தின் மூலமாகப் பெற வேண்டி 3 வார காலத்திற்குள் அவற்றைத் தருமாறு ஆணையிட்டது. வழக்குகள் ஒத்தி போடப்பட்டுள்ளன. இது வரை அந்தகைய விவரங்களைப்பற்றி நீதிமன்றத்திலிருந்து முன்னாள் கிராம அதிகாரிகள் பெறவில்லை. உயர்நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை, உடனே எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. நி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 5,000-க்கும் மேற்பட்ட கிராம உத்தியோகஸ்தர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். 7,000-கரும்

அதிகமான இடங்கள் காலியாக உள்ளது, என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். சர்வீஸ் கமிஷன் எழுதி அதிலே தேர்வும் பெற்று இருக்கக்கூடியவர்களை இந்த காலியாக உள்ள இடங்களில் நியமனம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அது எப்போது நடைபெறும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் கேட்ட கேள்விக்கு நான் சொன்ன பதிலே இதற்கும் பொருந்தும் என கருதுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சர் கூறிய போது போடப்பட்ட அதிகாரிகள் 5,000, போடப்பட இருப்பது 7,000 — என்று சொல்வது, எல்லாவற்றையும் சேர்த்தாலும், 13,000 தான் வரும். ஆனால் கிட்டத்தட்ட தமிழகத்தில் 16,000 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. மொத்த கிராமங்களிலும் அந்த அதிகாரிகள் நியமிக்கப்பட மாட்டார்களா ? அந்த பணியைச் செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய் கிராமங்கள் இப்போது இருப்பது 11,954. 11,954 ரெவின்யூ கிராமங்களுக்கு 12,550 கிராம அதிகாரிகள் போடப்பட்டுள்ளார்கள். சில ரெவின்யு கிராமங்களில் குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் குக்கிராமங்கள் மெயின் கிராமங்களில் சேர்க்கப்படும். அவர்களுக்கு முழுநேரப் பணியானதால், இந்தப் பதவிகள் 12,550 போதும்.

[முற்பகல் 9-20]

திரு. எம். என். மாணிக்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷன் மூலமாக பணியாளர்களை நிரப்புவதற்கு உயர்நீதி மன்றம் தடை வழங்கியுள்ளதா ? அப்படி தடை வழங்காமல் இருந்தால் அவர்களை நியமிப்பதிலே அரசுக்கு என்ன குறை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு பெரிய கிராமமாக இருக்கின்ற கிராமங்களுக்கு முன்பு 2, 3 அதிகாரிகள் இருந்த நிலைமை மாறி, அதாவது கணக்கப் பிள்ளை, மணியக்காரர் போன்றவர்கள் செய்த பணியை ஒருவரே ஏற்றுக்கொள்வதினாலே பெரிய கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட கிராமங்களை எல்லாம் இரண்டாகப் பிரித்து அங்கே அடிஷனல் வில்லேஜ் ஆபிசர்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முழுநேர கிராம அதிகாரிகள் போடுகிறபோது அந்தக் காரியங்களை எல்லாம் அவர்கள் பார்க்க முடியும் என்று அரசு கருதுகிறது. அப்படி ஏதாவது பெரிய கிராமங்களாக இருந்தால், வேலைப் பளு அதிகமாக இருந்தால், அப்போது வேண்டுமானால் அந்தக் கிராமத்தை இரண்டாகப் பிரித்து அதிகமான கிராம அதிகாரிகளைப் போடுவதற்கு அரசுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 5 ஆயிரம் பேருக்கு மேல் நீங்கள் ஏற்கனவே இருந்த அந்த கிராம அதிகாரிகளையெல்லாம் நியமித்து இருக்கிறீர்கள். பாக்கி இருக்கின்ற இடங்களில் அவர்களுக்கு நீதிமன்றத் தீர்ப்புக்கு பிறகு வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் எந்த வேலையும் இல்லாமல் பல ஆயிரக்கணக்கான கிராம அதிகாரிகள், சாப்பாட்டுக்குக்கூட வழி இல்லாமல் அவர்கள் எல்லாம் மிகவும் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நிரந்தரமாக பென்சன் தொகை கொடுப்பது போலவோ அல்லது பொத்தமாக ஓய்வு பெறுகின்ற நேரத்தில் ஒரு தொகையைக் கொடுத்து அவர்களுடைய வாழ்நாளில் பட்டினி இல்லாமல் அவர்கள் வாழ்வதற்கான ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் கொண்டுவந்தபோது ஒரு வருஷம் வேலை செய்தவர்களுக்கு 15 நாள் என்று கணக்கிட்டு, எத்தனை வருடங்கள் வேலை செய்தார்களோ அதற்குத் தகுந்த மாதிரி அத்தனை 15 நாட்கள் என்று கணக்கிட்டு மொத்தமாக கொடுப்பதாகத்தான் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப் பட்டது. இதிலே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றபோது அவர்களுக்கு வேலை செய்யாமலே சம்பளம் கொடுக்கவேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. அப்படி ஆணையிட்ட போது, அவர்களுக்கு எல்லாம் சம்பளம் கொடுக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் இந்த அரசு பெருந்தன்மையாக அந்தச் சட்டம் வந்தபோது, யார் யார் வேலை செய்தார்களோ, அவர்களுக்கும், யார் யார் லீவில் இருந்தார்களோ அவர்களுக்கும் கொடுப்பது என்ற முடிவை எடுத்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது உச்சநீதிமன்றம் போட்ட தீர்ப்பு என்னவென்றால், அவர்களுக்கு ஓய்வு ஊதியத்திலே எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமோ, அதைவிட அதிகமாக அரசு கொடுத்திருந்தால் பெருந்தன்மையாக அந்தப் பணத்தை திருப்பி வாங்க வேண்டியதல்லை என்றும் யாருக்குக் குறைவாக கொடுத்து இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. யாருக்கு இதுவரைக்கும் அந்த ஓய்வுப் பணத்தைவிட குறைவாக கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கு கொடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தங்கல் முருகன் கோவிலை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலம்.

*எண் எஸ். 527— திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருத்தங்கலில் முருகன் கோவிலை ஒட்டியுள்ள பெரும் விலை மதிப்புள்ள புறம்போக்கு நிலத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) 5 நபர்கள் அங்கே காம்பவுண்ட் கட்டி கூரை வீடுகளை எல்லாம் கட்டி இருக்கிறார்கள். இரண்டு பேரை அகற்றியாகிவிட்டது. மூன்று பேரை அகற்றுவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலேயிருந்து அப்படி அந்த புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டிக்கொண்டவர்கள் எவ்வளவு காலமாக கட்டியிருக்கிறார்கள் அப்படி அவர்களை அகற்றுவதிலே ஏன் காலதாமதம் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மிக அருகாமையிலேதான் கட்டியிருக்கிறார்கள், என்று தெரியவருகிறது. சில நேரங்களிலே, சிலவற்றில் தெளிவு இல்லாததினாலே சில இடங்களில், சில இடங்களில் தவறு செய்வது இயற்கை ஏன் என்றால் தெளிவு இல்லாததினால். ஆகவே கோயில் புறம்போக்கு என்றால், அங்கே யிருக்கிற கோயில் சொந்தக்காரர்களோ, அல்லது அங்கே இருக்கின்ற போர்ட் டிரஸ்டிகளோ எடுத்துக்கொள்கிறார்கள். செட்டியார் புறம்போக்கு என்றால் செட்டியார்தான் சொந்தக்காரர்கள் போல் இருக்கிறது. ஆகையினாலே புறம்போக்கு என்றால் இது அரசுக்குச் சொந்தம் என்று சில அதிகாரிகளுக்கு தெரியவில்லை. ஆகையினாலே கோயில் புறம்போக்கு என்று சொல்கிறபோது அந்தக் கோயில் அதிகாரிகள் லீசுக்கு கொடுத்துவிட்டார்கள். ஏன் லீசுக்கு கொடுத்தீர்கள் என்று இப்போது அரசு கேட்டிருக்கிறது. அதை லீசுக்கு எடுத்தவர்கள் வெளியே போகமாட்டோம் என்று சொல்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.



திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தங்கல் ஒரு பழைய பாடல்பெற்ற ஸ்தலமாகும். அங்கே ஒருபுறம் பெருமாள் கோவிலும் இன்னொருபுறம் முருகன் கோவிலும் ஆக சைவமும் வைணவமும் இணைந்த முறையில் உள்ள திருக்கோவிலாக அமைந்திருக்கிறது எனக்குள்ள தகவல்படி நெடுஞ்சாலைப் பகுதிக்கும் இந்தக் கோவிலுக்கும் இடைப்பட்ட இடத்தில் செல்வாக்கு பெற்ற ஒருவர் அதை பெற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு கொடுத்ததாக வந்த செய்தியின் அடிப்படையில் இந்தக் கேள்வி போடப்பட்டது. எனவே அவற்றை விரைவில் அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலத்தை அரசு அதிகாரி ஒருவரிடமிருந்து குத்தகை எழுதி வாங்குவாரானால் அவர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாகத்தான் இருக்க வேண்டும், எவ்வளவோ பேர்கள் தப்பு செய்கிறார்கள். உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறபோது அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் இந்தமாதிரி எங்கெங்கே செல்வாக்குள்ளவர்கள் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட நபர் ஒருவர் ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளதாக கூறியுள்ளார்கள்.

*　　*　　*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பெயரைக் குறிப்பிட்டுக் கூறியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கே. சௌந்திரராசன்; தலைவர் அவர்களே, திருத்தங்கலில் உள்ள ஆக்கிரமிப்பு பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபோன்று நாடு முழுவதும் வசதி பெற்றவர்கள், பெரும் பணக்காரர்கள் பலயிடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு அதற்காக வேறு வகைகளில் அதிகாரிகளைச் சரிக்கட்டுவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதற்கு சரியான முறையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயல்வார்களா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, அதிகாரிகளைச் சரிக்கட்டிவிடுகிறார்கள் என்று மொத்தமாக அதிகாரிகளை குற்றஞ்சாட்டுவதை நான் விரும்பவில்லை. நேர்மையான, தூய்மையான அதிகாரிகளும் நாட்டில் இருக்கிறார்கள். தவறுகள் செய்கிற அதிகாரிகளும் இருக்கக் கூடும். ஆதிக்கம் உள்ளவர்கள், வசதி படைத்தவர்கள் ஆக்கிர மிப்பு செய்திருந்தால் — ஆக்கிரமிப்பு என்றாலே ஆக்கிரமிப்பு தான். சட்டத்திற்குப் புறம்பாகச் செல்வதற்கு ஏழை எளிய மக்களுக்கு அவ்வளவு துணிவு வருவதில்லை. ஏழை ஒருவன் பசியால் ஏதாவது திருடினால், திருடி ஒரு பன் வாங்கி சாப்பிடுவான். அவனுக்கு பெருத்த தண்டனை அளிப்பார்கள். ஆனால் கோடிக்கணக்கில் திருடுபவர்கள் தப்பித்துக்கொள் வார்கள். இவையெல்லாம் நடக்காமல் பார்த்துக் கொள்ள இந்த அரசு நடவடிக்கை எடுக்கும், பொதுமக்களும் சட்ட பேரவை உறுப்பினர்களும் உதவிகரமாகயிருக்க வேண்டும்.

ஆதம்பாக்கம் ஏரியில் வசிக்கும் குடிசைவாசிகள்

*வினா எண் 52.—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு வருவாய்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி எல்லைக்குட்பட்ட ஆதம்பாக்கம் ஏரியில் இருக்கும் இந்திரா நகர் குடிசை வாசிகளிடமிருந்து அவர்கள் குடியிருக்கும் இடத்தை அவர்களுக்கே பட்டா போட்டுதர வேண்டும் என்று கோரிக்கை ஏதும் அரசிடம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, இந்த குடிசை வாழ் மக்கள் பலமுறை அங்கிருக்கக்கூடிய அரசு அதிகாரிகளைப் பார்த்து அந்த இடத்தை, அவர்கள் குடியிருக்கிற இடத்தை அவர்களுக்கே பட்டா போட்டுத் தரவேண்டும் என்று அந்த ஏரியினுடைய ஆயக்கட்டு நிலம் ஏறத்தாழ நான்கு அல்லது ஐந்து ஏக்கர்தான் இருக்கிறது. அந்த நாலைந்து ஏக்கர் பகுதிகளில் கூட இப்போது பாசனம் செய்தி இல்லாதிருப்பதாகவும், வெள்ளப் பெருக்குக் காலத்தில் வெள்ளம் வந்து அவர்களுக்கு பலத்த சேதத்தை விளைவித்து விடுகிறது என்றும் சொல்லி பலமுறை மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளுக்கும் பல மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகளுக்கும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு உடனடியாக அவர்களுக்கு அந்த இடங்களை பட்டா போட்டுத் தருவதற்கும் அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, அங்கே ஏறக்குறைய 329 போர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக் கிறார்கள். 30-6-77 கணக்குபடி எனக்கு வந்த தகவல் 329 பேர்கள் அது சம்பந்தப்பட்ட வருவாய்க் கணக்கு வகைப் படுத்தப்பட்டது. இந்த நிலம் ஏரவும் நீர்நிலை சம்பந்தப்பட்ட புறம்போக்கு. அப்படிப் பார்க்கிறபோது அதில் குளமும் கணக்கில உள்ளது. ஏரி இருக்கிறது. இதை கொடுக்கவேண்டுமென்றால் நத்தம் புறம்போக்காக மாற்றி மனைப் பட்டாக்கள் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 9-30)

நத்தம் புறம்போக்காக இந்த நிலத்தை மாற்றி, பட்டா கொடுக்க வேண்டுமென்று வருவாய்த் துறை கருதியது. எனவே இதுகுறித்து பொதுப்பணித் துறைக்கும், சென்னை நகர வளர்ச்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வருவாய்த்துறை கோரிக்கை வைத்திருக்கிறது. அவர்கள் எல்லாம் இதைப் பார்வையிட்ட பிறகு இந்த ஏரி புறம்போக்கிலே குளம் தேவை யில்லை என்று அவர்களிடத்திலே மனுக்களைப் பெற்று, அதற்குப் பிறகு பட்டா கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இப்படிப்பட்ட ஏரி புறம்போக்குகளில் குடிசைகள் போடுவதும் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் பயிர்செய்வதுமாக இருக்கும்போது, எந்தவிதமான முன்னேற் பாடும் இல்லாமல், இன்றைக்கு 10 இலட்சம் பேர்கள், சமூகக் காடுகள் வளர்ப்பதாகக் கூறி அவர்கள் வெளியேற்றப்படுகின் றார்கள். அவர்கள் இப்போது நிர்க்கதியாக இருக்கிறார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்டது, வெளியேற்றப்பட்டது தானா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஏற்கனவே இதே கேள்வியை மூன்று முறை கேட்டிருக்கிறீர்கள், எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஏரிகளில் வீடுகள் கட்டப்படுவது சம்பந்த மாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏரிகளை ஆக்கிரமிப்புச் செய்வ தால், அதிலே நீர் ஆதாரம் குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆக்கிரமிப்பிலே இதுவரை இரண்டு விதமான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொண்டிருக் கிறார்கள். ஏரியிலே இருக்கிற ஆயக்கட்டு, ஆயக்கட்டு நிலம்

ஆக்கிரமிப்பு செய்யப்படுவதால், நீர்ப்பிடிப்பு இல்லாமல் பாதிப்பு ஏற்படுமென்றால், நிச்சயமாக ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சில இடங்களில் உண்மையாகவே ஏழைகளாக இருந்து அங்கேயே ஆக்கிரமிப்பு செய்யும் போது, அதனால் ஆயக்கட்டிற்கு பாதகம் இல்லையென்றால், அப்படிப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதில் அரசு கொஞ்சம் கவனமாக பார்த்துக் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 529, 530 ஆகியவை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

## Water Tnank for Nagappattinam

*Q.No. 531 THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Labour be pleased to state.

(a) whether the Government have any proposal to construct a water tank near C.S.I. School in Nagappattinam to tackle the drinking water problem in Nagappattinam area;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: (அ), (ஆ), & (இ) நகரத்தின் தென்பகுதியிலுள்ள மேட்டுப்பாங்கான பகுதியில் குடிநீர் விநியோகத்தைச் சீராக்க ஏதுவாகும் வகையில் சி.எஸ்.ஐ. பள்ளிக்கருகில் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி கட்ட நாகப்பட்டினம் நகராட்சி உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ 55,600-ஐ செலுத்தும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகராட்சியைக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்தத் தொகை செலுத்தப்பட்ட பின்னர் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் நகர மக்களுடைய நீண்டகாலப் பிரச்னை சி. எஸ். ஐ. பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் ஒரு ஓவர் ஹெட் டாங்க் கட்டுவதற்கு அரசாங்கம் முடிவு செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், 17-9-81 அன்றைக்கு நடந்த டி.டி.சி. கூட்டத்திலே இதுபற்றி விவாதிக்கப்பட்டு, முனிசிபல் சேர்மன் அவர்கள்



இந்த ஓவர் ஹெட் டாங்கைக் கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் கடனாக அரசாங்கம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று கூறி அதை டி. டி.சி. அரசாங்கத்திற்கு ரெகமண்ட் பண்ணியது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள்? இப்போது அமைச்சர் அவர்கள் பதிலில் ரூ. 56,000 என்று சொன்னார்கள். ஒரு செபரேட் ஓவர் ஹெட் டாங்க் கட்டுவதற்கு அதற்கு ரூ. 10 இலட்சம் தேவையாக இருக்கிறது என்று சொல்லப்பட்டு, அது அரசுக்கு சிபாரிசும் செய்யப்பட்டது. அதைப்பற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நகரத்தின் தென்பகுதியில் உள்ள மேட்டுப்பாங்கான பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டமாகும். அந்த நகரத்தை நான் சுற்றிப் பார்த்திருக்கிறேன். நானும் மாண்புமிகு உறுப்பினரும் கூட அந்த நகரத்தை சேர்ந்து சுற்றிப் பார்த்து இருக்கிறோம். அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமானால். அதற்கு ஒரு நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, நீர் ஏற்றிக் கொடுத்தால் ஒழிய அங்கே உள்ள மக்களுக்கு தண்ணீர் கொடுக்க முடியாது. எனவே அதை இன்வெஸ்டிகேட் செய்வதற்கு—ஆய்வு செய்வதற்கு முதலில் 55,600 ரூ செலவாகும். அந்தத் தொகையை, குடிநீர் வடிகால் வாரியம் கேட்டு இருக்கிறது. அவர்கள் அதை இன்னும் தர வில்லை. அதை தந்து விட்டால் எங்கெங்கே நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது, எப்படி கட்டுவது, பதிமனைக் குழாய்கள் எங்கே போடுவது, எத்தனை கிலோ மீட்டருக்குப் பதிமான குழாய்கள் கொண்டு வர வேண்டும் எவ்வளவு பொதுக் குழாய்கள் வைக்க வேண்டும் என்று திட்டவட்டமான முறையில் இன்ஜினியர்கள் சொல்வார்கள் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பது ஒரு அட்வான்ஸ் இன்பர்மேஷனாகத் தெரிகிறது. இருந்தாலும் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த நகராட்சியை அந்த ஆய்வுத் தொகை கட்டச் சொல்லி விடுவார்களானால், எஞ்சிய வேலைகளை என்னால் ஆன அளவிற்கு நான் தலையிட்டு பார்த்துக் கொள்கிறேன். நானும் பல முறை அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்து இருப்பதால், என்னிடத்திலும் வந்து தண்ணீர் வரவில்லையே தண்ணீர் வரவில்லையே என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, நான் அதற்கு தனிக் கவனம் செலுத்தத் தயாராக இருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னபிறகு தான் அந்த ஆய்வு வேலை முடிந்த பிறகு தான், அதை கட்டுவது சம்பந்தமான முடிவு எடுக்கப்படும் என்பது தெளிவாக்கப்பட்டு இருக்கிறது. ஆய்வுக்கே ரூ. 56,000 டிவாட் போர்ட் கேட்கிறார்கள். அதற்கு அந்த முனிசிபாலிட்டியில் எனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்த ஸ்கீம் சஸ்டெய்னட் சாங்ஷன்ட். ஆய்வுக்கு 56,000 ரூபாய் கட்டவேண்டும். அப்படி

தான் அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தற்போது தெளிவாக்கப்பட்டு இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், அந்த முனிசிபாலிட்டி. மிகவும்வீக் முனிசிபாலிட்டி. அன்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செண்டிரல் கவர்ன்மெண்ட் இன்டக்கிரேடெட் ஸ்கீமின் அடிப்படையில் அந்த ஊர் பஸ் ஸ்டாண்ட் கட்டுவதற்கு சாங்ஷன் ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முனிசிபாலிட்டி வீக் முனிசிபாலிட்டி என்ற வகையில்தான் அந்த ஸ்கீம் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த ஆய்வுத் தொகை கட்ட—அந்த ரூ. 55,000 கட்ட—நான் என்னுடைய செல்வாக்கை செலுத்த வேண்டும் என்று சொல்வது வெறும் குடத்தில அகப்பையைப் போட்டு ஆட்டுகிறமாதிரிதான் இருக்கும்—ஆகவே அதற்கு பதிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த 55,000 ரூபாயை வேய்வ் செய்தோ அல்லது மற்ற இலாகாவிலிருந்து ஏதாவது செய்துவோன் என்று வாங்கிக் கொடுப்பதற்கோ முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முனிசிபாலிட்டியின் நிலைமையை விளக்கி, தீர்மானம் நிறைவேற்றி என்ன உதவி அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று எழுதி அனுப்பினால், அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

## பருகூர், ஊத்தங்கரை ஒன்றியப் பகுதிகளில் கைப்பம்புகள்போடும் திட்டம்

*வினா எண். 532—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பருகூர் ஊத்தங்கரை ஆகிய இரு ஒன்றியங்களில் சுமார் 200 கைப்பம்புகள் போடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) பருகூர், ஊத்தங்கரை ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த சிற்றூர்களில் மொத்தம் 394 (கைபிறைப்பான்கள் 216, விசையிறைப்பான்கள் 178) குடிநீர்த் திட்டங்கள் இரண்டாம் கட்டத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அவைகள் 1982-83 மற்றும் 1983-84 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.



## பெரியார் மாவட்டத்தில் மூன்று மாதங்களுக்கு மேலாக மூடிக்கிடந்த மூன்று மில்கள்.

*வினா எண் 533 திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் ஈரோட்டில் உள்ள கோயமுத்தூர் பயனிர் மில்ஸ், ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் புராசஸிங் (Processing) மில். பவானியில் உள்ள திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் மில் ஆகிய மூன்று மில்கள் மூன்று மாதங்களுக்கு மேலாக பூட்டிக் கிடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்?

(இ) தொழில் தகராறுகளை தீர்க்க தொழிலாளர் இலாகா எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; (அ), (ஆ) மற்றும் (இ); சுமார் 271 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த மூன்று நிறுவனங்களிலும் தொழிற் தகராறு காரணமாக 16-12-1 முதல் வேலை நடைபெறவில்லை. முதலில் ஈரோடு தொழிலாளர் துறை அலுவலரும், பின்னர் கோவை துணை ஆணையரும் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தினர். சுமுக முடிவு ஏற்படாததால், சமரச முறிவு அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்மீது தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கைகளை சென்னை, தொழில் நடுவர் நீதி மன்றத் தீர்ப்புக்கு அரசு அனுப்பியது. வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றதால்கோவை இணை ஆணையர் இருதரப்பினரையும் அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இதன் விளைவாக 31-3-82 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன்படி இம்மூன்று நிறுவனங்களும் 3-4-82 முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

(முற்பகல் 9-40)

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அந்தத் தகராறு அரசாங்கத்தின் முன்னால் வந்தது 16-12-1981 அப்படியானால் கிட்டத்தட்ட ஒன்றேகால் வருஷத்திற்கு மேலாக அந்தத் தகராறு நடந்துவந்து, இப்போது எல்லாம் முடிந்தபிறகு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இந்தக் கேள்வி வந்திருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. நடத்துவது குறித்து சந்தோஷம். இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் பிரச்சனை வருகின்றபோது ஒரு குறிப்பிட்ட நாளைக்குள் அல்லது மாதத்திற்குள் பிரச்சனைகளை ஆராய்ந்து முடிவு கட்டுவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே. தங்களுக்கே நல்ல அனுபவம் உண்டு. பேச்சுவார்த்தை நடக்கும் போது கன்சிலியேஷன் ஆபீசரோ அல்லது அமைச்சரோ சொல்லும் ஆலோசனைகளை இருசாராரும் ஏற்றுக்கொண்டால் நல்லது. அப்படி ஏற்றுக்கொள்வது இல்லை. முதலாளிகளும் அரசு சொல்வதை சுலபமாக ஏற்றுக்கொள்வதில்லை; வலியுறுத்த வேண்டியிருக்கிறது. எனவே இனிமேல் வேலை நிறுத்தம் இப்படி நீடித்தால் அல்லது தொழிற்சாலையை முதலாளி அதிகநாள் மூடிவைத்தால் அல்லது 'லாக் அவுட்டை' அவர்கள் நீட்டித்தால் அரசுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்த 10 (பி) சட்டப் பிரிவை இன்வோக் செய்ய அரசு தீவிரமாகக் கருதுகிறது. அதைச் செய்யும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் அனைவரும் நல்லாதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த 10 (பி) சட்டத்தை அமுலாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தமாதிரி காரியங்கள் நடைபெறுகிறதோ என்று இப்போது நாங்கள் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டம்; அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு முயற்சி செய்யக் கூடாது. அதைச் செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இன்றைக்கு அமுலில் இருக்கும் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர் நலஇலாகாவினர் சொன்னால் முதலாளிகள் கேட்பதில்லை என்பது உண்மை. [illegible] மூன்று நிறுவனங்களைச் சேர்ந்த [illegible] தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட வேண்டிவந்தது. ஆகவே, ஆரம்பத்திலேயே அதிகாரிகள் தலையிட்டோ அல்லது அமைச்சரவர்கள் தலையிட்டோ பிரச்சனையை தீர்க்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அதிகாரிகளே அல்ல; நானே தலையிட்டு பிரச்சனைகளைத் தீர்க்க தயாராக இருக்கிறேன். குடியாத்தம் உறுப்பினர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள் ஒரு நிறுவனத்தைப் பற்றி. என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால் 29 ஆம் தேதி பேச்சுவார்த்தை நடத்த நாள் குறிப்பிட்டிருக்கிறேன் என்று கருதுகிறேன். 29-ந்தேதி பேச்சுவார்த்தை வைத்திருக்கிறேன். முதலாளிகள் யார் சொன்னாலும் கேட்பதில்லை என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் அவர்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமானால் இந்தச் சட்டத்தை இன்வோக் செய்தாக வேண்டும். அதைச் செய்யலாமா என்று தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் அதற்கு முழுமையாக ஆதரவு தரவேண்டும். வேண்டுமானால் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த முக்கியமானவர்களை அழைத்துப் பேசவும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு கோவைத்தம்பி: தலைவரவர்களே, கடந்த மூன்று மாத மாக இந்த மூன்று நிறுவனங்களும் மூடிக்கிடந்த காரணத்தால் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதோடு, தொழி லாளர்களுக்கு ஊதியம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த மில்களைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப்போன்று புதிய சட்டத்தைப் பயன்படுத்தி வெகு சீக்கிரத்தில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, 3–4–1982-லிருந்து அந்த மில்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே கோவை பயனீர் மில்ஸ், ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் புராசசிங் மில்ஸ், பவானியில் உள்ள திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் மில் ஆகிய இந்த மூன்று மில் களும் பேச்சுவார்த்தைக்குப் பின் 3-4.1982 முதல் ஓடிக்கொண் டிருப்பதாக சொன்னார்கள். இன்றைக்கு இருக்கின்ற சட்டங் களில் இருக்கிற ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்தி, முதலாளிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் வராமல், வந்தால் கேட்காமல் காலம் கடத்துகிறார்கள். ஆகவே ஒரு கால வரையறையை நிர்ணயித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மூன்று மில்களும் ஓடிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லும்போது வேறு பிரச்சனை இல்லை; ஓடுவது குறித்து சந்தோஷப்பட வேண்டும். அடுத்து திரு. எஸ். ஆண்டித்தேவர், இது திருப்பூர் பற்றியது; அதைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, அதில்ஒரு முக்கியத் துவம் இருக்கிறது. 3-4—1982—லே அந்த மில்கள் திறக்கப்பட்டன என்று சொன்னார்கள். பிரச்சனை நடந்து கொண்டிருக்கும் போது இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. ஓராண்டு காலம் கழிந்தபிறகு, மில்கள் திறக்கப்பட்ட பிறகு பதில் வந்திருக்கிறது. பிரச்சனை என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்கிறார்களா அல்லது அமைச்சர்கள் செய்கிறார்களா, சட்டமன்ற உறுப் பினர்கள் என்ன செய்கிறார்கள் என்பதிலே மக்கள் அதிக முக்கியத்துவம் காட்டுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சனைகள் பற்றிக் கேள்விகள் வரும்போது இப்படி வருஷக் கணக்காகாமல், விரைவிலேயே பதில் சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் என்னைக் கேட்கிறார்கள். விரைவிலே பதில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள்; ஏற்பாடு செய்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: இந்தக் கேள்வியை முன்னாடியே கொண்டு வந்து விடையளித்திருந்தால், இதைப்பற்றி மற்றவர்களுக்கு சொல்வதற்கு அல்லது தெரியப்படுத்துவதற்கு எங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இப்போது வந்தால் எப்படி?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இந்த நிலைமைகள் நன்றாக தெரியும். இந்த விஷயங்கள் எல்லாம் ஏற்கெனவே தெரியும். கேள்வி கொடுத்ததற்கு பதில் நான் இப்போது சொல்கிறதே தவிர, அவர்கள் விவரங்கள் அறிந்தவுடன் இங்கே வந்து என்னைப் பார்த்து விட்டுச்சென்றார்கள். ஆகவே, அது பற்றிய நிலைமை அவர்களுக்கு முன்பாகவே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

### வாழைப்பந்தல் கிராமம் அருகே ஆற்றில் 'பம்பிங் ஸ்டேஷன்' அமைத்து சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 534—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி வாழைப்பந்தல் கிராமத்தின் அருகே ஆற்றில் 'பம்பிங் 'ஸ்டேஷன்' அமைத்து சுற்றியுள்ள கிராம மக்களுக்கு குடிநீர் பெறவகை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போதிலிருந்து செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். வாழைப்பந்தல் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் வேலப்பாக்கம், மேலைப்பாக்கம், மாம்பாக்கம், ஆயர்பாடி போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் இதிலிருந்து பயன்பெற வேண்டியிருக்கிறது. அந்த வாழைப்பந்தல் கிராமத்திற்கு அருகே தான் நாகநதி ஓடுகிறது. அந்த நதியிலிருந்து தண்ணீர் எடுத்துச் சாப்பிட்டு பழக்கப்பட்டுவிட்டார்கள் அவர்கள். ஆனால் வறட்சியான காலத்திலே அவர்களுக்கு அதிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், அவர்களுக்காக வேறு மாற்றுத் திட்டம் ஏதாவது கொண்டு வர ஆலோசனை இருக்கிறதா? இருப்பதாக அறிகிறேன். அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்க முயற்சிகளை மேற்கொள்ளுவாரா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பம்பிங் ஸ்டேஷன் அமைத்து சுற்றியுள்ள கிராம மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க வகை செய்யும் திட்டம் இருக்கிறதா என்பதற்குத்தான் இல்லை என்று பதில் சொன்னேனே தவிர, குடிதண்ணீரே கொடுப்பதற்கு ஏற்பாடு இல்லை என்று பொருள் அல்ல.

இரண்டாம் கட்ட தண்ணிறைவுத் திட்டத்தின் கீழ் வாழைப்பந்தல், ஆயர்பாடி, வேலப்புதுப்பாக்கம் காலனி, மாமபாக்கம் பந்தல், ஆயர்பாடி, ... காலனி, ... மூந்தை மற்றும் சொரையூர், மற்றும் அம்... காலனி ஆகிய சிற்றூர்களுக்கு குழாய் கிணறுகள் சொரையூர் காலனி ... அளிக்க திட்டங்கள் இருக்கின்றன. அமைத்து குடிதண்ணீர் ... ஒப்பிடும்போது அந்த சிற்றூர் கம்மாடு, அந்த திட்டங்கள் ... சிற்றூர்களைச் சேர்த்து, அருந்ததி காலனி மற்றும் இரண்டு சிற்றூர்கள் ... மேலப்புதுப்பாக்கம் ஆகியவைகளுக்கும் குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்காக அரசு குடிதண்ணீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒதுக்கியிருக்கிற தொகை எவ்வளவு? அந்தத் திட்டம் எப்போதைக்கு அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் கட்ட தண்ணிறைவுத் திட்டத்தின் கீழ் என்று சொல்லியிருக்கிறேன். இந்த இரண்டாம் கட்டம் முடிந்து மூன்றாவது கட்டம் வந்து விட்டாலும் கூட, இரண்டாம் கட்டத்தில் விட்டுப் போனவைகளுக்குச் செய்துக் கொண்டு வருகிறோம். அதற்காக எவ்வளவு செலவாகும் என்ற மதிப்பீடு நேரம் என்னிடத்திலே இப்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, வாழைப்பந்தல் கிராமத்தின் அருகே ஆற்றில் பம்பிங் ஸ்டேஷன் அமைக்கப்படப் போவதில்லை, அதற்குப் பதிலாக வேறு மாற்று முறைகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மயிலாடுதுறையில் வெகு அருகாமையில் பம்பிங் ஸ்டேஷன் அமைக்கப்பட்டது. பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்திலேயே அது அமைக்கப்பட்டது. இன்றைய தினம் அதிலே தண்ணீர் வருவது நின்று விட்டது. பொதுமக்களுக்கு தண்ணீர் கிடைப்பது என்பதே மிக அரிதாகி விட்ட இந்தச் சூழ்நிலையில் இது—மூலக்கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும், அதை அரசு ஆராய்ந்து பார்த்து, அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க ஆவன செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று உறுப்பினர் அவர்களே சொல்லி விட்டார்கள். அனுமதி மறுக்கப்படுகிறது. (குறுக்கீடு) வாழைப் பந்தல் கிராமத்தைப் பற்றி மூலக்கேள்வி இருக்கும்போது மயிலாடுதுறையைப் பற்றி கேட்டால் அவரிடம் எப்படி பதில் இருக்கும்? தனிக் கேள்வி போடுங்கள். (குறுக்கீடு) தனிக்கேள்வி போட்டால் தண்ணீர் கிடைக்கும்.

**அனைத்துப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் திருக்குறளை எழுதி திருவள்ளுவரின் உருவப்படம் பொருத்தும் திட்டம்.**

*வினா எண். 535—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் திருக்குறளை எழுதி [illegible] உருவப்படமும் வைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் திருக்குறளின் எண்களும் குறிப்பிடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தமிழகத்திலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் திருக்குறள் எழுதப்பட வேண்டுமென்றும், திருவள்ளுவரின் உருவப் படம் பொருத்தப்பட வேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பித்து உள்ளது.

(ஆ) இதுபற்றி அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

(முற்பகல் 9–50)

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சில போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தை வைத்திருக்கிறார்கள். திருக்குறளும் இருக்கின்றது. ஆனால் சில ஓட்டுநர்கள் தங்களுக்குப் பிடித்தமான சில ஸ்வாமி படங்களை வைத்து திருவள்ளுவர் உருவத்தையே மறைக்கும் அளவுக்கு அந்த ஸ்வாமி படங்களில் மாலை முதலியவைகளைப் போட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே' திருவள்ளுவர் படத்தை மறைக்கின்ற அளவுக்கு எதையும் வைக்கக் கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அவர்கள் விருப்பப்படி ஸ்வாமிபடங்களை வைத்துக்கொள்வதை தடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களின் மூலம் இயக்கப்படுகின்ற பேருந்துகளில் ஸ்வாமி படங்களை வைத்துக் கொள்வதைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தடை செய்யாது என்று சொல்கிறார்கள். முதலில் இந்து மதத்தைச் சேர்ந்த டிரைவர் வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்போது அவர் இந்துக் கடவுள் படத்தை அங்கே வைக்கிறார். அதன் பிறகு கிறித்துவ டிரைவர் வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவர் வந்து கிறித்துவ படத்தை வைக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தகராறுகள் கூட ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தத் தகராறுகளை எல்லாம் தீர்க்கின்ற வகையில் மேலும் நாம் மதச்சார்பற்ற அரசாங்கம் என்று சொல்வதை நிலைநாட்டுகின்ற வகையில் எந்த மதத்தைச் சேர்ந்த படங்களையும் வைக்கக்கூடாது என்று மறுப்பதுதான் சரி. எனவே அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இப்படி ஒரு தகராறு நடந்ததாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. ஆனால் நாம் தகராறை உருவாக்கி விடுவோமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது. இருந்தாலும் அந்தந்த ஓட்டுநர்கள் அந்தந்த படங்களைக் கொண்டுவந்து மாட்டிவிட்டு பிறகு எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள் என்ற அப்படிப்பட்ட நிலைமையை வேண்டுமானால் உருவாக்கலாம். ஆனால் அவர்களின் உரிமையைப் பறிக்கின்ற நிலைமைக்கு நாம் போகக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்கின்றபோது போடப்படுகின்ற டேப் ரிக்கார்டர் பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இல்லை. எனவே இலங்கை வானொலியில் போடப்படுவது போன்ற இனிமையான பாடல்கள் ஒலிபரப்பப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. எனவே பதில் தேவையில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைவாகப் படித்தவர்களால் திருக்குறளின் பொருளைப் புரிந்து கொள்வது சற்று சிரமம். திருக்குறளிலே மிகக் கடினமான வார்த்தைகள் உள்ளன. உதாரணமாக

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.''

என்ற திருக்குறளைப் பொறுத்தவரையில் பொருள் புரிந்து கொள்வது சற்று சிரமம். தற்போது துப்பாக்கி சூடுகள் பேருந்துகளில் நடக்கின்றன. மக்கள் அதை நினைத்துக் கொள்ளக் கூடும். எனவே திருக்குறளைப் போடுகின்றபோது அதனுடைய கருத்து உரையையும் அதற்குப் பக்கத்திலேயே எழுதி வைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கே திருக்குறளே வேண்டாம், அது யாராலும் புரிந்துகொள்ள முடியாது என்று சொல்லிவிடுவாரோ என்று அச்சப்பட்டேன். ஆனால் நல்ல வேளை. அதற்கு விளக்கமும் எழுதவேண்டும் என்றுதான் சொல்கிறார்கள் திருக்குறளைப் பொறுத்தவரையில் எல்லோரும் படித்துப் புரிந்துகொள்கிறார்கள். மேலும் அங்கே இடம் இல்லாததன் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது திருவள்ளுவர் படத்தை பொறுத்துவதைப்போல் கடவுளர்களின் படங்களையும் பொறுத்தலாம், அதற்கு தடை எதுவும் இல்லை என்று அறிவித்தார்கள். அப்படிப் பொறுத்திக் கொள்வதற்கு நம்முடைய இன்றைய அரசு ஏதேனும் அனுமதியினை வழங்கி யிருக்கின்றதா? அப்படி அனுமதியினை வழங்கி இருந்தால் அந்தப் பேருந்துகளுக்கு முக்கியமானவர்களாக கருதப்படுகின்ற ட்ரைவர், கண்டக்டர் படங்களையும் பொறுத்திக்கொள்வதற்கு அரசு அனுமதி தருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ட்ரைவர் மற்றும் கண்டக்டர் படங்களை மாட்டவேண்டும் என்று எந்த ஓட்டுநரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் கடவுள்களின் படங்களை மாட்டுவதைத் தடை செய்ய வேண்டாம் என்று நாம் சொல்வதற்குக் காரணம் அந்த ஓட்டுநர்கள் உயிரைப் பணயம் வைத்து வேலை செய்கிறார்கள், அப்படிப்பட்ட ஓட்டுநர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையினைக் கெடுக்கக்கூடாது. படங்களை மாட்டக்கூடாது என்று சொல்லிவிட்டால் அது அவர்களுக்கு மன வேதனையை ஏற்படுத்தக்கூடும் என்பதற்காகத்தான் அவரவர்கள் வருகின்ற போது அவரவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு படங்களை மாட்டிக் கொள்ளலாம் என்றும் அவர்கள் போகின்றபோது எடுத்துக் கொண்டு போய்விடலாம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆகவே இதற்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் அவர்கள் வைத்துக்கொள்வதைத் தடுக்கவில்லை,

**கால்நடைகள் சாலைகளில் அலைவதைத் தடைசெய்யும் திட்டம்.**

***வினா எண். 536 திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் கால்நடைகள் சாலைகளில் அலைவதை MIXED TRAFFIC தடை செய்யும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் கால்நடைகள், சாலைகளில் அலைவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் காவல் துறையினால் எடுக்கப்படுகின்றன. எனவே, கால்நடைகள், சாலைகளில் அலைவதைத் தடை செய்யும் யோசனை அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. சாலை விபத்துக்களைத் தடுக்கின்ற வகையில் கால்நடைகள் அலைவதைத் தடுப்பது போன்று நெடுஞ்சாலைகளை/தானியங்களை காய வைக்கின்றக் களமாகப் பயன்படுத்துவதையும் தடுப்பதற்கு உரிய சட்டங்களைக் கொண்டுவருவதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கால் நடைகள் அலைவதைத் தடுப்பது பற்றித்தான் கேள்வி கேட்கப் பட்டிருக்கின்றது. அதற்காக பதிலும் சொல்லப்பட்டுவிட்டது. ஆனால் மற்ற இடங்களில் உள்ள மற்ற பிரச்சினைகளைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டிதேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது சாலை விபத்து என்ற தலைப்பிலேதான் கேள்வி கேட்கப் பட்டிருக்கின்றது. சாலைகளில் அதிகமாக விபத்து ஏற்படுவதற்குக் காரணம் லாரிகளில் ஓட்டுநர்களாக இருப்பவர்கள தொடர்ந்து 10, 15 தினங்கள் ஓட்டுவதன் காரணத்தால் இரவு நேரங்களில் ஓட்டுகின்றபோது தூங்கிவிடுகிறார்கள். அதன் காரணத்தால் தான் விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. எனவே லாரி ஓட்டுகின்றவர்கள் இத்தனை நாட்கள்தான் தொடர்ந்து ஓட்டலாம் என்று அறிவிக்கின்ற வகையில் போக்குவரத்துச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவந்து அமல்படுத்துவதற்கும் அதன்மூலம் விபத்தைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விபத்து என்றவுடனே, எல்லா விபத்துக்களைப் பற்றியும் நாம் பேசிவிட முடியாது. கால்நடைகள் ரோடுகளில் அலைகின்ற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதுதான் மூலக்கேள்வி. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியைத் தனியாக கேட்க வேண்டும், இருந்தாலும் ஏற்கனவே அதற்கு சில சட்டங்கள் இருக்கின்றன. பரிசீலித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

1982 பிப்ரவரியில் கர்நாடக மாநிலத்தில் எரிக்கப்பட்ட அண்ணா போக்குவரத்துக்கழகப் பேருந்து.

*வினா எண். 537—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 பிப்ரவரியில் கர்நாடக மாநிலத்தில் அண்ணா போக்குவரத்துக்கழகப் பேருந்து எரிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) கோகக் கமிட்டி அறிக்கையில் கன்னட மொழியைக் கல்விக்கூடங்களில் முதல் மொழியாக சிபாரிசு செய்துள்ளது. அதனைத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள் என்ற காரணத்திற்காக தமிழ் மாநிலத்தைச் சார்ந்த அரசு போக்குவரத்து நிறுவனமான அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றினை கன்னட மாணவர்கள் தீயிட்டு கொளுத்தினார்கள். இதனால் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ. 100,000/-. நஷ்டம் ஏற்பட்டது.

(இ) இது சம்பந்தமாக பெங்களூர் வில்சன் கார்டன் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து தீயிடக் காரணமாய் இருந்த 9 மாணவர்களை கைது செய்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. இனி இம்மாதிரி சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும்படி கர்நாடக அரசினை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இதுபோன்ற போக்குவரத்துக் கழக பஸ்கள் எரிக்கப்பட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்க கடுமையான சட்டம் எல்லாம் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இதுபோன்ற சட்டம் அந்த மாநிலத்தில் இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த சட்டப்படி அந்த மாநில அரசாங்கம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நம்முடைய அரசு கோரியதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருப்பது போல் அங்கே சட்டம் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால் இப்படி இந்த பேருந்தை கொளுத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் நேரிடையாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் அவர்களை



கைது செய்து வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள். 9 பேர் மீது அந்த வழக்கு நடந்து முடிந்த பிறகு அவர்களுக்கு என்ன தண்டனை கிடைத்தது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு பஸ்கள் வருகின்றன, அதேபோல் நம் மாநிலத்திலிருந்து கர்நாடகாவுக்கு, ஆந்திராவுக்கு, கேரளாவுக்கு எல்லாம் பஸ்கள் செல்கின்றன. ஒரு மாநிலத்தில் போராட்டம் நடைபெறுகிற போது இன்னொரு மாநில பஸ் அங்கு போனால் அதை கொளுத்துவதும், உடைப்பதும் போன்ற காரியங்களைச் செய்வதை மிகவும் சீரியஸாக எடுத்துக்கொண்டு நம்முடைய அரசு கர்நாடக அமைச்சரை சந்தித்து இது போன்ற காரியங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க ஏதாவது முயற்சி எடுத்து கொண்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மொழிப் பிரச்சனையிலே ஏற்பட்ட விவகாரம் என்று உங்களுக்குத் தெரியும். எனவே அந்த வகையில் இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்து இருக்கிறது. இருந்தாலும் ஏற்கனவே இதை பற்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அங்கே வருகின்ற பேருந்துகளுக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் நம் கடிதத்தை எழுதியிருக்கிறோம். அவர்களும் அதற்கான நடவடிக்கை எடுப்பதாக நமக்கு சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த வகையில் மேலும் அதன் மீது நடவடிக்கை தேவையா என்பது யோசனைக்குரிய ஒன்றாகும்.

(முற்பகல் 10-00)

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, கோஹக் கமிட்டி என்பது மிகவும் கடுமையான கமிட்டியாகும் என்று கர்நாடகத்திலே உள்ள சிறுபான்மை மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கோஹக் கமிட்டியின் அறிக்கைதான் கோலாரில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி அடைவதற்கே அடிப்படையாக இருந்தது என்று சொன்னால் மிகையாகாது. கன்னடப் பள்ளிகள் சுமார் 384 இருக்கின்றன; ஹோசூர் பகுதியிலே மட்டும் நிறைய பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே அந்த அரசு கர்நாடகத்தில் உள்ள சிறுபான்மை மக்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் மொழிப் பிரச்னைக்கே போய்விட்டார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்தில் மொழிப் பிரச்னையைப்பற்றிக் கேட்டால் என்ன பிரயோசனம்? வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) பேரவையில் முதலமைச்சர் ஆற்றிய உரைமீது நீதிமன்றத்தில் தொடரப் பெற்றுள்ள வழக்கு.

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்களும் நம்முடைய அவையும் அவசரமாக முடிவெடுக்க வேண்டிய ஒரு பிரச்னையைப் பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதியன்று நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்த அவையிலே நீதிமன்றங்கள் சம்பந்தமாகப் பேசிய தப்பற்றி, விமர்சனம் செய்தது சம்பந்தமாக ஒரு ரிட் மனு சமீபத்தில், நேற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு, வக்கீல் மூலமாகவோ, அல்லது நேராக வந்தோ முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லி நோட்டீஸ் அனுப்புவது பற்றி நேற்று ஹைகோர்ட்டு உத்தரவிட்டிருக்கிறது.

ஆனால் நான் ஜாக்கிரதையாகப் பார்த்தேன், இங்கே பேசியது சம்பந்தமாகவோ அல்லது கவுன்சிலில் பேசியது சம்பந்தமாகவா என்று. ஏனென்றால் கவுன்சிலில் பேசியது சம்பந்தமாக என்றால், அது பற்றி நாங்கள் ரெய்ஸ் செய்ய முடியாது. ஆனால் அஃபிடவிட் இந்த அவையிலே பேசியதன் எக்ஸ்ட்ராக்ட் பைலாகிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் சொல்வது வெறும் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட பிரச்னை என்று இதைக் கருதாமல் முதலமைச்சரும் இந்த அவையின் ஒரு அங்கத்தினர் என்ற முறையில் பார்க்க வேண்டும். அங்கத்தினராக இருந்தாலும் முதலமைச்சராக இருந்தாலும் இங்கே பேசுவது சம்பந்தமாக ஒரே உரிமைதான் இருக்கிறது. சட்ட அம்சத்தைப் பொறுத்த வரைக்கும். ஆகவே, முதலமைச்சர் என்ற அந்த முறையில் பார்க்காமல், கட்சி பேதம் இல்லாமல், இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களின் அடிப்படை உரிமையைப் பாதிப்பது என்கிற முறையில் பார்க்க வேண்டும். ஆகவே, இது போன்ற பிரச்சினையில் ஏதாவது கோர்ட் நோட்டீஸ் வந்தால் அதை முதல்வரவர்கள் பெற்றுக் கொள்ளலாமா, பதில் கூறலாமா, வக்கீல் மூலம் தன்னுடைய சமாதானத்தைச் சொல்லலாமா என்பதைக் குறித்து அவை முடிவெடுக்க வேண்டும். அவையின் சார்பாக நீங்கள் முடிவு கூற வேண்டிய விஷயம் இது.



என்னுடைய கருத்து என்னவென்றால், முதலமைச்சர் நோட்டீஸைப் பெற்றுக் கொள்ளக் கூடாது; சமாதானமும் கூறக் கூடாது; அதை இக்னோர் செய்ய வேண்டும் என்பது தான். கான்ஸ்ட்டியூஷனலாகவே சொல்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறார். ஜுடீஷியரிக்கும் லெஜிஸ்லேச்சருக்கும் மாறுபாடு உள்ளது மாதிரியான பிரச்னை இதிலே தெரிகிறது. நோட்டீஸ் வந்ததா, இல்லையா என்ற பிரச்னை இருக்கிறது. இது குறித்து அவை முன்னவரவர்கள் ஏதாவது கருத்து தெரிவிக்க வேண்டுமென்றால் தெரிவிக்கலாம். அதற்குப் பிறகு நாம் முடிவெடுக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** எங்கள் கருத்தையும் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதை விவாதமாக ஆக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் கூறியபடி இப்பொழுது இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதைப் பற்றித் தாங்கள் சிந்தித்து இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 194-வது விதியில் Powers, Privileges and Immunities of State Legislatures and their Members என்று இருக்கிறது. இது சட்டமன்றத்தில் இருக்கின்ற, பாராளுமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களின் உரிமைகள் எந்தெந்த வகைகளில் காப்பாற்றப்பட வேண்டுமென்ற விதியாகும்.

அரசியலமைப்புச் சட்டம் 194 ஆவது பிரிவின் கீழ்

(1) Subject to the provisions of this Constitution and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State.

(2) No Member of the Legislature of a State shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the Legilature or any committee thereof, and no person shall be so liable in respect of the publication by or under the authority of a House of such a Legislature of any report, paper, votes or proceedings என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த அவையின் உறுப்பினர் தான்; இந்த அவையில் உள்ள 234 உறுப்பினர்களின் உரிமைகளையும் இந்த அவை காப்பாற்ற வேண்டும். இம்மாதிரி வழக்குகள் வேறு

சிலபல மாநிலங்களிலும் எழுந்திருக்கின்றன. ஆகவே, அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பெற்றுள்ள இந்தப் பாதுகாப்பு விதியைக் கவனித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்னையின் அடிப்படையில், பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்ற பிற மாநில சட்டமன்ற நடவடிக்கைகள் ஆகியவற்றை யெல்லாம் பார்த்து இந்த அவையின் உரிமைகள் காப்பாற்றப்படவும், இந்த அவை உறுப்பினர்களின் உரிமைகள் காப்பாற்றப்படவுமான வகைகளில் தாங்கள் அதற்கேற்றபடி ஒரு அறிவுரையைக் கூறலாம்; எப்படியும் இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவரது உரிமைகளையும் காப்பாற்ற வேண்டிய முழுப்பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது; இந்த அவைக்கு இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் தாங்கள் இந்த அவைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் டைரக்ஷன் கொடுத்தால் அதற்கேற்றபடி நடந்து கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நான் பிரச்னையாக்க விரும்பவில்லை. நான் எல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்தாக வேண்டும். ஆய்வு செய்த பிறகு இதைச் சபையிலே எடுத்துக் கொள்வதாக இருந்தால்தான் எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. உமாநாத் என்ன சொல்ல வருகிறார் என்று எனக்குத் தெரியாது. (கூச்சல், குழப்பம்).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எங்களுடைய கருத்துக்களையும் கேளுங்கள், ** (கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது; பத்திரிகை நிருபர்களும் போடக்கூடாது. (கூச்சல்—குழப்பம்) திடீரென்று திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள், (குறுக்கீடுகள்) இப் பிரச்னை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே திரு. கிருஷ்ணமூர்த்தி ஏதாவது சொல்லவேண்டுமென்று நினைத்தால் சொல்லலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகைகளிலே நாங்கள் பார்த்தோம். சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரு ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்யப் பெற்றுள்ளது. சட்டமன்றத்திலே உயர்நீதிமன்ற நீதிபதி ளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் பேசிய ருத்துக்கள் சம்பந்த மாக போடப்பட்ட அந்த வழக்கில் அந்த நீதிமன்ற நீதிபதி திரு. சத்தியதேவ் அவர்கள் ஐந்து கேள்விகளை—முடிவாக அல்ல — அந்த ரிட் பெட்டிஷனை ஏற்றுக்கொண்டு, இது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா, இந்தப் பிரச்னையிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இந்த 5 கேள்விகளுக்கும் தங்களுடைய மேலான பதிலை ஏப்ரல் மாதத்திலே சொல்ல வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் ஆர்டர் பண்ணியிருப்பதாக பத்திரிகையிலே நாங்கள் பார்த்தோம். அவ்வளவு தான் சமாச்சாரம்.

(முற்பகல் 10-10)

கான்ஸ்டிட்யூஷனில் ஆர்ட்டிகிள் 211-ல் "No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties" என்று சொல்லப்பெற்றுள்ளது.

அரசியல் சட்டத்தினுடைய 211 என்ற விதியானது, 194 (1)-ல் அரசியல் சட்டத்தில் கூறியிருக்கிற உரிமைகள் இருக் கிறதே, அந்த உரிமைகளுக்கு கட்டுப்பட்டதா? அல்லது அந்த உரிமைகளில் எது பெரியது என்கிற பிரச்னை உள்ளது. விதி 212-ஐ படிக்கிறேன்.

"The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure'' என்று உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தைப் பொறுத்தவரையில் தாங்கள் தான் சுப்ரீம் அத்தாரிட்டி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களால் தான் அது அடிக்கடி எனக்கு மறந்து போய் விடுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அதற்கு நான் காரணமாக இருக்க மாட்டேன். சட்டமன்றத்தின் உள்ள சபாநாயகர் அவர் களுக்குத் தான் முடிவெடுக்கிற அதிகாரம் இருக்கிறது. அவர் தான் சுப்ரீம் அத்தாரிட்டி. இங்கே என்ன நடைபெறுகிறது. எப்படி நடைபெற வேண்டும் என்பவைகளை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அசெம்பிளி விதியில் 90-வது விதியில் 6-வது பிரிவில் (vi) reflect upon the conduct of the President or any Governor or any Court of Justice, or irregularly use the Governor's or President's, name for the purpose of influencing a debate என்று உள்ளது.

தலைவர் அவர்களே, இவைகளைச் சொல்வதற்குக் காரணம் ஃப்ரீடம் அப் ஸ்பீச் என்கிற உரிமை நமக்கு 194 (1)-ல் கிடைத்திருக்கிற ரேகாரணத்தை வைத்துக்கொண்டு, நான் உங்களிடத்திலே கேட்க விரும்புவது என்னவென்றால், உயர்நீதிமன்றத்தில் இருக்கிற ஜட்ஜை யெவரும் சென்று தாக்கவேண்டுமென்று நான் பேசினால் அதை அனுமதிக்க முடியுமா? அதை கேள்வி கேட்பதற்கு, தமிழ்நாட்டில் இருக்கிற பிரஜைகளுக்கு அதிகாரம்

இருக்கிறதா? இல்லையா? உயர்நீதிமன்றத்தில் இப்படித்தான் முடிவு செய்ய வேண்டுமென்று நாம் சட்டமன்றத்தில் விவாதிக்க முடியுமா? இந்தச் சட்டமன்றத்திற்கு எவ்வளவு உரிமைகள் இருக்கிறதோ அதைப்போல உயர்நீதிமன்றத்தில் அல்லது சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற நீதிபதிகளுக்கும் இன்டிபென்டன்ஸ் இருக்கிறது. ஆகவே, அவர்கள் தீர்ப்பு இப்படிச்செய்யவேண்டும், இப்படி செய்கிறார்கள் என்று சட்டமன்றத்தில் பேசியது குறித்து ரிட் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு பதிலைச் சொல்லலாம். அட்வகேட்-ஜெனரலை வைத்து வாதாடலாம். வாதாடி அவர் பேசியது என்ன என்ற விளக்கத்தைச் சொல்லலாமே தவிர, இங்கே இந்தச் சட்டமன்றத்திலே விவாதித்து, உரிமை பாதிக்கிறது என்ற நிலை இங்கே வருவது துரதிர்ஷ்டவசமானது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையிலே இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்ற பிரச்னை எழுப்பப்படவில்லை. மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் அதை எழுப்பவில்லை. இப்படி அரசியல் சட்டம் சம்பந்தமாக ஒரு பிரச்னை எழும்பியிருக்கிறதே, இந்த அவையினுடைய உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் எடுத்துச் சொன்னார்கள்.

நான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 194 வது பிரிவைச் சொன்னேன். மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 211, 212 ஆகியவைகளைச் சொன்னார்கள். ஆகவே 194, 211, 212 ஆகிய மூன்று பிரிவுகளையும் தாங்கள் ஆராய்ந்து பார்த்து, மற்றைய சட்டமன்றங்களின், நாடாளுமன்றங்களின் முன் நடவடிக்கைக் குறிப்புகளையும் ஆராய்ந்து பார்த்து முடிவு கூற வேண்டும். இந்த அவையில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் விரும்புவது அதுதான். இன்றைக்கு முதலமைச்சர் அவர்களும் இப்பேரவையின் உறுப்பினர் என்ற முறையில்தான் இப்பிரச்னையின் கீழ் வருகிறார்கள். எனவே இந்த அவையினுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை அதற்காக வைக்கிறோம். தாங்கள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து எப்படி நடந்து கொள்வது நலமாக இருக்கும் என்பதை தங்கள் அறிவுரையாக தனிப்பட்ட உறுப்பினர்களுக்கும், சபைக்கும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு இந்தப் பிரச்னையை விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ள செய்தியைக் கொண்டு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றினை எழுப்பியுள்ளார்கள்.



நீதிமன்றங்கள் எந்த வழக்குகளையும் ஏற்கக் கூடாது என்று சொல்வதற்கு நமக்கு உரிமையில்லை. ஆனால், தொடரப்பெறும் வழக்கு பேரவை உரிமைகளைப்பாதிப்பதாக இருப்பின், மன்ற நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் முழு உரிமையோடு கலந்து கொள்வதற்கான உரிமைகளைப் பாதிப்பதாக இருப்பின், நீதி மன்றங்களால் விடுவிக்கப்படும் சம்மன்களுக்கு கீழ்படிந்து கோர்ட்டில் ஆஜர் ஆகவேண்டாம் என்றும், நீதிமன்றங்களின் ஜூரிஸ்டிக்‌ஷனுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றும், அரசின்மூலம் பேரவைக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி உள்ள அதிகாரங்களை நீதிமன்றங்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றும் பேரவைத் தலைவர் அறிவுரை வழங்குவது இதுவரை மரபாக உள்ளது.

இப்பிரச்சினையில் வழக்கு மன்றத்திலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் அறிவிப்பு அல்லது சம்மன் வந்துள்ளத என்ற தகவல் இல்லை, அம்மாதிரி ஏதாவது சம்மன் வந்து அது அவரால் அவைக்கு அறிவிக்கப்படுமானால் மேற்கொண்டு நமது சட்டமன்றத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வவற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதை பத்திரிக்கைகள் வெளியிடுவது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கேள்விநேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து கேள்வியைக் கேட்டார்கள், அமைச்சர் அவர்களும் ஒரு பதிலைச் சொன்னார்கள். குறுக்கீடு எழுந்தது. அந்த நேரத்தில் நீங்கள் அனைவரையும் அமர வைத்து இப்படிப்பட்ட **எல்லாம்கேள்விநேரத்தின்போது எழுப்பக்கூடாது எழுப்ப வழி செய்யக் கூடாது என்று சொல்லி, *அந்த *என்ற வார்த்தையையும் அறவே நீக்கிவிட வேண்டுமென்று பத்திரிகை நிருபர்களைப் பார்த்துச் சொன்னீர்கள். ஆனாலுங்கூட இன்றைய முரசொலி பத்திரிகையில் அமைச்சர் திரு. குழந்தைவேலுவுக்கு அதைத் தலைவர் புத்திமதி என்று போட்டு **என்ற வார்த்தையும் இணைத்துப் போட்டிருக்கிறார்கள். இது தங்களை அவமதிப்பதாகும். அவையின் உரிமையை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேற்று அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன் என்று சொன்னேன்........

திரு. ப. பொன்னுரங்கம்: இன்னொரு பிரச்னை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] முடிந்த பிறகு சொல்லுங்கள். நான் இதற்குச் சொல்[illegible]றேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற[illegible] பெற்றது.

திரு. ப. பொன்னுரங்கம்: மக்கள் குரலிலும் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எந்தக் குரலானாலும் எனக்குக் கவலையில்லை. திருபர்களிடத்திலே நான் மொத்தத்திலே சொல்கிறேன். நான் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதைத் தயவுசெய்து போடக்கூடாது, போடுவது என்பது முறைகேடு. போட்டுக்கொண்டே வந்தால், அப்புறம் நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமைக்கு வந்தால், அது என்னுடைய பொறுப்பு அல்ல. அதையும் நான் சொல்லிவிடுகிறேன். வெளியிலே மன்றத்தின் கவுரவத்தைக் காப்பாற்றுவதற்காக அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொல்கிறேனே தவிர வேறல்ல. அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவது வெளியிலே இந்த மாமன்றத்தை மதிக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லப்படுகிற கருத்து. இதெல்லாம் அவைக் குறிப்பில் வந்தால் வெளியிலே இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆதலாலே, யாருக்கு, மதிப்பு, மரியாதை குறையும் என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்தக் காரணத்திற்காகத்தான் சொன்னேன். முரசொலி திருபருக்குத் தனியாகவே சொல்லிக்கொள்கிறேன். நான் சொல்வது அவருக்கு மட்டும் தனியாகக் காதில் விழாத மாதிரித் தெரிகிறது அது தவறானது. அந்தமாதிரி இனிமேல் நடந்து கொள்ளக்கூடாது. (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான்: மக்கள் குரலுக்குச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் குரலாக இருந்தாலும் அதே தான். எந்தப் பத்திரிகைகள் செய்தாலும் இதேதான். எனக்கு இந்தப் பத்திரிகை, அந்தப் பத்திரிகை என்று கிடையாது.

திரு. துரைமுருகன்: மக்கள் குரல்காரரும் இந்த வேலையைச் செய்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் குரல் செய்தாலும், யார் செய்தாலும் அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். அதிலே எல்லா பத்திரிகைகளும் ஒன்றுதான்.

திரு. அ. ரகுமான்கான்: முரசொலிக்கு மட்டும் ஏன் தனியாகச் சொல்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போட்டிருக்கிறார்கள், சொல்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான்: மக்கள் குரலும் போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போட்டிருந்தால் காட்டுங்கள்.

திரு. துரைமுருகன்: அவர் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் சொல்கிறார். நீங்கள் சொல்கிறீர்கள். நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப எனக்கு அனுமதி கொடுங்கள். மக்கள் குரல் பத்திரிகைபற்றி நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் சொல்லாமலா இருக்கிறீர்கள்? நீங்கள் சொல்லும்போது நான் கேட்கத் தயாராக இருக்கிறேன். இன்றைக்குப் போட்டிருப்பதாலே அறிவித்து இருக்கிறேன். முரசொலிக்கு மட்டும் அல்ல, எல்லாப் பத்திரிகைகளுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. என் கிட்டப்ப: தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள மயிலாடுதுறை பகுதியில், குறிப்பாக, மயிலாடுதுறை நகரத்தில் கடந்த சில நாட்களாக சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் ஆகியோர்களிடையே பலத்த வாக்குவாதம் ஆரம்பித்து, இன்றையதினம் கைகலப்பிலே போய் முடிந்து, பல நூற்றுக்கணக்கானவர்கள் சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய ஒரு அவல நிலை அங்கே உருவாக்கப்பட்டு, பொதுமக்கள் பீதி அடையக்கூடிய அளவுக்கு உள்ளபடியே அங்கே நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு) நான் பேசினால் மட்டும் நிறுத்திவிடுங்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சீனியர் மெம்பர். இந்த அவையிலே அதிகமான ஆண்டுகளாக உறுப்பினராக இருப்பவர் நீங்கள். நான் ரொம்ப மரியாதை கொடுக்கிறவர்களிலே ஒருவர் நீங்கள். அதிலே ஒன்றும் பிரச்னை இல்லை. உங்களுக்கு உடல்நலம் வேறு சரியாக இல்லை. ஆகவேதான் நீங்கள் என்ன சொன்னாலும் கேட்பது என்று வைத்திருக்கிறேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நேற்று தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள், நான் விரைவிலே எடுத்துக்கொள்கிறேன்.

அதை எடுத்த பிறகு சட்ட மன்றத்திலே அதுபற்றிவிவாதிக்கலாம். அதுபற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். உங்களைப் பொறுத்தவரையில் பிரச்னை இல்லை.

(முற்பகல் 10-20)

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, நான் ஒரு பிரச்னையை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது அவையில் வருவாய்த் துறை அமைச்சர் இல்லை; அவர் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம்.

(ஆ) வறட்சித்துயர் துடைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள உண்ணாவிரதம்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, நம்முடைய சட்ட மன்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு அழகர்சாமி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு சங்கரய்யா அவர்களும் மற்றும் விவசாய சங்கத் தலைவர்களும் வறட்சி நிவாரணப் பணி துரிதமாக நடைபெற வேண்டுமென்று இன்று உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைகளைப் பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற முறையிலே அந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த வறட்சி நிவாரணம் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபைக்கு ஒரு அறிவிப்பு தந்ததற்காக நன்றி. ஏற்கனவே இதுமாதிரி வேறு ஒரு பிரச்னை கிளப்பப்பட்டது. அந்தமாதிரி பிரச்னை திரும்பத் திரும்ப வர வேண்டியது இல்லை.

4. ஒத்தி வைப்புத்தீர்மானம்.

வாரத்திற்கு இரண்டு இந்திப்படம் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பெறும் என்கிற அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் அ. ரகுமான்கான், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், கு. ரமணி, ரா. உமாநாத், ரா. கிருஷ்ணன் ஆகியோர் "இந்தித் திணிப்பை உருவாக்கும் விதத்தில் வாரத்தில் இரண்டு நாள் இந்தித் திரைப்படம் டெலிவிஷனில் காட்டப்படும் என மத்திய செய்தி ஒலிபரப்பு மந்திரி அறிவித்து இருப்பதால் தமிழக மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, நாங்கள் இதுசம்பந்தமாகக் கொடுத்திருக்கின்ற விஷயம்......



டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவரவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பொதுவான பிரச்னை. திரு. பாலசுப்பிரமணியன், டாக்டர் இராமலிங்கம் போன்றவர்களெல்லாம் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் சேர்த்து மாண்புமிகு அமைச்சரவர்களின் பதில் வந்துவிடும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு டெலிவிஷன் என்று சொல்லப்படுவது இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்திலே டெலிவிஷனில் இதுவரையில் வாரத்திற்கு ஒரு முறை இந்திப் படம் என்று போடும் நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது மத்தியசெய்திஒலிபரப்புஅமைச்சர்திரு பகத்அவர்கள்வாரத்திற்கு இரண்டு முறை இந்தித் திரைப் படம் காட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே புதன்கிழமைதோறும் ஒலியும் ஒளியும் என்ற வகையில் இந்திப் பாடல் காட்சிகள் இடம் பெறுகின்றன. இதுதவிர ஒவ்வொரு நாளும் இரவு எட்டே முக்கால் மணியிலிருந்து 10 மணி வரையில் தேசீய நிகழ்ச்சி என்ற பெயரில் இந்தி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. டெலிவிஷனில் இந்தி திணிப்பு என்பது முழுமையாக ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே தமிழகத்திலே பல்வேறு துறைகளிலே இந்தித் திணிப்பு இருந்து வருகிறது. ரேடியோவில் இந்தி, இரயில்வேயில் பதவி உயர்வு பெற வேண்டுமென்றால் பரீட்சையெல்லாம் இந்தியிலே எழுத வேண்டும், பேங்க் பரீட்சைகளை இந்தியிலே எழுதினால்தான் புரமோஷன் என்று சொல்லி இந்தி திணிக்கும் நிலைமை இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் சென்னையிலிருந்து மதுரைக்கு விமானத்தில் போனால் ஆங்கிலத்திலும், இந்தியிலும்தான் அறிவிப்பு இருக்கின்றது. விமானம் என்னவோ தமிழ்நாட்டில் தான் ஓடுகிறது. ஆனால் அங்கேகூட தமிழ் இடம் பெறாத சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுது இந்தி வீடுகளுக்குள்ளேயே புகுந்து விடுகின்ற அளவிற்கு, வீடுகளிலே உள்ள டெலிவிஷன்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் வந்துகொண்டிருக்கின்றன.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்திக்கு விரோதிகள் அல்ல, இந்தித் திணிப்புக்குத்தான் விரோதிகள். பிரிட்டிஷாருக்கு நான் விரோதி அல்ல; ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் தான் நான் விரோதி என்று மகாத்மா காந்தியடிகள் சொன்னார்களே அதைப்போல.

இந்தியை டெலிவிஷனிலே திணிப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கனவே எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதுபோன்று டெலிவிஷன் நிகழ்ச்சிகள் மாற்றப்பட்டு இந்தி திணிக்கப்பட்ட பொழுது பிரதமருக்குக் கடிதம் எழுதினார்கள். எங்கள் கட்சி தீர்மானம் போட்டு வன்மையாக அதைக் கண்டித்தது. தொடர்ந்து, வானொலியை ஆகாஷ்வாணி என்று சொல்ல வேண்டுமென்று வசந்த் சாத்தே அவர்கள் சொல்லியபோது, கலைஞர் அவர்கள் பிரதமருக்கு எழுதினார்கள் எங்களுக்குத் தெரியாமல் இந்தக் காரியம் நடந்து விட்டது என்று சொல்லி அதைத் திரும்பப் பெற்றார்கள்.

அந்த அளவிற்கு ஒருபுறத்தில் இந்தித் திணிப்பு நடந்து கொண்டேயிருக்கிறது. இதை வன்மையாகக் கண்டிக்க வேண்டியது எங்கள் கடமை. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு முரணான வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும்; இந்தித் திணிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற வாக்குறுதியைக் கொடுத்திருந்தார்கள். இன்றைய பிரதமர் அவர்கள் அதைப் பின்பற்றுவதாகச் சொன்னாலும், துரதிருஷ்டவசமாக இன்றைக்கு நேரு அவர்களின் வாக்குறுதிக்கு விரோதமாக இந்தித் திணிப்பு நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது தமிழைப்போல இந்தியும் ஒருவட்டாரமொழிதான். எனவே இந்தியைத் திணிப்பது என்றால், இன்றைக்கு அவர்கள் சொல்லுகின்ற தேசிய ஒருமைப்பாட்டிற்கே ஆபத்து ஏற்படுகிறது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு மொழியை இன்னொரு மொழிபேசும் மக்கள் மீது திணிப்பது, தேசியமாகாது; தேசிய ஒருமைப்பாடாகாது. 'தேசிய நிகழ்ச்சி' என்பது இந்தியிலே நிகழ்ச்சிகளைச் சொல்வது அல்ல;

இன்னும் சொல்லப்போனால் அரசியல் சட்டத்திலே 14-க்கும் மேற்பட்ட மொழிகள் தேசிய மொழிகளாக, தமிழ்உட்பட அங்கே இடம் பெற்றிருக்கின்றன. தேசிய நிகழ்ச்சி என்கிற பெயரில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சி என்றால், ஏற்றுக்கொள்ளப்பெற்ற 14-க்கும் மேற்பட்ட இந்திய மொழிகள் அனைத்திலும் தான் ஒலி பரப்பப்படவேண்டும். 14 மாநிலங்களுடைய கலாச்சாரங்களை யெல்லாம், அந்த மக்களுக்குத் தெரிந்த மொழியில், சொல்வது தான் முறையாக இருக்குமே தவிர, இந்தி தான் தேசிய மொழி, இந்தி தான் ஆட்சிமொழி, இந்தியிலே சொல்வதுதான் தேசிய நிகழ்ச்சி என்ற கருத்தைக்கொண்டு அவர்கள் செயல் படுவார்களேயானால், நாட்டை சிதற அடிக்கும் ஓர் மாபப் பெரிய அபாயத்திற்கு அவர்கள் பாதை அமைத்து நிற்கிறார்கள் என்பது பொருள்.



அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாநில மொழிகள் தகர்த்து எரியப்படுகின்றன. வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. முன்பு ஹிந்தி படம் கூட ஞாயிற்றுக் கிழமை அல்ல. ஞாயிற்றுக்கிழமை தோறும், டெலிவிஷனில் தமிழ்ப்படம் தான் காட்டப்பட்டது. இப்பொழுது அதை மாற்றி சனிக்கிழமைக்கு வைத்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமை இந்திப்படம் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன்—எல்லோரும் சனிக்கிழமையன்று வீட்டில் இருக்க முடியாது; கல்லூரிக்குப் போகிறவர்கள், வேறு அலுவலகங்களுக்குப் போகிறவர்கள், பல்வேறு துறைகளிலே இருக்கிறவர்கள், வீட்டிலே இருக்கப் போவதில்லை. ஆனால் இன்னும் சொல்லப்போனால் சனிக்கிழமை காலையிலே தமிழ் படத்தைப் போட்டிருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள். எல்லோரும் வீட்டில் இருக்கிற நாள். அன்றைக்குப் போய் இந்திப்படத்தைப் போடுகிறார்கள். இப்படி மறைமுகமாக ரொம்பவும், கெட்டிக்காரத்தனமாக இந்தித் திணிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது இந்த நிலைமையை நான் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல ராஜ்யசபையிலே பேசிய மத்திய அமைச்சர்கள் இந்த தேசிய நிகழ்ச்சி சம்பந்தமாக, மாநில முதல்வர்களைக் கலந்துதான் முடிவு எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். மஹாராஷ்டிராவில் இருக்கக்கூடிய முதலமைச்சர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். டெலிவிஷன் நிகழ்ச்சி என்றால், மராத்தி மொழியிலே தான் நிகழ்ச்சிகள் ஒளி, ஒலி பரப்பப்பட எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் இங்கேயிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இது குறித்து மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் சொல்லியாக வேண்டும். தமிழ்மொழி அவையிலே இவ்வாறு இந்தித் திணிப்புக்கு தமிழ்நாட்டில் டெலிவிஷன் ஒரு கருவியாகப் பயன்படக்கூடாது என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்லவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 1965 ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் மீண்டும் நடைபெறாது இருக்க வேண்டுமென்றால், இந்தித் திணிப்பை மத்திய சர்க்கார் கைவிடவேண்டுமென்று இந்த நேரத்திலே உங்கள் மூலம் அரசினுடைய கவனத்திற்கும், அங்கே டில்லியிலே இருந்துகொண்டு, இந்தியைத் திணிப்பவர்களுடைய கவனத்திற்கும், நான் கொண்டு வரவிரும்புகிறேன். இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதற்காக வடக்கே இருப்பவர்கள் யாராக இருந்தாலும், இன்றைக்கு இந்தித் திணிப்பிலே ஒட்டுமொத்தமான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சோவியத் ரஷ்யாவிலே இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் ஒப்பந்தம் போட்டது ஏன் இங்கிலீஷிலே போட்டார்கள்? இந்தியிலேதான் போட்டிருக்க

வேண்டும், என்று பார்லிமெண்டிலே கேட்கின்ற அளவுக்கு வாஜ்பாய் போன்றவர்கள் ஐ. நா. மன்றத்திலே ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் இந்தியிலே பேசுகின்ற அளவுக்கு, இன்றைக்கு அங்குள்ளவர்களுக்கு இந்தி வெறியாக அந்தப் புறங்களிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு தமிழுக்கும், தமிழினுடைய கலாச்சாரத்திற்கும், தமிழினுடைய சமுதாயத் திற்கும் ஆபத்து, டெலிவிஷன் மூலமாக, ரேடியோ மூலமாக, விமானம் மூலமாக இருப்பதால், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய கேவலம்—மணி ஆர்டர் பாரங்கள்கூட தமிழில் இல்லை. இங்கே யிருக்கிற செகரட்டரியிலே, ரிசர்வேஷன் பண்ணுகின்றபோது அதற்கான கூப்பன்கள்கூட, தமிழிலே இடம் பெறாமல், இந்தியிலும், ஆங்கிலத்திலும் தான் இடம்பெற்றிருக்கின்றன. தமிழ்நாட்டில் எங்கும்,—இந்தி, எதிலும் இந்தி என்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். குறிப்பாக இந்த அரசைப் பொறுத்தவரை நான் கேட்டுக்கொள்கிறேன். இதே சட்டசபையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி அவர்கள் சொன்னார்கள். 'தி.மு.க. ஏன் சட்டசபைக்கு ஒரு முறை பகிஷ்காரம் செய்கிறது தெரியுமா, வராமல் வாக்குறுதிக்கு சட்ட வடிவம் நாங்கள் நேருவின் தீர்மானத்தை சட்டசபையில் கொடுக்கவேண்டுமென்ற 'ஆகையால் தான் அவர்கள் வரவில்லை' நிறைவேற்ற இருக்கிறோம். குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. என்று சொல்லி சபைக் இந்தி எதிர்ப்பிலே இந்தச் சர்க்கார் உறுதியாயிருக்குமேயானால், இப்போது இந்தக் கூட்டத் தொடரிலே நேருவின் வாக்குறுதிக்கு சட்ட வடிவம் தரப்பட வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஏகமனதாக ஒரு தீர்மானத்தைக் கொடுத்து, வாக்குறுதிப்படி நிறைவேற்றவேண்டுமென்று இந்தச் சபையில் கேட்டுக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குத் தயாராகயிருக்கிறது; அதை நிறைவேற்றுவதில் நீங்கள் தவறுவீர்களானால், நீங்கள் டில்லியிலே போகின்றபோது ஒரு குரலும் தமிழ்நாட்டில் ஒரு குரலும், இரட்டை இலைக்கேற்ப இரட்டை நிலையில் இருக்கிறீர்கள் என்பது பொருள் எனச் சொல்லி, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும். அப்போதுதான் 4½ கோடி தமிழர்களின் குரலும் அதில் ஒலிக்கும் என்று சொல்லி—அது முக்கியமான பிரச்னை, தமிழர்களுடைய மானப் பிரச்சினை, இந்தி திணிக்கப்பட்டால், தூக்குமேடையிலே ஏறுவதற்கும் இந்த நாட்டிலே இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களும், தமிழர்களும் தயாராக இருக்கிறார்கள் என்று எடுத்துச்சொல்லி—இது அவசர முக்கியத்துவம் வாய்ந்த காரணத்தாலே இந்திய அரசியல் சட்டத்தினுடைய பிரிவில் இந்தி தான் ஆட்சி மொழி என்று தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அந்த அரசியல் சட்டத்தின் பிரிவை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும். அது சாத்தியம் இல்லை என்று சொல்வார்களேயானால், அதுவரைக்கும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்.



ஆங்கிலம் அந்நிய மொழி என்று சொல்கிற வாதம் தப்பு. காரணம் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலே ஒன்றான நாகாலாந்திலே ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கிறது. ஆங்கிலோ இந்திய மக்கள் இந்தியாவின் குடிமக்களாக அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கிறார்கள். அவர்களுடைய தாய்மொழி ஆங்கிலம். ஆகவே ஆங்கிலம் அந்நியமொழி என்ற வாதத்தை வைத்துக்கொண்டு செய்கின்ற காரியங்கள் நல்லதல்ல. நாங்கள் ஆங்கிலத்திற்காக வாதாடவில்லை. ஆகவே இந்தி திணிக்கப்படுகிறது. அது தவிர்க்கப்படவேண்டும். ஆகவே இது அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியைக் குறித்து, சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி: பேரவைத் தலைவரவர்களே, டெலிவிஷன் நாட்டிலே இருக்கும்படியான மக்கள் அனைவராலும் அவர்களுடைய வீடுகளிலே இருந்து பயன்படுத்தக்கூடிய ஒரு சாதனம். அவர்கள் மிகவும் சந்தோஷமாகவும், உல்லாச மாகவும் இருப்பதற்கு வேண்டி பயன்படுத்தக்கூடிய ஒரு முக்கியமான மீடியா. இந்த டெலிவிஷன் மூலமாக இந்தியினுடைய ஆதிக்கத்தை அதிகப்படுத்துவதற்கும், எந்த எந்த இடங்களிலே எல்லாம் டெலிவிஷன் இருக்கிறதோ—ஒரு குறிப்பிட்ட இடத்திலே ஒரு வீட்டிலே டெலிவிஷன் இருந்தால், அந்தக் குடும்பம் மட்டுமல்ல, சுற்று வட்டாரத்திலே இந்த டி.வி.யை உபயோகப்படுத்தமுடியாத பல்வேறு மக்களும் வந்து பார்க்கிறார்கள், கேட்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பவர்புல் மீடியா. இதன் மூலமாக இந்தியினுடைய நேரத்தை அதிகப் படுத்திக் கொடுத்து, டி.வி.யில் ஒரு வாரத்திற்கு ஒரு நாள் என்று இருந்ததை, 2 நாளாக எந்த எந்த இடங்களிலே இந்தி பேசாமல் வேறு ரீஜினல் மொழிகளைப் பேசிக்கொண்டு இருக்கிறார்களோ, அவர்களுடைய தாய்மொழிகளை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் இன்றைக்கு இந்த இந்தி மொழி வெகு சாமர்த்தியமாக மத்திய சர்க்காரால் திணிக்கப்பட்டிருக்கிறது என்பது இந்த நிகழ்ச்சியின் மூலமாக தெளிவாகிறது. இந்தியை திணிப்பதற்கான கடுமையான முயற்சியை மத்திய அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங் களிலே செய்தபோது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த மன்றத்திலே நாங்கள் அதைக் கண்டித்துப் பேசியிருக்கிறோம். இன்றைக்கு இந்த டெலிவிஷன் மூலமாகவும் அந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டு சகல மொழிகளும் பேசக்கூடிய பகுதிகளில் இந்திக்கு அதிகப்படியான இடத்தைக் கொடுத்து, அந்த மக்களுக்கு முன்னால் அது நிற்கவேண்டும். அதுதான் இந்தியாவினுடைய ஏகபோகப் பிரதிநிதி மொழி என்று மற்றவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவர்களுக்கு முன்னால் அது நிற்கவேண்டும், அதைக் காட்டவேண்டும், அதை

அவர்கள் கேட்கவேண்டும், பார்க்கவேண்டும் என்ற முறையில் விரும்பாத அந்த மக்கள் மீது அவர்களுடைய வீட்டுக்குள்ளே, அவர்களுடைய காதுக்குள்ளே, அவர்களுடைய கண்ணுக்கு முன்னாலே அந்தக் காரியத்தைச் செய்யக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இது வந்துள்ளது. ஆகவேதான் சொல்கிறோம். இந்த நிலைமையை கடுமையாக எதிர்க்கவேண்டியதும், கண்டிக்கப்படவேண்டியதுமாகும். ஏற்கனவே இப்படிப்பட்ட தேசிய நிகழ்ச்சிகள் என்ற பெயரால் ரீஜினலாக இருக்கும்படியான மற்ற மொழி பேசும்படியான ரீஜின்களிலே எல்லாம் இப்படி ஒரு ஆக்கிரமிப்பைச் செய்வது என்ற முறையிலே மத்திய சர்க்கார் நடந்துகொள்வது தவறு. டி.வி. புரோகிராம்மிலே இப்படி நேரத்தை ஒதுக்கி இந்திக்கு முக்கியத்துவத்தை அளித்து மற்ற ரீஜினல் மொழிகளுக்கு இருக்கின்ற முக்கியத்துவத்தை குறைக்கும் விதத்தில் இது சென்றுகொண்டிருக்கிறது. இது தப்பு என்று ஏற்கனவே எங்களுடைய மேற்கு வங்க அரசாங்கம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து இருக்கிறது. மகாராஷ்டிரம் போன்ற வேறு சில மாநிலங்களும் இவைகளை எல்லாம் கண்டித்திருக்கின்றன. தமிழகமும் இதைக் கண்டிக்கும் என்று நம்புகிறேன். அந்த முறையிலே மாநில அரசாங்கம் தலையிட்டு இந்த முறைகள் சரியல்ல, மக்கள் மனதை புண்படுத்துகின்ற வகையில் செய்வது சரியல்ல என்றும் அதேசமயத்தில் டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையின் காரணமாக அதற்கு ஆட்பட்டு இருக்கிற மக்கள் மீது ஒரு அன்டியு அட்வான்டேஜ் எடுத்து, இந்தக் காரியத்தை செய்வது என்பது நேர்மையல்ல என்றும் சொல்ல இந்த அரசாங்கம் கண்டிப்பதற்கான ஒரு காரியமாகும் இது. இந்த நிலைமைகளை எல்லாம் தாண்டி, சென்னையிலே வாரம் ஒரு புரோகிராமாக இருந்ததை இரண்டு என்று மாற்றக்கூடிய காரியங்களைச் செய்வது என்ற நிலைமையை மத்திய அரசாங்கம் திட்டவட்டமாக அனுமதிக்கக் கூடாது, அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டும். ஏற்கனவே இந்திய அரசாங்கத்தினுடைய சிலபல பகுதிகளிலேயும், இலாக்காக்களிலேயும் எல்லாம் இந்தி மொழியினுடைய ஆதிக்கத்தைத் திணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இப்படி இந்தியை ஒட்டுமொத்தமாக திணிப்பதற்கு பல்வேறு தந்திரங்களை அவர்கள் கையாளுகிறார்கள், உபாயங்களைக் கையாளுகிறார்கள். இப்போது கூட ஒரு செய்தியைக் கேள்விப்பட்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பல்வேறு அலுவலகங்களில் பணிபுரியக் கூடிய ஊழியர்களிடம் நீங்கள் இந்தியைப் படித்தால், உங்களுக்கு அதிகமான சம்பளம் கிடைக்கும், வேலை உயர்வு கிடைக்கும் என்று ஒரு ஆசையைக் காட்டி அவர்கள் அந்த முறையிலேயும் மறைமுகமாக இந்தியைத் திணிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளில் இன்றைக்கு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

ராணுவ இலாகா, மத்திய போலீஸ் இலாகா, அதேமாதிரி வங்கிகள் மற்றும் பல்வேறு மத்திய சர்க்கார் இலாகா போன்றவற்றில் இந்தியைத் திணிப்பது தவறு என்பதைக் கண்டித்து ஏற்கனவே சொல்லி இருக்கிறோம். இவ்வளவையும் சொல்லிய பின்னாலே, பாராளுமன்றத்திலே அண்மையிலே கூட அது பற்றி வாக்குறுதி கொடுத்தார்கள். 'நாங்கள் இப்படி தேசிய நிகழ்ச்சிகள் என்ற முறையில் நாடு முழுவதிலும் இந்தியைத் திணிக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் இல்லை; இந்தி திணிக்கப்படமாட்டாது' என்றெல்லாம் பாராளுமன்றத்திலே வாக்குறுதி கொடுத்து அந்த வாக்குறுதி எல்லாம் இன்றைக்கு காற்றிலே பறக்கிறது. அந்த முறையிலே இன்றைக்கு இந்தித் திணிப்பு உருவாகி வந்து இருக்கிறது. ஆகவே டி.வி. மூலம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது கட்டாயத்திணிப்பாக நமக்கு வருகிறது. ஆகவே, 'தேசிய நிகழ்ச்சிகள் என்ற முறையில் ரீஜினல் லாங்குவேஜ்—தாய்மொழி பேசும் மற்ற பகுதி மக்களின் உரிமையில் தலையிடக்கூடிய முறையில் இருக்கிறது. இது முக்கியமாக எதிர்ப்பு தெரிவிக்கப் படவேண்டிய நிகழ்ச்சி. மறைமுகமாக இந்தித் திணிப்பு என்பது போய், நேர்முகமாக இன்று வந்து கொண்டு இருக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இதற்கு மத்திய சர்க்கார் சார்பில் என்னதான் சமாதானம் சொன்னாலும், இது இந்தியை ஏற்றுக்கொள்ளாத மக்கள் மீது, அவர்கள் விரும்பாதபோது, திணிக்கப்படுகின்ற நிகழ்ச்சி, இது தடுக்கப்பட்டாகவேண்டும். ஆகவே, இதை எந்த வகையில் தடுத்து நிறுத்தலாம் என்பது குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து ஒரு முக்கியமான பிரச்னை பற்றி விவாதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிற கருத்தில், எந்தவிதமான மாற்றமும் இன்றி, மேலும் வலுவான ஆதாரங்களோடு இன்றைய அரசு அதை வலியுறுத்திக் கொண்டு இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்த டெல்லி ஒளிபரப்பு நிகழ்ச்சியின் மூலமாக வாரத்திற்கு இரண்டு இந்தி படங்கள் ஒளிபரப்புவது என்ற திட்டத்தை மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பதை ஒட்டி, தமிழக மக்களிடையே எழுந்து இருக்கும் ஒரு அச்சத்தை நாம் விவாதிப்பதற்கு முன்னால் தொடர்ந்து இது போன்ற நிகழ்ச்சிகளை அவ்வப்போது இடைவேளை விட்டு விட்டு மத்திய அரசின் சார்பிலே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருவதற்காக தமிழக மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் என்பதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல இந்த அரசு விரும்புகிறது.

அதிலும் குறிப்பாக, செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சகம் டெல்லியில் இருக்கிறது. அந்த அமைச்சகத்திற்கு வேறு வேலைகளைப் பார்ப்பதை விட, இந்தியாவில் இந்தி பேசாத பகுதிகளில் எப்படி இந்தியை நேரம் கிடைக்கிறபோதெல்லாம் பயன்படுத்துவது என்பதில் தான் தன்னுடைய வேலை திட்டமாக வைத்துக் கொண்டு இருக்கிறதோ என்று ஐயுறுகிற அளவிற்குத் தான் அந்தத் துறையின் செயல் முறைகள் இருந்து வருகின்றன என்பதை நாம் மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டி வருகிறோம். துரதிருஷ்டவசமாக அந்தத் துறை அமைச்சர்கள் அடிக்கடி மாறிக் கொண்டு வருகிறார்கள். முன்னாலே மாண்புமிகு திரு. சாத்தே அவர்கள் இருந்தபோது' திடீரென்று சும்மா-கிடந்த சங்கை ஊதி கெடுத்தான் ஆண்டி என்பதைப்போல—'ஆல் இந்தியா ரேடியா' என்று ஒலிபரப்பு நிலையத்தை 'ஆகாஷ்வாணி' என்று மாற்றி அறிவித்தார்கள் உடனே தமிழக அரசு தமிழக மக்களின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கடுமையாகக் கண்டித்து, இது வேலையற்ற வேலை, ஏன் அந்த அமைச்சகம் இதைச் செய்து கொண்டு இருக்கிறது, அதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க மத்திய அரசு குறிப்பாக அன்புக்குரிய இந்திய பிரதம அமைச்சர் அவர்கள், அது தன்னுடைய கவனத்திற்கு வராமலேயே நிகழ்ந்து இருக்கிறது என்று சொல்லி, 'ஆகாஷ்வாணி என்பதை அகற்றி மீண்டும் 'ஆல் இந்தியா ரேடியோ' என்ற ஆங்கிலச் சொல்லையே அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

(முற்பகல் 10-40)

அப்போதே இந்தியா முழுவதும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதல் 'நேஷனல் பிராட்காஸ்டிங்' அல்லது 'நேஷனல் டெலகாஸ்டிங்' என்ற முறையில் தேசிய ஒலிபரப்பு நிகழ்ச்சி என்ற வகையில் ஒலிபரப்பப் போகிறோம் என்று அன்றைய மத்திய அமைச்சர் தெரிவித்தார் அது இந்தியா முழுவதற்கும்—அதாவது இந்தியாவில் உள்ள தேசிய மொழிகள் அனைத்துக்கும்—உரிமை வழங்கும் ஒன்றாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அதன் மூலம் இந்தி திணிப்பதற்கு மறைமுகமான முயற்சியோ என்று ஐயுறத் தக்க வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றதை ஒட்டி உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்கு தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் இந்தி ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டித்து மிகத் தெளிவாக ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் கொஞ்சம் கீழே இறங்கி வந்து, தேசிய ஒலிபரப்பு என்பது இந்தி மாத்திரம் அல்ல. இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களிலிருந்தும் தேர்வு செய்த நிகழ்ச்சிகளைத்தான் ஒலிபரப்புகிறோம் என்று தெரிவித்து, அதையும் நாம் கடுமையாக எதிர்த்த பிறகு 15 நிமிடங்கள் இந்திச் செய்தி ஒளிப்பரப்புவதை



இப்போது நிறுத்தி விட்டார்கள். அந்த இடத்திலே அந்தந்த ஒளிபரப்பு நிலையங்கள் தங்களுடைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக் கொள்ளலாம் என்று சொல்லி அவர்கள் நிகழ்ச்சியை குறைத்து விட்டார்கள்.

இந்தப் பொறுப்பிலிருந்து சாத்தே போன பிறகு மாண்புமிகு சால்வே வந்தார்கள். அவர்கள் வந்த பிறகு புதிதாக சில விஷயங்களை ஆரம்பித்தார்கள். அதற்கு மறுப்பு தெரிவித்தோம், எதிர்ப்பு தெரிவித்தோம். அவர்கள் நம்முடைய எதிர்ப்புகளைக் கேட்டு, நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அந்த நிலையில் அவரும் போய் இப்போது மாண்புமிகு பகத் அவர்கள் வந்திருக்கிறார்கள். பகத் அவர்கள் வந்தவுடனே, மத்திய அமைச்சகத்திலே இந்த செய்தி ஒலிபரப்புத் துறைக்கு வருகிறவர்கள் தாங்கள் வந்திருக்கிறோம் என்பதை நாட்டு மக்களுக்கு காட்ட வேண்டுமென்று விரும்புகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் வந்தவுடனே கை வைத்தது இந்த இந்தி பேசாத மக்கள் உரிமையில்தான். இந்தி பேசாத மக்கள் உரிமையில் கைவைக்க மாட்டோம், இந்தியை திணிப்பதில்லை என்று அவர்கள் சொன்னாலும் அவர்கள் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையிலும் இந்தி திணிக்கப்படுகிறது. இந்தி மறைந்திருக்கிறது என்பதை, நாம் தெளிவாக அவ்வப்போது எடுத்துக் காட்டிக் கொண்டு வருகிறோம்.

இப்போது வந்திருக்கிற மாண்புமிகு பகத் அவர்கள் அவர்களுடைய இந்த ஒலிபரப்பு நிலையத்தில் இருப்பவர்கள், ஒளிபரப்பு நிலையத்தில் இருப்பவர்கள் எல்லோரையும், அதிகாரிகள் எல்லோரையும் அழைத்து வைத்துப்பேசி, ஏதோ இந்த நாட்டின் ஒற்றுமைக்கு இந்திபேசாத மக்கள்உரிமைகளை எல்லாம் பாதுகாத்து எல்லோரையும் ஒன்று சேர்ப்பதற்கு இந்த ஒளிபரப்பு நிலையத்திலும், ஒலிபரப்பு நிலையத்திலும் நடவடிக்கை எடுப்பதற்கான திட்டங்களை நாங்கள் எடுத்திருக்கிறோம் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்த நேரத்திலே, அந்த அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசி, என்ன முடிவை அறிவித்தார்கள் என்றால் வாரத்திற்கு ஒருமுறை காட்டிய இந்திப் படத்தை இனி இரண்டாக காட்ட முடிவு எடுத்திருக்கிறோம் என்று அறிவித்தார்கள். ''குதிரை கீழே தள்ளியதுமில்லாமல் குழியையும் பறித்து மேலே மண்ணையும் போட்டது'' என்பதைப் போல புதிதாக வந்த ஒலிபரப்பு அமைச்சர் இப்படிப் பட்ட ஒரு கல்லைத் தூக்கி நம்முடைய தலையிலே போடுவதற்கு முன் வந்தார்கள்.

இந்தச் செய்தி வந்தவுடனே தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு பகத் அவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது; இதை தமிழக மக்கள் எதிர்க்

கிறார்கள் இதனுடைய அடிப்படை உண்மை நிலை என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை என்றும், இப்படி வாரத்திற்கு இரண்டு இந்திப் படங்களை ஒளிப்பரப்புவது உங்களுடைய விருப்பமாக இருந்தால் அதை உடனடியாக கைவிட்டு விட வேண்டும்; அதை கடுமையாக தமிழகம் எதிர்க்கும் என்று தமிழக அரசின் சார்பிலே ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பினோம். அதன் பிறகு தகவல் கிடைக்கவில்லை. இங்கே ஒத்திவைப்புப் பிரேரணை வரவிருக்கிறது என்ற தகவல் கிடைத்தவுடனே தொலைபேசி மூலம் அந்த அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம் அவர்கள் இப்போது இதற்கு தந்திருக்கிற விளக்கம்; இது இந்தியா முழுவதற்கும் உள்ள தொலைக் காட்சி நிலையங்களில் இந்த இரண்டு இந்திப் படங்களையும் ஒளிபரப்புவது இல்லை. டெல்லியிலேதான் இந்த இரண்டாவது இந்திப் படத்தை ஒளிபரப்ப இருக்கிறோம். அதை லோ பவர் ட்ரான்ஸ்மீட்டர் என்ற குறைந்த சக்தியுள்ள, தானே நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒளிப்பரப்பிக் கொண்டிருக்கிற சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற இந்த நிலையங்கள் அல்லாத டெல்லியிலே ஒளிப்பரப்புகின்ற நிகழ்ச்சிகளை மாத்திரமே நம்பி 'ரிலே' செய்கிற அந்த சிறிய சக்தியுள்ள நிலையங்களாகத்தான் இதை ஒளிபரப்ப இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் அனேகமாக டெல்லியை ஒட்டி டெல்லியைச் சுற்றித்தான் இருக்கிறதே ஒழிய கிராமங்களிலே வருவதற்கு வழி இல்லை. அதைப்பற்றி எப்படி நிகழ்ச்சிகள் இருந்தாலும் அல்லது சமாதானங்கள் சொல்லப்பட்டாலும் மத்திய அரசின் சார்பிலே குறிப்பாக இந்த செய்தி ஒளி பரப்புத் துறை, இப்படிப்பட்ட ஒரு தேவையற்ற வேலையிலே அதிகமாக அடிக்கடி ஈடுபட்டுக் கொண்டு இந்த நாட்டின் அனுமதியை கெடுத்துக் கொண்டிருக்கிறது என்கிற ஒரு குற்றச்சாட்டை நமது நாட்டு மக்களின் சார்பிலே நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிற கருத்தை இந்த அவையின் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காரணம் இந்தி திரைப்படத்தை அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக ஒளிப்பரப்புகிறார்கள் என்றால் ஆசிய விளையாட்டுக்காக வரவழைக்கப்பட்ட, வண்ண ஒளிக் காட்சி இயந்திரத்தை வைத்து அதன் மூலமாக இந்திப் படத்தை ஒளி பரப்புகிறார்கள் வேறு எது எதற்கோ அனுமதி கொடுக்க மறுக்கும் மத்திய அரசு அவசரத்திற்கு உதவுகிற மருந்துகளைக் கூட வரவழைப்பதற்கு அனுமதி அளிக்க மறுக்கிற மத்திய அரசு, இந்த வண்ண தொலைக் காட்சிப் பெட்டிகளை வரவழைக்க வரிச் சலுகைகளை கொடுத்து வரவழைக்க அனுமதி கொடுத்துள்ளார்கள். 'ஆதாயம் இல்லாமல் செட்டியார் ஆற்றிலே போக மாட்டார்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள் (சிரிப்பு-குறுக்கீடு) பலபேர் நான் செட்டியார் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நான் எந்த ஜாதியைப் பற்றியும் தனிப்பட அக்கறை கொண்டவன் அல்ல. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளுங்கள். அப்படி எல்லாவற்றிற்கும் அனுமதி மறுக்கிற மத்திய அரசு இந்த வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகளை வரவழைக்க இந்தியா முழுவதற்கும் அனுமதி கொடுத்த அவர்களுடைய செயல்களிலிருந்து நமக்கு தெரிகிறது, அது இந்தியைப் பரப்புவதற்காகத்தான் என்று. அவர்கள் சொல்லும் உண்மைகளை நாம் ஒப்புக் கொள்ளவில்லை.

இன்றைக்கு டெல்லியிலேயிருந்து இந்திப் படத்தை வண்ணத்திலே ஒலி பரப்புகிறார்கள். அதன் மூலம் இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களையும் அதைக் காணச் செய்கிறார்கள். ஆகவே, வண்ணப் படத்தை பார்க்கிற ஒரு உணர்வை இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தி அதன் வழியாக இந்திப் படத்தை அதிகமாக பார்க்க வைத்து, அதன் மூலம் இந்தி மொழி மீது ஒரு அக்கறை ஏற்படுத்தி அதன் மூலம் இந்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ள வைக்கலாம் என்ற ஒரு சாதாரண ஆசையைத்தான் இது பிரதிபலிக்கிறது. குழந்தைகளுக்கு தின்பண்டம் காட்டி ஏமாற்றுவது போல, இந்த மத்திய அரசினுடைய ஒளி பரப்புத் துறை முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் சொல்லிக் கொண்டு—ஆனால் இந்த குழந்தை அந்த திண்பண்டத்திற்கு ஆசைப்படும் குழந்தை அல்ல, மயங்குகிற குழந்தை அல்ல. அது விஷம் கலக்கப்பட்டிருக்கிற தின்பண்டம் என்பது இந்தக் குழந்தைக்குத் தெரிந்திருக்கிறது—ஆகவே தமிழகத்தை இப்படி ஏமாற்ற முடியாது என்பதை, நான் இந்த அவையின் மூலமாக அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நாங்கள் அவர்களை கேட்டோம். நீங்கள் அப்படி அகில இந்திய அளவிலே வண்ணப்படத்தை ஒளிப்பரப்புவதில் அக்கறை கொண்டிருந்தால் ஒரு தேசிய ஒருமைப் பாட்டு உணர்ச்சியுடன் ஒளிப்பரப்புவதாக இருந்தால் ஆந்திராவிலே உருவாக்கப்பட்ட படங்களை டெல்லியிலேயிருந்து வண்ண இயந்திரத்தின் மூலமாக ஒளி பரப்புங்கள். அப்போது தான் தேசிய ஒருமைப்பாடு என்பதற்கு பொருள் உண்டு. அப்போது தான் நீங்கள் எல்லா மொழிகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கும் பொருள் உண்டு. எப்படி இந்திப் படத்தைக் காட்டுவதற்கு காரணம் சொல்கிறீர்களோ—மக்கள் கதையையும் கருத்தையும் பார்க்கிறார்கள், பாட்டை ரசிக்கிறார்கள் ஆகவே மொழி முக்கியம் அல்ல என்று சொல்கிறீர்களோ. அப்படியே அகில இந்தியா முழுவதற்கும், ஏன் உலகம் முழுவதும் பாராட்டப்பட்ட தமிழ் படங்கள் இருக்கின்றன. தெலுங்குப் படங்கள் இருக்கின்றன, கன்னட படங்கள் இருக்கின்றன. மலையாளப் படங்கள் இருக்கின்றன. அவைகளையும் அதிலுள்ள கலை நுணுக்கங்களுக்காக மக்கள் ஏற்றுக் கொண்டு ரசிப்பார்கள், ஆகவே, அவைகளையும் அந்த வண்ணப் படத்தில் காட்ட

ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கு அவர்கள் எந்தவித பதிலையும் தரவில்லை. இப்போது இரண்டாவதான இந்தி படத்தைத்தான் நாங்கள் ஒளி பரப்புகிறோம் என்று சொல்கிறார்கள்.

அதற்காகத்தான் அந்த வண்ண ஒளி பரப்பு கருவிகள் வந்த உடனேயே தமிழக அரசு விழித்துக் கொண்டு, எங்களுக்கும் அந்த ஒளி பரப்புக் கருவி வந்தாக வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் முதலிலே பார்க்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, சால்வே அவர்கள் இங்கே வந்திருந்த போது நேரிலேயே கேட்டோம். டில்லியில் உலக கோஷ்டிசேரா மாநாடு முடிந்ததற்குப் பிறகு, அதை பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள்.

(முற்பகல் 10-50)

இப்போது பரிசீலித்து இருப்பார்கள் என்று கருதுகிறோம். ஆகவே தமிழகத்திற்கு அந்தக் கருவிகளிலே ஒன்று வந்தாக வேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி வந்தால் வாரம் தோறும் இங்கே ஒளிப்பரப்பப்படுகின்ற தமிழ் படங்கள் மற்றும் தென் இந்திய மொழிப் படங்களை வண்ணத்திலே ஒளி பரப்ப முடியும் அவர்கள் இந்தியிலே எப்படி கவர்ச்சி இருக்கின்றது என்று கருதுகிறார்களோ அதை விட கவர்ச்சி கருத்து நம்முடைய மொழிப் படங்களிலும் உண்டு என்பதை நாம் வட இந்திய மொழி பேசுகின்ற, தமிழ் மொழியைப் பேசாத மக்களுக்கும் நாம் அறிவிக்க முடியும், நிரூபிக்க முடியும் என்பதை நாம் இன்றைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே எப்போதாவது நாம் அயர்ந்து இருந்தால் தூங்குகிறவன் கொடையிலே கயிறு திரிப்பது என்று சொல்வார்களே அப்படிப் பட்ட வேலையை இந்த மத்திய அரசிலே இருக்கின்ற ஒளி பரப்புத் துறை செய்கின்றது. அதற்கு யார் காரணம் என்று குற்றம் சாட்ட நான் விரும்பவில்லை. ஆனால் அந்த துறை எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன நாம் அயர்ந்தால் நம் மீது இந்தியை எப்படியாவது திணித்து விடலாம் என்ற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை மிகத் கடுமையாக தமிழக அரசு தமிழக மக்களின் சார்பிலே கண்டிக்கின்றது என்பதை முதல்வர் அவர்கள் பலமுறை எடுத்து தெரிவித்திருக்கிறார்கள். இப்போதும் கூட மத்திய அமைச்சர் ஓராண்டு நடைபெற்று முடிந்திருக்கின்ற அனுபவத்தை, இந்த தேசிய ஒளி பரப்பைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் நீங்கள் அப்படி தேசிய ஒளிப்பரப்பை





தொடர்ந்து நடத்த வேண்டும் என்றால் நீங்கள் இந்தியிலே எப்படி ஒளிப்பரப்புகிறீர்களோ அதைப்போல மற்ற மாநில மொழிகளில் குறிப்பாக எங்கள் மாநிலத்தை பொறுத்த வரையில் எங்களுடைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறபோது தமிழ்மொழியிலே மொழி பெயர்த்து ஒளிப்பரப்பபட்டாக வேண்டும். என்று சொல்லி இருக்கிறார்கள். அதைப்போல அந்த அந்த மாநில நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்ற போது அந்தந்த மாநில மொழிகளிலே மொழிபெயர்த்து ஒளிப்பரப்ப பட்டாக வேண்டும், அதற்குரிய சாதனங்கள் இல்லை என்றால் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கின்ற மத்திய அரசு நாட்டு மக்களின் ஒற்றுமையை மனதில் வைத்து நாட்டின் ஒற்றுமையை மனதில் வைத்து இந்தத் துறைக்கு சில கோடி ரூபாயை செலவு செய்து இந்த மொழி பெயர்க்கின்ற இயந்திரங்களை ஏற்படுத்தி அதாவது அந்த வசதிகளையெல்லாம் ஏற்படுத்திவிட்டு அதற்கு பிறகு தேசிய ஒளி பரப்பு நிகழ்ச்சியை அமலாக்க வேண்டும் அல்லது விரிவு படுத்த வேண்டும், என்று மிகத் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்தினை விட அதை விட இன்னும் கொஞ்சம் அதிகமாகவும் அழுத்தமாகவும் இந்த அரசு இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலே அக்கறை கொண்டு இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன், கண்ணை விற்று சித்திரம் வாங்குகின்ற வேலையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகின்ற இந்த உலகத்திலே மிகத் தொன்மை வாய்ந்த மொழிக்கு சொந்தக்காரர்கள் என்ற உரிமையை விட்டுவிட்டு அந்த மொழியை விட்டுவிட்டு இந்த வண்ண ஒளிபரப்பிலே இந்தி நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதைத் திட்டவட்டமாக நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம், தெரிவிப்போம் இப்போதும் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துப்படி இரண்டாவது இந்திப்பட ஒளிப்பரப்பு என்பது டெல்லியை சுற்றித்தான் குறிப்பாக தமிழகத்திற்கு இல்லை என்பதுதான் இங்கே இருக்கின்ற நிலைய இயக்குநர்களையும் அழைத்துக் கேட்டோம். எங்களுக்கு அப்படிப்பட்ட தாக்கீதும் வரவில்லை, எங்களை ஒளிபரப்பச் சொல்லவில்லை என்று சொன்னார்கள்.

எங்களை ரிலே செய்யச் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் மத்திய அமைச்சரிடத்திலிருந்து அதிகார பூர்வமான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் ஆகவே இங்கே இந்தி திணிப்பு எந்த நேரத்திலும் எந்த உருவிலே யார் மூலம் வந்தாலும் அதை விழிப்புணர்ச்சியோடு இருந்து தடுப்பதிலே தமிழக அரசு முன் நிற்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சி தலைவர் அவர்கள் அதற்கு முன் நின்று அதை தடுப்பார்கள் என்ற உறுதியை இந்த மன்றத்தின்

மூலம் நாட்டுக்கு அறிவித்து ஆகவே இன்றைக்கு நமக்கு கிடைத்து இருக்கின்ற தகவல்களை ஒட்டி தமிழகத்தினுடைய நிலையங்கள் இந்த ஆண்டாவது இந்த படத்தை ஒளிப் பரப்பப் போவது இல்லை என்கின்ற செய்தியை ஏற்றுக் கொண்டு நமக்கு தெளிவான பதில் கிடைத்த பிறகு நாம் நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியை சொல்லுவதன் காரணமாக நம்முடைய உணர்வுகள் தெரிவிக்கப்பட வேண்டிய இடத்திலே தெரிவித்து இருக்கிறோம் இன்றைக்கு நடைபெற்ற விவாதத்தின் மூலமும் அவர்களுக்கு தெரிவிக்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை சொல்லி இதனை விவாதிப்பதற்கு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம் பரளச்சி கிராமத்தில் பேருந்து, தண்ணீர் வசதி கோரி மறியல் செய்தவர்கள் மீது காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், டி. மணி, எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், கி. சட்டநாத கரையாளர், ஏ. சாகுல் ஹமீது, ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், செ. சிவசாமி, பெ. சு. திருவேங்கடம், எஸ். ஆண்டித்தேவர், கு. ப. பழனியப்பன் ப. நெடுமாறன், கே. ஆர் சுந்தரம், என். எஸ். வி. சித்தன். எல். பலராமன் திருமதி. டி. யசோதா ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம், பரளச்சி கிராமத்தில் டவுன் பஸ், தண்ணீர் வசதி கோரி 1-3-1983 அன்று மறியலில் ஈடுபட்டவர்கள் மீது காவல் துறையினர் தாக்குதல் நடத்தியது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.





### அறிக்கை

அருப்புக்கோட்டையிலிருந்து பரளச்சிக் கிராமத்திற்கு சென்று வர டவுன் பஸ் வசதி கோரி, பரளச்சி கிராமத்தைச் சேர்ந்தவர்களும், அருகிலுள்ள கிராம மக்களும், அருப்புக் கோட்டைக்கும் சாயல்குடிக்குமிடையே செல்கின்ற பஸ்களை 1—3—83 அன்று வழிமறித்து நிறுத்த திட்டமிட்டார்கள். அருப்புக்கோட்டை தாசில்தாரும், கமுதி டி. எஸ். பியும் அக் கிராமத்தில் உள்ள பெரியவர்களைத் தொடர்புகொண்டு, அக்கிராமத்திற்கு டவுன்பஸ் விடுவதற்கு அதிகாரிகள் எடுத்து வரும் நடவடிக்கையைப் பற்றிக்கூறி, பஸ்களை வழிமறிக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு எடுத்துக் கூறினர். சென்னை போலீஸ் சட்டம் பிரிவு 30 (2) அமுல்படுத்தியிருப்பதையும் அவர்களுக்கு தெரியப்படுத்தினர் அக்கிராமத்தினர் திட்டமிட்ட படி பஸ்களை மறியல் செய்வது பிடிவாதமாகவும், உறுதியாகவும் இருந்தனர். 1-3-83 அன்று காலை 7-00 மணியிலிருந்து 8-30 மணிவரை 174 தொண்டர்கள் மூன்று குழுவாக பஸ்களை வழி மறிப்பதற்காகச் சென்றனர். 174 தொண்டர்களும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 143 மற்றும் 188-ன் கீழ் கைது செய்யப்பட்டனர். அன்று காலை 10-30 மணிக்கு 15 நபர்களைக் கொண்ட நான்கு வது குழு சாலையை நோக்கி வந்தபொழுது கமுதி டி எஸ். பி. தலைமையிலிருந்த காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்தனர் அப்பொழுது அக்கூட்டத்தினர் காவலர்கள் மீது கற்களை எறிந்தனர். கமுதி டி எஸ். பி. அதில் காயமடைந்தார். 12 நபர்கள் கைது செய்யப்பட்டு, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 140, 143, 147, 188, 322, 326 பிரிவுகளின் கீழ் குற்ற எண் 19/83-ல் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது பிறகு குற்றவாளிகள் மதுரை மத்தியச் சிறையில் விசாரணைக் கைதிகளாக வைக்கப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் காவலர்கள் யாரையும் லத்தியால் அடிக்கவோ, கொடுமைப்படுத்தவோ, கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன் படுத்தவோ, சுட்டுவிடுவோம் என்று பயமுறுத்தவோ இல்லை. பெண் தொண்டர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் 6-3-83 மற்றும் 7-3-83 அன்றும் விடுதலை செய்யப்பட்டனர்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம். : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை படித்தபோது எனக்கு தோன்றிய கருத்து எல்லாம் என்னவென்றுச் சொன்னால் முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற விவகாரமாக இருக்கிறது. அங்கே வந்து லத்தியால் அடிக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். லாக்கப்புக்கு கொண்டுவரப்பட்ட பிறகும் அடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்த தாய்க் குலத்தை பேசத் தகாத வார்த்தைகளால் பேசப்பட்டிருக்கிறது. அதை சட்டமன்றத்தில் பேசக்கூடாது என்பதால் நான் பேசவில்லை.

அவ்வளவு இழிவான முறையில் நடத்திவிட்டு, செய்வதையும் செய்து விட்டு, அங்கிருந்து இப்போது அறிக்கை இப்படி தருகிறார்கள். நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மேற்படி சம்பவத்தில் காவலர்கள் யாரையும் லத்தியால் அடிக்கவோ, கொடுமைப்படுத்தவோ, கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தவோ, சுட்டுவிடுவோம் என்று பயமுறுத்தவோ இல்லை. பெண் தொண்டர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் 6–3–83 மற்றும் 7-3-83 அன்றும் விடுதலைச் செய்யப்பட்டனர் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே முழு பூசணிக்காயை சோற்றில் வைத்து மறைத்து இருக்கிறார்கள். இந்த சட்டமன்ற நிகழ்ச்சிகள் பத்திரிக்கையில் வெளியே வந்தால் அங்கு இருக்கக்கூடிய மக்கள் என்ன நினைப்பார்கள். இந்த சட்டமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு மோசமான, தவறான, உண்மைக்கு மாறான அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டு நம்முடைய சட்டமன்றத்தினுடைய மதிப்பும், கண்ணியமும் கெட்டுவிடக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது என்று நான் கருதுவதால் என்ன நடந்தது என்று சம்பவங்களை நாங்கள் ஏற்கனவே கொடுத்து இருக்கிறோம்; அவைகள் உண்மையா? அல்லது இந்த அறிக்கை உண்மையா என்பது பற்றி தீவிரமாக விசாரிப்பதற்கு, நல்ல முறையில் விசாரிப்பதற்கு சர்வ கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை இந்த சட்டமன்றம் அங்கு அனுப்பி என்ன நடந்தது என்பதைப் பற்றி விசாரணை செய்து இந்த சட்டமன்றத்தில் அதை வைக்க அரசாங்கம் முன்வருமா என்பதைப் பற்றி தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அரசுக்கு கிடைத்த தகவல்கள் அறிக்கை மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இருக்கின்ற நிலைமைகள் ஏற்படுமானால் அங்கு இருப்பவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் தனியாக புகார்கள் செய்வார்களானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்புவார்களானால், அது பற்றி மேற்கொண்டு விசாரணை செய்து தக்க நீதி வழங்குவதற்கு அரசு முயலும். சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு தனியாக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மெமோரண்டம் அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி அனுப்பியிருந்தால் அது பற்றி விசாரிப்பதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.



திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விதி 54–ன் கீழ் இந்த தீர்மானத்தின்படி அங்கு நடைபெற்று இருக்கின்ற கொடுமைகளை இந்த அரசு மறைத்து கொண்டிருக்கிறது. அரசு அதிகாரிகளின் அறிக்கையை வைத்துக்கொண்டு இப்படி அங்கு நடைபெற்ற அந்த மக்களை தடியால் அடித்து தாக்கப்பட்டு அதேநேரத்தில் சிறையில் அடைக்கப்பட்டும் பிறகு அப்படி செய்யவில்லை என்று கூறுவதும் அவர்கள் அதற்காக வாதாடுவதன் காரணமாக அங்கே இந்த மாதிரி கொடுமைகள் நெடுக பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதிகாரிகளின் அறிக்கை அந்த பகுதியில் நடைபெற்றதற்கு மாறாக, உண்மைக்கு மாறாக இருக்கிறது. அதனை தீவிரமாக விசாரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள் கூறுவது போன்று ஒரு விரிவான மெமோரண்டம் அங்கே கொடுக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் விசாரித்து, அறிந்து மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வின் அடிப்படையிலும் விசாரித்து அறிந்து உள்ளபடியே குற்றவாளிகளாக இருப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-‘0)

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, 1-3-83 ஆம் தேதி கமுதி வட்டம் பரளச்சி கிராமத்திலே பஸ் போக்குவரத்து வேண்டுமென்று கேட்ட சாதாரண விவசாயிகள் மீது போலீஸ் கடுமையான தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். அந்த ஊரில் ரோடு நன்றாக இருக்கிறது, போக்குவரத்து செய்து கொடுங்கள் என்று அவர்கள் கேட்டதுதான் தப்பு. அதற்காக அவர்களைத் தாக்கி இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அவர்கள் கடுமையாகத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் அது மட்டுமல்ல, கீழ்த்தரமான கொச்சையான வார்த்தைகள் பேசியிருக்கிறார்கள், தாய்மார்களை, பெண்களை கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்பதொடு அந்தப் பகுதியிலே உடனடியாக பஸ் விடுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஆர். டி. ஓ. மதுரையிலே இருப்பவர் கொடுத்திருக்கிற குறிப்பின்படி அருப்புக்கோட்டையிலிருந்து பரளச்சிக்கு பஸ் விடுவதற்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். The proposal is under process. He has further informed that unless

the Government clearance is obtained என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதை ஒட்டி Town bus from Aruppukottai to Paralachi along with other two routes on multi pronged route basis என்ற முறையிலே கேட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி தரலாம் என்ற அளவுக்கு இருக்கிறது அரசாங்கத்தினுடைய அனுமதி வழங்கினால் நடைமுறைப்படுத்துவதிலே கஷ்டம் இருக்காது என்று சொல்லியிருக்கிறார்கள், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையிலிருந்து பரளச்சி என்ற கிராமத்திற்கு நகரப் பேருந்து கேட்டும், அந்தப் பகுதியிலே வறட்சி இருக்கின்ற காரணத்தினலே குடிநீர் கேட்டும் சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். போலீஸ் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். பலரை கைது செய்து விடப்பட்டதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் மீது இருக்கின்ற வழக்குகளை திரும்பப் பெற்று, நகரப் பேருந்தை உடனடியாக விடுவதற்கும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி அவர்கள் பஸ் விடுவதற்காக அந்த ரூட்டுடன், 2, 3 ரூட்டுகளையும் சேர்த்து விடலாம் என்று பாண்டியன் போக்குவரத்து கழகம் கேட்டிருக்கிறது, அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்கு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள் 6-3-83 அன்றும் 7-3-83 அன்றும் விடுதலை செய்யப்பட்டார்கள். வழக்குகள் பற்றி விவரங்கள் தெரியவில்லை. தனியாக அதை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுர மாவட்டம், கமுதி வட்டம் பரளச்சி கிராமம் என்ற பகுதி பெரிய கிராமமாக இருப்பதால் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சேர்த்து போக்குவரத்து வசதி வேண்டுமென்று நீண்டநாட்களாக கோரிக்கை வைத்து சென்ற நவம்பர் மாதத்திலே சர்வ கட்சிக் கூட்டம் நடந்தது. அதிலே நானும் கலந்துகொண்டேன். அங்கே நிறைவேற்றிய தீர்மானத்தின்படி 2 மாதங்களுக்குள் செய்யாவிட்டால், குடிநீர் கேட்டும், போக்குவரத்து வசதி கேட்டும் அமைதியான மறியல் நடத்தவேண்டுமென்று எங்கள் கட்சியினரும், சர்வ கட்சிகளும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட 2,3 மாதத்திற்கு முன்னலே நடத்தினார்கள். அப்போது அந்த ஆர். டி. ஓ அவர்களும் போக்குவரத்து அதிகாரியும் அவர்களிடம் சென்று



போராட்டத்தைக் கைவிடுங்கள் ஒரு மாதத்திற்குள் பிற்பட்ட அந்தப் பகுதிக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்ததற்குப் பின்னாலே 2,3 மாதங்கள் ஆகியும் அது செய்யப்படவில்லை. மறுபடியும் சர்வ கட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் குடிநீர் வேண்டுமென்றும், போக்குவரத்து வசதி வேண்டுமென்றும் அமைதியாக போராடியபோது—இந்தக் குறிப்பிலே நான் பார்க்கிறேன்—15 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே குறிப்பிலே டி. எஸ். பி.—யும் காயம்பட்டிருக்கிறார், 12 காவல் துறையினரும் காயம்பட்டார்கள். நாங்கள் சும்மா இருந்தோம் என்று ஒரு போலீஸ் அறிக்கை சொல்கிறது. காயம் படாமலேயே போலீசை தாக்கினார்கள் என்று வழக்குப் போடுவார்கள். டி. எஸ். பி. அவர்களும் 12 காவல் துறையினரும் காயம்பட்டதற்குப் பின்னால் யாரும் தாக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சி நடந்து 3 நாட்களுக்கு பிறகு நான் போயிருந்தேன். 259 பேர்கள் காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அங்கேயே அவர்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே தீர்மானம் கொடுத்து கேள்வி வருகிறது என்பதற்குப் பின்னாலே பலர் மீது போடாமல் அனுப்பிவிட்டு இப்போது 15 பேர்கள் மீது வழக்கை பதிவு செய்தோம், அதற்கு மேல் யாரையும் [illegible] இல்லை. 3 தினங்களுக்குப் பின்னால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பெண்கள் மிக அவமானமாக பேசப்பட்டு இருக்கிறார்கள். அந்த வார்த்தைகளை இங்கே சொல்ல முடியாத நிலை. ஆகவே அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு இந்த வழக்கை வாபஸ் வாங்கி அந்த பகுதிக்கு குடிதண்ணீர் வசதியும், போக்குவரத்து வசதியும் செய்து கொடுப்போம் என்று அரசு இந்த நேரத்தில் வாக்குறுதி அளிக்கவேண்டும். தவறாக நடந்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு குழு அமைக்கவேண்டும். அதற்காக அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த மக்களுடைய அடிப்படை கோரிக்கைகளை நிறைவேற்றுகிற பணிகளிலே அங்கேயிருக்கிற கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களும், டிவிஷனல் அடிஷனல் என்ஜினியர், கோட்ட கூடுதல் பொறியாளர், அருப்புக்கோட்டை ஆகியவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பஸ் விடுவதைப்பற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். 174 பேர்கள் மூன்று குழுக்களாக மதுரையில் போய் தடையுத்தரவை மீறுகிற போது அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்போது நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. நான்காவது குழுவாக 15 பேர்கள் வந்த போதுதான் [illegible] நிறுத்தி, அதற்குப் பிறகு அவர்களைக் கைது செய்து, பின்னால் கல்லெறிந்த பல்வேறு சம்பவங்கள் நடந்து இருக்கின்றன. கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை மாறுபாடாக இருக்

கிறது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மெமோரண்டம் கொடுத்து இருப்பதாகவும் சொல்கிறார்கள். அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலும். அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலே அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, வறட்சி நேரத்தில் குடிதண்ணீர் வசதி கோரி அங்கேயுள்ள மக்கள் போராட்டத்திலே ஈடுபடுவது, அதையொட்டி காவல் துறை தாக்குதல் நடத்துவது போன்ற நிகழ்ச்சி என்பது இன்றைக்கு தமிழகம் பூராவும் பல்வேறு கிராமங்களில், ... களில் இருக்ககூடிய நிலைமைக்கு ஒரு எடுத்துக்காட்டு ... எரிமலையின் உச்சியில் இருப்பது போன்ற ஒரு நிலையில் தமிழகம் இன்றைக்கு இருக்கிறது. பல்வேறு கிராமங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை வெறும் லா-அண்ட்-ஆர்டர் பிராப்ளமாக கருதி, போலீசாரை அனுப்பி இதை சமாளிப்பதற்கு முற்படாமல், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள் போன்ற அதிகாரிகளை அனுப்பி மக்களுக்கு இருக்கக்கூடிய குடிதண்ணீர் பிரச்னையை போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் குறிப்பிட்டேன். Action has been taken by the Divisional Development Officer, Aruppukottai Additional Divisional Engineer of Rural works, Aroppukkotai. Their quest are being complied with என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அங்கே இருக்கிற கோட்ட வளர்ச்சி அதிகாரி அவர்களும், கூடுதல் கோட்டப் பொறியாளர் அவர்களும் தண்ணீர் வழங்குவது போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கான பணிகளை கவனித்து நிறைவேற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்ட அந்த பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பஸ் விடுவதைப் பொறுத்தவரையில் உடனடியாக விட்டுவிடமுடியாது. சிலபல வரன்முறைகளை செய்யவேண்டும். அவற்றை செய்வதற்கு கூறுபாடுகள் இருக்கிறதா என்பதை பார்த்து, அவர்கள் குறிப்பிட்டிருப்பதன் காரணமாக, அந்த ஒரு ஊருக்கு மட்டுமல்லாமல் அதையொட்டி இருக்கிற 2, 3 ஊர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் அனுமதி அதற்குப் பெறவேண்டும் என்று இருப்பதால் அந்த அனுமதி கிடைத்ததற்கு பிறகு அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க துணைத்தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல இது நீண்ட நெடுங்காலமாக எடுத்துச் சொல்லப்பட்டு வந்த சாதாரண கோரிக்கைகள். ஆகும். குடிதண்ணீர் வேண்டும், பஸ் வசதி வேண்டுமென்று சாதாரண கோரிக்கைகளை முன்வைத்து; தனிப்பட்ட கட்சியைச் சார்ந்தவர்களோ, தனிப்பட்ட பிரிவை சார்ந்தவர்களோ இந்த போராட்டத்தை நடத்தவில்லை. சர்வ கட்சியினர் பல மாதங்களாக அரசாங்கத்திலுடைய கவனத்திற்கு கொண்டு வந்தும் கூட, அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தத் தவறிய காரணத்தால் தான் சர்வக்கட்சியினரும் சேர்ந்து ஏறத்தாழ 200, 300 பேர்கள் இந்த மறியலில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இனியேனும் இதனுடைய முக்கியத்துவத்தை அரசு உணரும் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்னையில் உரிய நேரத்தில் அரசாங்க அதிகாரிகள் கவனம் செலுத்தியிருப்பார்களானால் நிச்சயமாக இந்த அளவிற்கு நிலைமை போயிருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த குடிதண்ணீர் வழங்குவதில், பஸ் விடுவதில் ஏன் இவ்வளவு காலதாமதம்? ஒரு இடைத்தேர்தல் வருகிறது என்று சொன்னால் ஒரு வாரத்திற்குள் தண்ணீர் வந்து விடுகிறது. மறுநாளே பஸ் வந்துவிடுகிறது. 1-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நாங்கள் கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து மூன்று வாரங்கள் ஆனதற்கு பின்னாலும், அரசாங்கம் மெத்தனம் காட்டவேண்டிய அவசியம் என்ன? இன்றைக்கு அரசு நினைத்தால் 2, 3, நாட்களில் பஸ் ஓடும்; ஒரு வாரத்திற்குள்ளாக தண்ணீர் கிடைக்கக்கூடிய வசதியை செய்வதற்கான அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஏன் அரசாங்கம் தாமதப்படுத்துகிறது என்பது தெரியவில்லை. ஆகவே அவைத்தலைவர் அவர்களே உங்கள் மூலமாக கேட்டுக்கொள்வது, ஒரு வாரத்திற்குள்ளாக இந்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அரசாங்கத்திற்கு மனமிருந்தால் அதை செய்து விடலாம். அவ்வாறு செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

*(முற்பகல் 11-10.)*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு ஏராளமான மனமும், நல்ல மனமும் உண்டு. தாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை. குடிநீர் வழங்குதல் போன்றவைகள் ஆண்டுக்காண்டு எவ்வளவு பெருகி வருகிறது என்பதையெல்லாம் நீங்கள் கவனித்துக் கொண்டு வரலாம். குடிநீர் வடிகால் வாரியமே இத்தப் பிரச்னைகளில் எந்த அளவுக்கு ஈடுபட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே கூட விரிவாக எடுத்துச் சொன்னார்கள். அவை தவிர, தன்னிறைவுத் திட்டத்தினுடைய அடிப்படையிலும்

கூட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமாக எடுத்துக்கொண்டு, பல வகைகளிலும் செய்துகொண்டு வருகிறோம். இன்னும் செய்யப்படாமல் இருக்கிற பகுதிகள் இருக்கின்றன இனிமேல் செய்ய வேண்டிய வேலைகள் தமிழகத்தில் இல்லையென்ற நிலை இல்லை. செய்து கொண்டுதான் வருகிறோம். சிலபல இடர்ப்பாடுகள் காரணமாக, சிலபல இடங்களில் தடங்கல்கள் ஏற்படுகின்றன. இந்த ஊரிலே செய்யப்படாமல் இருப்பதற்கான தடங்கல் நீக்கப்பட்டு, உடனடியாகச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். எந்தத் தடங்கல் என்றால், சில இடங்களில் இடம் கிடைக்கவில்லை. சில இடங்களில், எங்கள் ஊர் தண்ணீரை இன்னொரு ஊருக்கு எடுத்துக் கொண்டு போய் கொடுப்பதா என்றுகூடச் சில சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. இந்த ஊரைப் பொறுத்தவரை முழு விவரம் தெரியவில்லை. ஆனால், எல்லா ஊர்களுக்கும் குடிநீர் தரவேண்டும், அதற்கு முதல் சலுகை—ஃபர்ஸ்ட் பிரையாரிட்டி—தரவேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துதான் செய்து கொண்டு வருகிறோம். இந்த ஊர் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அளவுக்கு எழுப்பியிருப்பதன் காரணமாக, இதைப்பற்றி ஆராய்ந்து, எந்த அளவுக்கு இந்தத் தடங்கல்கள், மற்றவைகளை, நீக்க, உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள இயலுமோ, அதை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 6. வரவு—செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு.பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் மார்க்கெட் நிலவரத்தைவிட சர்க்கார் மதிப்பு அதிகமாக நிர்ணயித்துள்ளதன் காரணமாகப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்ய மறு ஆய்வு செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 98,48,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ஏழைகளுக்கு சீக்கிரத்தில் உற்ற விலையில் பத்திரங்கள் கிடைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 98,48,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண்.6— பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,93 40,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழைகள் பத்திரப் பதிவு செய்ய சலுகை அளிக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 6— பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,93,40,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. டி. மணி :பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருந்து அடுத்த மாநிலங்களில் சென்று பத்திரப் பதிவு நடத்துவதால், நமக்கு ஏற்படும் இழப்பைத் தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 6— பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,93,40,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,'9,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. ம. வேணுகோபால் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளருக்குக் கட்டுபடியான விலை கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,19,28,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

Thiru N.S.V. Chithan—Sir, to discuss about the need to stop the sale of milk in bulk to hotels and other commercial houses and confine the sale of milk to the purchasers of domestic use and educational institutions only,

I move that —

"A sum of Rs, 1,19,28,000 under Demand No. 10 milk supply schemes be reduced by Rs. 100-''.

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,19,28,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,86,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,86,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

Thiru N.S.V. CHITHAN: Sir, to discuss about th need to identify thepero areas in this state for promoting rural industries.

I move that—

"A sum of Rs. 7,86,21,000 under Demand No. 48—Rural Industries be reduced by Rs. 100''

திரு. டி. மணி: தலைவரவர்களே, தேங்காய் மட்டை நாரில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் பல்வேறு விதமான பொருட்கள் உற்பத்தி செய்ய பூத்துறையை மையமாகக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,86,21,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, கோவை மாவட்டம், அவினாசி தொகுதியில் சிறிய சிறிய தொழிற்கூடங்கள் அமைக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,86,21,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(உ) கோரிக்கை எண். 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,10,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 56-ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,10,20,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,10,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே. கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,10,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளை * நான் பேசியதாக ஏற்றுக் கொண்டு நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மானியக் கோரிக்கை பற்றிய, கொள்கைத் திட்டங்களைப் பற்றிய குறிப்புகளை வைத்திருக்கிறேன். அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்த பிறகு இறுதியாக அரசினுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்று வைத்துக் கொண்டால் கூட, கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் தான் இருக்கிறது. ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஐந்து நிமிடங்கள் போதாது. வேண்டுமானால் ஆளுங்கட்சி உறுப்பினர்களை கட் செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எம்.எல்.ஏக்கள் தானே; அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தானே வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 15 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது என்று சொன்னீர்கள். எனவே, நேரத்தைக் கட்டுப்படுத்தி ஒன்றரை மணிக்குள் முடித்து விடலாம்; கூடுமானால் இன்னும் அரை மணி நேரம் சேர்த்து வேண்டுமானால் இரண்டு மணிக்குள் முடிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்தைந்து நிமிடங்கள்.

---

*874-ம் பக்கத்தில் இணைப்புகளாக அச்சடிக்கப்பெற்றுள்ளன.



திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முத்திரைத் தாள்களைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால், 4 சதுர அடிக்கு 40 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து விட்டதால் அதிக அளவிற்கு இன்றைக்குப் பத்திரப் பதிவுத் துறைக்கு முத்திரைத் தாள்களின் மூலமாக வருமானம் வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை ஒரு வரியாகவே சுமத்தி விட்டதாகக் கருதுவதற்கும் இடம் இருக்கிறது. எனவே, அந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் ஒரு சதுர அடிக்கு உயர்த்தி விட்டிருப்பதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்திரைத் தாள் விற்பனையை விரிவுபடுத்த வேண்டும். முத்திரைத் தாள்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலே இருப்பதால் சில நேரங்களில் அதிக விலை இருப்பதால், வாங்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே, இந்த முத்திரைத் தாள்களை விற்பதற்குப் பலயிடங்களில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பலயிடங்களில் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லாமல் இருக்கிறது. நிறைய அளவிற்கு கோடிக்கணக்கான அளவிற்கு வருமானம் இருப்பதால் அவைகளுக்குச் சொந்தக் கட்டிடங்களை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்திரைத் தாள் விற்பனை செய்வதைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலமாக வியாபாரம் செய்பவர்களுக்குக் கமிஷனை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கமிஷனை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிர்க்காவுக்கு ஒரு பதிவு அலுவலகம் அமைப்பது என்பதைக் கொள்கை ரீதியிலே இந்த அரசு எடுத்திருக்கிறது. இன்னும் பலயிடங்களில் அவைகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான வேகமான, முனைப்பான திட்டத்தை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

அதேபோல் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பதிவேடுகள் ஆவண காப்பகத்திற்கு அனுப்பப்பட்டு முறைப்படி பராமரிக்கப் பட வேண்டும். அந்த பழைய பதிவேடுகள் ஒரே இடத்தில் குவிந்து இருக்கின்ற காரணத்தால் மிகவும் சங்கடமாகயிருக்கிறது. அவற்றை வேறு இடத்திற்கு அனுப்பி அந்த இடத்தையும் விஸ்தரிக்க வேண்டும். பதிவு அலுவலகம் மிகப் பழைய நிலையில் இருக்கிறது. மேஜை, நாற்காலிகள் எல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. எனவே பதிவு அலுவலகத்தையும், அந்த சாமான்களையும் மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

30, 35 ஆண்டுகளுக்கு வேலாகி, ஓய்வு பெறுவதற்கு இன்னும் ஓரிரு ஆண்டுகளையுடைய அதிகாரிகளுக்கு 'எக்சிகியூடிவ்' வேலைகளையுடைய பதவிகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் நியமிக்காமல் 'சீட்'லே மட்டுமே வேலை செய்யும் இடமாக அமர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் அந்த ரிஜிஸ்டிரார் ஆப் சிட்ஸ் அவர்களுக்கும் வாகன வசதிகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் ஸ்டாம்ப் விற்பவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லாமல் மழையிலேயும், வெய்யிலிலேயும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் உயர்நீதி மன்றத்திலே போதுமான பாதுகாப்பு வசதிகளை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் அகில இந்திய அளவிலே இங்கே ஒரு பால் பண்ணை சம்பந்தப்பட்ட மகாநாடு நடைபெற்றது. அதிலே தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் மிக முக்கியமான கருத்துக்களாகும். மற்றைய மாநிலங்களைவிட இங்கே விவசாயி இடத்திலே அந்த 'பர்சேஸிங் பிரைஸ்' பாலினுடைய கொள்முதல் விலை மிகவும் குறைவாகயிருக்கிறது என்ற கருத்தை இங்கே வந்த பதக் அவர்களும், 'ஆவின்' நிர்வாகத்தைச் சேர்ந்த கொரியன் அவர்களும் சொன்னார்கள். 'பர்சேஸிங் பிரைஸ்' மற்ற மாநிலங்களைவிட மிக மோசமான நிலை இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு தான். விவசாயிகளை வாழவைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைய தினம் ஒரு கிலோவிற்கு 35 ரூபாய் தரப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே ஒரு கிலோவிற்கு கொழுப்பு சத்து 40 ரூபாய்க்கு மேல் தரப்படுகிறது. ஆகவே இந்த அளவிற்கு நாம் வழங்க வேண்டும். அதே நேரத்திலே நான் இப்படி சொல்கின்ற காரணத்தினால் அப்போது செல்லிங் பிரைஸ் அதிகமாக ஏற்ற வேண்டி வருமே என்று ஒரு கருத்து இருக்கலாம். அந்த செல்லிங் பிரைஸ் மானியமாக ஏற்படுத்தி, அந்த செல்லிங் பிரைஸ் உயராமல் இருப்பதற்கு அரசு ஆவன



செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக எல்லா கிராமங்களும் இன்றைய தினம் வறட்சியாக இருக்கிற காரணத்தால், இந்தப் பால் சங்கத்தை ஒரு உப தொழிலாக—இன்னும் சொல்லப்போனால், ஒரு மூலத்தொழிலாக 'மெயின்' தொழிலாகக் கருதி, கிராமங்களிலே பால் சங்கங்களை துவங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது உண்மையிலேயே ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் பயன் தரும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். இது விவசாயிகளுக்கு வருமானமுள்ள ஒரு தொழிலாக இருக்கிற காரணத்தால் எல்லா இடங்களிலும், கிராமங்களிலும் பால் சங்கங்களை உடனடியாக துவக்குவதற்கு ஒரு உறுதியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்தப் பால் சங்கங்கள் இருக்கின்ற இடத்திலே, கால்நடை மருத்துவர்கள் சரியான முறையில் பணியாற்றவில்லை. அப்படி இருக்கக்கூடிய இடங்களில், 3, 4 சங்கங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பகுதி ஊதியத்தை அந்தச் சங்கம் ஏற்றுக்கொண்டு, ஒரு பகுதியை அரசு மானியமாகத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த குளிரூட்டும் நிலையம், நீண்ட காலத்திற்கு முன்பு இருந்தது. தாமரைப்பாக்கம், ஆம்பூர் போன்ற இடங்களிலிருந்து செய்யாறுக்குக் குளிரூட்டு நிலையம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அதைப் போலவே 'சர்பிளஸ் சீசன்' காலத்திலே, வாலாஜாவிலே உள்ள பாலுச்செட்டி சத்திரம், வேலூர் போன்ற இடங்களிலே அந்தக் கொள்ளளவு போதிய அளவு இல்லாத காரணத்தால் பாலை மறுக்கிறார்கள். சர்பிளஸ் சீசன் பாலை எடுத்துக் கொள்ளும் அளவிற்கு அந்த கெபாசிட்டியை மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே போல கட்டுப்படியாகும் அளவிற்கு மாட்டுத் தீவனங்கள் இன்றையதினம் தரவேண்டும். கடும் வறட்சியாக இருக்கிற காரணத்தால் மாட்டுத் தீவனங்கள் மிகவும் மோசமாக இருக்கிறது. மாட்டுத் தீவனங்கள் போதிய அளவிற்கு வெளி மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு, பால் கறக்கிற அந்த விவசாயிகளுக்குத் தர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே,—மதுரையைத் தவிர, எல்லா மாவட்டங்களிலேயும் சிறப்பான முறையிலே இந்த பால் சங்கம் பணியாற்றி வருகிறது. ஆனால் ஒரு கருத்தை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்த ஆனந்த் பாணி என்ற அந்த பாணி பெயர் அளவிலே உற்பத்தியாளர்கள் சங்கம் என்று இருக்கிறதே தவிர, பகுதிச் சங்கங்

களிலே அதை நடைமுறைப் படுத்துவது கிடையாது. எல்லா மாடுகளையும் டெப்போக்களில் ஓட்டிவந்து கறக்கிறார்களே தவிர, வீட்டிலே இருந்து பால் கறந்து கொண்டு வருவதை டெஸ்ட் செய்கின்ற நிலைமை பல இடங்களிலே 50 பர்செண்ட் உற்பத்தியாளர் சங்கத்திலே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மற்ற மாவட்டங்களில் எல்லாம் இது நல்ல முறையில் அமைந்திருக்கிறது. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்திலே தான் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைந்து இருக்கிறது. எனவே அதை மாற்றி, ஜனநாயக அடிப்படையிலே தேர்வு செய்து, அங்கே வட ஆற்காடு மாவட்ட பால் பண்ணை தலைவராக பொதுமக்களுடைய சார்பிலே இருந்து ஒருவரை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள், நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்திலே தோல் பதனிடும் தொழிலுக்கு என தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அரசு நிறுவ வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்று சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலோடு மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் மூலதனத்திலே தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அமைத்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியை காணிக்கையாக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய துணைக்கண்டத்திலே அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பெரும் தொழில்களிலே இரண்டாவது இடத்தை வகிப்பது தோல் தொழிலாகும். இந்திய துணைக் கண்டம் முழுவதும் சுமார் 400 கோடி ரூபாய் அளவிற்கு அந்நியச் செலாவணி இந்தத் தோல் தொழில் மூலமாக கிடைக்கிறது என்றால், அதிலே தமிழகத்திலே மட்டும் சுமார் 300 கோடி ரூபாய் அளவிற்கு 75 விழுக்காடுகள், தமிழகம் பங்கு பெறுகின்றது. அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற 2 நகரங்கள் மட்டுமே சுமார் 200 கோடி ரூபாய் அளவிற்கு அந்நியச் செலாவணியை—இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு தொழிலாக—இருக்கும்போது, 50 சதவீதம் என்னுடைய தொகுதி இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே அது மேலும் சிறப்புறுவதற்கு



அரசு இன்றைக்கு எடுத்துள்ள ஒரு பெரும் முயற்சியின் காரணமாக தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் அமைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு இந்தத் தொழிலைப் பற்றி அக்கறை காட்டி இந்தத் தொழிலிலே உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்க ஆரம்பித்திருக்கிறது. ஏன் என்றால் 200 ஆண்டுகளாக நடைபெற்று வருகிற இந்தத் தொழில் மீது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் அதிலும் குறிப்பாக, அருமை அண்ணன். கே.ஏ.கே. அவர்கள் இந்தத் துறைக்கு வந்த பிறகுதான் இந்த தொழில் மீது மாநில அரசின் அக்கறையும், ஆர்வமும், ஊக்கமும் அதிகமாகியிருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது. இந்தத் தொழிலை மேலும் சிறப்புடன் வளர்க்க, அரசு, தோல் வளர்ச்சி நிறுவனம் அமைத்ததோடு நில்லாமல், அதற்கென தோல் தொழில் இயக்குநரகம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். தற்போது நிறுவியுள்ள தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்திற்கு தனி அலுவலர் ஒருவரை அரசு நியமனம் செய்துள்ளது நாம் பாராட்டுவதற்குரிய ஒரு நடவடிக்கையாகும். ஆனாலும் இதை விரைவாக செயல்படுத்துவதற்கும், இந்த நிர்வாகக் குழுவைக் கூட்டுவதற்கும் மற்றும் பல்வேறு பணிகளை விரைவாக ஒருமுகப்படுத்தி செய்வதற்கும், அதற்கென ஒரு தலைவரையும், மேலாண்மை இயக்குநர் ஒருவரையும் உடனடியாக அரசு நியமனம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் இந்தத் தொழில் வட ஆற்காடு மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது என்ற காரணத்திற்காகவோ என்னவோ வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு அது செயல்படும் என்று அரசு ஆணை சொல்கின்றது. தமிழகத்திலே இருக்கக் கூடிய எத்தகைய தோல் பதனிடும் தொழில் அதிபர்களும், அவர்கள் சிறு தொழில் அதிபர்களாக இருந்தாலும், பெரிய தொழில் அதிபர்களாக இருந்தாலும், அவர்கள் தலைமையிடத்தைச் சென்னையிலே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏன் என்றால் இந்தத் துறை முழுவதுமாக வெளிநாடு தொடர்புடையதாக இருக்கின்ற காரணத்தால், வெளிநாட்டிலே இருக்கக் கூடியவர்கள் வந்து போவதற்கும் அங்கேயிருந்து டெலக்ஸ் போன்ற செய்திகளைப் பெறுவதற்கும் சென்னை சிறந்த இடமாக உள்ளது. ஆகவே தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் தலைமையிடமும் சென்னையில் இயங்க அரசு ஆணை இட வேண்டும். சென்னை ஒரு மிக முக்கியமான இடமாக இருக்கிறது என்ற காரணத்தினால், அதன் தலைமையகத்தை சென்னைக்கு மாற்றுவது மேலும் இந்த நிறுவனம் வளர்ச்சி பெறுவதற்கு உதவும் என்ற வகையிலே நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

தற்போது தமிழகத்திலே அரசுத் துறையிலே இருக்கின்ற டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கும் எல்லா தோல் மற்றும் தோல் பொருள் தொழிற்சாலைகளையும் தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் இயங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூர்-வாணியம்பாடி இடையில் ஒரு தோல் தொழிற் பேட்டை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்படி மருத்துவக் கல்லூரிகளெல்லாம், பெரிய பெரிய மருத்துவமனைகளோடு இணைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறதோ அதை போலவே, அதிகமான தோல் தொழிற்சாலை இருக்கும் எங்கள் பகுதியில் லெதர் டெக்னாலஜி, புட்வேர் டெக்னாலஜி போன்ற டிப்ளமோ படிப்புகளை துவங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் உள்ள பாலிடெக்னிக்குகளில் லெதர் டெக்னாலஜி, மற்றும் புட்வேர் டெக்னாலஜி படிப்புகள் இருந்தாலும், அவர்கள் பயிற்சி பெறுவதற்கு ஆம்பூர், வாணியம்பாடி நகரங்களுக்கு வரவேண்டிய சூழ்நிலை இருப்பதால், அந்தப் படிப்புகளை அங்கே துவங்குவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

தற்போது கூட்டுறவுத் துறையிலே வாணியம்பாடியில் இயங்கி வரும் கூட்டுறவு தோல் தொழில் சேவை சங்கத்தை அரசு விரிவு படுத்தவும், இன்னும் நவீன கருவிகள், இயந்திரங்கள் வாங்கி, சிறிய தொழில் அதிபர்கள் பயன் பெறத் தக்க வகையில் உதவிடவும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதைப்போலவே, ஆம்பூரிலும், ஆடு கூட்டுறவு தோல் தொழில் சேவை சங்கம் அமைத்திட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியே வரும் கழிவு நீர் காரணமாக எங்கள் மாவட்டத்தில் விவசாயம், குடிநீர் ஆகியவை கடுமையாக பாதிக்கப்படுகிறது. வடாற்காடு மாவட்டம், உணவு உற்பத்தியில் தஞ்சைக்கு அடுத்தபடியாக உள்ள மாவட்டமாக உள்ளதால், இதைக் கருத்தில் கொண்டு அந்த கழிவுநீர் அகற்றும் பணியை தற்போது அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.





எனது தொகுதியில் வெள்ளைக்கல் அணை மற்றும் புல்லூர் அணை போன்றவைகள் கட்டி முடிக்கப்பட்டாலும் இந்த நீர்த் தேக்கத்தின் காரணமாக, குடிநீர் விவசாயம் பாதிக்காது. ஆகவே, இதை உடனடியாக அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் வளத்தைப் பொறுத்த வரையில், வடாற்காடு மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டைவிட 1982-83 ஆம் ஆண்டு பால் கொள்முதல் 65 சதவீதம் உயர்ந்து இருப்பது பாராட்டு தற்குரியது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முறையாக வடாற்காடு மாவட்டத்தில் பால் கொள்முதல் 1 லட்சம் லிட்டரை அடைந்துள்ளது என்று சொன்னால் அது மிகவும் பாராட்டுதற்குரியதாகும். இந்தச் சாதனையின் மூலம் தமிழ்நாட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி விட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இரண்டாம் பால் பெருக்குத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தில் உறைவிந்து மூலம் மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இந்த ஆக்கப்பணியில் அகில இந்தியாவிலும் வடாற்காடு மாவட்டம் இரண்டாவது இடத்தை அடைந்துள்ளது என்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டையும், பெருமையோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சத்துவாச்சாரியில் பால் பதனிடும் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 70,000 லிட்டர் பால் பதனிடும்படி திறனை உயர்த்த, அதிகப்படியான தேவைகளைப் பூர்த்தி செய்ய, இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 110.10 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிரூட்டும் திறன் கொண்ட இரண்டு குளிரூட்டும நிலையங்கள் அமைக்க ரூ. 71.22 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளதற்காக நான் அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் செயல்படுத்தப்படும் 9 மாவட்டங்களில் வடாற்காடு மாவட்டத்திலேதான் அதிகமாக செயற்கை முறை கருவூட்டல்கள் நடைபெற்றிருக்கின்றன. மேலும் இந்த வடாற்காடு மாவட்டத்தில்தான் செயற்கைமுறை கருவூட்டல் மூலம் அதிகமான கலப்பின கன்றுகள் பிறந்துள்ளன. 1977-78 ஆம் ஆண்டு முதல்

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகுதான் தமிழ்நாட்டில் கன்று வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 8,270 கிடாரி கன்றுகளும் அதன் மூலம் 8,270 சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள். கிடாரிகளுக்கு மானியமாக 83.46 இலட்சம் ரூபாய் மாட்டுத் தீவனமாக வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலே மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அதிகமாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளது வடாற்காடு மாவட்டம். சுமார் 560 பால் உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளன. இது மேலும் திறம்பட செயல்பட உடனடியாக தேர்தல் மூலமாகவோ அல்லது நியமனம் மூலமாகவோ நிர்வாக குழுவை அரசு அமைக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று நடைபெறுகின்ற முத்திரைத் தாள்கள்—நிர்வாகம், பத்திரப் பதிவு, பால்வழங்கு திட்டங்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு குறித்த மானியக் கோரிக்கைகள்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பத்திரப்பதிவு சம்பந்தமாக சென்ற தடவை கூடச் சொல்லியிருக்கிறேன்; மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரிலும் தெரிவித்திருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுப்பதுபற்றி அரசாங்கம் கவனிக்கப்படவில்லை. இந்த விஷயத்தில் அவர்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். பதவி உயர்வு கிடைத்தவர்களும் ரிவர்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள். சப் ரெஜிஸ்திரார் பதவி 100 இருந்தால், 40 பேர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதாக இருந்தால் 39 பேர்களுக்கு கொடுக்கிறார்கள்;இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மலைஜாதி மக்கள் பிரிவைச் சேர்ந்தவர் 40-வதாக இருந்தால் அவரை எடுக்காமல் அப்படியே 39-தோடு விட்டுவிடுகிறார்கள். இந்த மக்கள் எல்லாம் நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்தபிறகு படித்தவர்கள். அதற்குப் பின்னாலே தான் உத்தியோகத்திற்கு வருகிறார்கள். 5 ஆண்டுகாலம், 8 ஆண்டு காலம் போனால் அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது; ஓவர் ஏஜ் வந்து அதனால் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலை இருக்கும்போது அவர்களுக்கு நியாயமாக கொடுக்க வேண்டியதைக் கூட கொடுக்க அரசாங்கம் தவறுகிறது. 1974 ஆம் ஆண்டிலிருந்தே இது



சம்பந்தமாக மாநில அரசை தொடர்பு கொண்டேன். இன்று வரையில் அந்தப் பணியை அரசாங்கம் சரியாகச் செய்யவில்லை. இனியாவது அரசாங்கம் இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மாவட்ட தொழில் மையங்கள் வைத்திருக்கிறோம். அங்கே சிறுதொழில்களைத் தொடங்கியிருக்கிறோம், 1982-83 ஆம் ஆண்டிலே நம்முடைய குறிப்பிலே 5—வது, 6—வது பக்கத்திலே ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். 60-க்கு மேற்பட்ட வாய்ப்பு விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன; 1900 பேர் அக்கூட்டங்களில் கலந்துகொண்டார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. சுமார் 2,600 தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இதுவரையில் அந்த 1,900 பேர்களில் எத்தனை பேர்கள் தொழில் செய்கிறார்கள், என்னென்ன தொழில் செய்கிறார்கள், அவர்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்தீர்கள் என்பது பற்றிய விவரம் அரசாங்கக் குறிப்பில் தரப்படவில்லை.

சிறு தொழில்களைத் தொடங்க 25 சதவீதம் அரசு உதவியும், 75 சதவீதம் வங்கிக் கடனும் என்று சொல்லியிருக்கிறீர்கள். வங்கிக் கடன் அளிப்பதற்கு மத்திய சர்க்கார் உத்தரவாதமா அல்லது மாநில சர்க்கார் உத்தரவாதமா என்ற விவாதத்திற்குப் போகக்கூடாது. மத்திய சர்க்காராக இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும் அந்த மக்களுக்கு என்ன உதவி கிடைக்க வேண்டுமோ அது கிடைக்கவில்லை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய விகிதாச்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் என்ன சொன்னாலும், கேட்டாலும் இப்படிப்பட்ட விவரங்கள் இல்லாமல் ஒரு குறிப்பை அச்சிட்டுக்கொடுப்பதினால் எந்த பயனும் இல்லை. நாங்கள் இங்கே பேசுவதற்கு பலன் இல்லாமலும், நீங்களாகச் செய்கின்ற காரியங்களாலும் பலன் இல்லை என்ற அவல நிலையைப் போக்க வேண்டும்.

10, 15 தொழில் மையங்களைத் தொடங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். எத்தனை பேர்கள் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள், அதிலே எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, எத்தனை பேர்களுக்கு வங்கிக் கடன் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் ஒன்றும் குறிப்பிலே இல்லை. 1982 ஆம் ஆண்டில் 22,789 சிறு தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 3 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்; 24.19 கோடி ரூபாய் நிதி உதவி பெற்றுத் தரப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்களில் எத்தனை பேர்களுக்கு இந்த உதவி கிடைத்திருக்கிறது? எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது? என்னென்ன தொழில்கள்

தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான விவரங்களை எல்லாம் அரசாங்கம் இந்தக் குறிப்பிலே கொடுத்திருந்தால் அது பற்றி பேச வாய்ப்பு இருக்கும்; இப்போது அதற்கு வாய்ப்பு இல்லை.

(முற்பகல் 11-40)

அதைப்போலவே இங்கு சிறுதொழில்கள் குறித்து 16 ஆம் பக்கத்திலே இரண்டாவது பாராவிலே போடப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களிலே மரசீப்புகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்காக 1 கோடியே 77 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிலே தந்திருக்கிறார்கள். ஆனால் இந்த தொழிலினால் என்ன லாபம் கிடைக்கும்? எவ்வளவு பேர்கள் அதில் பணிபுரிவார்கள்? மொத்த தொகையும் இதில் உபயோகப்படுத்தப்படுமா? விற்பனைக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றனவா என்பது போன்ற விவரங்கள் எல்லாம் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருந்தால், இன்னும் நமக்கு சற்று ஏதுவாக இருந்திருக்கும்.

அதைப்போலவே தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கத்திற்காக 2.78 கோடி ரூபாய் நடைமுறை மூலதனக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று இருக்கிறது. இதிலும் ஒப்புதல்தான் அளித்துள்ளீர்களே தவிர, அது எப்போது பணியைத் தொடங்கும், அதனால் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்பது போன்ற விவரங்கள் இந்தக் குறிப்பிலே இல்லை.

அதைப்போலவே தொழில் கூட்டுறவு அச்சகம் ஒன்று கோவில்பட்டியில் துவங்கப்பட்டுள்ளது. அது விரைவில் செயல்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது தொடங்கி செயல்படத் துவங்கும் போது, இந்த தொழில் சம்பந்தமாக யார் யாருக்கெல்லாம் தேவையோ, அவைகள் அத்தனைக்கும் இங்கேயே அச்சடிக்கின்ற முறையில் அது செயல்பட வேண்டும். அரசாங்கத்தின் மூலமாக செயல்படுகிற கூட்டுறவுச் சங்கங்களில் கூட, தனியார் அச்சகங்களிலிருந்துதான் தேவையானவற்றை அச்சடிக்கிற அவல நிலை இருக்கிறது. அதிலே பலவிதமான சங்கடங்களும், சிரமங்களும் இருக்கின்றன. அச்சடிக்கப்பெற்று, அவைகள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சிரமங்கள் அந்த அச்சகத்தில் ஏற்படாமல், எந்த அளவுக்கு நடக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அந்த அரசு கவனித்து செய்தால் நல்லதாக இருக்கும். இதில் கூட எத்தனை பேருக்கு இதனால் வேலை கிடைக்கும் என்கிற விவரக் குறிப்பு இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, மதுரை மாவட்டத்தில் கப்பலூர் என்ற இடத்தில் ஒரு தொழிற் பேட்டை இருக்கிறது. அது பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதி மதுரையின் தெற்குத் தாலுக்காவில் இருந்தது. இது அங்கேயிருந்து திருமங்கலம் தாலுக்கா என்ற பகுதிக்கு



மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றும்போது, பின்தங்கிய பகுதிக்கு 15 சதவீதம் மானியம் கொடுக்க வேண்டும். அதற்கான விளக்கம் எதுவும் குறிப்பிலே இல்லை. வருங்காலத்திலாவது அதற்கு கொடுக்க வழி செய்வார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நண்பர் சித்தன் அவர்கள் கூட அது பற்றி வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கயிறு தொழிலை எடுத்துக் கொண்டால், அதுபற்றி 20 ஆம் பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. 10 மட்டுமே இருந்த அந்த கயிறு தொழில் தற்போது 52 ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால் எனக்கு தெரிந்த அளவில் கிட்டத்தட்ட தென் மாநிலங்களுக்கு கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தமிழகம் ஆகியவைகளுக்காக கிட்டத்தட்ட 25 கோடி ரூபாயை இந்தத் தொழிலை மேம்படுத்துவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது எனக்கு வந்த தகவல். ஆனால் அவற்றில் சுமார் 50 லட்சம், 55 லட்சம் அளவில்தான் நீங்கள் உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள். இந்தத் தொழிலில் நமக்கு நல்ல வசதி வாய்ப்பு இருக்கிறது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்னாற்காடு, தஞ்சை போன்ற ஜில்லாக்களில் எல்லாம் இந்த தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்கள் பல தனியார்களிடத்தில் பணி செய்து அவதிப்பட்டு வருகிறார்கள். நீங்கள் இதற்காக எந்த அளவுக்கு மத்திய அரசின் உதவியைக் கேட்டீர்கள்? அவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள்? ஏன் இதில் வெறும் 50 அல்லது 55 லட்சம் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறீர்கள்? வட மாநிலங்களிலே தென்னை மரங்கள் அதிகமாக கிடையாது. தென் மாநிலங்களிலேதான் மரங்கள் அதிகம் இருக்கின்றன. ஆகவே, இந்தத் தொழிலுக்கென்று 25 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறபோது, உதவி செய்கிற அந்த நல்ல எண்ணத்தை உபயோகப்படுத்திக் கொண்டு, நமக்கு எந்த அளவுக்கு தேவை என்ற விவரங்களை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, இதற்காக இன்னும் அதிக தொகையை பெற்று, இந்தத் தொழிலை இன்னும் அபிவிருத்தி செய்கிற முயற்சிகளை எடுத்துக் கொண்டால் ஒழிய இதில் வெற்றிபெற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, பட்டு உற்பத்திக்காக அந்த தொழிலில் பயிற்சி பெறுவதற்காக 200 உழவர்கள் முன் வந்திருப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பட்டு உற்பத்தியை அதிகப்படுத்தினால் நல்லது. ஏனெனில் இதன் மூலம் நல்ல செலாவணி வரும். ஆனால் தற்போதைய வறட்சி நிலையில் இப்போது இந்த தொழிலுக்கு நல்ல நிலைமை இல்லை என்றாலும் கூட, வருங்காலத்தில் நிச்சயமாக இந்த தொழில் நல்ல வாய்ப்பை பெறும். ஆகவே, இந்த தொழிலுக்கு ரூ. 200 உதவித் தொகை மானியம் என்பதை ரூ. 300, ரூ. 400 என்று கூட உயர்த்திக் கொடுத்தால், அவர்களுக்கு ஊக்கம் அளிப்பது போலாகும், தொழிலும் நல்ல முறையில் வளரும்.

அதேபோல தொழில் நுட்பக் கருவிகளை வாங்க 50 விழுக்காடு மானியம் கொடுக்கப்படும் என்பதை விட அதை 75 ஆக ஆக்கிக் கொடுக்கலாம். அதற்கென வருபவர்கள் நல்லவர்களாக, உண்மையானவர்களாக இருந்தால், அவர்களுக்கு முழுவதுமாகவே மானியமாக கொடுக்கலாம். கொடுத்தால் தொழில் வளர்ச்சி நல்ல முறையில் ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆதித் திராவிடர்களுக்கு அரசு உதவி செய்வது குறித்து இதிலே போடப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 43 சிறு தொழில் முனைவர்கள் தொழில் நிலையங்களை அமைத்துள்ளனர் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விவரம் போதாது. எந்தெந்த மாவட்டங்களில் அந்த தொழில்கள் இருக்கின்றன? அதற்கென நாம் கொடுத்த தொகை எவ்வளவு? அவைகளில் எத்தனை பேர்கள் பணி செய்கிறார்கள்? அந்த 43 தொழில் முனைவர்களும் அரசு கொடுத்த பணத்தை சரியாக உபயோகப் படுத்தினார்களா இல்லையா? அவர்கள் தொழிலை நடத்தி வருகிறார்களா? வங்கிகள் ஏதாவது அவர்களுக்கு கடன் கொடுத்ததா? நாம் எவ்வளவு கடன் கொடுத்தோம் என்றெல்லாம் இதிலே சொல்லியிருந்தால் உபயோகமாக இருந்திருக்கும்.

அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தாம் பதிலளிக்கும் போது சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோல 541 தொழில் முனைவர்களுக்கு 19.69 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டது. 4,767 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது, அவர்களுக்கு உதவித் தொகையாக 11.89 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அந்த தொகைகள் எவ்வளவு தூரம் பயன் படுத்தப்பட்டது என்கிற விவரம் இங்கே தரப்படவில்லை.

அடுத்து, தோல் பதனிடும் தொழில்கள். இந்த தோல் பதனிடும் தொழிலிலே கிட்டத்தட்ட 5 லட்சம் மக்கள் ஆதி திராவிட அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள். அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வேறு யாரிடமாவது கொடுத்து மீதி உள்ளதை பேசச் சொல்லுங்கள். ஏற்கெனவே உங்களுக்கு அதிக நேரம் ஆகிவிட்டது. இன்னும் 12 பேர்கள் பேச வேண்டும்.

**திரு. எல். இளையபெருமாள் :** இந்த ஒன்றிரண்டு பாயிண்டோடு முடித்துவிடுகிறேன். இந்த அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தாழ்த்தப்பட்டவர்களிலேயே மிகவும் கீழான நிலையில் இருக்கும் மக்கள். இவர்கள் கிட்டத்தட்ட 5 லட்சம் பேர்கள்—சரியான கணக்கு தெரியவில்லை—கிட்டத்தட்ட



136014
600 008

5 லட்சம் மக்கள் சேலம், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் அதிகமாக இருக்கிறார்கள். தோல் பதனிடும் தொழிலை, தொழிலாகக் கொண்டவர்கள். இதில் வருமானம் போதாமல், கிணறுகளில் சால் வேலை செய்வது போன்ற தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, இந்த தோல் பதனிடும் தொழிற்சாலையை துவக்குகிறபோது, அந்த மக்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு இதில் செய்கிற வகையில், இதில் ஏற்பாடுகள் செய்யப்படுமேயானால் அது நன்றாக இருக்கும்.

அதுமட்டுமல்ல. அந்தத் தோல் பதனிடும் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உரிய ஏற்பாடுகளைச் செய்தால் ........(மணியடிக்கப் பெற்றது) .....இந்தத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் இந்தத் தொழிலை நன்றாகச் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்து விடுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. எல். இளையபெருமாள் :** பால் பண்ணை வளர்ச்சியினைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கொடுத்தாலும் ஆங்காங்கே இருக்கின்ற டீ. ஆர். ஓ. அவர்கள் சரியாக கவனிக்கவில்லை........(மணியடிக்கப் பெற்றது).

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளான முத்திரைத்தாள்கள், பத்திரப்பதிவு, பால் வழங்கு திட்டங்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச்செலவு ஆகியவற்றை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறையின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பின்னர் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இப்படி இந்தத் துறையினை விரிவுபடுத்தவேண்டும் என்ற அடிப்படையில் பல கட்டங்களாக விரிவுபடுத்தி வருகிறார்கள்,

கிராமப்புறங்களில் சார் பதிவாளர் அலுவலகங்களை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏற்படுத்தி, இந்தத் துறையினை விரிவுபடுத்தி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி படிப்படியாக விரிவுபடுத்திக்கொண்டு வருகின்ற வகையில் சார் பதிவாளர் அலுவலகங்களை கிராமப் பகுதிகளில் ஏற்படுத்தியதோடு அந்தத் துறையில் இருந்த பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் தமிழகத்தில் பத்திரப் பதிவாளர் அலுவலகங்களில் உள்ள குறைபாடுகள் களையப்பட்டிருக்கின்றன. இதனால் கிராமப் பகுதியில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியில் வடலூர் பகுதியில், வள்ளலார் அவர்களின் பகுதியில் சார் பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி பல்வேறு சார் பதிவாளர் அலுவலகங்களை ஏற்படுத்தி இருக்கின்ற நிலைமையில், அந்தச் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வேண்டிய தளவாட சாமான்களை எல்லாம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களில் அவ்வாறு தளவாடச் சாமான்கள் இல்லாத நிலைமை இருக்கின்றது. சார் பதிவாளர் அலுவலகங்களில் பெரிய முத்திரை இல்லாமல் இருப்பதன் காரணத்தால் பத்திரங்களை எடுத்துக்கொண்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. அந்த நிலைமையினை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு தேவையான பெரிய முத்திரைகளை உடனடியாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தென்னாற்காடு மாவட்டத்தில் பெரிய பத்திரங்கள் இல்லாமல் இருக்கின்றன. சிறு சிறு பத்திரங்களாக அதாவது 10 ரூபாய் 20 ரூபாய் பத்திரங்கள்தான் இருக்கின்றன என்று சார் பதிவாளர் அலுவலகங்களில் சொல்கிறார்கள். எனவே ஒவ்வொரு சார் பதிவாளர் அலுவலகத்திலும், விவசாய மக்கள் எல்லாம் முத்திரைத் தாளுக்குரிய பணத்தைக் கட்டணமாகச் செலுத்துகிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் ஆணைப்படி ஒருவர் 500 ரூபாய்க்குதான் வைத்துக்கொள்ள முடியும், அதற்கு மேல் வருகின்ற வரவை அரசாங்க கஜானாவில் செலுத்த வேண்டும். இப்படிப் பார்த்தால் அரசாங்கத்தின் செலவு அதிகமாக ஏற்படுகின்றது. எனவே அதைத் தவிர்க்கின்ற வகையில் கூடுமான வரையில் பெரிய பத்திரங்களை தென் ஆற்காடு மாவட்டத்தில் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். புதிதாக ஏற்படுத்திய சார் பதிவாளர் அலுவலகங்களிலும் இந்த பெரிய முத்திரைத்தாள்கள் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து கோட்டாட்சித் தலைவர்களுக்கு, அனுப்புகின்ற பத்திரங்களைப் பொறுத்த வரையில் விரைவாக கிராமப் பகுதியில் உள்ளவர்களுக்குக் கிடைப்பதில்லை. விரைவாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே அடிப்படையில் முத்திரைத் தாள் என்ற வகையில் இங்கே சொல்லி இருக்கிறார்கள். நல்ல இலாபகரமாக நடத்தி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த வகையில் இன்னும் கூடுமான வரையில் பெரிய பத்திரங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக அரசாங்கத்தின் செலவை மிச்சப்படுத்தி லாபத்தை ஈட்டுவதற்கு வழிவகை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(முற்பகல் 11–50)

அதே அடிப்படையில் பால் பண்ணை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த துறையை படிப் படியாக 3 கட்டமாக பிரித்து கிராம வளர்ச்சி என்றும், மாவட்ட வளர்ச்சி என்றும், மாநில வளர்ச்சி என்றும் இப்படி 3 கட்டமாக பிரித்து இந்த பால் உற்பத்தி வளர்ச்சியை பெருக்கிய பெருமை மாண்புமிகு அமைச்சர் தளபதி கே. ஏ. கே. அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் இன்றைய தினம் கிராமப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய விவசாயிகள் இந்த பால் உற்பத்தி மூலமாக தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். உயர்த்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் கிராமப் பகுதியை சார்ந்தவன் என்ற முறையில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நம்முடைய அமைச்சர் கே. ஏ. கே. அவர்களை இந்த கிராமப்பகுதியில் இருக்கின்ற பாட்டாளி வர்க்கம் எல்லாம் வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள், வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். காரண இந்த பால் உற்பத்தியாளர் சங்கம் மூலமாக அவர்களுக்கு போதுமான அளவுக்கு வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் கிராமப் பகுதியில் இருக்கின்ற ஏழை விவசாயிகள் கிராம உற்பத்தியாளர் சங்கங்களை இன்னும் அதிகமாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே 524 கிராம உற்பத்தியாளர் சங்கங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் இதை அதிகமாக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் கொள்முதலை இந்த ஆண்டு 50 சதவீதம் உற்பத்தி இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதற்கு காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து விழுப்புரம், சின்ன சேலம் இந்த இடங்களில் குளிரூட்டும் நிறுவனம் ஏற்படுத்தி தந்தார்கள். அடுத்தப்படியாக சேத்திவாக்கத்தில் குளிரூட்டும் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தித் தந்தார்கள். இதனால் எங்கள் மாவட்டத்தில் பால் வளம் பெருகியிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டில் தண்ணீர் வளம் வறட்சியால் பாதிக்கப்பட்டாலும் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்கள் முயற்சியால் இன்றைக்கு பால் வளம் பாலாக, பால் ஆறாக தமிழ்நாடு எங்கும் தடை இல்லாமல் ஓடிக்கொண்டிருக் கிறது என்பதை நான் இன்றைக்கு தமிழ்நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் சார்பாக பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அதற்கு பின்னால் என்னுடைய தொகுதியில் உள்ள வடகுத்து, தென்குத்து, ஆபத்தாரணபுரம், கிருஷ்ணகுப்பம், குள்ளன்சாவடி....

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற நேரத்தில் பால், பாலாறாக ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். பாலாற்றில் தண்ணீரே கிடையாது. மணல் தான்...

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதற்கு காரணம் இன்றைக்கு தமிழ்நாட்டில் பால் தடை இல்லாமல் கிடைக்கிறது என்ற காரணத்தால் அதை கோடிட்டு காட்டினேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் வடகுத்து, தென் குத்து ஆபத்தானபுரம், கிருஷ்ணகுப்பம், குள்ளஞ்சாவடி, பெத்த நாயக்கன் குப்பம், சங்கிலிகுப்பம் ஆகிய கிராமங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் உற்பத்தி செய்கின்ற பாலை விழுப்புரத்தில் உள்ள நிலையம் கொள்முதல் செய்யவேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டு என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்களை விரைவாக, அதிகமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந் நேரத்தில் வலியுறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற பல்வேறு தலைப்பின் கீழ் பேசுவதற்கு முதன் முதலாக கயிறு சம்பந்தமாக சில விவரங்களை நான் கூற விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் கயிறு தொழில் என்பது அபிவிருத்தி அடைந்து வருகிற ஒரு தொழில். அதிலே இருக்கின்ற இன்னல்களைப் பற்றி கூறும்போது நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்கின்ற கயிறைத் தான் அடுத்த மாநிலமான கேரள மாநிலம் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற இடத்தில்தான் நாம் விற்பனை செய்து ஆகவேண்டும். அதன் காரணமாக நாம் உற்பத்தி செய்கின்ற கயிறுக்கு போதுமான விலை கிடைப்பது இல்லை. எனவே தேங்காய் மட்டை விலையிலே சில மாற்றம் வேண்டும். அதற்கு ஒரு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கேரளாவிலே என்ன முறையை கையாளுகிறார்களோ அதைவிட குறைந்த விலையிலே தேங்காய் மட்டையின் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இரண்டாவது நம்முடைய மாநிலத்திலே மாவட்டத்தை விட்டு மாவட்டம் தேங்காய் மட்டைகளையும், நாரையும் கொண்டு செல்லக் கூடாது என்ற தடை இருக்கிறது. குறிப்பாக நெல்லையிலிருந்து குமரிக்கு வரக்கூடாது. நெல்லையிலிருந்து இராமநாதபுரத்திற்குச் செல்லக் கூடாது என்று ஒரு தடை இருக்கிறது. அந்தத்தடையை நீக்கி ஆகவேண்டும்.



அடுத்தபடியாக இந்த தேங்காய் மட்டை நாரிலிருந்து உற்பத்தி செய்கின்ற பொருள்கள் குறிப்பாக தேங்காய் மட்டை நாரிலிருந்து மெத்தை உற்பத்தி செய்கிறார்கள். இந்த மெத்தையை அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்கு இந்த மாநிலத்தில் எந்த மாவட்டங்களிலே இதனுடைய தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ, இந்த துறை அபிவிருத்தி அடைந்து இருக்கிறதோ அந்த மாவட்டங்களிலே அதற்கான ஆலையை நிறுவுவதற்கு நாம் முன்வர வேண்டும்.

குறிப்பாக நெல்லையை எடுத்துக்கொண்டாலும், குமரியை எடுத்துக்கொண்டாலும் சேலத்தை எடுத்துக் கொண்டாலும் வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தப் பகுதிகளிலே அதற்கான ஆலைகளை நிறுவவேண்டும். குமரி மாவட்டத்திலே தனியார் துறையிலே செயல்பட்டு வந்த ஒரு ஆலை அம்மாண்டிவிளையில் இருந்தது. 6, 7 மாதங்களுக்கு முன்னதாக மூடியிருக்கிறார்கள். அந்த ஆலையை அரசே ஏற்றுக் கொண்டு— அந்த ஆலைக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் இருக்கிறது— அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சிநிலையத்தை அம்மாண்டிவிளையிலே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கயிற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற கயிற்று மெத்தைகள், கயிற்றுப் பாய்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக, அடுத்த மாநிலங்களிலே உள்ள மையப பகுதிகளிலே விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால்தான் நம் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு அதிக விற்பனை கிடைக்கும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேங்காய்மட்டைநாரையும் அதுபோன்று ரப்பரையும் சேர்த்து மெத்தைகளை தயார் செய்கிறார்கள். அந்த மெத்தைகளுக்கு அயல்நாடுகளிலே அதிகமான கிராக்கி இருக்கிறது. அதனால் இரண்டுவிதமான லாபங்கள் இருக்கின்றன. நம்முடைய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது அதே நேரத்திலே அன்னிய செலாவணியும் நமக்கு தேடிக் கொடுக்கும்- அதற்கான ஆலைகளை இந்த மாநிலத்தினுடைய இதர பகுதிகளிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த துறையிலே உள்ள இயக்குநர், ஏ.டி. இவர்கள் எல்லாம் இந்தத் தொழிலிலே அனுபவம் உள்ளவர்களாக இருக்கிறார்களா என்பது என்னுடைய கேள்வி. குமரி மாவட்டத்திலே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த துறையின் மூலமாகக் கிடைக்கிற உதவி மிகக் கம்மியானது அங்கே கயர் மார்க்கெட்டிங் சொசைடி இருக்கிறது. அந்த சொசைடி தன்னுடைய தலைவர்களை தேர்ந்து எடுத்துக் கொண்டு செயல்பட ஆரம்பித்து இரண்டு வருடங்கள்தான் ஆகின்றன. அதற்குப் பின்னர் அதனுடையயூனிட் ஈத்தாமொழியில்

செயல்பட்டு வருகிறது., உற்பத்தி செய்கின்ற ஒரு யூனிட் இருக்கிறதே அதை கலைத்துவிட்டு இன்னொரு யூனிட்டை ஏற்பாடு செய்யப்போகிறார்கள். அதனால் அந்த சொசைடி ஸ்தம்பித்துப் போகும் நிலைக்கு சென்றுவிடும். எனவே அந்நிலையை தவிர்க்க வேண்டும். கயிற்றுத் தொழில் மூலமாக தேங்காய் மட்டை நார் மூலமாகச் செய்கின்ற பொருள்களை இந்த மாநிலத்திலே இருக்கின்ற நம்முடைய காரியாலயங்களிலே நம்முடைய துறைகளிலே எந்த அளவுக்கு வாங்குகிறார்கள்? சமீபத்தில் உதகையிலே 68 லட்ச ரூபாய் அளவுக்கு தனியார் துறையும் அரசு துறையும் பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கிக்கொண்டார்கள், ஆனால் அது பூராவும் கேரள மாநிலத்திலே வாங்கப்பட்டதே தவிர இங்கே நம்முடைய மாநிலக் கூட்டுறவுத் துறை மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வாங்கிக்கொள்ளவில்லை. இந்தத் தொழிலிலே உள்ள இடர்பாடுகளை நீக்கி வளர்ச்சி அடைந்து வருகிற இந்தத் தொழிலுக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு மாநில பெடரேஷன் உருவாக்கினால் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பால்வளம் சம்பந்தப்பட்ட வரையில் சில விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பால் வளம் அதிகரித்திருக்கிறது என்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் அதிகப்படியான பாலை உற்பத்தி செய்யவேண்டும் என்றால் அதற்குத் தேவையான கலப்பினப் பசுக்களை உற்பத்தி செய்ய வேண்டும். 3 இனங்களை வைத்து உற்பத்தி செய்கிறார்கள். பிரிஷியன், ஜெர்ஸி, சிந்தி ஆகிய இந்த மூன்று இன மாடுகளைக் கொண்டு கலப்பின பசுக்களை உற்பத்தி செய்து பால் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் ஜெர்ஸியோடு சிந்தியைச் சேர்த்தால் அதிகப்படியான பால் கிடைக்கிறதா செலவு கம்மியாகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அல்லது பிரிஷியனோடு ஜெர்ஸியைச் சேர்த்தால் பால் அதிகப்படியாக கிடைக்கிறதா என்று பார்க்கவேண்டும். எந்த கலப்பினத்திலே அதிகமான பால் கிடைத்திருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுவாக மாநிலத்தினுடைய மலைப்பாங்கான பகுதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் இதிலே, மலைப்பாங்கான பகுதி என்று சொல்கிறபோது நீலகிரி மாவட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் குமரி மாவட்டத்தில் அதற்கு வேண்டிய சீதோஷ்ண பக்குவ நிலை இருக்கிறது. ஆகவே கலப்பின கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு குமரி மாவட்டத்தையும் தீவிர கால்நடைத் திட்டத்திற்குள்ளே கொண்டுவரச் செய்ய வேண்டும். இரண்டாவதாக மாட்டுத் தீவனம். மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்யப்படுவது போதுமானதல்ல. அடு ஆ[illegible] தரமாக இருக்கிறதா என்று பார்த்தால் அதுகூட போதுமானதாக இல்லை, ஆனால் பாரி, கோத்தாரி இவைகள் உற்பத்தி செய்வது நல்ல தரமாக



இருக்கிறது. ஆனால் நாம் உற்பத்தி செய்கிற தீவனம்-நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்—3 நாட்கள் அதை திறந்து வைத்திருந்தால் 3-வது நாள் புழுக்கள் அதிகமாக இருக்கும்.

(நண்பகல் 12.00)

இன்னொன்று, அதிலே கரும்புச் சக்கைகள் அதிகமாக சேர்ப்பதால் மாட்டினுடைய பால் என்பது தண்ணீர் மையமாக இருக்கிறது. நேர்மாறாக பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு புல்லை அதிகப்படுத்தி தருகிறபோது பாலில் அதிகமான கொழுப்புச் சத்து இருக்கிறது. இப்படிப்பட்ட முறையை கையாள முன்வரவேண்டும். அதே போல மாட்டுத் தீவனம் கிடைக்காமல் இருக்கிறது. அடுத்த மாநிலங்களிலிருந்து வரவழைத்துத் தரவேண்டிய அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்கள் ஒன்றைச் சொல்கிறார்கள். விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது; அதன் விளைவாக கொடுக்கிற விலை கட்டுப்படியாகவில்லை; பால் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே அவர்கள் பால்விலையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் பால்விநியோக கூட்டுறவு யூனியன் என்று மாவட்டத்தினுடைய மையப்பகுதியில் இருக்கிறது. அதற்கு பால் குளிரூட்டும் ஆப்பரேட்டர் ஒருவர் இருந்தார். 2-5-77-ல் அவர் நியமிக்கப்பட்டார். 18-11-79-ல் அவரை அங்கேயிருந்து வெளியே அனுப்பிவிட்டார்கள். அதற்கு பதிலாக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ் வழியாக இல்லாமல் தனியாக ஆளை நியமித்து இருக்கிறார்கள், அங்கே பல்வேறு வகையில் முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. வேலை தேடி தரும் ஸ்தாபனத்தின் மூலமாக எடுப்பதற்கு பதிலாக 19 பேர்கள் அங்கே தனியாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு முறைகேடுகள் அங்கே நடந்திருக்கின்றன. அவற்றை களையவேண்டும். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தோல் பதனிடும் பாக்டரியிலிருந்து கழிவு நீர் வருவது விவசாயிகளுக்கு குந்தகம் விளைவிக்கிறது. ஆகவே விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள். அவர்களுக்கு நஷ்டயீடு கொடுத்து அதை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். நம்முடைய தீப்பெட்டித் தொழிலுக்கு இருக்கிற நெருக்கடி, அதற்கு வேண்டிய மென்மரம் கிடைப்பதில்லை. மென்மரம் பாரஸ்ட் இலாக்கா மூலமாக நேரடியாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பத்திரப் பதிவு, ஊரகத்தொழில்கள், பால் வழங்குத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று எனது கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த, தொழில் வளர்ச்சி பெற, விவசாயிகளின் துணைத் தொழில்களான பால் உற்பத்தி, பட்டு வளர்ப்பு, பட்டு உற்பத்தி ஆகியவை அதை ஒட்டிய சிறு தொழில்களாகும். தமிழகத்தின் பட்டுத் தேவை ஆண்டிற்கு 10 லட்சம் கிலோ என்று சொல்லப்படுகிறது. இது முழுவதும் சென்ற காலங்களில் கர்நாடக மாநிலத்திலேயிருந்து தான் வாங்கப்பட்டு வந்தது. இந்த நிலையை மாற்றி நமது அரசு பொறுப்பேற்றதற்கு, பிறகு தான் தமிழகத்திலேயே சேலத்தை மையமாகக் கொண்டு 1979-ம் ஆண்டு பட்டு வளர்ப்புத் துறை துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் துறை வேகமாக விவசாயிகளுக்கு தன் பணியை ஒரு மவுன புரட்சியாக செய்து வருகிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977-78-ல் 15,382 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப் பட்டது. 1982—83-ல் அது 55,042 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. 1977—78-ல் 76,910 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. 1982—93-ல் 2.75 210 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. 1977-78-ல் பட்டு உற்பத்தி 23 ஆயிரம் கிலோவாகும். 1982-83-ல் இது 1.65 லட்சம் கிலோவாகும். இந்த அளவிற்கு நமது பட்டு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாநிலத்திலேயே விதை பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயிகளுக்கு பட்டு கூடு உற்பத்தியில் உள்ள சிரமம் என்னவென்றால் முதல் நாளிலிருந்து 8-ம் நாள் வரையில் அந்த குஞ்சுகளை காப்பாற்றுவது சிரமமாக இருக்கிறது. அந்த சிரமத்தை விவசாயிகளுக்கு போக்குவதற்காக முதல் எட்டு நாளில் இளம் குஞ்சுகளை துறையின் மூலமே வளர்த்து விவசாயிகளுக்கு கொடுப்பதன் மூலம் உற்பத்தியில் ஊக்கம் அளிக்கப்படுகிறது மேலும் விவசாயிகள் இந்தத் துறையில் ஈடுபடுகிறார்கள் என்பதால் சென்ற ஆண்டு இளம் குஞ்சு வளர்ப்பு மையங்கள் 25—ம், இந்த ஆண்டு 40-ம் துவக்கப் பட்டுள்ளன. அடுத்த நிதியாண்டில் 315 லட்சம் ஒதுக்கப்பட்டு புதியதாக 8,000 ஏக்கரில் மல்பெரி பயிரிடவும், 50 இளம் குஞ்சு வளர்ப்பு மையங்கள் ஏற்படுத்தவும் வகை செய்யப் பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசை பாராட்டுகிறேன். இதன் மூலம் 1.65 லட்சம் கிலோவாக உள்ள பட்டு உற்பத்தி 2 லட்சத்து 75 ஆயிரம் கிலோவாக உயரும். 2,75,210 பேர்களுக்கு இருக்கிற வேலை வாய்ப்பை, 3,15,210 பேர்களுக்கு வேலை வாய்ப்பாக உயர்த்த முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது மவுனப் புரட்சி என்று நான் சொன்னதற்குக் காரணம், 3 இலட்சம் பேர்களுக்கு மேல் நாம் வேலை வாய்ப்பு ஒரு தொழிற்சாலையிலே ஏற்படுத்த வேண்டு மென்றால், ரூ. 1,000 கோடி செலவு செய்தால்கூட அதைச் செய்ய முடியாது. ஆனால், மிகச் சாதாரணமாக அந்த வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசினுடைய சாதனையாக இந்த நேரத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.



சிறு விவசாயிகள் ரூ. 2,500 முதலீடு செய்து, இந்தப் பட்டு வளர்ப்புத் தொழிலிலே ஈடுபட்டால் அவர்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 நிகர லாபம் பெறுவதோடு, தன் குடும்பத்தில் 5 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு தருகின்ற வாய்ப்பு உள்ளது. இது குறைந்த வேலை வாய்ப்புதான். அதிகப்படியாக ஒரு ஏக்கருக்கு ரூ. 35,000 வருமானம் பெற்றவர்கள்கூட பரிசு பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது நம் விவசாயி களுடைய பெரும் சாதனையாகும்.

முசுக்கொட்டை செடி வளர்க்கத் தேவையான தளவாடங் களை வாங்க கட்டிடம் கட்ட ரூ. 5,000 வரை வங்கிகள் மூலம் கடன்பெறுவதற்கு வாய்ப்புவசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ரூ. 1,500 அதற்கு மானியமாக வழங்கப்படுகிறது. நான்கு பேசின் வைத்து, அதற்கான கட்டிடங்கள் கட்டி, பட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், ரூ. 4,500 மானியமாக வழங்கப்படுகிறது. என்னுடைய தொகுதியான மலைப் பகுதியில், மாதஹல்லி என்ற இடத்தில் 850 ஏக்கர் நிலப் பரப்பில் அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை ஒன்று உள்ளது. அந்தப் பண்ணையைச் சீரமைத்தால் சுமார் 3,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும் என்ற ஒரு திட்டம் அரசுக்கு அனுப்பப் பட்டு, மாண்புமிகு ஊரகத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டபொழுது, அதை அவர்கள் ஆய்ந்து, இப்பொழுது புரட்சித் தலைவருடைய அனுமதியோடு, 3 ஆண்டுகளில் அதை அபிவிருத்தி செய்வதற்காக, சென்ற ஆண்டு ரூ. 25 இலட்சத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மலை வாழ் மக்களுடைய சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதஹல்லி அரசு பட்டு வளர்ப்புப் பண்ணையைத் தமிழகத்திலேயே ஒரு முன் உதாரணமாக, இருக்கிற அளவுக்கு அங்கே ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை நம்முடைய அரசு தீட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முசுக்கொட்டை செடி வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு உற்பத்தி ஆகியவற்றையும் அங்கே செய்து அந்தப் பண்ணையைச் சிறப்பாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பணி செய்து வருகின்ற 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் 20 கிலோ மீட்டர் தூரத்திலேயிருந்து வருகின்ற காரணத்தால் 100 வீடுகள் அந்தப் பண்ணையிலேயே கட்டி, அவர்கள் அங்கேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக அந்தப் பண்ணை வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் இந்த அரசின் சாதனைகள் இமாலய சாதனைகள் என்று சொல்லலாம். அதை நான் குறிப்பிடு கின்ற வகையில், எனது மாவட்டமான பெரியார் மாவட்டத்தில் செய்திருக்கிற சாதனைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் மாவட்டத்தில் 1981—82 ஆம் ஆண்டை விட 1982-83 ஆம் ஆண்டில் பால் கொள்முதல் செய்வதில், 57

சதவீதம் உயர்ந்திருப்பது சிறப்பான சாதனையாகும் பெரியார் மாவட்டத்தில் சித்தோட்டில் இயங்கிவரும் பால் தொழிற்சாலையின் திறனை நாள் ஒன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டரிலிருந்து 3.00 இலட்சம் லிட்டராக உயர்த்துவதற்கும், சத்தியமங்கலம், சங்கராண்டான் பாளையம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையங்களின் திறனை 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டருக்கு உயர்த்துவதற்கும், இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 286.50 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதையும் நான் மனப்பூர்வமாக எங்கள் மாவட்டத்தின் சார்பிலே பாராட்டுகிறேன்.

எருமைகளின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக, எருமை இனங்களுக்கு உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்ய இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி எருமையின் உறைவிந்தை தயாரிப்பதற்காக எருமை பொலிகாளைப் பண்ணை ஒன்றும் மற்றும் எருமையின் உறைவிந்து நிலையம் ஒன்றையும் இம்மாவட்டத்தில் நிறுவுவதற்காக ரூ. 27·43 இலட்சம் நிதி இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் 342; தினசரி சராசரி பால் கொள்முதல் 56,170 லிட்டர்கள் ஆகும். பயனடையும் விவசாயிகள் 45,120 பேர்கள்; செயற்கை முறை கருவூட்டல் வசதியுள்ள சங்கங்கள் 54 ஆகும். செயற்கை முறை கருவூட்டல்கள் 7,400 கறவை ஆகும். பிறந்த கன்றுகள் 1,700 ஆகும். கால்நடை சிகிச்சை வசதியுள்ள சங்கங்கள் 294 ஆகும்.

(பிற்பகல் 12-10)

நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் 4; அவசரகால மருத்துவ நிலையங்கள் 2; சிகிச்சை பெற்ற கால்நடைகள் 38,320; கால்நடை தீவன விற்பனை 2·246 மெட்ரிக் டன்கள் என்ற இந்த அளவிற்குப் பெரியார் மாவட்டத்திலே நம்முடைய அரசு சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் பகுதி தொழில் துறையிலே மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் சத்தியமங்கலம் வட்டத்தில் ஊரகத் தொழில் துறை மூலமாக தொழில் பேட்டை ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. இதன் மூலம் கடுக்காய், பூச்சக்காய், கல்பாசம், மரப்பாசம் போன்ற கனிவளங்கள் கிடைக்கின்றன. இவைகளை மூலப் பொருட்களாக வைத்து எனது தொகுதியில் தொழில் துறையின் மூலமாக



ஆய்வு செய்து பல தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்தச் சிறப்பான மானியங்களின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமர்கின்றேன், வணக்கம்.

*திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊரகத் தொழில்கள், பால் வளம், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள்கள் தோன்ற கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். எல்லோரும் அமைச்சரவர்களைப் போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் என்னுடைய பகுதியில் அதிகமான தொழில்கள் வளராததால் நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்த அளவிற்கு இல்லாமல் எதிர்காலத்திலேயாவது நல்லபடியாக அந்தப் பகுதி மற்றப் பகுதிகளோடு இணைந்து செல்கின்ற அளவிற்கு தொழில்களை வளர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குன்றக்குடியில் 1981 ஆம் ஆண்டில் குளோரைட் தொழிற்சாலை ஒன்று சுமார் 6,05,000 ரூபாயில் 41 மெம்பர்களைக் கொண்ட பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டும், இன்றையதினம் வரையில் எந்தவிதமான உற்பத்தியும் அங்கே ஆரம்பிக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் மதிப்பீடு ரூபாய் 31 இலட்சம் என்று சொல்லப் படுகிறது குறிப்பேட்டிலே. ஆனால் குன்றக்குடியில் உள்ள குளோரைட் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்காததற்கு காரணம் அதற்கு வேண்டிய பொருள்கள் சப்ளை செய்யப் படாத காரணத்தால்தான் இன்று வரையில் உற்பத்தியாகவில்லை. ஆகவே மூன்று வருடங்களாக அந்தத் தொழிற்சாலை அமைதியாக இருக்கிறது. சுறுசுறுப்பு காட்டாததால் அந்தத் தொழிற்சாலை இன்றைக்குத் தூங்கிக் கொண்டிருக்கிறது. அதை உசுப்பிவிட்டு அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டாசு செய்வதற்கு குளோரைட் மிகமிக முக்கியமானதாகும். இராமநாதபுரம் மாவட்டத்திலே சிவகாசி, திருத்தங்கல் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்ற பட்டாசுகள் உலகப்புகழ் பெற்றவை. அங்கே தொழிற்சாலை இருந்தாலும்கூட குளோரைட் சரியாகச் சப்ளை செய்யப்படாததன் காரணமாக இந்தத் தொழிற்சாலை க்ஷீணித்த நிலையில் இருக்கிறது. அதை அபிவிருத்தி செய்யும் வகையில் எந்தவிதமான திட்டமும் இல்லாமல் இருக்கிறது. அவ்வாறு இல்லாமல் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு குளோரைட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 36,000 பேர்களுக்கு மேல் வேலை செய்வதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக சில துறைகளிலே இந்த மாநிலத்திலே விரும்பத்தகாத அளவிற்கு, வளர்ச்சி அடையத் தக்க அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை என்பதை அரசே உணர்ந்திருப்பதாகக் குறிப்புகளில் கூறப்படுகிறது. அதை அபிவிருத்தி செய்வதற்கு என்ன வழி? பத்து பர்செண்ட் மானியமாகக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மானியத்தை 15 சதமாக கூடுதலாகக் கூட்டிக்கொடுப்பதன் காரணமாக தொழில் வளர ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குளோரைட் பற்றாக்குறை இல்லாமல் விநியோகம் செய்ய உங்களால் முடியவில்லை; வெளிநாட்டிலேயிருந்தாவது வரவழைக்க ஏற்பாடுகள் எதுவும் இல்லை; எப்படித் தொழில் வளரும்? இப்படி மூன்று இலட்சம் பேர் ஈடுபட்டுள்ள இந்தத் தீப்பெட்டித் தொழில் சிறுகச் சிறுக வளர்வதற்குப் பதிலாக இன்னும் ஸ்தம்பித்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மேலும மேலும் வளர்ச்சி அடைவதற்கு ஏற்பாடு செய்யும்படியாகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும், சிறுவர்களையும் உபயோகப் படுத்துவதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு 48 பேர் பஸ்ஸில் போனபொழுது வெள்ளத்திலே இறந்து போனார்கள். அதுபற்றி இந்தச் சபைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இனிமேல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உப்புத் தொழிற்சாலை. என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே உள்ள மாரியூரிலே ஆரம்பிப்பதாகக் கிட்டத்தட்ட கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு சொல்லப்பட்டது. 54 இலட்சம் ரூபாயிலே ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டது.

இன்றைக்கு வரைக்கும் அது அபிவிருத்தி அடையாத ஒரு நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. பல திட்டங்கள் போட்டு, அபிவிருத்தி செய்யும் ஏற்பாடுகளை இங்கு அனுப்பியிருந்தாலும்கூட, எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. அதற்குக் காரணம்—ஒவ்வொரு நாளும் ஆண்டறிக்கையை பார்க்கக்கூடிய நிலைமையிலே க்ஷீணித்துப் போய்க் கொண்டிருக்கிறது. தேய்ந்து போய்க் கொண்டிருக்கிற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிற்குக் கொண்டுவருகிறேன். அந்த மாதிரித் தொழிற்சாலையானது ஆரம்பத்திலே 4 விதமான, உப்பிலே கிடைக்கக்கூடிய பலதரப்பட்ட பொருள்களை உற்பத்தி



செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை இன்றைக்கு அது உப்பே உற்பத்தி பண்ணுவதிலே சிக்கல்கள் ஏற்பட்டு நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து, எந்த காரணத்தால் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து, அந்த தொழில் வளர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கோவளம், தூத்துக்குடிபோன்ற இடங்களிலும்—தூத்துக்குடி தொழிற்சாலை மூடப்பட்டு விட்டதாக குறிப்பிலே இருக்கிறது. அந்த அளவுக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்த உப்புத் தொழிற்சாலையை பொறுத்தவரையில், கடற்கரை ஓரங்களில் வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. அதையெல்லாம் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு பற்றி சொல்லக்கூடிய நேரத்திலே, சரியானபடி கரி கிடைக்காததால் தொழில் அபிவிருத்தி குறைந்திருக்கிறது என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கரி சம்பந்தப்பட்ட மின்சாரம் கூட கிடைக்காத காரணத்தால் எங்கள் பகுதியில் தொழில்கள் அஸ்தமிக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது என்பது குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒரு ஆண்டுக்கு 2,500 வேகன்கள் சப்ளை செய்யவேண்டிய நேரத்திலே 500 வேகன்கள் கூட சப்ளை செய்யாததன் காரணமாகவும், கல்கத்தாவிலிருந்து கரி வராததன் காரணமாகவும் பல இடங்களில் தொழில்கள் நசிந்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவைகளை மாற்றி மத்திய அரசினுடைய தவறுதலான கொள்கையிலிருந்து விடுபட்டு, இன்று அதிகமான கரி ஒதுக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியைப் பொறுத்தவரை, மாவட்ட உற்பத்தியாளர் ஒன்றியம், மாநில அளவில் பால் உற்பத்தி போன்ற உற்பத்திகள் இருந்தாலும்கூட, கிராமச் சங்கங்கள் அமைப்பதிலே இன்னும் பல சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் அதிலே அரசியல் புகுந்து கொண்டு, பால் உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டு, நின்றுகொண்டிருக்கிறது. பால் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு கிராமச் சங்கங்களை அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு பால் உற்பத்தி செய்கையில் முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் சில நேரத்திலே சிறு விவசாயிகளுக்கு சர்டிபிகேட் வழங்குவதிலே தடங்கல்

ஏற்படுகிறது. அந்தத் தடங்கல் எந்தவிதமான காரணமும் இல்லாமல் சிறு விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

டால் பண்ணை தொழிலிலும் பால் விநியோகத்திலும், ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழிற்சாலைகள் கூட்டுறவு முறையிலே கிட்டத்தட்ட 13 தொழிற்சாலைகள் இங்கே ஆரம்பிக்கப்பட்டு, நல்லமுறையிலே நடந்தாலும்கூட, இன்றைக்கு சரியானபடி மார்க்கெட் கிடைக்காத காரணத்தால், அந்தத் தொழிலாளர்களுக்குச் சரியானபடி சம்பளம் கிடைக்காத காரணத்தால், அந்தத் தொழில் வளர்வதிலே தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. அவைகளையும் கூட அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டு வளர்ப்புத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், தென்னாடு முழுவதும் வறட்சியின் காரணமாக அந்த முசுக்கட்டை வளர்வதிலே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் பட்டுப்போயிருக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. உதவிகள் அளித்தாலும் சரியான முறையில் முசுக்கட்டைகள் வளர்வதில்லை. அதன்காரணமாக உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அதை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இளையான்குடி, ராஜசிங்கமங்கலம் போன்ற இடங்களில் சிறு தொழில்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதிகளில் தொழில்கள் வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இளையான்குடியைப் பொறுத்த அளவிலே, தொழில்கள், தொழிற்சாலைகள் போன்றவைகளை சிறிய அளவிலே தனிப்பட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரை ஓரங்களில் சுண்ணாம்புப் படிவங்கள் அதிகமாகக் கிடைக்கிறது. அந்தச் சுண்ணாம்புப் படிவங்களை எடுத்து சிறுசிறு சிமெண்ட் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தென்னை மரங்களைப் பொறுத்தவரையில், கடற்கரை ஓரங்களில் அதிகமாக இருக்கின்றன. தென்னை நார் உற்பத்தித் தொழிற்சாலைகளை அதிகமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



சங்குத் தொழிற்சாலைகளை கடல் ஓரங்களில் இருக்கிற பகுதியிலே கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டம் அவிநாசி தாலுக்காவை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, சிறு சிறு தொழிற்கூடங்கள் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஈரோடு தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தும், இன்னும் வேலை தொடங்காமல் இருந்து வருகிறது. உடனடியாக வேலை துவங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(பிற்பகல் 12-20)

திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கின்ற மானியத்தில், ஊரகத் தொழில்
குறித்த சில கருத்துக்களை நான் சொல்லலாம் என்று கருது
கிறேன். வணிகத்துறையிலே நம்முடைய அரசு இன்றையதினம்
மிகவும் மேன்மையாக இருந்த அந்தத்துறை இப்போது
பின்னடைக்கு வந்திருக்கிறது என்பதை நான் முதற்கண்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில்
வணிகத்துறையிலே இயக்குநர் அலுவலகத்திலே பணியாற்று
பவர்களாக இருந்தாலும் சரி, மாவட்ட தொழில் அலுவல
கத்திலே பணியாற்றுபவர்களாக இருந்தாலும் சரி, முன்பெல்லாம்
பட்டதாரிகள் கல்வித்துறையிலே அவர்களுக்கு உரிய பதவி
உயர்வு தரப்பட்டு வந்தது. ஆனால் இன்று அவர் படிப்புக்கு
ஏற்ப பதவி உயர்வும் தராமல் இந்தத் துறையில் பணியாற்று
கின்றவர்கள் தொடர்ந்து தாங்கள் எந்தப் பணியிலே இருந்
தார்களோ, அதே பணியிலே நீண்டகாலமாக நீண்ட ஆண்டு
களாக இருக்கிறார்கள். இதை கவனத்தில் கொண்டு பார்த்தால்
மிகச் சிறப்பான தொழிலாக இருந்த இந்த வணிகத்துறை
இன்றைக்கு மிகச் சிறிய துறையாக, குறுகிய துறையாக மாறி
யிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். கல்வித்துறையிலே
இன்றைக்கு பட்டதாரிகள் நிறைந்து இருக்கின்ற இந்த நேரத்தில்
எஸ்.எஸ்.எல்.சி. படித்து இருந்தால் போதும் என்ற முறையில்
அவர்களுக்கு பதவி உயர்வு ஏற்படுகிறது. இதை கவனத்தில்
கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊரகத் தொழில், குறிப்பாக தமிழகத்தில் தோல்
பதனிடும் தொழில் மிகச் சிறப்பான முறையில் இருந்துவருகிறது
என்பதை நாம் உணர்ந்து வருகிறோம். 1946-லே இந்தத்
தொழில் மிகச் சிறப்பான முறையில் உலகத்திலே, ஆசியாவிலே
குறிப்பாக தமிழகத்தில் இன்னும் சிறப்பாக பல்லாவரம், பம்மல்,
நாகற்கேணி, குரோம்பேட்டை இந்த 4 பகுதியிலேதான் இந்தத்
தோல் பதனிடும் தொழில் மிகச் சிறப்பான முறையிலே
இருந்ததாக, ஆறாவது வகுப்பிலே 1946 லே நான் படிக்கின்ற
போது நான் கேட்டது எனக்கு ஞாபகம் வருகிறது. அதனால்தான்
குரோம்பேட்டை, தோல் பேட்டை என்று இன்றைக்கு அதற்கு
பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தத் தொழில் வட ஆர்க்காடு
மாவட்டம், மதுரை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
போன்ற இந்த 3 மாவட்டங்களில் இந்தத் தொழில் அதிகமாக
இருந்து கொண்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில்,
அதிலும் பம்மல் பகுதியிலேதான் 120 தோல் பதனிடும் தொழிற்
சாலைகள். 1850 ஆம் ஆண்டே இருந்ததாக எனக்குத்
தெரிகிறது. இந்தத் தொழில் அங்கே குடிசைத் தொழிலாக,
கிராமத் தொழிலாக வளர்ந்து விரிந்து இன்றைக்கு ஓரளவுக்கு
நடுத்தரத் தொழிலாக மாறியிருக்கிறது. அதற்காக இன்றைய
தினம் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதை நான் கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தொழிலில் ஈடுபட்டு
இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பின்தங்கிய
மக்களுக்கு கிடைக்கின்ற தினக்கூலி மிகவும் குறைவாக
இருக்கிறது. அரசாங்கமே இதிலே தலையிட வேண்டிய ஒரு
சூழ்நிலை இருக்கிறது. சங்கங்கள்கூட அமைக்க முடியாத சூழ்
நிலையில் இன்றைக்கு அந்தத் தொழில் நடத்துகிறவர்கள்.
அங்கே இருக்கின்ற தொழிலாளர்களைப் பழிவாங்கக்கூடிய
நிலைமையிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். இதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன் இந்தத் தொழில் 150 ஆண்டுகளாக
நடந்து வருகிற காரணத்தால், பம்மல் நகரம், ஆலந்தூர்,
பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற
தண்ணீர் உப்புத்தண்ணீராக மாறியதன் காரணமாக, அங்கே
உள்ள மக்கள் குடிநீருக்கு அவதிப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்
கிறது. இதைப்பற்றி நான் போன தடவையே, நிதிநிலை
அறிக்கையிலே பேசியிருக்கிறேன். இதற்குக் காரணம் இந்தத்
தோல் தொழில்தான். கிணற்று நீரும் உப்பாகத்தான் இருக்
கிறது. அதை வைத்து குளிக்கமுடியாத ஒரு நிலையிருக்கிறது.
அந்தக் கழிவு நீர், அங்கே நடத்துகின்ற தோல் பதனிடும்
தொழிலால், பச்சைத் தோலை பதப்படுத்துதல், உலர்த்துதல்
போன்ற தொழிலைச் செய்துகொண்டு இருப்பதன் காரணமாக
அத்தனை தொழில் அதிபர்களும் அந்தத் தண்ணீரை தெருக்
களிலே விடுகிறார்கள். ஊர்களிலேதான் வருகிறது. அத்தனை
குடியிருப்புகளுக்கும் போகின்ற காரணத்தால் இந்த நீர்
துர்நாற்றம் வீசுகிறது. இந்த நீர் பரவுகின்ற காரணத்தால்
தோல் வியாதி வருகிறது என்று சொல்கிறார்கள். இது ஆராய்ச்சி
செய்தி.



இந்தக் கொடுமையான சூழ்நிலை இருக்கும் அந்தப் பகுதியில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போன தடவை சொன்னார்கள்,
அதற்கு ஒரு முறை செய்யப்போகிறோம் என்று சொன்னார்கள்.
சுகாதார அமைச்சர் சொன்னார். குடிநீர் வடிகால் வாரிய
அமைச்சர் சொன்னார். ஆனால் அதற்காக எந்தத் திட்டமும்
இதுவரையில் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

முன்பு இருந்த கழக ஆட்சியில் அந்தப் பகுதியில் உப்பு நீர்
இருப்பதால். பாலாறு குடிநீர் திட்டத்தின் கீழ் அந்தப் பம்மல்
பகுதியையும், 1970-லே சேர்த்தார். அதற்குப் பின்னால் அந்தத்
திட்டம் இதுவரையில் வரவில்லை, அது வேறு விஷயம்.
அங்கே சரியான முறையில் குடிநீர் இல்லாததால் தோல்
வியாதிகள் பரவுகின்றன. துர்நாற்றம் வீசுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, பாலாறு திட்டம் நிறைவேற
வில்லை என்று சொன்னார்கள். நான் அன்றைக்கு மானியக்
கோரிக்கை விவாதத்திற்கு பதில் சொல்லும்போது மாண்புமிகு
உறுப்பினர் பம்மல் நல்லதம்பி அவர்கள் இருக்கிறார்களா என்று
பார்த்தேன். ஆனால் அவர்கள் இல்லை. அப்போதே சொன்னேன்
மே மாதம் இறுதியில் அந்தப் பாலாறு திட்டம் முழுமையாக
நிறைவேறி பல்லாவரம், ஆலந்தூர் பகுதிகளுக்கு ஏறத்தாழ
2 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்கும் என்று.

**திரு பம்மல் நல்லதம்பி:** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன நேரத்தில் நான்
இல்லை. இப்போது சொன்னதற்காக மகிழ்ச்சி. ஆனால் 1982
அக்டோபரிலேயே தண்ணீர் தரப்படும் என்று இந்த மன்றத்திலே
சொன்னார்கள். 83 மார்ச் முடியப் போகிறது. எவ்வளவு
தருவார்கள் என்பதையும், எப்போது தருவார்கள் என்பதையும்
உறுதியாக உங்களால் சொல்லமுடியாது என்று நான் நினைக்
கிறேன். மே மாதம் என்று சொன்னார்கள். எந்த ஆண்டு மே
மாதம் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அதைத்தான் நான் தெரிவித்தேன். அன்றையதினம்
மாண்புமிகு உறுப்பினர் இருந்து இருந்தால் நன்றாக இருந்
திருக்கும். 1983-மே இறுதிக்குள் அது முடிவு அடையும்.

**திரு. பம்மல் நல்லதம்பி:** மிகவும் மகிழ்ச்சி. அந்தப் பகுதி
தோல் தொழில் நிறைந்து இருக்கிற பகுதி என்பதாலும், அந்தப்
பகுதி அதனால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்ற
காரணத்தாலும், இந்தப் பிரச்னை குறித்து விரிவான அளவில்
பேச எனக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். குறிப்பாக அந்த பகுதியில், பம்மல் நகரத்தில் மிகச்
சிறப்பாக அங்கே இருப்பவர்கள் பணியாற்றினாலும், பாதிக்கப்

பட்ட பொதுமக்கள் இந்தப் பிரச்சனை குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் வகையில் நம்முடைய கோட்டைக்கு ஊர்வலமாக வர இருக்கிறார்கள் என்பதை முன்கூட்டியே நான் இங்கே சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் பல்வேறு இனங்களுக்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கழிவு நீரை சுத்தப்படுத்த என்ன திட்டம் வைத்து இருக்கிறார்கள், என்ன செய்து இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்காக நிதி ஒதுக்கப்போகிறார்களா என்றும் தெரியவில்லை. அந்த விவரங்களை இந்தச் சபையில் அவர்கள் சொல்லவேண்டும். சொல்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த நம்பிக்கையில் தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். இது மிகவும் முக்கியமான பிரச்சனை. வாணியம்பாடி, பேரணாம்பட்டு, ஆம்பூர் பகுதிகளில் இந்தப் பிரச்சனை இருக்கிறது. ஏறத்தாழ பேரணாம்பட்டு ஆம்பூர் போன்ற இடங்களில் 40 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நாடு களிலேயே அந்தக் கழிவு நீரை விட்டுக்கொண்டு இருக்கின்றன. அந்த முதலாளிகளைக் கேட்டால், நாங்கள் 4 லட்சம் 5 லட்சம் கடன் வாங்கி இதைச் சிறு தொழிலாக நடத்துகிறோம். டிரீட்மெண்ட் பிளாண்ட் வைக்கவேண்டும் என்று சொன்னால், கிட்டத்தட்ட 6 லட்ச ரூபாய் செலவாகும். இந்த 6 லட்ச ரூபாய் கடன் பெற்று நாங்கள் அதை அமைத்தால், அதற்கு வட்டி கூட எங்களால் கட்டமுடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசே இதற்காக மானியம் வழங்கி, ஒரு பொது முறையில் ஒரு 1,20 ஷாப்புகளுக்கு இடையில் ஒரு ஏக்கர் நிலம் வாங்கி, அந்தக் கழிவு நீரை கலெக்ட் செய்து, அதை டிரீட்மெண்ட் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுப் பதிவு, பால் முன்னேற்றத் திட்டம், ஊரகத் தொழில் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என் கருத்துக் களை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்நியச் செலாவணி அதிகமாக ஈட்டித் தருகிற தேயிலைத் தொழிற்சாலைகள் கிட்டத்தட்ட 11 தொழிற் சாலைகள் இருக்கின்றன. அந்த 11 தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற தேயிலையின் அளவு இந்தியாவிலே உற்பத்தியாகும் தேயிலை அளவிலே 9% என்ற அளவில் இருக்கிறது. கிட்டத்தட்ட 7128 அங்கத்தினர்களைக் கொண்ட 1,5,0 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட பகுதியாகும் அது. அதிலே நேரடியாகவும், மறைமுகமாகவும் 4000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

(பிற்பகல் 12-30)

அந்த 11 சங்கங்களையும் நிர்வகிப்பதற்கு 'இண்ட்கோசர்வ்' என்ற ஒரு மைய சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கங்களின் பணிகளை அந்த மையச் சங்கம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறது.



அங்கே உற்பத்தியாகும் தேயிலை அனைத்தையும் பெட்டிகளில் அடைத்து, மற்ற மாநிலங்களுக்கும், மற்ற மாவட்டங்களுக்கும் அனுப்ப கூடலூர் பகுதியில் ஒரு 'ப்ளைவுட்' தொழிற்சாலை அமைக்க அரசு முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

இன்னும் கூடலூரில் சாலிஸ்பெரியில் ஒரு தேயிலைத் தொழிற் சாலையும் எருமாடு என்ற இடத்தில் ஒரு தேயிலைத் தொழிற் சாலையும் புதிதாக அமைக்கப்படவுள்ளன. அந்த இரண்டு சாலையும் புதிதாக தொழிற்சாலைகளின் கட்டுமானப் பணிகளும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிய மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகள் தங்களுக்கு வேண்டிய பொருட்களை, அதாவது சிறு விவசாயிகள் எரிபொருள்கள் பயன்படுத்துவதில் சில சிக்கல் இருப்பதால் நீலகிரி மேட்டுப் காடுகளில் உற்பத்தியாகிற கற்பூர மரங்களை பாளையம் விஸ்கோஸ் நிறுவனத்திற்கு அனுப்புகிறாமே, அதில் ஒரு பகுதியை இந்த 11 சங்கங்களுக்கும் எரிபொருளாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் அதிலே நசிவுற்ற ஒரு தொழிலை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், குன்னூரில் ஒரு இடத்தில் கிடங்கை திறந்து வைக்கும்போது அங்கே உள்ள மக்கள் ஒரு வேண்டு கோளை விடுத்தார்கள். ஒரு கிலோ பச்சைத் தேயிலை ஒரு ரூபாய்க்கும் குறைவாக விற்பனை ஆவதால் இலாபம் இல்லாமல் இருக்கிறது. தொழில் சரியான முறையில் நடத்த முடியவில்லை விலையை உயர்த்திக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். குறைந்தது கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாயாவது கிடைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்றைக்கு எந்த அளவுக்கு இதிலே உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்கிறேன் என்று சொன்னார்கள். அதன் பிறகு தேயிலை விற்பனை வரி 6 சதவீதமாக இருந்ததை 5 சதவீதமாகக் குறைத்து, அதன் பிறகு அதை 2½ சதவீதமாகக் குறைத்ததை அந்த நீலகிரி மாவட்ட மக்கள் சிறப்பாகப் பாராட்டுகிறார்கள். அவர்கள் சார்பாக நானும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் வெஸ்ட்பெங்காலில் சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய முதல் ஒரு இலட்சம் கிலோ தேயிலைக்கு செஸ் வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். அதை போன்று நம்முடைய அரசும் விலக்கு அளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மத்திய அரசில் ஒரு கிலோ பதப்படுத்தப் பட்ட தேயிலைக்கு 60 பைசா செஸ் எக்சைஸ் டூட்டி வசூல் செய்கிறார்கள். அதைக் கணிசமான அளவுக்கு குறைக்க வேண்டு மென்று மைய அரசை நம்முடைய அரசு வற்புறுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் அந்த தேயிலையை நல்ல விலைக்கு விற்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏல மையங்களில் தான் விற்க வேண்டுமென்றும் அங்கே விற்கக்கூடிய தேயிலைக்கு விற்பனை வரியைக் குறைக்க வேண்டுமென்றும் அங்கீகரிக்கப் படாதமையங்களில் விற்கக்கூடிய தேயிலைக்கு விற்பனை வரியைப் அதிகரிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

கிட்டத்தட்ட அந்த 11 தேயிலைத் தொழிற் சங்கங்களில் பதப்படுத்தப்பட்ட தேயிலையை உற்பத்திச் செய்தால் மட்டும் போதாது. அதை நல்ல விலைக்கு விற்பதற்கு அங்கே இருக்கிற 'இன்ட்கோசர்வ்' மையம் தீவிரபாகச் செயல்பட அமைச்சரவர்கள் வற்புறுத்த வேண்டும். இல்லை என்றால் பதப்படுத்தப்பட்ட தேயிலையை விற்பனை செய்வதற்கு ஒரு மார்க்கெட்டிங் பெடபரேஷனை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும். அதேநேரத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு தொழில மையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், 5 ஆயிரம் லிட்டர் பால் பதனிடும் ஆலையை நிறுவி அதிலிருந்து பாலாடைக் கட்டி-சீஸ் தயாரிக்கும் பணிகளைச் செய்வதற்காக, அங்கே இயந்திரங் களை நிறுவுவதற்கு கிட்டத்தட்ட ரூ. 152.30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

கோத்தகிரி கூடலூர் ஆகியஇடங்களில் உள்ளபால் குளிருட்டும் இயந்திரத் திறனை கூடுதலாக்கி 4000 லிட்டரிலிருந்து 10,000 லிட்டர் அளவுக்கு பால் குளிரூட்டச் செய்ய, 16.20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து கால்நடைகளுக்கு வரும் கொடிய நோய் என்று சொல்லக்கூடிய கோமாரி நோயை, அந்தப் பகுதியில் மேலும் பரவாமல் தடுப்பதற்காக, என்.டி.டி.பி. ஒரு புதிய திட்டத்தினை மருந்துகளைச்செயலுக்குக் கொண்டு வந்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லா கால்நடைகளுக்கும், இலவசமாக சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்து வருகிறது.

கால்நடைகளைப் பெருக்கும் திட்டத்தின் கீழ், ஜெர்சி மற்றும் பொலி காளைகளிலிருந்து 1லட்சத்து 64 ஆயிரத்து 435 உறைவிந்து டோஸ்கள் தயார் செய்யப்பட்டு, அது குளிர் சாதன பெட்டிகளில் வைத்து பாதுகாக்கப்பட்டு, செயற்கை முறையில்



கருத்தரிப்பு மூலமாக கால்நடைச் செல்வங்களை மாநிலம் முழுவதும் பெருக்குவதற்காக, நீலகிரியிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, வழங்கப்படுகிறது என்று பெருமை யோடு சொல்லிக் கொள்கிறேன்.

நடமாடும் கால்நடை மருத்துவ வசதியும் நீலகிரியில் உள்ளது. ஒவ்வொரு கால்நடைக்கும் அந்த வசதி அளிக்கப்படுகிறது. அந்த வசதிகள் மருத்துவமனைகளில் உள்ளதைப் போலவே. எல்லா கால்நடைகளுக்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது என்று சொல்லி, நீலகிரி மாவட்டத்தில் இதுவரையில் பத்திரப் பதிவு அலுவலகம் இல்லை. அந்தக் குறையையும் போக்கும் அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மாவட்டப் பத்திரப்பதிவு அலுவலகத்தை அங்கே ஏற்படுத்திவிட்டார்கள் என்று சொல்லி, அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானிய கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க நான் ஆரம்பிக்கிறேன். சார், அவர்கள் முக்கியமாக சிறு தொழில் அபிவிருத்திக்காகவும், ஊரகத் தொழில் அபிவிருத்திக்காகவும் நல்ல திட்டங்களைப் போட்டு, நல்ல வளர்ச்சியை உருவாக்குவதற்கான சூழ்நிலையை அவர்கள் உருவாக்கியதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல, அவர்கள் இந்தத் துறையில் நல்ல வளர்ச்சியைச் செய்வார்களேயானால், அவர்களுக்கு அந்த டிபார்ட்மெண்டிலே உள்ளவர்கள் மிகுதியாக ஒத்துழைக்க வேண்டும். இது போன்ற விஷயங்களில் எல்லாம் அவ்வளவாக ஒத்துழைப்பு இல்லாமல் வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது. இந்த வளர்ச்சியை மேன்மேலும் பெருக்கி, நம்முடைய மாநிலத்தில் அதிக வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காக என்னென்ன அவர்கள் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ், காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ், ஹேண்டிகிராப்ட்ஸ் போன்றவைகள் நிறைய இருந்தால் தான் நம்முடைய மாநிலத்தில் வேலைவாய்ப்பு அதிகமாகும். அதுமட்டும் அல்ல, இவைகள் அதிகமாவதன் காரணமாக நிறைய பணப் புழக்கம் ஏற்படுகிறது. அதன் காரணமாக உற்பத்தி பெருகுகிறது. அதன் காரணமாக நாட்டில் எல்லாவிதமான அபிவிருத்திகளும் ஏற்படுகின்றன. ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல உத்தேசித்து செய்துவர வேண்டும். மேன்மேலும் முறையில் அதைச் இதனை வளரச் செய்ய வேண்டும் இதில் அவர்கள் ஈடுபட்டு கேட்டுக் கொள்கிறேன். என்று நான்

[திரு. கே. எம். நீ. ஜாஹிர் ஹுசைன்]

Sir,

I need not stress the importance of the development of industries in our State. I was asking the Hon Minister whether he has visited the industries in Punjab, Maharashtra and other places. He said that he is going to draw up a programme. I would like the Hon. Minister to go and see how the industries in those places have developed to a very considerable extent, particularly in Punjab and Maharashtra. I have gone and seen the various types of industrial development both overseas and in our State. It is an eye opener for us and unless these are taken up as a challenge and developed, I am afraid things cannot develop to a very considerable extent. We have established various developmental agencies, financial institutions, like SIDCO, TANSI, and TIDCO. They are giving good service. They are intended to promote the industrial development and help the entrepreneurs in establishing small scale, medium industries. They should see that more facilities are given to whoever approaches them for financial help.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)
(பிற்பகல் 12.40)

Unless there is a powerful helping tendency both on the part of the Government and on the part of the banks no Industry, of any character, either Small, Medium or Low or High can develop. Unless there is more industrial activities the State cannot solve many ills, particularly among the educated people.

From that angle I want these institutions to see that more expeditious disposal of the papers should be organised. So many people are coming and telling me that there are heavy delay, particularly in the payment of backward area subsidies and sales tax free loans. For months and years sales tax free loans have not been disbursed. Recently one of my friends told me that he has not received the cheque for such a loan. He said that when he asked the department about this, they stated that no money is available and the disbursement could be effected only after the new Budget is passed. This should not be the case. I cannot understand why any paper should remain in the department concerned for long time except for very reasonable reason. I would like the Hon'ble Minister who is doing very excellent work in his department, to take keen interest and see that this is being dealt with very sympathetically.

There are many constraints, not only in starting but also in the working of the Industries. For instance, unless coal and power and raw materials are made available these industries cannot run. If there are handicaps and constraints in obtaining these materials.... electricity failure)....Sir, I am glad that this power interference has occurred, now. The Hon'ble Minister for Electricity, is no



before me. But I would like to tell him with a compliment that this department gives lot of sleepless nights and lot of injunctions of grave trouble to the industries. "On Monday there was a report in the newspaper that the 450 MW Ennore Thermal station has been generating only 52 MW for the past two days owing to non-availability of coolant water." I asked the Hon'ble Minister what are the reason for this? He said Coolant water is not available.

கூலன் வாட்டர் வரவில்லை என்றால் ஏன் வரவில்லை. அங்கே துறைமுகத்திலே உள்ள மண்ணை அகற்றவேண்டும்.

I state that this is a very elementary thing.

வாட்டர் வரக்கூடிய என்ட்ரன்ஸை ட்ரெஜ் பண்ணி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மெட்ராஸ் போர்ட் உலகத்திலேயே இருக்கக்கூடிய இரண்டு மூன்று போர்ட்களிலே மிகச் சிக்கலான போர்ட். எனவே 6 மாதத்திற்கு ஒருமுறையாவது மண் வார வேண்டும்.

Sand is staggering from Kanyakumari to Haldia, and Calcutta. Every year the port is being dredged. More than a million tonnes of sand staggers on the ports.

அந்த சாண்டைக் க்ளியர் பண்ணி இருக்கவேண்டும். அப்படி க்ளியர் பண்ணாததன் காரணத்தால்தான் மண் அடைத்துக் கொண்டது. அதனால்தான் வாட்டர் வரவில்லை. அதனால் 4 யூனிட் ஒர்க் பண்ணவில்லை. அதனால் உடனே நோட்டீஸ் கொடுக்கிறார்கள்.

The Electricity is in a very grave position. How great an anxiety is being created in the people's minds because of this. There are umpteen number of Industries, Small Scale Industries and Medium Scale Industries in Tamil Nadu. These people, have invested crores and crores of Rupees and unless these people are given electricity continuously I am afraid that the position will be very very grave.

நான் சென்ற வருடம் நிதிநிலை அறிக்கையில் பேசும் போது சொன்னேன். இங்கே இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. பவர் கஷ்டம், தண்ணீர் கஷ்டம், எல்லா கஷ்டங்களையும் நீங்கள் பார்க்கிறீர்கள். இப்படிப்பட்ட எல்லா கஷ்டங்கள் இருக்கின்ற நிலைமையிலும் பிஸினஸ் பீப்பிள்ஸ் மற்றும் இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் உங்களுக்கு 750 கோடியும் 760 கோடி ரூபாய் சேல்ஸ் டாக்ஸ் கொடுக்கிறார்கள். இந்தக் கஷ்டம் எல்லாம் இல்லாமல் நீங்கள் பவரும், வாட்டரும் கொடுத்தால் இந்த ஒரு வருவாயில் மட்டும் சேல்ஸ் டாக்ஸ் மூலம் ஆயிரம் கோடிக்கு மேல் போகும் என்று நான் சொன்னேன். இதை நான் அதிகமாக வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். முதலிலே கோல் வரவில்லை, வரவில்லை என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். இப்போது கோல் வந்து இருக்கிறது.

இப்போது அந்த துறைமுகத்தில் மண் அடைத்துக் கொண்டு இருக்கிறது அதனால் டிஸ்டர்பன்ஸ் என்று சொல்கிறார்கள். தயவு செய்து மெட்ராஸ் போர்ட் டிரஸ்டை அணுகினால் அவர்களிடம் பல சைஸ்களில் டிரட்ஜர்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு டிரட்ஜரை வாங்கி நீங்கள் அந்த துறைமுகத்தை கம்பிளீட்டாக பீரியாடிக்கலாக மண் வந்து அடைப்பதைச் சரி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது பவருக்கு 45 பைசா லெவி போட்டிருக்கிறார்கள். சில இண்டஸ்ட்ரிகளை மூடிவிட்டார்கள். சில இண்டஸ்ட்ரியை மூடும் தருவாயில் இருக்கிறார்கள். இப்போது அதை நீங்கள் ரத்து செய்து வைத்திருக்கிறீர்கள். ஏதோ ஒரு கமிட்டி போட்டோம் அந்த கமிட்டியின் ரிப்போர்ட் கூட வந்து இருக்கிறது. நேற்றுகூட மினிஸ்டர் கிட்டே கேட்டேன். எப்போது அந்த ரிப்போர்ட்டை அசெம்பிளியில் வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டேன். உங்களுடைய ரெக்கமண்டேஷன் என்ன என்று கேட்டேன்.

"we are considering over it and very soon it will come out." I hope that the Government will come with a very good views that they are going to scrap this 45 paise extra charge. I want more sympathy to be shown in giving power so far as industries of Small scale, Medium scale and other Industries are concernned.

Even yesterday some people who came from Hosur told me that for the last four days there no power or water was available in their town.

பவர் இல்லாததால் வாட்டர் பம்ப் செய்ய முடியவில்லை வாட்டர் பம்ப் செய்ய முடியாததால் சில வாட்டர் பேஸ்டு இன்டஸ்ட்ரிக்கு வாட்டர் இல்லை. இது எவ்வளவு பெரிய கஷ்டத்தை, எவ்வளவு ஒரு பெரிய நஷ்டத்தை உருவாக்குகிறது. எவ்வளவு ஒரு வேதனையை உருவாக்குகிறது, எவ்வளவு ஒரு சங்கடத்தை உருவாக்குகிறது. இதை வைத்து நடத்துபவர்களுக்கு தான் இதனுடைய கஷ்டம் தெரியும். மற்றவர்களுக்கு தெரியாது. ஆகவே தயவு செய்து இதை எல்லாம் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்து நடத்த வேண்டும். அதனால் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது டாக்ஸ் ஒன்று கொண்டு வந்து இருக்கிறார்கள். எங்கிருந்து இதை பிடித்துக்கொண்டு வந்தீர்கள்? இந்த நுழைவு வரியை நுழைய விடாமல் இதைத் துரத்துங்கள் என்று நான் சொன்னேன். என்று இதை பட்ஜெட்டிலே பேசினோர்களோ அன்றே நான் இதைச் சொன்னேன் இதனால் உங்களுக்கு வேதனை, கஷ்டம், நஷ்டம் இருக்குமே ஒழிய உண்மையிலே இதனால் உங்களுக்கு பிரிதி அனுகூலம் வராது என்று சொன்னேன். ஏன் நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள். மெர்செண்ட்ஸ் தானே கொடுக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். மெர்செண்ட்ஸ்க்கு வந்து இப்போது நீங்கள்



13-க்கு கொண்டு வந்து இருக்கிறீர்கள். அது அந்த 13 உடன் நிற்காது 1,300-க்கு போகும். தயவு செய்து எடுத்து விடுங்கள் என்று சொன்னேன். அவர்கள் எடுக்கவில்லை. பிறகு எல்லாவற்றையும் பார்த்துவிட்டு 3, 4-க்கு விலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

Our budget is for more than Rs.2000 - crores. But to accommodate Rs.15 crores we have created such hard ship such fearful things in the minds of the business Community is created. You say that you are Peoples Government and you have been elected by majority people. But you are not taking into consideration the realities, the business people have given so many representations.

இப்போது 11½ மணிக்கு கூட முதலமைச்சர் அவர்களை பார்க்க இண்டஸ்ட்ரியலிஸ்ட் காத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். என்னைக் கூட கூப்பிட்டார்கள். நான் இங்கே அசெம்பிளியிலே பேசவேண்டும். அதனால் வரவில்லை என்றும் நீங்கள் போய் பேசுங்கள் என்றும் சொன்னேன். இன்று ஒரு பெரிய மீட்டிங் இருக்கிறது.

Business people have organised a big procesion and meeting at Triplicane. All the leaders of the opposition are taking part.

அதுமட்டும் அல்ல இதனால் பெரிய கஷ்டம் இருக்கிறது

This is a very very old, out-moded tax levied during the East India Company time. You are now levying this. As I understand the Government is now revining this. Old things are gold But not the things which will act as a retrogation to the Government and thereby the Government affect the business community who are the source of supply of money to the Government in various ways and means. You are a collecting sales tax. The Central is collecting Income Tax, Surcharge and many things. You want more and more share in the Income tax and Surcharge. If there is no income how the tax can be paid

(முற்பகல் 12.50)

So, for Heaven's sake, I will appeal to the Finance Minister and the Chief Minister to see that this tax is being given up and I am sure that you would have come to some working arrangements in discussing with the business community and drop this tax. If this tax is not going to be dropped, I am afraid, the bucsinss community is not going to lie low and take it up. They will certainly adopt methods, peaceful method, agrating. They will certainly adopt math ds, peaceful method, by which the Government can realise and adopt.

I can cite one incisident. The Chief Miuister announced hats Go hedral Road should be name by some other name, i. e. T. T. K. Road, I do not know, why when we are having so many problems of important charator, why the Chief Minister go and say that the Cathedral Road to be named as T. T. K. Road. The Christian protested. They did not agree. Again, continued their protest. H

was adamant. When they started having meetings in Churchgate finally, while reviewing the position, the Government came down and say Yes. We can withdraw. I hope that the situation will not arise by which the last concession be given to the Government It is better if the Government realise and take the opinion of the business community who are very unanimous in this matter and see that this tax has been withdrawn after all 15 crores of rupees. Can you not make up 24 thousand crores of rupees in your Budget. Always you prepare the Budget in such a way the revenue side is less and the expenditure is high. The expenditure side is inflated and towards the revised estimate you show more on Revenue and lesser Expenditure. This can be done like that. So I want it should be looked into.

பல தேசங்களிலிருந்து நம்முடைய தேசத்திற்கு ட்ரேட் புரமோஷன் கவுன்சில்ஸ் வருகின்றன, ட்ரேட் புரமோஷன் டீம்ஸ் வருகின்றன. வந்தால் அவர்கள் டெல்லிக்கோ, பம்பாய்க்கோ, கல்கத்தாவிற்கோ தான் போகிறார்கள். மெட்ராசுக்கு அதிகமாக வருவதாக எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஏன் முயற்சி எடுத்துக்கொண்டு இங்கே கொண்டுவரக் கூடாது. பெரிய பெரிய விஷயத்தை எல்லாம் விட்டுவிடுகிறீர்கள். சிறிய விஷயத்தைப் பிடித்து வைத்துக்கொண்டு அதை பிரமாதப் படுத்தி அதிலிருந்து

You want to induct the Central Government.

நமக்குக் காரியம் தான் பெரிதே ஒழிய வீரியம் பெரிதல்ல. போன மாதம் நான் டெல்லியிலே இருந்தபோது ஒரு அரேபியன் டெலிகேஷன் வந்தது. அரேபியா, வெஸ்ட் ஏஷியா போன்ற நாடுகளுக்கு பணத்திற்கு பஞ்சமில்லை. ஆயில் பணம். கோடிக்கணக்கிலே அவர்கள் சாமான்கள் வாங்குகிறார்கள்.
Huge development is going on the e.

நம்முடைய மாநிலத்திலிருந்தும் பக்கத்திலே உள்ள கேரளா கர்நாடகா போன்ற மாநிலங்களிலே இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கே போய் வேலை செய்து கொண்டிருக் கிறார்கள்.

Road construction, Building construction, Quarters construction

அவ்வாறு செய்தால் குறைந்தது 3, 4 ஆயிரம் கோடி கிடைக்கும். அவர்களுக்கு நிறைய சாமான்கள் வேண்டியிருக் கிறது. கன்ஸ்ட்ரக்ஷன் மெட்டீரியல்ஸ் டேட்களிலே பதிக்கக்கூடிய நவீனமான சாமான்கள் எல்லாம் பார்க்கலாம். ஒரு பிரண்ட் மெட்ராஸை சேர்ந்தவர்கள், பம்பாயிலே அவர் அதையெல்லாம் தயாரித்து கோடிக்கணக்கான ரூபாய்க்கு சப்ளை செய்திருக்கிறார். அவர்களை எல்லாம் கொண்டு வந்து எக்ஸ்போர்ட் பண்ணலாம். அவர்கள் வந்தாலும் மெட்ராஸிலே பல அசோஸியேஷன்கள் இருக்கின்றன.



They have formed Trade delegation, and Trade Association. They are new Associations like Indo-American Chamber of Commerce, Indo-Sri Lanka Chamber of Commerce and All India Trde Associatino.

இவைகள் எல்லாம் இருக்கின்றன. இவர்களையெல்லாம் அடிக்கடி அமைச்சரும் இந்த மினிஸ்ட்ரியைச் சேர்ந்தவர்களும்

if they can keep a rapport with the various Chambers of Commerce and various Trade Organisations, I think, they can try to develop more and more what they can do for the industries and throughby not only the industries will be benefited, but the Government also benefitted by various accrual of taxes.

Sir, I am very happy that the Han'ble Minister has announced the formation of a Leather Corporation in Dindigul. It is a very important and highly developed industry in our State.

நிறைய லெதரால் செய்யக்கூடிய பொருள்களை செய்து கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புக்கு வெளிநாடுகளுக்கு சரக்குகளை அனுப்ப முடியும். அரசாங்கம் இந்த மாதிரி கார்ப்ப ரேஷன்களை ஏற்படுத்தி அதன் மூலம் ஊக்கம் கொடுத்தால் இதைவிட பலமடங்கு லெதர் ஏற்றுமதியாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இது போன்று நிறைய கார்ப்பரேஷன்களை ஏற்படுத்த வேண்டும். கவர்ன்மென்ட் ஆப் இண்டியாவில் நிறைய ஏற்படுத்தியிருக்கிறார்கள். கம்மோடிட்டி கார்ப்பரேஷன்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள் சில்க், காயர், போர்ட்ஸ் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஹேண்டிகிராப்ட்ஸ் போன்றவைகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். நம்முடைய ஸ்டேட்டில் டீ அதிகமாக உற்பத்தியாகிறது. அதுபோல சில்க் ஹேண்டிகிராப்ட்ஸ் உற்பத்தி ஆகின்றன. நாம் என்னென்ன சலுகைகளை கைப்பற்றி இந்த வேலைகளில் இருக்கிற பிசினஸ் கம்யூனிட்டிக்கு உதவி செய்யலாம் என்பதை ஆராய்ந்து இன்றைக்கு அவர்கள் ஊக்கம் கொடுப்பார்களானால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Sir, I do not know, how many Members in this Hon'ble House have understood the importance of International Trade Fair that has held in this City about 12 to 13 years ago in which 21 Countries taken part. The present Anna Nagar was the venue of the Trade Fair and the All India Manufacturers Organisation was solley incharge to conduct that trade fair. We could organise this in six hundred acres of land. It is in a huge open place—marshy land. We put the bull dozer and cleared about really 650 acres of land. But in the meantime, we got the Chinese Aggression, Pakisthan Agression, Trade Recession and finally the change of the Government from Congress to D.M.K. 21 Countries took part in that Organisation finally and it was a pleasure to conduct that Trade Fair as Executive Director and Vice-Chairman of that Body and more than

two to three hundred million people have got the opportunity to visit the Trade Fair and many delegations have come from Overseas and visited the Trade Fair.

I saw, one of the German Committee which was headed by a very very important Engineer have written in the Book "so we thought that India is a developing Country by seeing the various machineries exhibited here, which are made not only in this State but in other States it is a proved privilege for us to say that India is a highly developed Country and India should not say that they are developing country"

Sir, this was our position about 12 years ago or 13 years back. I wonder whether this Government can organise a similar Trade Fair of inter-national character now. We have headed very much with in this 15 years. Certainly, we have improved a lot within these 30 years in each and every sphere. We are gaing giganticlly. What we were importing from pin to the Ship, 30 years ago, now we are making them in our own country and exporting all these things to the Foreign Countries. So, if a similar Trade Fair is organised-International Trade Fair with the co-operation of the Government of India not with fighting with the Government of India-always accusing, and always abusing and I am very positive, this will give a great opportunity for this State, for the people of this State to see and also for the Foreigners to come and see how we have progressed in these 25 years since Independence. Mr. Chairman soounded the gong.)

It will lead to various developmental activities and you can secure business for umpteen number of crores of rupees at least for 300 to 400 crores of rupees you can tap from these making use of the opportunity.

The Hon'ble Minister has also brought some improvement in the production of milk.

(பிற்பகல் 1.00)

I would like to suggest that when milk is supplied, first priority should go to the people and then to institutions like hospitals, eduycation institutions, etc. Kindly see that all the buffaloes and cows are not allowed to stray and block the roads and streets, particularly these in my constituency. There are more streets which are full of these buffaloes. You can try to see that these are all organised and kept in an open place, nearby places; they need not go to Madhavaram and other places. Near about open places may be fenced, divided and given to the people, so that roads and streets can be kept clean. I saw in the paper today that one of the Government servants who got milk saw a big rat inside when he went to his house and opened. It came in today's paper (interruptions) In Delhi (interruptions). I would request the Hon'ble Minister to see that they are more careful in packing these things.



பத்திரப் பதிவு பற்றிகூட இன்றைக்கு வந்திருக்கிறது.

There is enormous delay in supplying the copies of the judgements. The Government can certainly organise with the latest instruments that are available and see that very quick supply of these things is arranged. Thank you very much.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானியக் கோரிக்கைகளை, அதாவது, பால் வளம், பத்திரப் பதிவு, ஊரகத் தொழில் ஆகிய மானிய கோரிக்கைகளை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்த நாடுகளில் பொதுவாக பாலும் தேனும் ஓட வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கை. அந்த முறையில், புரட்சித் தலைவர் ஆட்சியில் அவர் அணிந்திருக்கிற தூய வெண்மை நிற ஆடை போல பால்வளம் பெருகி, வெண்மைப் புரட்சி வேகமாக வளர்ந்து வருவது பாராட்டுக்குரியது. அதுவும் மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பால் வளம் பாராட்டும் வகையில் வளர்ந்திருப்பதால் தான் 11–12–1983 அன்று அகில இந்திய பால் வள தொழில் மாநாடு, தமிழகத்தின் தலைநகரில் கூட்டப்பட்டுள்ளது சாட்சியாகும். அந்த மாநாட்டில் நமது மாநில முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு, பால் வள உற்பத்தியில் அக்கறை காட்டியிருப்பது பொதுவாகப் பாராட்டுக்குரியதாகும். அந்தத் தேசிய பால் வள உற்பத்தி வாரியம், தமிழ்நாடு குஜராத்தை மிஞ்சுகின்ற அளவிற்கு இந்தத் துறையில் முன்னேறி இருக்கிறது என்று வாயாரப் புகழ்ந்திருப்பது மாண்புமிகு அமைச்சருக்கு கிடைத்த அருமையான சான்றாகும்.

மேலும், இந்தியாவில் குஜராத்தில் உள்ள, ஆனந்த் பால் பண்ணையை, முன்மாதிரியாக இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால், ஆனந்த் பால் பண்ணையை விட தமிழ்நாடு சிறந்தது என்று சாதாரண மனிதர்கள் அல்ல, நிபுணர்கள் வந்து, [illegible] பார்வையிட்டார்கள். பார்வையிட்டு தமிழ்நாடு குஜராத்தை வென்றுவிட்டது என்று பாராட்டினார்கள் என்பதை நான் மாமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஊரகத் தொழில், பால்வளம், பட்டுப் பூச்சி வளர்த்தல், தேனீ வளர்ப்பு போன்ற தொழில்கள் எப்படி வெற்றிகரமாக நடக்கின்றன என்பதற்கு நான் சார்ந்திருக்கின்ற தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சின்ன சேலம் பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கம் வருமான வரி கட்டுவதே அதற்கு ஆதாரமாகும். தென்னார்க்காடு மாவட்டத்திற்கு பால்வளத் திட்டத்தை விஸ்தரித்து, சிதம்பரம் தாலுகாவிற்கு ஒரு பால் குளிர்சாதன ஆலையைத் தந்ததற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் அலுவலகத்தை தற்போது சென்னையில் இருப்பதை, உடனடியாக, தென்னாற்

காடு மாவட்டத்திற்கு மாற்றவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் கொடுத்த பாலுக்குப் பணம் வாங்க, பாலை எடுத்துக் கொண்டு சென்னைக்கு வர வேண்டியிருக்கிறது. பால் வெள்ளத் திட்டம் வெற்றிகரமாகப் பரவ, ஜீப்களும், பிரசார வான்களும், டாக்டர்களும் ஒதுக்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து ஆனந்த் பால் பண்ணையைக் காட்டிலும், தமிழ்நாட்டிலேயே வெற்றிகரமாக இயங்கி வரும் வருமான வரி கட்டும் பால் உற்பத்தி சொஸைட்டிகளை, பண்ணைகளை, வெற்றிகரமாக நடத்தும் சொஸைட்டிகளைப் பாராட்டுவது போன்ற திட்டங்களை, எங்கள் மாவட்டத்தில் அமல்படுத்த உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாகத் துவங்கப்பட்ட பால் உற்பத்திச் சங்கங்களுக்கு வழங்கப்படும் பால் கேன்களுக்கு பணம் பிடிப்பதை 6 மாதங்களுக்குத் தள்ளிப்போட வேண்டும். அதற்குப் பிறகு கூட 60 சதவீதம், 70 சதவீதத்திற்கு மேல் பணத்தைப் பிடிக்காமல் இருந்தால் சொசைட்டிகள் ஆரோக்கியமாக வளர ஏதுவாகும்.

பால் வளத்தைப் பெருக்குவதற்கு மாடுகளை வாங்க ஒவ்வொரு ஆண்டும் பணத்தை அரசாங்கம் கொடுக்கிறது. ஆனால் தரமான மாடுகள் கிடைப்பதில்லை. எனவே, மாவட்டத்திற்கு ஒரு மாடு வளர்ப்புப் பண்ணையை ஊரகத் தொழில் அமைச்சரகமோ அல்லது கால்நடை இலாகா அமைச்சரகமோ ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் அரசு கடனாகவும், மானியமாகவும் வழங்கும் தொகை வீணாக விரயமாகும்.

பட்டுநூல் சேக்தியாந்தோப்பில் தயாரிக்கப்படுவதற்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. சேலத்தில் பட்டு நூல் வியாபாரத்தில் ஒரு சில முதலாளிகள் ஏகபோகமாக வியாபாரம் செய்து ஏகாதிபத்தியம் நடத்தியதை முறியடித்து, பட்டின் அதிக விலை உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும்படி செய்த மாண்புமிகு அமைச்சரவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பத்திரப் பதிவுத் துறையிலும் பல முன்னேற்றமான திட்டங்களை அமைச்சரவர்கள் புகுத்தி, அரசு வருமானத்தைக் கணிசமாகப் பெருக்கியிருக்கிறார்கள் பலருக்கு வேலை வாய்ப்பும் பதவி உயர்வும் கொடுத்திருக்கிறார்கள்.

மேலும், சப் ரிஜிஸ்தார் அபீஸ்களை புதுச் சத்திரத்திற்கும், ஒரத்தூருக்கும், குறிஞ்சிப்பாடிக்கும் கொடுத்த அமைச்சரவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சிதம்பரத்தில் பாலிடெக்னிக் கல்லூரி, விவசாயக் கல்லூரி என்ஜினியரிங் கல்லூரி, பல்கலைக் கழகங்கள் எல்லாம் இருந்து தொழிற்பேட்டை இல்லை. அந்தக் குறையைப் போக்க சிதம்பரத்தில் தொழிற்பேட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மேலும், சிதம்பரத்திலுள்ள பழைய அம்மாப்பேட்டையில் பால் குளிர்விக்கும் சாதனத்தை அமைப்பதற்கான இடம் இருப்பதால், அங்கே தீவன ஆலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி கல்ராயன் மலைப் பகுதியில் மலைப்பகுதி வாழும் மக்களின் மேம்பாட்டுக்காகக் கடுக்காய் எண்ணைத் தொழிற்சாலை ஒன்றை அரசு நிறுவனமே தொடங்குவதற்கு அமைச்சரவர்கள் முயற்சி செய்ய வேண்டும். தனியார் அதை ஆரம்பிக்க முன்வராதபோது அமைச்சரவர்கள் ஏற்கனவே அறிவித்தபடி கடுக்காய் எண்ணைத் தொழிற்சாலையை ஊரகத் தொழில் இலாக்கா ஏற்படுத்த முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மதுராந்தகம் பால் விற்பனையாளர் சங்கத்தில் 1966 ஆம் ஆண்டு முதல் ஆடிட் செய்யப்படவில்லை. அதனால் உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆதலால், உடனடியாக ஆடிட் செய்வதற்கு ஏற்பாடு செய்வதுடன் அதுவரை தற்காலிக போனஸ் வழங்கத் தக்க உத்தரவிட வேண்டுகிறேன்.

மதுராந்தகம் தாலுக்கா சித்தாமூரில் பத்திரப் பதிவு அலுவலகம் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான சிதம்பரம் தொகுதியில் புத்தூர் நெடுஞ்சேரியிலும், பாளையங்கோட்டையிலும், புவனகிரி தொகுதியில் கிள்ளையிலும் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திருமதி ஏ. எஸ்.பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவையின் தற்காலிகத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் காமதேனு போன்று இருக்கிறது. பல இடங்களில் நல்ல வருமானத்தை அமைச்சரவர்கள் தேடித் தந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், இன்னும் பழைய முறையிலேயே, அந்தப் பந்தாவிலேயே அலுவலகங்கள் சிறுசிறு இடங்களில் இருக்கின்றன. அங்கு பணியாற்றுகின்றவர்கள் உட்கார்ந்து பதியக்கூட இடமில்லாமல் இருக்கிறது. எனவே, இதில் சற்றுக் கவனம் செலுத்தி புதிதாக அரசின் சார்பில் கட்டிடங்களைக் கட்டுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, அரிசனங்களுக்கு 18 சதவீதம் அந்தத் துறைகளிலே வேலை கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால், அந்த 18 சதவீதம் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே, 18 சதவீதம் பேர் அரிசனங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்களா என்று பார்த்து, அந்தக் குறியீட்டை எட்டுகின்ற அளவிற்குச் செய்ய வேண்டுமாய் நான் அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சர்வோதய சங்கத்தின் சார்பாக ஸ்டாப்பு என்ற ஒரு ஸ்தாபனத்தின் மூலமாக அரிசன மக்களுக்கு நிலமில்லாத மக்களுக்குப் பாங்கு மூலமாக தஞ்சாவூர் ஜில்லாவில் கடனாக வாங்கி அந்த நில முதலாளிகளிடம் நிலங்கள் வாங்கிக் கொடுத்துப் பத்திரம் பதிய வேண்டுமென்றால் 5,000 ரூபாய், 6,000 ரூபாய் என்று உள்ள ஒரு ஏக்கருக்கு 600 ரூபாய் 700 ரூபாய் பதிவு கட்டணம் வருகிறது. ஆனால் அவர்களால் பதிவு செய்ய முடியவில்லை. அமைச்சரவர்கள் கூட அவர்களுக்குச் சொன்னார்கள், நிச்சயமாக இலவசமாகச் செய்து கொடுப்பதற்கு கவனம் செலுத்துவதாக. எனவே, அதை அவர்கள் இலவசமாகவே பதிந்து கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று அந்த ஏழை மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10.)

அதற்கு அடுத்து பால் பெருக்குத் திட்டம் உண்மையிலேயே இது வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு அத்தியாவசியமான திட்டமாகும். காமராஜ் அவர்கள் ஆட்சியில் ஒவ்வொரு அரிஜன மக்களுக்கும் பால் மாடு வாங்க ரூ. 500-ம், இதில் 250 ரூபாய் மானியமாகவும், ரூ. 2[illegible] கடனாகவும் கறவை சாமான்கள் வாங்க ரூ. 50-ம், தொழுவக் கூடங்கள் அமைப்பதற்கு ரூ.4.000-மும் கொடுக்கப்பட்டது. [illegible] வாங்க ரூ. 3[illegible]0-ம் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைய தினம் மாட்டினுடைய விலை அதிகமாக இருக்கிறது. ஒரு மாட்டினுடைய விலை ரூ.2,500. ஆகவே அவர்களுக்கு இலவசமாக ரூ. 1,250-ம், கடனாக ரூ. 1,150-ம் கொடுத்தால் அரிஜன மக்கள் முன்னுக்கு வருவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஏழை எளிய மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும், 3-ல் ஒரு பாகம் இந்தத் திட்டத்துக்கு அரசு மானியமாக கொடுத்துக்கொண்டு வருகின்ற சூழ்நிலையில் பால் பெருக்கம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னாலும் உற்பத்தி குறைவாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? கிராமத்தில் பால் மாடு வைத்திருக்கக்கூடிய இடத்திலே, போதுமான தீவனம் இல்லை. மாடுகளுக்குத் தண்ணீர் இல்லை. அதற்கெல்லாம் என்ன வழிவகை செய்யவேண்டுமென்று ஆராய்ந்து அதற்கான வழியைக் காணவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இரண்டாவதாக சில இடங்களில் சொஸைட்டி இருக்குமானால், 20, 30 கிராமங்கள் அப்பாற்பட்டு என்று சொல்கிறார்கள். அப்படி பல்லாயிரம்பட்டி என்ற சங்கம் முடக்கப்பட்டு மக்களுக்கு பால் மாடு வாங்குவதற்கு இதுவரை லோன் கொடுக்காமல் இருப்பதோடு அவர்களுக்கு வேறு பால் சங்கத்தின் மூலம் லோன் வாங்கவும் தடை செய்கிறது. மாடு தனியாக வாங்குவதற்கும் 'நோ அப்ஜெக்ஷன்' தர மறுக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட நிலை எங்கெங்கு இருக்கிறதோ, யார் யார்



தனியாக எந்தெந்த ஊரில் சொசைட்டி வைக்க விரும்புகிறார்களோ, அதற்குத் தடங்கல் இல்லாமல், அந்த சொஸைட்டிகளை வைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்பது சாலச் சிறந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக தமிழகத்தில், கிராமங்களிலுள்ள லட்சக்கணக்கான மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள், இன்றைக்குக் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். பல கிராமங்களில் குடிசைத் தொழில்களை உயர்த்துவதற்குரிய அளவிலே நம்முடைய அமைச்சரவர்கள் பலவிதமான திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். டான்சி தொழில் துறையின் சார்பில் பல சிறிய தொழில்களுக்கு அங்கே கடன்கள் கொடுக்கப்பட்டாலும் கூட, டான்சி மூலமாக உற்பத்தி செய்யும் அந்தப் பொருள்களை, மார்க்கெட்டின் பகுதியிலே பார்த்தால், அது கொஞ்சம் தரமில்லை என்ற நிலைமை இருந்துவருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், காயாத மரங்களிலிருந்து பொருள்களை செய்கிறார்கள். ஆகையால், டான்சியில் செய்வதை வாங்காது, வெளியிலே வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே தரத்தை உயர்த்துவதற்கு அமைச்சரவர்கள் வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் இன்றைக்கு பெண்களுக்கு பாதி நேரத்திற்குத்தான் வேலை. வருஷத்திற்கு 12 மாதங்களில் 6 மாதம் விவசாயம் போக பாக்கியுள்ள காலங்களில் வேலை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு நம்முடைய அரசாங்கம் முன்வந்து, குறிப்பாக நம்முடைய அமைச்சரவர்கள் முன்நின்று சிறிய சிறிய குடிசைத் தொழில்களை ஆரம்பித்துத் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தீப்பெட்டித் தொழில் கிராமங்களிலே நல்லமுறையில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் கிடைப்பதில்லை. அதில் கவனம் செலுத்தி சாமான்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பட்டுத் தொழில் முசுக்கொட்டையிலிருந்து பட்டு தயாரிக்கின்றோம். அந்தப் பட்டுத் தயார் செய்வதில், தர்மபுரி, சேலம் போன்ற இடங்களைப் பார்த்த போது பெருமைப்படக் கூடிய உப தொழிலாக-குடிசைத் தொழிலாக அது நல்லமுறையில் வருமானத்தை ஈட்டக்கூடிய, அளவில் இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே பரவலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 100 முசுக் கட்டை முட்டை வளர்த்தால், ரூ. 1,800 வருமானம் தரக் கூடியதாக இருக்கிறது. அது நசிந்துவிடாமல், இதர ஜில்லாக்

களுக்கு சேவை ரவச்செய்யவேண்டுமென்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நானும் அந்தப் பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட 10 நாட்களுக்கு அந்த பட்டு உற்பத்தியில் இரவு பகல் தூங்காது வேலை செய்யவேண்டியிருக்கிறது. வேலை சற்று சிரமமாக இருக்கிறது என்று கருதுகிறேன். ஆகையினாலே அந்தத் தொழிலுக்கு நாம் சற்று முக்கியத்துவம் கொடுத்து அதை அதிக அளவிலே சிறப்பாகச் செய்யவேண்டும். அதுமட்டுமல்லாமல், பெண்களுக்கு கோழி வளர்த்தல் போன்ற தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும். இந்தக் கோழி வளர்ப்பதிலேகூட மாமிசத்திற்கு சாப்பிடக்கூடிய கோழியாக வளர்க்கக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதோடு மணி பர்ஸ் செய்தல், ஒயர் பின்னுதல், கூடை பின்னுதல், பாய் பின்னுதல், மின்சார சாதனங்கள் செய்தல், ஸ்விட்ச், பிளக், பி, வி, சி, டேப்புகள், மற்றும் பாலிதின் பைகள் போன்ற இந்தத் தொழில்களுக்கு, கிராமப் புறத்திலே உள்ள பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும், இதனால் நமக்கு அன்னியச் செலாவணியும் கிடைக்கும். ஆகவே இதற்கு எல்லாம் நாம் தனியாக திட்டம் போட்டுச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்த ஜாஸ்மின் என்ற மல்லிகைப்பூவிலிருந்து தைலம் இறக்கவேண்டும் என்று பலமுறை இந்த மன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் அது சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அதையும் இந்த டான்சி மூலமாக செய்வதற்கு நம்முடைய ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். இந்தத் தொழில் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில் ஒருவருக்கு கொடுக்கப்பட்டது. இந்தத் தொழிலுக்காக கடனும் கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்டதைப் பார்த்த விவசாயிகள் எல்லாம் அதிகமாக மல்லிகை பூவை விளைவித்தார்கள் பிறகு அந்தத் தொழில் நடைபெறவில்லை. இப்பேர்ப்பட்ட நிலைமையில்லாமல் விவசாயத்திற்குச் சம்பந்தமான இந்த தொழிலைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அதாவது இன்றைக்கு பஸ்ஸிலே சென்றால் நகை களவு. ரயிலிலே சென்றால் நகை களவு. பெண்கள் நகை அணிந்துகொண்டு போகிறார்கள். யாரோ ஒருவர் நகையை திருடுவதற்காக, யாரோ ஒருவர் இதனால் உயிரிழக்கிறார்கள். அதனால் நகையின் மோகத்தைக் குறைக்கவும் மாற்று ஏற்பாடு செய்யக் கூடிய வகையில் என்னுடைய தொகுதியிலே குண்டலம்பட்டியிலே



இந்த கில்ட் நகைகளை நன்றாகச் செய்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து நாம் உற்சாகப்படுத்தவேண்டும். அந்த நகைகள் பவுன் மாதிரி இருக்கிறது, போட்டால் பளபள என்று இருக்கிறது. இப்படிப்பட்ட நகைகளை கல்லூரி மாணவிகள், பணியில் இருக்கக்கூடியவர்கள் போட்டுக்கொண்டு சென்றால் நல்லது. ஆகவே இந்த கில்ட் நகைகள் உற்பத்தி செய்வதை நாம் ஊக்கப்படுத்தும் வகையிலே அதை விருத்தி செய்யவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியில் ஆரஞ்சு, திராட்சை, தக்காளி போன்ற பழங்கள் எல்லாம் நிறைய உற்பத்தி ஆகின்றன. பழஉற்பத்தி செய்யும் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் அளவிலே கொடைரோட்டில் ஒரு பழ பக்குவத் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு டிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்க எண்கள், 5, 6, 10, 48, மற்றும் 56 ஆகியவற்றின் கீழ் வந்துள்ள முத்திரைத்தாள் நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்குத் திட்டங்கள்' ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மீது நான் சில உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு துணைத் தொழிலாகவும் இன்றைக்கு பால்வள நிறுவனம் இருக்கிறது. தமிழகத்தினுடைய சிதம்பப் பொருளாக, கறவை மாடு கொடுப்பது நம்முடைய தமிழகத்தினுடைய பண்பாடாகும். புராணத்திலேகூட முதன் முதலாகத் தொழில் கண்டவன் இந்த கிருஷ்ணன் என்று சொல்வார்கள். அவன்தான் வீட்டுக்கு ஒரு மாடா இரு தலை பட்டி மாடாகக் கொண்டு வந்து அதையெல்லாம் ஓரிடத்திலே சேர்த்து, உற்பத்தி செய்து, வினியோகம் செய்யக்கூடிய தொழிலைக் கொண்டு வந்ததாக நம்முடைய புராணம் சொல்கிறது. அந்தப் பெயரால் இருக்கக் கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றையதினம் தமிழ் நாட்டினுடைய வறட்சியை எதிர்த்து, வளர்ச்சிகள் பொங்க, பட்டுத் தொழிலையும், பால் வளமும், ஒவ்வொரு இல்லத்திலே யும் இருக்கக்கூடிய வகையிலே இந்த நாட்டினுடைய இரட்டை இலைச்சின்னங்களாக அவைகள் இருக்கிறது என்பதை எண்ணும் போது நான் பெருமைப்படுகிறேன். இன்னும் சொல்லப்போனால் மிகக் குறைந்த தண்ணீரை வைத்து, தரமற்ற நிலமாக இருந்தாலும்கூட இந்த பட்டுத் தொழிலை செய்துவிடமுடியும். அது பணப்பயிராக வளர்கிறது, விளைகிறது.

அதுமட்டுமல்லாமல் அந்தப் பட்டுத் தொழில் உற்பத்தி தர்மபுரி மாவட்டத்திலேதான் 1938—லிருந்து மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள்: இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், ஆடு வாங்க கடன் மானியம், மாடு வாங்ககடன் மானியம் வீடு கட்ட கடன் மானியம் பட்டு புழு வளர்க்க கடன், மானியம் பால் வளம் பெருக கடன், மானியம், சிறு தொழில் செய்ய

கடன் மானியம் என்ற வகையிலே பட்டதாரிகளையும், பணமற்ற ஏழைகளையும் காப்பாற்றுகின்ற ஒரு சமுதாயமாக இந்தத் திட்டங்கள் இருக்கின்றன என்பது சொல்லுவதில் நமக்குப் பெருமை ஏற்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் சமீப காலத்திலே பால் வளத்துறையில் குற்றங்கள் மிகமிகக் குறைந்திருக்கிறது. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக கலப்படங்கள் என்று சொல்லக்கூடியவைகள் 157 ஆக இருந்தது. இன்றைய தினம் 42 ஆகக் குறைந்திருக்கிறது. காலதாமதம் என்ற அளவிலே நிர்வாகத்தின் சீரமைப்பாலே 112 இடங்களிலே நடந்ததை இன்றையதினம் 42 ஆகக் குறைந்திருக்கிறது. அவசரம், ஆதிரம் உணர்ச்சி, பக்குவம் இன்மை காரணமாக பால் வழங்கக்கூடிய இடங்களிலே 258 இடங்களிலே தகாறுகள் இருந்தன என்று சொன்னால், அவையெல்லாம் நீங்கி தற்போது 70 ஆகக் குறைந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் கிராம வளர்ச்சியிலே எப்படி முதுகெலும்பு இந்த நாட்டை பாதுகாக்கிறதோ, அதேபோல் இன்றையதினம் தமிழகத்திலே முத்தொழில்களான, பால் வளர்ப்பு, பால் வளப் பெருக்கமும், சிறுதொழிலும் என்று இருந்து இந்த நாட்டை, தமிழகத்தைக் காத்துக் கொண்டிருக்கிறது. சொன்னால் அது மிகையாகாது

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பால் வளத்துறையிலே மிகப் பெரிய பிரமிக்கத்தக்க வகையிலே முன்னேற்றம் இருக்கிறது, தர்மபுரி மாவட்டத்திலே 1982–83 ஆம் ஆண்டைவிட, 1981–82 அம் ஆண்டு பால் கொள்முதல் அளவு 47 சதவிகிதம் உயர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல் மாவட்டத்திலே பால் பதனிடும் தொழிற்சாலையும், பால் பவுடர் தொழிற்சாலையும் நிறுவப்பட்டு அவைகள் தொடங்கும் நிலையிலே உள்ளது. பால் பவுடர் தொழிற்சாலையின் திறன் நாள் ஒன்றுக்கு இன்றைக்கு 10 டன் ஆகவும், இப்பணிக்காக மொத்தச் செலவு சுமார் 2.5 கோடி ரூபாயாகவும் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலே உள்ள பெரிய நகரங்களிலே பால் விநியோகம் செய்யும்பொருட்டு வசதிகளை நிறுவுவதற்கு, 37 5 லட்சம் ரூபாய் இரண்டாம் பால் பெருக்குத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு உள்ளதைக் கண்டு நான் உண்மையிலே வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் இன்றையதினம் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் 350 ஆக உயர்ந்திருக்கிறது. தினசரி சராசரி பால் கொள்முதல் 32,790 லிட்டர்களாக இருக்கிறது இதனால் பலன் அடையும் விவசாயிகள் 27,67 -க்கு மேலாக இருக்கிறார்கள் அதுமட்டுமல்லாமல் செயற்கை முறையில் கருத்தரித்தல் போன்ற இப்படிப்பட்ட வசதிகளை 153-க்கு மேலே உள்ள சங்கங்கள் பெற்றிருக்கின்றன. பல்வேறு வகையிலே இந்தத் திட்டங்கள் தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் அல்லாமல் தமிழகத்திலே மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது.



(பிற்பகல் 1-20)

கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 1981-லே 2589 என்று சொன்னார்கள். இ நையதினம் அது 3064 என்று உயர்ந்து இருக்கிறது. பால் சேகரிப்பு தினசரி 3.13 லட்சம் லிட்டர் என்று இருந்தது. இந்த ஆண்டு அது 4.9 லட்சம் லிட்டராக உயர்ந்து இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலையில் மொத்த விற்பனை 38 கோடியாக சென்ற ஆண்டு இருந்தது, இன்றைய தினம் 51 கோடியாக உயர்ந்து இருக்கிறது. அதேநேரத்திலே பால் உற்பத்தி அதிகம் செய்ய வேண்டும் என்பதற்காக சில சமூக விரோதிகள் ஆக்சிடோசி என்ற மருந்தை ஊசி மூலம் போடுகிறார்கள் என்றும், அதன் காரணமாக பல நோய்கள் தோன்றுகின்றன என்றும், கன்றுகள் அதைத் தாங்கமுடியாமல் செத்துக்கொண்டு இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மைதானா என்பதைப் பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் என்று வருகிறபோது, தீப்பெட்டி குடிசைத் தொழிலாக மாறியிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

திரு. கு.அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பால் வளம், ஊரகத் தொழில் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மேல் நான் ஒரு சில கருத்துக் களைச்சொல்ல விழைகிறேன். உழைப்பவரின் வியர்வை உலர்வதற்கு முன்னால் அவன் ஊதியத்தைத் தந்து விடு என்பது போல், நாட்டின் முதுகெலும் ; கிராமங்கள்—அந்த கிராமங்கள் தோறும் பால்வள நிறுவனங்க உருவாக்கி, தக்க கூட்டுறவு முறையில் சங்கம் அமைத்தும், வேளாண்மை மக்கள் துயர் போக்கிட, ''உழுதுண்டு வாழ்வாரே, வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப நாட்டுக்குப் பொருத்தம் நாமே நடத்தும் கூட்டுறவுத் துறையில் பால் வளத்தில் பசுமைப் புரட்சி செய்துள்ளது. புரட்சித் தலைவரின் பால்போன்ற வெள்ளை உள்ளத்தினைக்கொண்ட புனித அரசு இது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் அமைந்துள்ளது என்பதை நான் தெரிவித்து, ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்

மனிதனுடைய பிறப்பிலே இருந்து இறப்பு வரை அவனுக்கு அன்றாடத் தேவையாக விளங்கி வருவது பால். இந்த விஞ்ஞான யுகத்தில் மனித வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை வைட்டமின் மாத்திரைகளாக உருவாக்கி இருக் கிறார்கள். ஆனால் அத்தனை வைட்டமின்களும் பாலில்தான் அடங்கியுள்ளன என்பதை நாம் அறிவோம். இன்றைக்கு இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில், பால்வளத்தில் இம் மாநிலம் தன்னிறைவு பெற்றுள்ளது. இந்த மாநிலத்திலே ஏறத்தாழ 5000 சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாக

5 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் பயன் அடைந்து வருகிறார்கள். பால் உற்பத்தியாளர்கள் என்பவர்கள் பாமர விவசாயிகள், படித்தறியாதவர்கள் என்கிற நிலையை மாற்றி இன்றைக்கு படித்த பட்டதாரிகள் கூட பல கலப்பின கால் நடைகளை வளர்த்து பாலினை அதிகமாக உற்பத்தி செய்து, தனது வீட்டிற்கும் இந்த நாட்டிற்கும் நல்ல சேவை செய்கிற அளவிற்கு பால்வளம் இன்றையதினம் தமிழகத்திலே பீடுநடை போட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அதைப்போன்று, கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டில் பால்வளத்தில் இங்கே இருக்கிற ஏழை எளிய மக்கள் நன்மையடைகின்ற முறையிலே இடைத்தரகர்களை ஒழித்து, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், உபயோகிப்பவர்களுக்கு நியாய விலையில் பால் கிடைக்கவும் ஆன ஒரு நல்ல சூழ்நிலையை இன்றையதினம் இந்த அரசு உருவாக்கித் தந்திருக்கிறது.

இந்திய தேசிய பால்வள மாநாட்டில், தேசிய பால்வளத்தின் தந்தை என்று சொல்லப்படுகின்ற டாக்டர் குரியன் அவர்கள் அன்றையதினம் பேசும் போது "குஜராத் மாநிலத்தில் 30 ஆண்டுகளில் முன்னேறிய பால்வளம் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 1' ஆண்டுகளில் உன்னிறைய பெற்றிருக்கிறது" என்றும் அடிப்படையில் இந்த ஆட்சி செயலாற்றிருக்கிற பல்வேறு இட்டங்களை, பால்வளத் துறையிலே பணியாற்றியிருக்கிற முறையினைப் பற்றி மிகச்சிறப்பாக அங்கே எடுத்துச் சொன்னார்கள்.

பால்வளத் துறையைப் பொறுத்தமட்டிலும், இங்கே இருக்கிற கால்நடை மருத்துவர்கள் கிராமங்களிலே செல்லும் போது பற்றாக்குறை இருக்கிறது என்றும், இந்த கால்நடை மருத்துவர்கள் கிராமங்களில் சிகிச்சைக்குச் செல்லுகின்றபோது கிராமங்களில் இருக்கிறவர்கள் கால்நடை மருத்துவர்கள் அதிகம் தேவை என்றும் சொல்கிறார்கள். இங்கே பார்க்கின்றபோது ஊராட்சி ஒன்றியத்திலே ஆரம்பத்திலே இன்ஸ்பெக்டர்கள், இருந்த அந்த நிலையை மாற்றி 'லைவ்ஸ்டாக் அங்கே நியமிக்கப்பட்ட காரணத்தினால் ஏறத்தாழ ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கால்நடை மருத்துவரை நியமித்திருக்கிற காரணத்தால் இங்கே 9 மாவட்டங்களில் இருக்கிற பால்வள ஒன்றியங்களில் கால்நடை மருத்துவர்கள் இல்லை என்ற நிலைமையைப் பெற்று, டிப்யூட்டேஷன் என்ற முறையில் அரசு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 5 கால்நடை மருத்துவர்களை உருவாக்கி அதன் மூலம் கிராமங்களில் இருக்கிறவர்கள் தங்களுடைய கால்நடைகளுக்கு நல்ல மருத்துவ வசதிகளை பெறுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



வைக்கோல் இல்லை என்றாலும், வறட்சியின் கோரப்பிடியில் இருக்கிக் கொண்டிருக்கிற தமிழகத்தில் கால்நடைகளுக்கு ஊட்டச் சத்து நிறைந்த மாட்டுத் தீவனத்தை, அது ஒரு கிலோ ஒரு ரூபாய் 32 காசு விலையாக இருந்தபோதிலும், ஒரு ரூபாய்க்கு கொடுக்கின்ற இந்த அரசு மேலும் நல்ல பல திட்டங்களை ஏழை எளிய விவசாயிகளுக்காக ஆற்றிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று சிறுதொழில்களைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு மட்டும் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களைப் பார்த்தால், ஏறத்தாழ 46 சதவீதம் உயர்ந்து, இன்றைக்கு வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

கோபி நாரில் சிட்கோவிற்காக இந்த ஆண்டு அங்கே பல்வேறு தொழில்களை உருவாக்க வேண்டும் என்பதற்காக அறநிலையத் துறையில் நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். இந்த நடப்பாண்டில் பல்வேறு தொழில்களை உருவாக்குவதற்கு சிட்கோ என்ற நிறுவனத்தற்கு அருகாமையில் இருக்கிற நிலத்தை ஆர்ஜிதம் செய்து, பெரியார் மாவட்டம் கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டதற்குப் பின்னால் அந்த மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கி இருப்பதால் தொழிற் துறையில்பின்தங்கிய மாவட்டமாக அதை அறிவித்து அங்கே பல தொழில்களை உருவாக்க அரசு முன்வர வேண்டும். அங்கே வேளாண்மையை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயிகள் தங்களுடைய நலனை பெருக்கிக் கொள்ளுகின்ற அளவுக்கு அதை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை அவைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் சித்தோடு பகுதியில் சிட்கோவிற்கு ஏறத்தாழ 5000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அந்த நிலத்திலே மாடல் தொழில்கள் பல்வேறு துறைகளில் உருவாக்குகின்ற வகையில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாக தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் பட்டுவளர்ப்புத் துறையில் ஏழை எளிய விவசாயிகள், மலை வாழ் மக்கள் மேம்பாடு அடைவதற்காக சத்தியமங்கலம் தொகுதியில் 25 இலட்சம் ரூபாய் செலவிட்டு, அதிலே நல்ல பல திட்டங்களை உருவாக்க வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். பட்டு வளர்ப்பிலே மட்டும், வேளாண்மையை நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்கு, ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 10,000 ரூபாய் தருகின்ற நிலைமையை இந்த ஆட்சி உருவாக்கித் தந்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நல்லாட்சியில், மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில், சிறு தொழில் துறையிலும், பாசனத் துறையிலும் மற்ற மற்ற

துறைகளிலும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, இந்த ஆட்சி வெற்றிநடை போடுகிறது என்பதைத் தெரிவித்து, இந்த அரசுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முன்பெல்லாம் சட்டமன்றத்திலே ஒரு நாளைக்கு தொழில் மானியம் நடைபெறும்; இரண்டு அமைச்சர்கள் பேசுவார்கள். அந்த முறையை மாற்றி, கிராமத் தொழில்கள் என்ற அடிப்படையில் சகோதரர் மாண்புமிகு கிருஷ்ணசாமி அவர்கள் இன்றையதினம் இந்த விவாதத்தைத் தொடங்க இருக்கிறார்கள் இன்னும் கொஞ்ச நாள் கழித்து பெரிய தொழில்கள் பற்றிய விவாதம் வரும்.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வளர்ந்துள்ளதா அல்லது குறைவாக உள்ளதா என்பதை ஆளும் கட்சியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகமோ சொல்ல வேண்டியதில்லை. வளர்ந்து வருகிறது என்று ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் சொல்வார்கள். வளர்ச்சி இல்லை என்று நாங்கள் சொல்வோம்..

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்: (திரு. சி. கோபால்) அவையின் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இருந்தாலும் நடுநிலைமையாளர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழில் வளர்ச்சியை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்க்கையில்—பஞ்சாப் குஜராத் போன்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழகத்திலே தொழில் வளர்ச்சி ஸ்தம்பித்து இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் வேகம் அவ்வளவாக இல்லை என்ற நிலைமையிலேதான் இன்றையதினம் இருப்பதாக சொல்கிறார்கள்: நாங்கள் சொன்னால்கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் பொருளாதார நிபுணர்களும் மற்றவர்களும் சொல்கிறார்கள்.



இன்றையதினம் சிறு தொழில்களைப் பற்றி மட்டும் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே மைய அரசினுடைய ஒப்புதல் இல்லை, அவர்கள் எதிர்க்கிறார்கள், அவர்களுடைய உதவியில்லை, அதனால் வளர்ச்சியில்லாத நிலை என்றெல்லாம் சொல்ல முடியாது, காரணம், சிறு தொழில்களைப் பொறுத்த வரையில் அதன் வளர்ச்சிப் பணிகளை நாமே செய்யலாம். ரூ. 1 கோடி வரையில் லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்து இறக்குமதி போன்றவைகளை செய்ய மாநில அரசுக்கே உரிமை இருக்கிறது.

தேவையான பல்வேறு மூலப்பொருள்களை இறக்குமதி செய்து, சிறு தொழில்களை பெருக்குவதற்கு, மாநில அரசுக்கு உரிமையிருக்கிறது. இருந்த போதிலும், இந்த சிறு தொழில்கள் இன்னும் வேகமாக முன்னேறவில்லை என்கிற கருத்தை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

மேலை நாடுகள் சிலவற்றிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சென்ற போது, உலகத்தினுடைய பொருளாதாரத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஜப்பான் நாட்டைப் போய் பார்த்தோம். அங்கே பெரும் தொழில்களை விட, லட்சக் கணக்கில் சிறு தொழில்கள் தான் ஜப்பான் நாட்டிலே பெருகியிருக்கின்றன. எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸாக இருந்தாலும் சரி, வாட்ச் இண்டஸ்ரியாக இருந்தாலும் சரி. டெலிவிஷன் இண்டஸ்ரியாக இருந்தாலும் சரி, அமெரிக்காவையே ஸதம்பிக்க வைக்கிற நிலையில் ஜப்பான் நாடு முன்னேறி வருகிறது என்றால் அங்கே இவைகளாக எல்லாம் கூட சிறு தொழில்கள் வளர்ந்துவிட்ட காரணத்தால் தான், அமெரிக்கர்களாலேயே கூட அவர்களோடு போட்டி போட முடியவில்லை.

அந்த நிலைமையை தமிழகத்தில் ஏற்படுத்த முடியாதா? தமிழகத்தில் நன்கு படித்தவர்கள் இல்லையா? நிபுணர்கள் இல்லையா? விஞ்ஞானிகள் இல்லையா? அல்லது என்ஜினியர்கள் இல்லையா? இன்றைக்கு தமிழகத்திலே தொழில் வளர்ச்சி சரியாக இல்லை என்றால், அதற்கு சிறு தொழில்களிலே கொஞ்சம் வேகம் நமக்கு போதாது என்பதுதான் காரணம் என்று சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

தமிழகத்தில் சிறு தொழில்கள் வளர்ந்துக் கொண்டு வருகிறது என்பதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய குறிப்பிலே ஒரு விளக்கம் கொடுத்துள்ளார்கள். "1978-ஆம் ஆண்டு மார்ச் இறுதியில், 18,789 ஆக இருந்த சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1982 ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் 44,874 ஆக உயர்ந்துள்ளது." என்று கூறியுள்ளார்கள். அப்படி தொழில்கள்-சிறு தொழில்கள்

அதிகரித்திருப்பது உண்மையாக இருக்கும் என்றால், வேலை வாய்ப்பு அலுவலகங்களில், வேலைவாய்ப்புக் கேட்டு பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது உயர்ந்துக் கொண்டே போகிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், இந்த சிறு தொழில்களுக்கும் அந்த வேலை வாய்ப்புகளுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தான் காட்டுகிறது.

படித்தவர்களுக்கு, பட்டதாரிகளுக்கு இதில் வேலையில்லை. அவர்கள் வேலையில்லாமல் இன்னும் திண்டாடிக் காண்டுதான் இருக்கிறார்கள். ஆகவேதான் அந்த எண்ணிக்கை குறையவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே கொடுத்திருக்கக்கூடிய விவர அறிக்கையிலே பாரா 8-லே போட்டிருக்கிறார்கள்:—

'In 1982-83, 43 Adi Dravidar entrepreneurs have been able to commission their units with the assistance given by the Directorate of Industries and Commerce''.

தமிழ்நாட்டிலே 4 கோடி மக்கள் இருக்கிறார்கள். அதிலே 1¼ கோடி மக்கள் அரிசன மக்களாக இருக்கிறார்கள். அவர்களிலே லட்சக் கணக்கானவர்கள் படித்து விட்டு வேலையில்லாமல் அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். எம்.ஏ., எம்.எஸ்.ஸி., பி.காம்., பி.எஸ்.ஸி, படித்தவர்கள் எல்லாம் வேலை கிடைக்காமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டிலே உள்ள அரிசன மக்களில் 43 பேர்களை பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு சிறு தொழில்கள் தொடங்க உதவி செய்திருக்கிறார்கள். இதை எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை. கடலிலே கரைத்த பெருங்காயத்தைப் பற்றி ஏதோ சொல்வார்களே, அதைப் போலத்தான் இது இருக்கிறது. உண்மையிலே அரிசன மக்களுக்கும், படித்த பட்டதாரி இளைஞர்களுக்கும், சுய வேலை வாய்ப்பு பெருகும் வகையில் ஊக்கமும், உதவியும் கொடுக்கப்படவில்லை என்கிற குற்றச் சாட்டை என்னால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆண்டு ஒன்றுக்கு 100 கோடியை இதற்காக தமிழ்நாட்டிலே நீங்கள் ஒதுக்குங்கள். அதை சிறு தொழில்கள் துவங்குவதற்காக முழுவதுமாக செலவு செய்யுங்கள். அப்படிச் செய்தால், குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்க வேண்டிய அவசிய நிலைமை கூட இருக்காது அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் 5 ரூ, 7 ரூ. சம்பளம் பெறுகிற நிலைமையை மாற்றி, 50 ரூ. சம்பளம் பெறக்கூடிய அளவுக்கு சிறு தொழில்களை ஏற்படுத்த முயற்சிகள் செய்தால், நல்ல சத்துள்ள உணவை வீட்டிலேயே அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அளிப்பார்கள் என்று சொன்னார்கள்.



அதையேதான் நானும் சொல்கிறேன். 100 கோடி ரூபாயையும் நீங்கள் சிறு தொழில்களில் முதலீடு செய்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்ய நீங்கள் தவறி விட்டீர்கள்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 1981-82 இல் ரூ. 52 கோடி மதிப்புள்ள 5,699 கடன்கள் வழங்கப்பட்டன. இவற்றில் ரூ. 41.4 கோடி 5,646 சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப் பட்டன, என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இண்டஸ்ட்ரீஸ் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன், டி.ஐ.ஐ.சி. நிறுவனம் எப்படி லோன் வழங்குகிறது என்றெல்லாம் எல்லோருக்கும் தெரியும். சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது என்பது சாதாரணமான காரியம் அல்ல.

வட்டிக்குப் பணம் கொடுக்கலாம். ஆனால் அதிலே கூட இன்றைக்குக் கஷ்டம் இருக்கின்றது. அப்படி இருக்கும்போது தொழிலை ஆரம்பிப்பது என்றால் அது ஹைலி ரிஸ்கி. தொழிலிலே போட்டால் பலன் வராது. கையிலே வைத்திருக்கின்ற 50 ஆயிரம் ரூபாயைக் கொண்டு போய் தொழில் ஆரம்பிக்கிறேன் என்று போனால் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் அது ஃபெய்லியராகத்தான் முடியும். ஆகவே கையிலே பணத்தை வைத்திருப்பவர்கள் தொழிலை ஆரம்பிக்க முன்வர மாட்டேன் என்கிறார்கள். ஆனால் நம்முடைய அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகிய அனைவரும் அவர்களிடத்திலே ரிக்வொஸ்ட் பண்ணவேண்டும். உதவி செய்கிறோம், வாருங்கள், உங்களுக்கு நஷ்டம் வராமல் லாபம் வரக்கூடிய வகையிலே உதவி செய்கிறோம் என்றெல்லாம் சொல்லவேண்டும் அப்படி எல்லாம் சொல்லாமல் 41 கோடி ரூபாய் சாங்ஷன் செய்துவிட்டால் மட்டும் போதுமா? 20 பர்சன்ட் மஷினரி வாங்குகின்ற இடத்திலேயும் அல்லது பில்டிங் எஸ்டிமேட்டிலேயும் கொஞ்சம் பூஸ்ட் அப் பண்ணிவிட்டு லோனை வாங்கிவிடுவார்கள். இப்போது என்னவென்றால் டி.ஐ.ஐ.சியிலே பணத்தைக் கட்ட வேண்டும், அப்படி பணத்தைக் கட்டிவிட்டால் அவர்கள் அங்கே கொடுக்கிறார்களாம். கொஞ்சம் டெம்பரரி கேப்பிட்டல் அந்த ஆன்ட்ரிப்ரீனருக்கு வேண்டும். அவ்வளவுதான் தவிர வேறு இல்லை. இருந்தாலும் அவர்கள் 10-க்கு 100 டி.ஐ.ஐ.சி-க்கு பணம் கொடுக்க ஆரம்பித்தலே அது பாராட்டப்படவேண்டிய ஒன்றுதான். 10 இலட்சம் ரூபாய்க்கு யூனிட் ஆரம்பிக்கிறார்கள். 11 இலட்சம் ரூபாய் கடன் வாங்கி அந்த ஒரு லட்சம் ரூபாயை கையில் வைத்துக் கொண்டு அதை ஒர்க்கிங் கேபிடல்லாக வைத்துக் கொண்டு அந்த யூனிட்டை ஆரம்பித்தால் அது நன்றாக நடக்கும். 15 பேர், 20 பேருக்கு வேலை கிடைக்கும். அது பாராட்டப்படவேண்டியதுதான். அது தப்பில்லை. ஆகவே இன்றையதினம் 44 கோடி ரூபாய் சாங்ஷன் பண்ணிவிட்டால் மட்டும் போதுமா? தமிழ்நாட்டிலே எத்தனைத் தொழில்கள் சிக் ஆகிக் கிடக்கின்றன, என்ன நடந்தது அந்த யூனிட்டுகளில்?

Most of the units in Tamil Nadu are sick because of non-availability of working capital loan. நீங்கள் லோன் கொடுத்து விடுகிறீர்கள். பில்டிங் கட்டிவிடுகிறார்கள். மெஷினரி வாங்குகிறார்கள். ஒர்க்கிங் கேப்பிடலுக்கு எங்கே போகவேண்டும். நேஷனலைஸ்ட் பேங்க மேனேஜரிடம் போய் தொங்கவேண்டி இருக்கிறது. அங்கே போனால் அவர்கள் வேண்டியவர்களா, வேண்டாதவர்களா, என்ன ஜாதி, குலம் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு இஷ்டம் இருந்தால் கொடுப்பார்கள் இல்லாவிட்டால் இல்லை. மேலும் இன்றையதினம் பவர் இல்லை. அதோடு மட்டுமல்ல. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிறு தொழில்கள் எல்லாம் ஏன் சிக்காகிறது? உற்பத்தி பண்ணக்கூடிய பொருள் இருக்கின்றதே அதற்கு பில் கொடுத்தால் Bills are not passed in time. 90 சதவிகிதம் அல்லது 60 சதவிகிதம் கூட பேமென்ட் வருவதில்லை. அசோக் லேலண்ட் போன்ற நிறுவனங்களில் இரயில்வே போன்ற மத்திய அரசின் நிறுவனங்களிலே இப்படிப்பட்ட பெரிய பெரிய மத்திய அரசின் நிறுவனங்களிலே எல்லாம் சாதாரண சப்ளை கொடுத்தால் கூட 120 நாள் ஆனால் கூட பணம் வர மாட்டேன் என்கிறது. ஒர்கிங் கேப்பிடலில் இருக்கக்கூடிய க்ரெடிட் லிமிட் ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சம், இவ்வாறு ஒரு லட்சம் ரூபாய்க்கு பர்சேஸ் பண்ணியதற்குப் பிறகு அந்த பில்ஸ் ரியலைஸ் ஆனதற்குப்பிறகு நேஷனலைஸ்ட் பேங்க்ஸ் என்ன செய்கிறார்கள். ஒர்க்கிங் கேபிடல் ஃபர்தராகக் கொடுக்க முடியாது. முதலில் நீங்கள் வாங்கியதற்கு பில்லை செட்டில் பண்ணுங்கள். அதற்குப் பிறகுதான் உங்களுக்கு ஃபர்தராக இஷ்யூ பண்ணுவோம் என்று சொல்வதால் இன்றையதினம் தமிழ்நாட்டில் தொழில்கள் பாதித்திருக்கின்றன. இன்றைக்கு பவர் இல்லை. அது ஒரு பக்கம். போதுமான டிமான்ட் இல்லை, இது இரண்டாம் நிலை. ஒர்க்கிங் கேபிடல் இல்லை. இது மூன்றாவது நிலைமை. ஆகவே தொழில்கள் எல்லாம் நசிந்துகொண்டிருக்கின்றன. இவற்றை பற்றி எல்லாம் தனியாக ஆராய்ச்சி செய்யவேண்டும். ஒர்க்கிங் கேப்பிடல் உள்ளபடியே கிடைக்கின்றதா? அப்படிக் கிடைத்தாலும் அந்த தொழில் நன்றாக நடக்கின்றதா என்பதை எல்லாம் நீங்கள் பார்க்கவேண்டும்.

அடுத்து, சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அது லிம்பிங் ஆக இருக்கின்றது. இந்த நிலையில் என்ட்ரி டாக்ஸ் 2 பெர்சன்ட் போட்டிருக்கிறீர்கள், எனவே ஏற்கனவே வளராமல் இருக்கின்ற அந்த சிறு தொழில் மேலும் பாதிக்கப்படப் போகின்றது. பெரிய தொழில்கள் எப்படியாவது தப்பித்துக்கொள்ளும். ஆனால் சின்னச் சின்னத் தொழில்கள் தான் பாதிக்கப்படும், சின்னச் சின்னத் தொழிலை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு இரயில்வேயிலே பெரம்பூரிலே இருக்கக்கூடிய கோச் ஃபேக்டரிக்குக் கொண்டு போய் சப்ளை பண்ணவேண்டும் என்று சொன்னால் அவர்கள் 2% டாக்ஸ் கட்டிவிட்டுத்தான் உள்ளே கொண்டுவரமுடியும். இதுதான் சிறு தொழில்களுக்கு நீங்கள் செய்யக்கூடிய உதவியா? ஆக்கமா? என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, சிட்கோவைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி வாரியம் என்பது சில காலங்களுக்கு முன்பு நன்றாக நடைபெற்றது. அதற்கு பொற்காலம் என்ற ஒன்று இருந்தது. ஆனால், இன்றையதினம் அந்த வாரியத்தினிடத்திலே பணம் இல்லாமல் சம்பளம் கொடுக்க முடியவில்லை, செட்களையும் கட்ட முடியவில்லை. அவர்கள் வெளி மார்க்கெட்டிலே போய் பணம் பணம் என்று பணத்துக்கு அலைந்துகொண்டிருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கின்றது. அதோடு மட்டுமல்ல. சென்ற ஆண்டு அங்கே இருந்த சேர்மனுக்கும் அங்கே இருக்கக்கூடிய மேனேஜிங் டைரக்டருக்கும் தகராறு. நான் பெரிய ஆளா, நீ பெரிய ஆளா என்று தகராறு பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்படித் தகராறு பண்ணியதன் காரணத்தால் Administration has come to a standstill for more than six months. ஆனால் அப்போது அமைச்சர்கள் என்ன செய்தீர்கள். முதலமைச்சர் என்ன செய்தார்? ஒரு சேர்மனுக்கும் ஒரு மேனேஜிங் டைரக்டருக்கும் தகராறு என்றால் உடனே வேறு ஒருவரைப் போட்டிருக்க வேண்டும். இப்போது மாற்றி இருக்கிறார்களே, இதுபோல அப்போதே மாற்றி இருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது 8 மாதம் ஆகிவிட்டது. ஆகவே இந்த நிறுவனத்திலே அட்மினிஸ்ட்ரேஷன் லேப்ஸ்க்கு மூலகாரணம் அமைச்சரவைதான். அவர்கள்தான் அதற்குப் பொறுப்பானவர்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அடுத்து, திரு. கங்கப்பா ராஜினாமா செய்துவிட்டார். என்ன காரணத்தால் ராஜினாமா செய்துவிட்டார்? அவர் குற்றச்சாட்டு சொல்கிறார். அரசாங்கத்தின் பெயரிலே குற்றச்சாட்டு சொல்கிறார். நீங்கள் மற்றவர்களின் பெயரிலே குற்றச்சாட்டு சொல்கிறார். நீங்கள் தயவுசெய்து சட்டமன்றத்திலே சொல்ல வேண்டும்; திரு. கங்கப்பா செய்தது தப்பா. அரசாங்கம் செய்தது சரியா என்பதைச் சொல்லவேண்டும். 'அரசாங்கம் என்னை தொழில் செய்ய உரிமை கொடுக்க விடவில்லை. எனவே என்னால் தொழிலை நடத்துவதற்கு உதவி செய்ய முடியவில்லை. இப்படி எல்லாம் இடையூறு செய்தார்கள் என்று ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி.....

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் தனக்கு இடையூறாக இருந்தது என்று கங்கப்பா எந்த அறிக்கையிலும் சொன்னதாகத் தெரியவில்லை. அப்படிச் சொன்னதாக எந்த பத்திரிகையிலும்

(முற்பகல் 1-40)

வரவில்லை. என்னுடைய மனசாட்சி பிரகாரம் என்னால் நடக்க முடியவில்லை என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர் மற்றவர்களைப்பற்றி சொல்லவில்லை. என்னால் என்னுடைய மனசாட்சிப்படி நடக்கமுடியவில்லை நான் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பல காரியங்களுக்காகப் போகிறார்கள். சில பேர் அதிகமாக சம்பளம் பெற்றுக்கொண்டு வேறு இடங்களில் வேலைக்குப் போகிறார்கள் சில பேர் இங்கிருந்து ரிசைன் செய்துவிட்டு பம்பாய் சென்று பிசினஸ் செய்வதற்காகப் போகிறார்கள், அங்கே தொழில் ஆரம்பித்து இருக்கிறார்கள்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

who is to explain to the Legislature: Come on and tell us We are in darkness.

எங்களுக்கு ஒன்று தான் சொல்லவேண்டும் என்று இல்லை. இதற்கு முன்பே சொல்லியிருக்கலாம். அவர் எத்தனையோ அறிக்கைகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அவைகள் பத்திரிகையில் வந்திருக்கிறது. மனசாட்சி பிரகாரம் நடக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் மனசாட்சி என்றால் என்ன? அது என்ன சமாசாரம் என்று அப்போதே சொல்லியிருக்கலாம். ஆகையால் நிர்வாகத்தில் சிக்கல் ஏற்பட்டு 6 மாதம் திறக்காமல் இருந்தால் இதை உடனே திறந்து வைத்து இருக்க வேண்டும். இதிலே அவர்கள் தப்பா, நீங்கள் தப்பா என்ற பிரச்சனைக்கு நான் போகவிரும்பவில்லை. ஆகையால் காலம் கடந்த காரணமாக அந்த ஸ்தாபனம் சரியாக செயல்பட முடியாமல் போய்விட்டது.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு முறை சொல்கிறேன் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரிக்கு அவருக்காக ஆயிரம் மன சாட்சி இருக்கலாம் அல்லது ஆயிரம் அபிலாசைகள் இருக்க லாம், ஆயிரம் எண்ணங்கள் இருக்கலாம். அரசினுடைய திட் டங்களை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டியது ஐ.ஏ.எஸ் அதிகாரியினுடைய கடமை ஆகும். அதிலே அவர்கள் மன சாட்சி பிரகாரம் என்பது நீதி நிலையிலிருந்து விலகி அல்லது அவருடைய பதவியை துஷ் பிரயோகம் செய்து வேறு ஏதாவது வகையில் அரசாங்கம் அவர்களை கஷ்டப்படுத்தி இருக்குமானால் நிர்ப்பந்தித்து இருக்குமானால் அது தான் தவறே தவிர அவருடைய இஷ்டம் பிரகாரம நடக்கலாம் என்றால் அவருடைய இஷ்டம் தவறாக கூட இருக்கலாம் அந்தத் தவறான இஷ்டத்திற்கு தவறான நடைமுறைகளு அரசு மறுப்பாகக் கூட இருக்கலாம்.





திரு வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வரகத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இவைகளை விளக்கி கிருஷ்ண மூர்த்தி சொல்வது தப்பு என்று சொல்லி இருந்தால் ரொம்ப சந்தோஷம். ஏன் என்றால் அவரால் முடியாதது ஒன்றும் இல்லை.

He is more capable than anybody else in this House.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்யவேண்டாம். நானே ஏற்றுக் கொள்கிறேன் அவர் என்னைவிட அனுபவம் உள்ளவர் அறிவாளி என்று நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த வேலை என்னிடத்தில் வேண்டாம். ஆனால் நீங்கள் சொல்வதற்கு பதில் சொல்வது நான் சொன்னாலும் ஒன்றுதான் அவர் சொன்னாலும் ஒன்றுதான் இதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

One thing is a fact. In Small Industries Development Corporation due to the wrangling between the Chairman and the M.D. and the staff, the whole administrations has come to a standstill for more than 6 months. இது எல்லாம் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்பதற்காக சொல்கிறேனே தவிர வேறு அல்ல மேற்கொண்டு இது மாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். அடுத்து டான்சி பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். டான்சியில் பல யூனிட்டுகள் இருக்கின்றன அவற்றில் சிலது லாபத்தில் இருக் கின்றது. பல நஷ்டத்தில் இருக்கின்றன. It has got a lot of dead wood பல டெட்வுட்ஸ் நொச்சிபோனதுகள் இருக்கின்றன. இதில் எதை எதை குளோஸ் செய்யவேண்டுமோ அதை குளோஸ் செய்துவிட்டு நல்ல லாபகரமாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

We are pumping in crores and crores of money into Tansi but still they are getting loss only. தனிப்பட்டவர்கள் பாங்கில் கடன் வாங்கி அவன் தொழில் நடத்தி லாபம் பெறுகிறான். ஏன் டான்சி அப்படி லாபம் சம்பாதிக்கக் கூடாது. ஏன் டான்சி லாபம் சம்பாதிக்க அனுமதிக்கக்கூடாது. இதை லாபத்தில் நடத்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1983 மார்ச் 24

இன்றையதினம் தொழில்களை வளர்ப்பதற்கு 100 கோடி செலவழிக்க வேண்டும் என்று நான் சொன்னேன். இன்றைய தினம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரிசனங்களுக்கு 42 கோடிக்கு கொடுத்திருக்கிறீர்கள். அதுதான் இந்த ஆட்சிக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்தது போல் இன்றையதினம் இருக்கிறது. பல கிராமங்களிலே தொழில்களை ஆரம்பிக்கவேண்டும். பல கிராமங்களிலே அரிசன மக்கள் படித்துப்பட்டம் பெற்று இருக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு லேத், வெல்டிங், டிரான்ஸ்பார்மர் இவைகளில் அவர்களுக்கு இனாமாக பயிற்சி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய அந்த அத்தாரட்டிஸ் இருக்கின்றன, அந்த பயிற்சி பெற்ற அரிசனங்களுக்கு எல்லாம் இனாமாகக்கொடுக்க வேண்டும். அதேபோல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரை விலையில் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பால் வழங்கும் திட்டத்தைப்பற்றி ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அது இன்னும் நல்ல முறையில் நடைபெற வேண்டும். லோன் கொடுத்து விடுகிறார்கள். மாடு கிடைக்கவில்லை. மில்க் சொஸைட்டியில் லோன் சேங்ஷன் ஆகிவிடுகிறது அந்த மாடு எங்கே இருக்கிறது என்றால் திருவொற்றியூர் கொட்டகையிலே திரும்ப திரும்ப வந்துவிடுகிறது. மாடு வருகிறது, போகிறது. அந்த மாடுகளை உற்பத்தி செய்வதற்கான இந்த கால்நடையிலே அல்லது மில்க் சப்ளை நடத்தக்கூடிய நிர்வாகங்களில் எல்லாம் தமிழ் நாட்டிலே அதிகப்படியான பசுங்கன்றுகளை, பப்பலோக்களை உண்டாக்குவதற்காக நீங்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தொழில் சரியாக நடைபெறவேண்டும். மிகப் பெரிய ரிஸ்கை எடுத்துக்கொண்டு என்டர்ப்ரனர்ஸ் ஆரம்பிக்கக்கூடிய தொழில் வர்கள் நம்பி தொழிலில் இறங்குவதற்கான சூழ்நிலையை உண்டாக்குங்கள். மத்திய அரசோடு போராடி போராடி பேசினால் மட்டும் போதாது. நீங்கள் அடிக்கடி டெல்லிக்குச் செல்கிற சமயங்களிலே டெவலப்மெண்ட் கமிஷனரையோ அல்லது மற்ற அதிகாரிகளையோ மந்திரிகளோ சென்று நேரடியாகச் சென்று இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுங்கள். இவைகளையெல்லாம் எனக்குக் கொடுங்கள். எங்களுடைய தமிழ்நாட்டை தொழில் மயமாக்கப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது இல்லாத காரணத்தினாலே வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



1983 மார்ச் 24]

7. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளுக்கு ஏற்ப பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:—

| | |
|---|---|
| 25-3-1983 (வெள்ளி) | மாற்றம் இல்லை |
| 26—3—1983 (சனி) | மாற்றம் இல்லை |
| 28—3—1983 (ஞாயிறு) | விடுமுறை |
| 28—3—1983 (திங்கள்) | மாற்றம் இல்லை |
| 29—3—1983 (செவ்வாய்) | பேரவையின் 77-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு ரா. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம் |
| 30—3—1983 (புதன்) | எண். 15—காவல் துறை |
| 31—3—1983 (வியாழன்) | எண்; 16— தீயணைப்புப் பணிகள் |
| 1—4—1983 (வெள்ளி) | தூய வெள்ளிக்கிழமை விடுமுறை |
| 2—4—1983 (சனி) | பேரவைக்கூட்டம் இல்லை |
| 3—4—1983 (ஞாயிறு) | விடுமுறை |
| 4—4—1983 (திங்கள்) | மாற்றம் இல்லை |
| 5—4—1983 (செவ்வாய்) | மாற்றம் இல்லை |
| 6—4—1983 (புதன்) | மாற்றம் இல்லை |
| 7—4—1983 (வியாழன்) | மாற்றம் இல்லை |
| 8—4—1983 (வெள்ளி) | மாற்றம் இல்லை |
| 9—4—1983 (சனி) | காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை 25-1-1983 அன்று பேரவை முன் வைக்கப்பட்ட மாண்புமிகு நீதிபதி திரு கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் |

| | |
|---|---|
| | அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம். |
| | பகல் 11-00 மணி முதல் எண். 32-பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். |
| 10–4–1983 (ஞாயிறு) | விடுமுறை |
| 11–4–1983 (திங்கள்) | மாற்றம் இல்லை |
| 12–4–1983 (செவ்வாய்) | மாற்றம் இல்லை |
| 13–4–1983 (புதன்) | எண்: 31—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன்<br>எண்.44—எழுதுபொருள் அச்சுத்துறை |
| 14–4–1983 (வியாழன்) | தமிழ்வருடப் பிறப்பு, தெலுங்கு வருடப்பிறப்பு<br>பேரவைக் கூட்டம் இல்லை |
| 15–4–1983 (வெள்ளி) | (1) எண்: 7—மாநிலச் சட்டமன்றம்<br>எண் 8—தேர்தல்கள்<br>விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெறாத மற்ற மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி வாக்கெடுப்புக்கு விடப்படும்.<br>(2) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு—அறிமுகம் செய்தல் |
| 16–4–1983 (சனி) | நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்<br>மற்ற அரசினர் சட்டமுன்வடிவுகள் |

தேவை இருப்பின், பேரவை 18-4-1983, திங்களன்று கூடும்



## 6. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு தொடர்ச்சி

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த கண்ணியமிக்க மன்றத்தில் முத்திரைத்தாள்கள், பத்திரப்பதிவு, பால்வழங்கு திட்டங்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய ஐந்து மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 15 பேர்கள் தங்களது மேலான கருத்துக்களையெல்லாம் இங்கே பயன்மிக்க வகையிலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் பதில் விளக்கம், தகவல் என்னால் கொடுக்க இயலவில்லையென்றாலும் கூட அவர்கள் எடுத்துச் சொன்ன அந்த விவரங்களையும் அவர்கள் சொன்ன நிலவரங்களையும் மனதிலே வைத்துக்கொண்டு இந்த அமைச்சரகம் தொடர் நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் முதற்கண் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இங்கே கருத்துரைகளை நல்கிய 15 மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாகப் பேசுகின்ற நேரத்திலே ஊரகத் தொழில்கள் இன்றைய தினம் ஒரு சீராக வளர்ந்திருக்கிறது என்ற வகையிலே சொன்ன நல்ல கருத்துக்களுக்காகவும் அதே நேரத்திலே ஊரகத் தொழில்கள் இன்னும் சற்று வேகமாகவும் இன்னும் சற்று முறையாகவும் இன்னும் சற்று பயன் தரத்தக்க வகையிலும் நடக்க வேண்டுமென்றும் பல ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையெல்லாம் நல்கியிருக்கிறார்கள்,

(பிற்பகல் 1-50)

அவைகளை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, நான் தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டியதைப் போல விரைந்து தொடர் நடவடிக்கை எடுத்து தமிழகத்தைப் பொறுத்த வரையில் பிற மாநிலங்களைப் போலவே இதுவும் ஒரு நல்ல முன்மாதிரியான மாநிலமாக ஆவதற்கு தமிழக அரசு எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும் என்பதை மிக பணிவன்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஆற்றியிருக்கிற பணிகளை, செய்திருக்கிற காரியங்களை இங்கே பல கோணங்களிலே, பல வகைகளிலே நண்பர்கள் ஆய்ந்து கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய இனிய சகோதரர் மாண்புமிகு குலசேகர பாண்டியன் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள்: இதே சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு இந்த மானியக்கோரிக்கை வந்த நேரத்தில் ஒரு அறி

விப்பை தோல் தொழில் சம்பந்தமாக தெரிவித்திருந்தோம் கடந்த ஓராண்டு காலத்தில் இந்த சபையில் அறிவிப்பை மாண்புமிகு முதல மச்சருடைய அனுமதியோடு வெளியிட்ட பிறகு, இன்றையதினம் மற்றவர்கள் எல்லாம் பாராட்டுகிற வகையில் அந்த முறையில் காரியங்கள் நடைபெற்று இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய கடமை யென்று கருதுகிறேன். மாண்புமிகு நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவா ஹாஜா செரிப் அவர்கள் பேசுகின்ற பொழுது இந்த தோல் தொழிலினுடைய சிறப்பைப் பற்றியும், அதுவும் தமிழகத்திலிருந்து வெளி [illegible] களுக்கு இன்றையதினம் சென்று கொண்டிருக்கிற [illegible] பற்றியெல்லாம் நன்கு வெகுபட சொன்னார்கள். தொன்மை மிக்கத் தொழில் என்பதாலே அந்தத் [illegible] பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்த [illegible] சிறுபான்மை மக்கள், ஆதிதிராவிட சகோதரர்கள் பெருவாரி யாக ஈடுபட்டிருக்கிற காரணத்தால், அதுவும் பின்தங்கிய பகுதிகளில் இந்த தொழில் இருக்கிற காரணத்தால் என்னென்ன வகையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்த வகையிலே தமிழக அரசு இன்றையதினம் எடுத்திருக்கிறது. குறிப்பாக தோல் வளர்ச்சிக் கழகத்தினுடைய வாயிலாக எதிர் [illegible] தமிழகத்தில் ஒரு பெரிய திருப்பமே உருவாக [illegible] முன்பாக அந்த தோல் வளர்ச்சிக் [illegible] அமைப்பதற்கு முன்பாக, [illegible] தொழில்களுக்கு பாதுகாப்பு [illegible] நடப்பு ஆண்டில் வடஆற்காடு [illegible] பேரணாம்பேட்டை, மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் ஆகிய மூன்று இடங்களில் தோல் தொழில் சேவை நிலையங்கள் துவக்கப்பட இருக்கிறது என்பதை இந்த நோத்தில் பணிவன் பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இராணிப்பேட்டை தொழில் கூட்டுறவு மைய சேவை நிலையம் 99 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், பேரணாம்பேட்டை தொழிற் கூட்டுறவு சேவை மையத்தைப் பொறுத்த வரையில் 94 லட்சம் ரூபாயும் திண்டுக் கல் தொழில் கூட்டுறவு சேவை மையத்தைப் பொறுத்த வரையில் 97 லட்சத்து 85 ஆயிரம் ரூபாயும் அதற்காக முத லீடாக போட்டு அந்த 'காமன் பெசிலிட்டிஸ் சென்டர்' பொது சேவை நிறுவனம் என்ற வகையில் சிறுதொழில் தோல் வணி கர்களுக்கு. உற்பத்தியாளர்களுக்கு பயன்படுகிற வகயில் அந்த காரியங்கள் எல்லாம் இந்த ஆண்டு விரைவாக நடைபெற்றிருக் கின்றன.

அது மட்டுமல்ல, மாண்புமிகு அருமைச் சகோதரர் நம்முடைய பம்மல நல்லதம்பி அவர்கள் பேசும்பொழுது, பல்லாவரத்தில் இருக்கிற 'எஃப்ளுயன்ட் டிஸ்போசல்' பற்றிக் குறிப்பிட்டு, [illegible] பெரிய பிரச்னையாக இருக்கிறது. மக்களைக் [illegible]



கொண்டிருக்கிற பிரச்னையாக இருக்கிறது. 100 வருஷங்களாக குரோம்பேட்டை போன்ற பகுதிகளில் அது தீராத தால்லையாக இருக்கிறது. அதற்கு என்ன தீர்வு கண்டிருக்கிறீர்கள் என்ற வினாவை எழுப்பினார்கள்.

தைப் போலவே, மாண்புமிகு குலசேகரபாண்டியன் அவர்கள் பேசும்பொழுது, வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம் பட்டு போன்ற பகுதிகளில் இந்தச் சமுதாய அச்சுறுத்தல் இருக்கிறது என்ற விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். இதை மனதிலே வைத்துக்கொண்டு, சென்ற ஒரு ஆண்டிற்கு முன்பு இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு எல்லா தரப்புப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி அது கடந்த ஓராண் டிலே தன்னுடைய பணிகளை முடித்து, அரசுக்கு, 'எஃப்ளுயன்ட் டிஸ்போசல்' எப்படிச் செய்வது யார், யார் பணம் போடுவது எப்படி, எப்படி அந்தச் சிறு தொழில் முனைவர்களுக்கு உதவுவது என்ற வகையில் ஒரு அறிக்கையை அரசுக்கு அளித் திருக்கிறது. அரசு அந்த அறிக்கையின் மீது ஆழ்ந்து பரி சீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவாகத் தொடர் நடவடிக்கை எடுத்து, இந்த 'எஃப்ளுயன்ட் டிஸ்போசல்' என்ற தீமையைப் போக்குவதற்கு, இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் நம்முடைய திண்டுக்கல் தொழில் மையத்தைப் பற்றி நீண்ட நாட்களாக இதே மன்றத்தில் நானும் நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் பலமுறை இங்கே பேசியிருக்கிறோம் வெளியிலேயும் எங்களுடைய கருத்துக்களை நல்கியிருக்கிறோம் மைய அரசினுடைய சம்பந்தப்பட்ட தொழில் துறை அமைச்சர் திரு. திவாரியிடத்திலேயும் நேரிலும் சொல்லியிருக்கிறோம், கடிதங்கள் வாயிலாகவும் அந்தத் தோல் இணையம் விரை வாக திண்டுக்கல்லிலே வந்தால் ஒரு சமூகப் பொருளாதாரப் புரட்சிக்கு ஒரு நல்ல தூண்டுகோலாக இருக்கும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எழுதிய விவரத்தை இதே சட்ட மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். கடந்த 2 ஆண்டுகளாக ஆயப்பட்டு, தமிழக அரசினுடைய சார்பாக, அதே நேரத்திலே மத்திய அரசினுடைய சார்பாக இணைந்து ஒரு டாஸ்க் போர்சை உருவாக்கினார்கள். அது தன்னுடைய பணியை முடித்து, இன்றையதினம் அந்த டாஸ்க் போர்ச்சினுடைய பரிந்துரையை மத்திய அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது, விரை வாக, அதற்கு அங்கீகாரத்தை அளிப்பார்கள் என்று கருதுகிறேன் அப்படி வருகின்ற நேரத்தில், நிச்சயமாக இத்தாலி நாடு எப்படி இன்றையதினம் தோல் பொருளில் ஒரு நல்ல அழகிய முன் மாதிரியாக இருக்கிறதோ, அப்படித் திண்டுக்கல்லிலும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே ஒரு இத்தாலி என்று சொல்

கின்ற அளவுக்கு தோல் பொருளைச் செய்கின்ற ஒரு நல்ல
ஆரோக்கியமான சூழ்நிலையிருக்கிறது. அதற்கு மத்திய அரசு
விரைவாக ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையை உரு
வாக்கும் என்று நான் மனதாரக் கருதுகின்றேன்.

அடுத்து, கடந்த ஆண்டில் இதே கவனியாமிக்க சட்ட
மன்றத்தில் மருந்து தொழிலுக்குத் தமிழக அரசு மாண்புமிகு
புரட்சித் தலைவருடைய அரசு எடுத்து வருகின்ற பல நட
வடிக்கை விவரங்களை எல்லாம் செய்வோம். குறிப்பாக,
நம்முடைய தமிழ்நாட்டில் ஆற்றலிருந்தும் திறமையிருந்தும்
நல்ல திறமையிருந்தும் தொழில் நுணுக்கம் இருந்தும் வாய்ப்
பில்லாத காரணத்தாலே மருந்துத் தொழில் போன்ற தொழில்கள்
வளரவில்லையென்ற விவரத்தை பல நேரங்களிலே நாம்
எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, எனக்குக்
கிடைத்த ஒரு தகவல், இன்றைக்கு இந்தியாவிலே மருந்து
எவ்வளவு உற்பத்தியாகிறது என்றால், 1977-78-லே ரூ. 900
கோடி உற்பத்தியாயிற்று. 1978-79-வது ஆண்டு
ரூ. 1,050 கோடி உற்பத்தியாயிற்று. 1979-80-வது ஆண்டு
ரூ. 1,150 கோடி உற்பத்தியாயிற்று. 1980-81 வது ஆண்டு
ரூ. 1,200 கோடி உற்பத்தியாயிற்று. ஆறாவது ஐந்தாண்டுத்
திட்டம் முடிகின்ற நேரத்தில் இன்றைக்கு மத்திய அரசு
என்னக் குறியீட்டை வைத்திருக்கிறார்கள் என்றால் ரூ. 2,450
கோடி அளவுக்கு மருந்தை இந்தியாவில் ஒட்டுமொத்தமாக
உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறியீட்டை மத்திய அரசு
நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால், இந்த மருந்தை எங்
கெங்கு செய்கிறார்கள், எந்த, எந்த மாநிலம் செய்து கொண்
டிருக்கிறது! அந்த வாய்ப்பை எந்த மாநிலம் பெற்றிருக்கிறது
என்ற விவரத்தைப் பார்க்கின்ற பொழுது, மராட்டியம் முதல்
எண்ணிக்கையிலே இருக்கிறது. அடுத்து. குஜராத் இருக்கிறது
மூன்றாவது மேற்கு வங்காளம் இருக்கிறது. நான்காவது
ஆந்திரப் பிரதேசம் இருக்கிறது. ஐந்தாவதாக, தமிழ்நாடு ஒட்டு
மொத்தமாக இன்றைக்கு உற்பத்திச் செய்வதில் 10 சதவீதம்
மட்டுமே நாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

அதேமாதிரி மராட்டியம் 45 சதவீதத்தை இன்றைக்கு
விற்றுக்கொண்டு அவர்கள் அந்தத் தொழிலிலே இன்றைக்கு
முன்னணியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம்
அந்தத் தொழில் வளர வேண்டுமென்ற தமிழ்நாட்டிலே
யோசனையோடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆக்க பூர்வமான
முதல்வர் அவர்கள் ஒரு நல்ல நடவடிக்கையை எங்களுடைய
தமிழ்நாட்டிலே எடுத்தார்கள்
இருக்கின்ற இந்த மருந்துத் தொழில்



Pharmacutical Manufacturers Service செய்பவர்களுக்காக
Industrial Coper tive Society. என்ற ஒரு தொழில் கூட்டு
றவுச் சங்கத்தை, எப்படித் தீப்பெட்டித் தொழில்
செய்பவர்களுக்காக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறதோ
எப்படி சவ்வரிசித் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற
நண்பர்களுக்காக தொழில் கூட்டுறவு சங்கம் இருக்
கிறதோ, பயர் உற்பத்தியாளர்களுக்கு எப்படிக் கூட்டுறவுச்
சங்கம் இருக்கிறதோ, அதைப்போல, இந்த மருந்து செய்கின்ற
சிறிய நண்பர்களுக்கு, ஆற்றல் மிக்கவர்களுக்கு, படித்த
வாலிபர்களுக்காக ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கத்தை ஒரு
ஆண்டுக்கு முன்போ அமைத்துத் தந்து, அரசின் வயிலாக
என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அனைத்து உதவி
களையும் செய்து, அதில் இன்றைக்கு 120 பேர்கள் உறுப்பினர்
களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தியாவிலேயே எங்குமே
இல்லாத அளவிற்கு ஒரு தொழில் பேட்டையையும் உருவாக்க
வேண்டுமென்று இதேமாமன்றத்தில் சென்ற மானியக் கோரிக்கை
யின் பொழுது நாங்கள் எங்களுடைய திட்டத்தை அன்றைக்கு
அறிவித்தோம் அது இன்றைக்குக் கனிந்து தொடர் நடவடிக்கை
எடுக்கப்பட்டு, போரூருக்கு அருகில் ஆலத்தூர் என்ற ஒரு கிராமம்
இருக்கிறது அருமைச் சகோதரர் மாண் மிகு உறுப்பினர்
சொக்கலிங்கம் அவர்களைத் தூதுவராகக் கொண்டிருக்கிறது
அந்தப் போரூருக்கு அருகில் ஆலத்தூர் என்ற கிராமம் இருக்
கிறது. அதில் 200 ஏக்கராக்களை அரசு சென்ற ஆண்டு
கையகப்படுத்தி, அதில் 150 ஏக்கராக்களை சிட்கோவிற்காக
வும், 50 ஏக்கராக்களை சிட்காட்டுக்காகவும், 150 ஏக்கராக்களை
சிறு தொழில் செய்பவர்களுக்காகவும், 50 ஏக்கராக்களை
பெரிய தொழில்களைச் செய்கின்ற நண்பர்களுக்காகவும் வசதி
செய்து தருவதற்காகவும் கையகப்படுத்தி வருகின்ற 4-ஆம்
தேதி இன்றையதினம் அந்தத் தொழிற்பேட்டைக்கு அடிக்கல்
நாட்டவிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சி
யோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அதன் காரணமாகத் தொடர் விளைவுகள்
என்ன உருவாகும் என்று பார்க்க வேண்டும் இன்றையதினம்
மராட்டியம், குஜராத், மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம்
தமிழ்நாடு என்று இருக்கின்ற அந்த வரிசையில் இதுபோன்ற
முயற்சியில் வேகமாக நாம் ஈடுபட்டு, Provi d ll h condi)
tions r oqu l என்று அடிக்கடி விவரம் தெரிந்தவர்கள் சொல்லு
வார்களே அப்படி எல்லா நிலைமைகளும் சாதகமாக இருந்
தால் அது நிச்சயமாக இரண்டு ஆண்டுகளில் மூன்றாவது இடத்
திற்கு வரவிருக்கிறது.

அது மட்டுமல்ல, அந்தத் தொழிற்பேட்டையினுடைய வாயிலாக, மருந்து உற்பத்தியாளர்களுக்காக உருவாக்கியிருக்கிற அந்தத் தொழிற்பேட்டையினுடைய வாயிலாக ஏறத்தாழ 12 கோடி ரூபாய் அளவிற்கு அங்கே இன்றையதினம் மூலதனம் இட்டிருக்கிறார்கள். 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அந்தப் பகுதியிலே உருவாவதற்கு அது சாதகமான சூழலை உருவாக்கியிருக்கிறது.

ஆகவே, இந்த முயற்சியின் காரணமாக இந்திய அளவிலேயே ஒரு முதல் முயற்சி, exclusively for Pharmaceutical manufacture industry என்ற வகையில் பேருபகாரமான என்ற வகையில் மருந்து செய்பவர்களுக்காக மட்டுமே இன்று நம்முடைய தமிழ் நாட்டில் அறிக்கப்பட்ட ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது, தோலுக்காக மாதவரத்திலே தனித் தொழிற்பேட்டை இருக்கிறது; அப்படி ஒவ்வொரு தொழிலுக்கும் இருப்பதைப்போல இந்த மருந்துக்கு என்று ஏற்பட்டதிலே முதன் முதலாக ஆலத்தூர் என்ற கிராமத்திலே தான், மகாபலிபுரம் போகின்ற வழியிலேதான், வந்திருக்கும் தொடங்க இருக்கிறது. சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே சொல்லப்பட்டு, அது நிறைவேற இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு ஆண்டுக்குள்ளாக அது தன்னுடைய உற்பத்தித் திறன்களை எல்லாம் உற்பத்தி பணிகளை எல்லாம் தொடங்கியிருக்கிறது. அதற்காகத் தொழிற்சாலை கட்டுவது போன்ற அந்தப் பணிகளை சிட்கோ நிறுவனம் ஏற்றிருக்கிறது என்பதனையும் இந்த நேரத்தில் மிக்க பணிவன்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மானியப் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு ஹாஜா ஷெரீப் அவர்கள் சில விவரங்களைச் சொன்னார்கள். நேரம் இருக்கின்ற நேரத்தில் அவர்களுக்குத் தக்க விவரங்களை அவர்களுடைய கவனத்திற்கும், பரிசீலனைக்கும் வைக்கிறேன். குறிப்பாக இன்றையதினம் மத்திய அரசு 33 தாலுக்காக்களுக்கும் மாநில அரசு 24 தாலுக்காக்களுக்கும் மானியங்களை அளித்து வருகிறது. ஆனால் மாண்புமிகு ரட்சித் தலைவரவர்கள் அண்மையில் அறிவித்தார்கள். மூன்று தொழில்களுக்கு Automobile ancileiation, pharmaceutical industry and electronics என்ற வகையில் இந்த மூன்று தொழில்களில் தமிழ்நாட்டில் எங்கு தொடங்கினாலும் அவர்களுக்கு 10 சதவீதம் மூலதன மானியம் உண்டு என்று அறிவித்தார்கள்.

அந்த மூலதன மானியத் தொகையைப் பெற்று இந்த ஆலத்தூரில் தொடங்குவதற்கு அந்த முயற்சி பயன்பட்டிருக்கிறது. அதற்கு உறுதுணையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கண்ணியமிக்க அவைக்குச் சொல்லுகிறேன்.



கடந்த ஆண்டு இதே மன்றத்தில் சொன்னேன். சேலம் மாவட்டப் பொருளாதாரத்தில் மரவள்ளிக்கிழங்கு என்பது ஒரு மிக அடிப்படையான ஒரு பொருளாகும். அதை நம்பி ஏறத்தாழ 'டேப்பியாகோ' ஒரு லட்சம் விவசாயிகள் இன்றைக்கு தர்மபுரி மாவட்டம், கோவையிலே ஒரு பகுதி அதைப் போலவே தென்னாற்காடு மாவட்ட பண்ணுருட்டியிலே நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி கிராமத்திலே கூட இருக்கிறது. அவரே அந்த விவசாயி தான், ஆக இவர்களைப் போன்றவர்கள் ஒரு லட்சம் பேர்கள் இந்த மரவள்ளிக் கிழங்கை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். 30 ஆண்டுகளாக அவர்களுக்குத் தெரியும். ஒரு ஏக்கரிலே வருகின்ற ஒரு மூட்டை மரவள்ளிக்கிழங்கு சென்ற ஆண்டு என்ன விற்றது, இந்த ஆண்டு ஒரு மூட்டைக்கு என்ன விற்கிறது? சென்ற ஆண்டு ஒரு மூட்டை சவ்வரிசி என்ன விற்றது, இந்த ஆண்டு சந்தையிலே, சேலம் மார்க்கெட்டிலே என்ன விற்றது, இந்த ஆண்டு சந்தையிலே, சேலம் மார்க்கெட்டிலே என்ன அளவிற்கு விற்றுக்கொண்டிருக்கிறது. நங்கள் தொழிற் கூட்டுறவு சங்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு ஏறத்தாழ மூட்டை 20 ரூபாய்க்கு விற்றது. இன்றைய தினம் 70 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. ரூபாய் 150க்கு மட்டுமே ஒரு மூட்டை சவ்வரிசி விற்றுக்கொண்டிருந்தது. இன்றைய தினம் ரூ. 450/-க்கு விற்றிருக்கிறது. இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் வந்த காரணத்தினால் இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட்டு....

Bargaining powers of the farmers

அந்த விவசாயியினுடைய பேரம் பேசுகின்ற அந்த ஆற்றல் இருக்கிறதே, தன்னுடைய உழைப்பை உறிஞ்சாமல் இடையிலே இருப்பவன் உறிஞ்சாமல் இருக்கின்ற ஏற்பாட்டை Industrial Co-operative Service Society for Sago and starch ஆகியவை தந்திருக்கிறதோடே அந்த சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது உருவாகியிருக்கிறது என்பது மட்டுமல்ல, நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள், ஒரு ஆண்டில் 2 கோடி ரூபாய்க்கு அது வரவு செலவு செய்து இருக்கிறது விலையை உறுதி செய்து 25 ரூபாயிலிருந்து அந்த விவசாயிக்கு ரூ. 75 வரை அளிக்கிறது. ஒரு 400, 500, நடுத்தரமாக 1,00 000, 50,000 என்ற அளவிற்கு சவ்வரிசி தொழிற்சாலை வைக்கிறார்களே அவர்களுக்கு உத்தரவாதம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலும் நசியவில்லை. இன்னும் சொல்லப் போனால், நவீனப்படுத்தும் தொழில்—Outmoded method பழைய முறையை இன்றைக்குப் பின்பற்றுகிறபோது கூட அந்த தரப்பினர்களையும் உறுதிப்படுத்தி இன்றைக்கு அமோகமாக வருகிறது. இன்னும் சொன்னால் சேலத்திலே பயிர்களை மாற்றிவிட்டு மரவள்ளிக் கிழங்கை பயிர் செய்கின்ற அளவிற்கு நம்பிக்கை இருக்கிறது Awareness அதாவது எழுச்சி சேலம் வட்டாரத்தில் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு உருவாக்கியது மட்டுமல்ல. அது மேலும் நீடிக்கவேண்டும். இந்த நன்மை அந்த விவசாயிகளுக்கு நிரந்தரமாக இருக்கவேண்டுமென்பதற்காக நிதி

நிலை அறிக்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விற்பனை வரிச்சலுகையை அந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து, சேலம் மாவட்டத்தில் புதிதாகத் துவங்கியிருக்கும் சேலம் மாவட்ட சவ்வரிசி மரவள்ளிக்கிழங்கு மாவு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கத்திலிருந்து கொள்முதல் செய்யப்படும் மரவள்ளிக்கிழங்கு மாவு, சவ்வரிசிக்கு ஒரு நிலைக்குமேல் ஏற்படும் அளவுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டு; மீண்டும் உறுதி செய்திருக்கிறோம். ஏற்கெனவே வசதியை செய்து கொடுத்தோம். இன்றைக்கு விற்பனை வரியிலிருந்து சலுகை கொடுத்தோம். அந்தப் பயனைச் சிதறாமல் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில், இன்றைய தினம் அந்த சேலம் மாவட்டத்தில் இருக்கிற மரவள்ளிக் கிழங்கை நம்பிக்கொண்டிருக்கிற ஒரு லட்சம் விவசாயிகளுக்கு ஏற்னவே சென்ற வருடம் இந்த அரசு பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறது மட்டுமல்ல. அது நம்பிக்கையளிக்கின்ற தொழிலாகவும் மாறியிருக்கிறது. அதோடு எதிர்காலத்தில் அந்த மாவை வைத்துக்கொண்டு 'டெபியாகோ' குளுகோஸ் போன்ற பேபி புட் என்று சொல்லுகிறார்களே, இந்த உணவுத் தொழிற்சாலைகள் சிறிய சிறிய அளவில் வருவதற்கான நல்ல சாத்தியக் கூறுகள் தோன்றியிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். Ancilliation இன்றைய தினம் தமிழ்நாடு வளர்ச்சியில் இருவிதக் கருத்துக்களைச் சொல்கிறார்கள். தமிழ்நாடு கீழே வந்திருக்கிறது. 3-வது 4-வது, 10-வது என்று அவரவர்கள் இன்றைக்கு அவரவர்களுக்குக் கிடைத்த ஆதாரத்தை வைத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 1967 வருடத்திற்குப் பிறகு அங்கே பெரிய தொழில்கள் அவ்வளவாக வரவில்லை என்பது மட்டுமல்ல, மத்திய அரசாங்கத்தினுடைய மூலதனத்தோடு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் கணிசமான அளவிற்குக் குறைந்து இருக்கிறது. ஆனாலும்கூட அங்கே இருக்கின்ற பெரிய தொழிலை வைத்துக்கொண்டு சிறிய தொழிலை, துணைத் தொழில்களை உற்சாகப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முனைப்பாக இருந்து, சென்ற ஆண்டு மிகுந்த நம்பிக்கை கொள்கின்ற அளவிற்குப் பல ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்திருக்கிறது.

(பிற்பகல் 2-10)

இன்றைக்கு உதகமண்டலத்திலே மத்திய அரசினுடைய நிறுவனம் இருக்கிறது. ஹிந்துஸ்தான் போட்டோ பில்ம் என்று நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்திற்கு தேவைப்பட்ட துணைப் பொருள்களை எல்லாம், இதுவரையிலே வெளியே வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஒரு ஆண்டுக்கு முன்பு அங்கே மோட்டிவேசன் கேம்பைன் ஒன்றை உருவாக்கி, அங்கே இருக்கின்ற நிர்வாகிகளைச் சந்தித்து, மாவட்ட தொழில்



மையத்தினுடைய வாயிலாக ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்து என்னைப் போன்றவர்கள் எல்லாம் சென்று 2 நாள் தங்கி அங்கேயே செய்வதற்கு, ஊட்டியிலே இருப்பவர்கள், கோயம்பத்தூரிலே, சேலத்திலே இருக்கின்ற தொழில் நுட்பம் படித்த நல்ல வாலிபர்கள் எல்லாம் இருக்கிறார்கள், நல்ல, இன்ஜினியரிங் காலேஜ் எல்லாம் இருக்கிறது. அவர்களை வைத்துக்கொண்டு நீங்கள் இந்தத் துணைப் பொருள்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களும் தங்களுடைய தேவைகளைக் கொடுப்பதற்கு இணங்கி இருக்கிறார்கள். இதற்கு ஒரு 10 தொழில் முனைவர்கள் முன்வந்து அதைச் செய்வதற்கு உதகமண்டலத்திலே இன்னும் 1 மாத காலத்திலே அந்தத் தொழில்பேட்டையைக் கட்டிவிட்டு அதிலே ஹிந்துஸ்தான் போட்டோ பில்ம் தொழிற்சாலைக்குத் தேவையான துணைப் பொருள்களை உற்பத்திச் செய்து கொடுக்கக் கூடிய அந்த நல்ல காரியம் நடைபெற இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சிட்கோ என்ன செய்தது, என்ன செய்தது என்று அருமைச் சகோதரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒரு கோணத்திலே பார்த்தார்கள். நான் ஒரு கோணத்திலேயிருந்து பார்க்கிறேன். இன்றைக்கு இவைகள் எல்லாம் சிட்கோவினுடைய வாயிலாகத்தான் நடைபெற்று இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ 30 ஆண்டுகள், சுதந்திரம் பெற்றதற்குப் பிறகுகூட நீலகிரி மாவட்டத்திலே தொழிற்பேட்டை கிடையாது. எத்தனையோ அரசுகள் வந்திருக்கின்றன, போயிருக்கின்றன. ஆனால் அந்த மலைவாழ் மக்களுக்கு, தொழில் உணர்ச்சி, தொழில் நாகரீகத்தை, தொழில் கலாச்சாரத்தை உருவாக்கவேண்டும் என்று யாரும் அதைத் தொழிற்பேட்டையாக மாற்ற, விரிவாக்க வரவில்லை. ஆனால் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் வந்தபிறகுதான், அதுவும் 2 ஆண்டுகளுக்குள்ளாகத்தான் தொழிற்பேட்டைகள் கட்டிமுடிக்கப்பட்டு வருகின்ற மே அல்லது ஜூன் திங்களில் அந்தத் தொழிற்பேட்டை துவங்க இருக்கிறது. 15 மாவட்டங்களிலே தொழிற்பேட்டையிருக்கிறது. 16 வது மாவட்டமாக மலைகளின் ராணி என்று சொல்லக்கூடிய அந்த இடத்திலே தொழிற்பேட்டை இல்லை என்ற அந்தக் குறையை சிட்கோ மூலமாக தருகின்ற பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசுக்கு உண்டு.

அதுமட்டுமல்லாமல், பெல் நிறுவனம் இருக்கிறது. இது இன்றைக்கு ஒரு முயற்சி எடுத்திருக்கிறது. பின் தங்கிய மாவட்டமாக உள்ள, புதுக்கோட்டை, தர்மபுரி போன்ற பகுதிகளில் எல்லாம் தொழில் முனைவோர்களுக்கு துணைப் பொருள்களைச் செய்ய ஊக்குவிக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணிய நேரத்திலே நானே புதுக்கோட்டைக்குச் சென்று அங்கே ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்து, பெல் நிறுவனத்திலே

உள்ள பொருள்களை எல்லாம் அங்கே எக்ஸிபிட் செய்து, இன்றைக்கு புதுக்கோட்டை, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் பின்தங்கிய பகுதிகளில் இருந்து துணைப் பொருட்களைச் செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அதைப்போலவே சேலத்திலே ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் என்றிருக்கிறது. அதற்கு தேவைப்பட்ட துணைப் பொருட்களைச் செய்கின்ற முயற்சியில் தமிழக அரசு ஒரு ஆலோசனை ஈடுபட்டது. தற்போது கடந்த 13 ஆம் தேதி அன்று சேலத்தில் உள்ள ஒரு நாட்டாமலையைச் சேர்ந்த நண்பர்கள், தமிழகத் தொழில்துறையைச் சேர்ந்த நாங்களும் இணைந்து ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்து, அதற்கு தேவைப்பட்ட உருக்காலைக்குத் தேவைப்பட்ட ஒரு 100 பொருள்களை அவர்கள் எக்சிபிட் செய்தார்கள். அதே நேரத்திலே அந்த மாவட்டத்திலே கோவை மாவட்டத்திலே உள்ள தொழில் முனைவோர்களை எல்லாம் அழைத்து வந்து விளைவிலே அந்தத் தொழிலுக்குத் தேவைப்படும் துணைப் பொருள்களை எப்படி செய்ய முடியும், திருச்சியிலே தொழிற்பேட்டைகள் இருக்கிறதோ எப்படி சென்னைக்கு அம்பத்தூர் கிண்டி போன்ற பகுதிகளிலே தொழிற் பேட்டைகள் இருக்கிறதோ — அதே மாதிரி இந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிலுக்குத் தேவையான துணைப் பொருள்களை உருவாக்குவதற்கும் பெரும் நல்ல ஒரு சிறப்பான திட்டத்தை சேலத்திலே உள்ள இந்த ஸ்டீல் நிறுவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் இருந்துத் தேவையான துணைத் தொழில்கள் விரைவிலே வர இருக்கின்றன. இப்படி பல முயற்சிகளைத் துணை தொழில்கள்— ஆன்சிலரி இண்டஸ்ட்ரீஸ்—சிறு தொழில் வளர்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு முயற்சிகளை எடுத்து செய்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தீப்பெட்டித் தொழிற்சாலை பற்றி சில விவரங்களை அருமைச் சகோதரர்கள் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு நம்முடைய பாசத்துக்குரிய உறுப்பினர் சிவசாமி அவர்கள் சொல்கிறபோது, தீப்பெட்டித் தொழிலுக்கு ஒரு பெரிய அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்குத் தேவைப்படுகிற அடிப்படைப் பொருளான மூலப் பொருளான பொட்டாசியம் குளோரைடு பாண்டியன் கெமிகல் என்ற நிறுவனத்தின் மூலமாக நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். மின்சாரத் தட்டுப்பாடு காரணமாகவும், மின்சாரப் பற்றாக்குறை காரணமாகவும் போதிய உற்பத்தி இல்லாததால் அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு அதிலும் குறிப்பாக — கூட்டுறவு செக்டாரிலே இருக்கின்ற அந்தத் தொழில்களுக்கு, அந்தத் தொழில் முனைவர்களுக்கு, காட்டேஜ் இண்டஸ்ட்ரி வரிசையில் இருப்பவர்களுக்கு எல்லாம் ஒரு பெரும் ஆபத்து வர இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பேராபத்து வரக்கூடாது என்பதற்காகத்தான் இன்றையதினம் சிட்கோ சில முயற்சிகளை எடுத்து இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூடக் கேட்டார்கள். சிட்கோ என்ன சாதித்தது, என்ன செய்தது, என்று கேட்டார்கள்.



அந்த சிட்கோதான் ஸ்வீடன் என்ற நாட்டிலிருந்து ஏறத்தாழ 139 மெட்ரிக் டன் இன்றைக்கு இறக்குமதி செய்து, ஏப்ரல் மாதம் அல்லது மே மாதம் முதல் அந்தத் தொழில் முனைவர்களுக்கு அதை வினியோகம் செய்ய இருக்கிறது. இன்றைக்குப் பற்றாக்குறை வரப்போகிறது என்பதைப் புரிந்து கொண்டுதான் இந்த நடவடிக்கையை அது எடுத்து இருக்கிறது.

பொட்டாசியம் குளோரைடு என்பது தீப்பெட்டித்தொழிலுக்கு அடிப்படையான மூலப்பொருள் என்பதைப் புரிந்து கொண்டுதான், ஸ்வீடன் நாட்டோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு எழுதி, அங்கே இருந்து 139 மெட்ரிக் டன் இறக்குமதி செய்து, அதை அடுத்த மாதம் முதல் சிறு தொழில் அதிபர்களுக்கு— குறிப்பாக தொழில் கூட்டுறவு சங்கங்களிலே இருப்பவர்களுக்கு நாம் வழங்க இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய ரப்பர் தொழிலிலும் நாம் ஒரு பெரிய மாறுதலை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த எனது இனிய சகோதரர் மாண்புமிகு மணி அவர்களுக்குத் தெரியும். ஓராண்டு காலமாக அந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் பாடுபட்டு, அங்கேயுள்ள சிறு சிறு ரப்பர் தொழில் அதிபர்களை ஒன்று சேர்த்து, அங்கே ஒரு ரப்பர் தொழில் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கிஇருக்கிறோம். இதன்மூலம் அந்த ரப்பர் தொழில் அதிபர்களுக்குப்பல நன்மைகள் கிட்ட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கூட என்னைக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள், எப்போது அதற்குக் கால்கோள் விழா வைத்துக் கொள்ளலாம் என்று; மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவிற்கு நாம் அங்கே இந்த ஓராண்டு காலமாக எடுத்துக் கொண்ட முயற்சி இன்று ஒரு கட்டுக்கோப்பான சூழ்நிலையை உருவாக்கித்தந்து இருக்கிறது. அதற்காக அரசு பங்கு மூலதனமாக 2 லட்சம் ரூபாய் அளிக்க இருக்கிறது. அங்கேயுள்ள 169 ரப்பர் தொழிலில் ஈடுபட்டுள்ள நண்பர்களைச் சேர்த்து, ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் இணைத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னை மட்டைகளைப் பற்றி மாண்புமிகு சகோதரர் உறுப்பினர்கள் சொன்னார்கள். குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வது 1978 ஆம் ஆண்டு முதல் தடை செய்யப்பட்டு இருந்தது. ஆனால் சிறு தொழில் முனைவர்கள் அதனால் சிரமப்படுகிறார்கள், தொல்லைப்படுகிறார்கள் என்ற கருத்து தெரிவிக்கப் பட்டதால், இன்றையதினம் விரைவில் அந்தத் தடையைத் தளர்த்துவதற்கு — குறிப்பாக அந்த மாவட்டத்தில் இருந்து

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமானால் மாவட்ட மேலாளரிடத்தில் ஒப்புதல் பெற்று அந்த மட்டைகளை எடுத்துச் செல்லலாம் என்ற முறையில் அந்த விதிகளைத் தளர்த்துவதற்கான முறையில் அரசு ஆலோசனை செய்து கொண்டு இருக்கிறது. விரைவில் அந்த நல்ல தகவலை மக்களுக்குத் தெரிவிக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

இப்படிப் பல விவரங்களையெல்லாம் என்னுடைய அமைச்சர் சகோதரர்கள், சிட்கோ நிறுவனத்தைப் பற்றியும், அதேபோல் டி.ஐ.ஐ.சி. நிறுவனத்தைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக சென்ற முறையே சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ரெண்டல் சிஸ்டம் என்ற வகையிலே அம்பத்தூர், கிண்டி என்ற இடத்தில் உள்ளவற்றை, ஹையர் பர்சேஸ் என்ற வகையிலே தவணை முறை என்ற அடிப்படையிலே அவற்றை மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். இந்த ஓராண்டிற்குள் சட்ட ரீதியாக தவணை முறையில் அது கொடுக்கப்பட்டு பெரும்பான்மையான உரிமையாளர்கள் அதனால் பயன்பெறக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே, பல பிரச்சனைகள் இங்கே தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப்பற்றியெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறபோது நான் சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக, டி.ஐ.ஐ.சி. நிறுவனத்தைப் பற்றி மாண்புமிகு சகோதரர் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். மெத்த வருத்தப்பட்டார்கள். டி.ஐ.ஐ.சி. நிறுவனம் என்ன சாதித்து இருக்கிறது அல்லது கடன் வழங்குவதில் எப்படி சுணக்கம் காட்டுகிறது அல்லது அதைப் பெறுவதிலே என்ன சிரமம் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நல்ல எண்ணத்தோடு நான் சொன்னார்கள். அதையெல்லாம் இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் அந்த தமிழ்நாடு முறையில் பணியாற்றவேண்டும் என்ற கார்ப்பரேஷன் நல்ல அதைச்சொன்னார்கள். ஏனென்றால் அடிப்படையில்தான் பற்றி நன்றாகத் தெரியும். அவர்களுக்கே அதைப் தொழிற்பேட்டையில் ஒரு தொழிற்சாலை வைத்துஇருக்கிறார்கள். அவரே ஒரு முனைவர். கிண்டி அவருக்கு அதிலே உள்ள சிரமங்கள் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாத அதிலே உள்ள வளைவு நெளிவுகள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த டி.ஐ.ஐ.சி. நிறுவனம் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டில் இருந்து 1971 ஆம் ஆண்டு வரையில் இந்த டி.ஐ.ஐ.சி. நிறுவனம் எவ்வளவு பணத்தைத் தொழில் முனைவர்களுக்குக் கடனாகக் கொடுத்து இருக்கிறது என்கிற கணக்கை நான் இந்த மன்றத்தின் முன் வைக்கவிரும்புகிறேன். 1949-ல் இருந்து 1970 வரையில்—ஏறத்தாழ 21 ஆண்டுகளில்—36 கோடி ரூபாய் கொடுத்தார்கள்.



(பிற்பகல் 2-20)

ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவா அரசு சென்ற ஆண்டு மட்டும், 1980-81 ஆம் ஆண்டில் மட்டும் 5,183 பேர்களுக்கு ஏறத்தாழ 37 கோடி ரூபாயை ஓராண்டில் கொடுத்திருக்கிறது. 1949 லிருந்து 1970 ஆம் ஆண்டு வரையில் 21 ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட அந்தத் தொகை 36 கோடி ரூபாய்தான். ஆனால் 1980-81 ஆம் ஆண்டில் மட்டும் கொடுக்கப்பட்டது 37 கோடி ரூபாய். 5,183 அப்ளிகேஷன்களுக்கு சாங்ஷன் செய்து, நிதி உதவி செய்திருக்கிறது இந்த அரசு.

அது மட்டுமல்ல, 1981-82 ஆம் ஆண்டில், 37 கோடியாக இருந்தது 52 கோடியாக உயர்ந்திருக்கிறது. அந்த அளவுக்கு டி.ஐ.ஐ.சி. இன்றைக்கு நிதி உதவி செய்திருக்கிறது. நீங்கள் கேட்கலாம் இந்தப் பணம் யாருக்குப் போனது, எப்படிப் போனது, வசதி படைத்தவர்களுக்கா செல்வாக்கு படைத்தவர் களுக்கா, யாருக்குப் போனது என்று கேட்கக்கூடும். அதற்கான புள்ளி விவரம் என்னிடம் இருக்கிறது. நீங்களும் புள்ளி விவரத்தைப் பெறக்கூடிய இடத்தில் இருக்கிறீர்கள். இந்த ஆண்டு முதல் 90 சதவீதம் சிறுதொழில் செய்கின்றவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலை இல்லை. டி.ஐ.ஐ.சி. உதவி என்பது விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருக்குத் தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு சிறுதொழில் செய்பவர் களுக்கு 52 கோடி ரூபாய் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 5,699 பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள். இந்த 5,699 பேர்களில் கிட்டத்தட்ட 5,246 பேர்கள் அதாவது 86 சதவீதம் சிறுதொழில் செய்பவர்கள்; அந்தச் சிறுதொழில் முனை வர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அவைத் தலைவரவர்களே, நான் தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் லோன் சாங்ஷன் செய்ததில் முறைகேடு பற்றியோ அல்லது குறைபாடு பற்றியோ கேட்கவில்லை. 52 கோடி ரூபாய் சிறுதொழில் முனைவர்களுக்குக் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள். அதன் பின்னால் அவர்களுக்குச் சரியான முறையில் 'ஒர்க்கிங் காபிடல்' கிடைக்காமல் மூடப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஒர்க்கிங் காபிடலுக்கு நேஷனல் பேங்கிடம் போகவேண்டும். அவர்கள் கடன் வழங்காத காரணத்தால் வாங்கிய கடனையும் இவர்கள் கட்டமுடியவில்லை; தொழிலை நடத்த முடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு இந்த டி.ஐ.ஐ.சி. என்ன செய்கிறது என்று தான் கேட்டேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், 5183 பேர்களுக்கு, அப்ளிகேஷன் கொடுத்தவர்களுக்கு, 37 கோடி ரூபாய் கொடுத்ததாகவும், அதற்குப் பின்னாலே 52 கோடி ரூபாய் கொடுத்ததாகவும் சொன்னார்கள். அதிலே எத்தனை பேர் திரும்ப முதலும் வட்டியுமாகக் கட்டுகிறார்கள்? அப்படிக் கட்டவில்லை என்றால் என்ன காரணம். அதனால் உற்பத்தி எவ்வளவு பெருகி இருக்கிறது என்ற விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: எல்லா பட்டதாரிகளும் ... வர்கள் தொழில் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர்கள். அதைப் போன்று நிதி ஆதாரங்களில் சிறந்த பயிற்சி பெற்றவர்கள். சென்ற ஆண்டுதான் கொடுத்திருக்கிறோம். அதைப்பற்றிச் சொல்கிறேன். கொடுத்தது யாருக்குப் போயிருக்கிறது, எந்த சமுதாயத்திலே எந்தப்பிரிவுக்குப் போயிருக்கிறது. வசதி பெற்றவர்களுக்கா அல்லது செல்வாக்கு பெற்றவர்களுக்கா என்பதைப் பார்க்க வேண்டும். சிறு தொழில் என்பதற்கு இலக்கணம் 20 இலட்சம் ரூபாய்க்குக் குறைந்த மூலதனம் உள்ள தொழில். ஆகவே 02 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டிருப்பதுதான் சிறுதொழில். அந்த 02 இலட்சம் ரூபாய்க்கு குறைந்த முதலீடு உள்ள சிறுதொழில் முனைவர்களுக்கு 86 சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, மின்சாரக்கட்டுப்பாடு வந்தபோது அவர்களுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது. சிறுதொழில் நசிந்துவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அப்படி சிறுதொழில் நசிந்துவிடும் என்ற அபாயம் ஏற்பட்டபோது டி.ஐ.ஐ.சி. இதுவரை செய்யாத அளவுக்கு இந்த சிறுதொழில் முனைவர்களுக்கு ஜெனரேட்டர் வாங்க மூன்றே நாளில் ஏறத்தாழ 530 பேர்களுக்கு 4 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், சட்டம் கடுமையாக இருக்கிறது, கடுமையாக இருக்கிறது என்று. ஆனால் இந்த சிறுதொழில் நசிந்துவிடக்கூடாது, பழுதுபட்டு விடக்கூடாது, உற்பத்தி குறைந்துவிடக்கூடாது என்பதற்காக மூன்றே நாளில் 530 பேர்களுக்கு 4 கோடி ரூபாய் ஜெனரேட்டர் வாங்க நிதி உதவி செய்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி). எது எதைச் செய்ய முடியுமோ அவைகளையெல்லாம், எவை நம்முடைய சக்திக்கு உட்பட்டிருக்கிறதோ அவைகளையெல்லாம் விரைவாகவும் செய்கிறோம், எச்சரிக்கையாகவும் செய்கிறோம். அந்த வகையிலேதான் 530 பேர்களுக்கு சிறு தொழில் முனைவர்களுக்கு, ஜெனரேட்டர் வாங்க 4 கோடி ரூபாய் வரையில் டி.ஐ.ஐ.சி. மூலமாக நிதி உதவி கொடுத்திருக்கிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த டி.ஐ.ஐ.சி. என்பது பெரிய பெரிய முதலாளிகளுக்கும், தனவந்தர்களுக்குமே பயன்பட்டது. இப்போது 3 ஆண்டுக் காலத்தில் படித்தவர்கள் சாமானியர்களாக இருக்கிற, நடுத்தர மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு கொடுக்க



வேண்டும் என்பதற்காக, செல்ப் எம்பிளாய்மெண்ட் டிரைவர்ஸ் என்று சொல்லக்கூடியவர்களுக்கு கடந்த 3 ஆண்டுக் காலத்தில் மட்டும், 1979–80 ஆம் ஆண்டில் 96 பேர்களுக்கும்,—குறிப்பாக டாக்சி, ஆட்டோ ரிக்ஷா, வேன்கள் முதலியவை வாங்கி சொந்தத் தொழில் செய்வதற்காக அந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவி செய்கிறது—சென்ற ஆண்டு 198 –82 ஆம் ஆண்டு 956 பேர்களுக்கும் சுமார் 8 கோடி ரூபாயை டி.ஐ.ஐ.சி. நிறுவனம் வழங்கியிருக்கிறது. எதற்காக—சமுதாயத்தின் அடிமட்டத்திலே இருப்பவர்கள் வளர வேண்டும் என்பதற்காக, ஓட்டுநர்கள் என்ன நலிந்த பிரிவினர் அல்லவா, சென்ற ஆண்டு 956 ஓட்டுநர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்றால்—இந்த அரசுக்கு சாமானிய மக்களிடத்திலே அக்கறை இருக்கிறது என்றுதானே பொருள்.

ஒரு காலத்தில் டி.ஐ.ஐ.சி. என்பது மேல்மட்டத்தில் உள்ள பெரும் முதலாளிகளுக்கே நிரந்தர சொந்தமாக இருந்தது—49 வது ஆண்டிலே அப்படி இருந்தது. அதனை மாற்ற மேலும் மேலும் அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, அவர்களுடைய அந்தப் போக்கினை மாற்றி சமுதாயத்திலே உள்ள நலிந்தவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழும், 20 லட்சம் ரூபாய்க்குக் கீழாக தொழில் செய்ய முனைவோர்களுக்கும், பாதுகாப்பு அளிக்கும் வகையில் இன்றைக்கு டி.ஐ.ஐ.சி. செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்று சொல்லி, சிறுதொழில்களைப் பற்றி, பலவிதமான கருத்துக்களை பல்வேறு உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் தங்களுடைய பல கருத்துக்களை இங்கேஎடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் குறிப்பேட்டில் இருக்கின்றன. தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான விளக்கத்தைத் தக்க நேரத்திலே நான் அவர்களுக்கு அளிக்கிறேன். அவர்கள் சொன்ன உணர்வுகளை எல்லாம் மையமாக மனத்திலே வைத்துக் கொண்டு, இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பால் வளத்துறையைப் பற்றி, இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். பால் வளத் துறையினிலே பல பிரச்னைகள் இருப்பது பற்றி, பால் பதப்படுத்துவது பற்றி, பால் விநியோகத்தைப் பற்றி எல்லாம் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பால் வளத்தைப் பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். இந்த நிலையிலேயே அவர்களிடத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 1,500-க்கு மேற்பட்டவர்கள் இன்றையதினம் வேலையற்ற

வர்களாக ஆகியிருக்கிறார்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது அப்புறம் இருக்கட்டும்; முதலிலே இவர்களுக்கு வேலை கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரம் இருக்கிறது. கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். நான் பின்னாலே சொல்கிறேன். அவசியம் வரும்போது சொல்கிறேன். தேவைப்பட்டால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளத்துறையைப் பொறுத்தவரையில், அண்மையிலே நடைபெற்ற அகில இந்திய பால் பண்ணைகள் வளர்ச்சி மாநாட்டில், பால் பண்ணைத் தொழிலினுடைய தந்தை என்று சொல்லப்படுகிற டாக்டர் குரியன் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களையும் மேடையில் வைத்துக் கொண்டு சொன்னார்கள். இன்றைக்கு தமிழ்நாடு போடுகிற இந்த ஆக்கப் பூர்வமான பணிகள் காரணமாக — இந்தப் பால் பண்ணை வளர்ச்சியில் குஜராத் மாநிலம் தான் முன் மாதிரியான மாநிலமாக இது வரையில் இருந்தது. அதுவும் தொடர்ந்து 1948 வது ஆண்டிலேயிருந்து 34 ஆண்டுகளாக முயற்சி செய்ததன் காரணமாக முன் மாதிரி மாநிலமாக இருந்து வந்தது. ஆனால், கடந்த 3, 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாக தமிழ்நாட்டைப் பார்க்கிற நேரத்தில் பால் பண்ணை வளர்ச்சியில் எங்கே அது குஜராத்தை விட மிஞ்சி விடுமோ என்ற உணர்வு தான் எனக்கு ஏற்படுகிறது என்று அகில இந்திய பால் பண்ணை மாநாட்டில், அதற்காகவே, அந்த குஜராத்திலேயிருந்து வந்திருந்த — பால் பண்ணை வளத்தின் தந்தை என்று சொல்லப்படுகிற, குஜராத்தையே சேர்ந்த டாக்டர் குரியன் அவர்கள் — நான் குஜராத்தையே சேர்ந்தவன் என்றாலும் கூட, இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிற முனைப்பான நல்ல பல திட்டங்களைப் பார்க்கிறபோது, உற்பத்தி செய்வது, பதப்படுத்துவது, விநியோகம் செய்வது போன்ற எல்லாப் பிரச்னைகளிலும் வேகமாக குறியீட்டை விட அதிக அளவுக்கு முன்னேறி சென்றுக் கொண்டிருக்கிறது என்கிற பாராட்டுதலை சொன்னார்கள். அதை மையமாக வைத்துக் கொண்டுதான் முதலிலே இந்த ஆண்டு இதனை இன்னும் விரிவு படுத்த வேண்டும் என்று பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

(பிற்பகல் 2–30)

நாங்கள் மைய அரசிலே இருக்கின்ற நேஷனல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களின் துணையோடும், இண்டியன் டெய்ரிகார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களின் துணையோடும், நம்முடைய தமிழக அரசினுடைய நிதியாதாரத்தோடும் பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். வருகின்ற ஆண்டிலேயும் கூட தமிழ்நாடு மேலும் வளரவேண்டும்



என்ற வகையில், நம்முடைய தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பரமக்குடிக்குப் பக்கத்திலே இருக்கின்ற காரைக்குடியில் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் புதிய பால் பண்ணை நிறுவ அரசு முடிவெடுத்து அந்தக் காரியத்திலே இன்றைக்கு ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே கால்நடைகள் பற்றிச் சொன்னார்கள் கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய், நொடி மற்றும் அவற்றுக்கு ஊட்டமான தீவனங்கள் இல்லாத காரணத்தால் போதுமான பாலைக் கொடுக்காமல் இருக்கின்றது என்ற வகையில் கால்நடைகளைப் பற்றிய அடிப்படைப் பிரச்னைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதை விரிவுபடுத்துகிற வகையில் ஈரோட்டில் எருமை மாடுகளுக்கான ஒரு உறைவிந்து நிலையம் அமைக்க 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சேலத்தில் ஒரு பெரிய திரவ நைட்ரஜன் ஆலை நிறுவ 55 இலட்சம் ரூபாய் அதற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் செங்கற்பட்டு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் முறையே 50,000 லிட்டர் 30,000 லிட்டர் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை எல்லாம் 50 இலட்சம், 35 இலட்சம் ரூபாயில் முறையே இந்த வடாற்காடு,செங்கற்பட்டு மாவட்டங்களிலே ஆகமொத்தம் 85 இலட்சம் ரூபாய் செலவிலே அடுத்த ஆண்டு இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களை உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசின் திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டையில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 19 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இதன் கொள்திறன் 10 ஆயிரம் லிட்டர் தினசரி என்ற அளவில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டு இருக்கின்றது, இந்த ஆண்டு மழை இல்லாததன் காரணத்தால் சிலநேரத்திலே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கின்றது. இது கால்நடைகளை இன்றையதினம் பாதித்துக்கொண்டிருக்கின்றது. இதனால் அடுத்த ஆண்டுக்குப் பால் உற்பத்தி வருமா, அந்த அளவுக்குத் தீவனத்தைக் கொடுக்க முடியுமா என்ற ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. எனவே அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக வருகின்ற தொடர் ஆண்டுகள் வறட்சி

வர்களாக ஆகியிருக்கிறார்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது அப்புறம் இருக்கட்டும்; முதலிலே இவர்களுக்கு வேலை கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரம் இருக்கிறது. கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். நான் பின்னாலே சொல்கிறேன். அவசியம் வரும்போது சொல்கிறேன். தேவைப்பட்டால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளத்துறையைப் பொறுத்தவரையில், அண்மையிலே நடைபெற்ற அகில இந்திய பால் பண்ணைகள் வளர்ச்சி மாநாட்டில், பால் பண்ணைத் தொழிலினுடைய தந்தை என்று சொல்லப்படுகிற டாக்டர் குரியன் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களையும் மேடையில் வைத்துக் கொண்டு சொன்னார்கள். இன்றைக்கு தமிழ்நாடு போடுகிற இந்த ஆக்கப் பூர்வமான பணிகள் காரணமாக — இந்தப் பால் பண்ணை வளர்ச்சியில் குஜராத் மாநிலம் தான் முன் மாதிரியான மாநிலமாக இது வரையில் இருந்தது. அதுவும் தொடர்ந்து 1948 வது ஆண்டிலேயிருந்து 34 ஆண்டுகளாக முயற்சி செய்ததன் காரணமாக முன் மாதிரி மாநிலமாக இருந்து வந்தது. ஆனால், கடந்த 3, 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாக தமிழ்நாட்டைப் பார்க்கிற நேரத்தில் பால் பண்ணை வளர்ச்சியில் எங்கே அது குஜராத்தை விட மிஞ்சி விடுமோ என்ற உணர்வு தான் எனக்கு ஏற்படுகிறது என்று அகில இந்திய பால் பண்ணை மாநாட்டில், அதற்காகவே, அந்த குஜராத்திலேயிருந்து வந்திருந்த — பால் பண்ணை வளத்தின் தந்தை என்று சொல்லப்படுகிற, குஜராத்தையே சேர்ந்த டாக்டர் குரியன் அவர்கள் — நான் குஜராத்தையே சேர்ந்தவன் என்றாலும் கூட, இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிற முனைப்பான நல்ல பல திட்டங்களைப் பார்க்கிறபோது, உற்பத்தி செய்வது, பதப்படுத்துவது, விநியோகம் செய்வது போன்ற எல்லாப் பிரச்னைகளிலும் வேகமாக குறியீட்டை விட அதிக அளவுக்கு முன்னேறி சென்றுக் கொண்டிருக்கிறது என்கிற பாராட்டுதலை சொன்னார்கள். அதை மையமாக வைத்துக் கொண்டுதான் முதலிலே இந்த ஆண்டு இதனை இன்னும் விரிவுபடுத்த வேண்டும் என்று பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

(பிற்பகல் 2-30)

நாங்கள் மைய அரசிலே இருக்கின்ற நேஷனல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களின் துணையோடும், இண்டியன் டெய்ரிசார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களின் துணையோடும், நம்முடைய தமிழக அரசினுடைய நிதியாதாரத்தோடும் பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். வருகின்ற ஆண்டிலேயும் கூட தமிழ்நாடு மேலும் வளரவேண்டும்



என்ற வகையில். நம்முடைய தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பரமக்குடிக்குப் பக்கத்திலே இருக்கின்ற காரைக்குடியில் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் புதிய பால் பண்ணை நிறுவ அரசு முடிவெடுத்து அந்தக் காரியத்திலே இன்றைக்கு ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே கால்நடைகள் பற்றிச் சொன்னார்கள் கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய், நொடி மற்றும் அவற்றுக்கு ஊட்டமான தீவனங்கள் இல்லாத காரணத்தால் போதுமான பாலைக் கொடுக்காமல் இருக்கின்றது என்ற வகையில் கால்நடைகளைப் பற்றிய அடிப்படைப் பிரச்னைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதை விரிவுபடுத்துகிற வகையில் ஈரோட்டில் எருமை மாடுகளுக்கான ஒரு உறைவிந்து நிலையம் அமைக்க 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சேலத்தில் ஒரு பெரிய திரவ நைட்ரஜன் ஆலை நிறுவ 55 இலட்சம் ரூபாய் அதற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் செங்கற்பட்டு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் முறையே 50,000 லிட்டர் 30,000 லிட்டர் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை எல்லாம் 50 இலட்சம், 35 இலட்சம் ரூபாயில் முறையே இந்த வடாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலே ஆகமொத்தம் 85 இலட்சம் ரூபாய் செலவிலே அடுத்த ஆண்டு இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களை உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசின் திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டையில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 19 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இதன் கொள்திறன் 10 ஆயிரம் லிட்டர் தினசரி என்ற அளவில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டு இருக்கின்றது, இந்த ஆண்டு மழை இல்லாததன் காரணத்தால் சிலநேரத்திலே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கின்றது. இது கால்நடைகளை இன்றையதினம் பாதித்துக்கொண்டிருக்கின்றது. இதனால் அடுத்த ஆண்டுக்குப் பால் உற்பத்தி வருமா, அந்த அளவுக்குத் தீவனத்தைக் கொடுக்க முடியுமா என்ற ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. எனவே அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக வருகின்ற தொடர் ஆண்டுகள் வற்றசி

ஆண்டுகளாக இருப்பதன் காரணத்தால் கால்நடைகளின் தீவனப் பிரச்னைகளை ஈடுகட்டுகின்ற வகையில் சில திட்டங்களை இன்றையதினம் பால் வள நிறுவனம் உருவாக்கி இருக்கின்றது. குறைந்த விலையில் கலப்பு தீவனத்தை விவசாயிகளுக்கு வழங்க முடிவு செய்திருக்கின்றது. குறிப்பாக தற்போது கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் 32 பைசா. இந்த சிறப்புத் தீவனத்தை வறட்சிக் காலத்தில் கிலோ ஒரு ரூபாய் என்ற விகிதத்திலே பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் மராட்டிய மாநிலத்தில் உலர் தீவனம் வாங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். கால்நடை பராமரிப்புத் துறையில் அவர்கள் ஆந்திரா மாநிலத்தில் இருந்து பெறும் வைக்கோல் நியாயமான முறையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்கு இணையம் உதவியாக இருக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறோம். இப்படி பல வகைகளில் ஏற்பாடு செய்கிறோம். அடுத்த ஆண்டைப் பொறுத்தவரையில் குறிப்பாக 1980 ஆம் ஆண்டு சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் துவக்கிய பால் பண்ணைகள் பால் பவுடர் தொழிற்சாலைகள் அதாவது 3 கோடி ரூபாய் அளவுக்கு கிருஷ்ணகிரியிலும், 8 கோடி ரூபாய் அளவிலே சேலத்திலும் துவக்கப்பட்டதே, அந்த தொழிற்சாலைகள் அடுத்த ஆண்டு உற்பத்தியைப் துவங்க இருக்கின்றது. பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஆகவே அடுத்த ஆண்டு என்றால் இந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து தொடங்க இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலிக்குப் பக்கத்தில் சேத்தியாதோப்பு, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இருக்கும் பால் குளிரூட்டும் நிலையங்களை இந்த ஆண்டு செயலுக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய நண்பர்கள் பல பிரச்னைகள் சம்பந்தமாக சொன்னார்கள். ரிஜிஸ்ட்ரேஷன் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் இரண்டு மூன்று அம்சங்களை மட்டும் நான் இந்த சபைக்கு வைத்து என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக நம்முடைய பதிவுத் துறையில் பணியாற்றுகின்ற நண்பர்களுக்கு நீண்ட நாட்களாக ஒரு குறை இருக்கின்றது. குறிப்பாக பதிவுத் துறையிலே தற்காலிகமாக பிரிவு எழுத்தர் என்ற ஒரு பணித் தொகுதி நீண்ட நாட்களாக இருக்கிறது. இவர்கள் இளநிலை உதவியாளர்கள் பணி செய்து வந்தாலும் அவர்களை விட குறைந்த ஊதியம் பெற்று வருகிறார்கள். மேலும் அவர்களுக்கு ஒய்வு ஊதியம், பணிக்கொடை போன்றவை



களுக்கு தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த குறையை அரசு பரிசீலனை செய்து தற்போது பணியில் உள்ள இளநிலை உதவியாளர் பதவி உயர்வு பெற தகுதியுள்ள அனைத்து தற்காலிக பிரிவு எழுத்தர்கள் 329 தற்காலிக பிரிவு எழுத்தர்களுக்கு 'டெம்ரரி செக்ஷன் ரைட்டர்ஸ்' ஒரே சமயத்தில் அதாவது 1-5-83 முதல் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு செய்து அவர்களுக்கு இளநிலை உதவியாளர்களுக்கு உள்ள அனைத்து சலுகைகளையும் அளிப்பது என அரசு முடிவு செய்து இருக்கிறது. இதனால் அரசுக்கு 8 லட்சம் ரூபாய் செலவாகும் என கருதப்படுகிறது. இனிமேல் தற்காலிக பிரிவு எழுத்தர்களாக யாரையும் புதிதாக நியமனம் செய்யக்கூடாது என்றும் அரசு ஆணையிட்டு இருக்கிறது. அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு சேர்ந்த பணி பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கனவே 4, 5, ஆண்டுகளாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பிர்க்காவுக்கு ஒரு துணை பதிவாளர் அலுவலகம் அதைப்போலவே ஒரு ஆர். டீ. ஓ. நிர்வாக பொறுப்பில் இருக்கின்ற பகுதிகளுக்கு ஒரு மாவட்ட பதிவாளர் அலுவலகம் என்றவகையில் ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில் 15 சப்ரிஜிஸ்ட்டரர் ஆபிஸ்களை திறந்தோம், பொது மக்களுக்கு வசதி செய்து கொடுத்தோம். சென்ற முறை 30 சப்ரிஜிஸ்ட்டிரர் ஆபிஸ்களை திறந்தோம். இந்த ஆண்டும் 30 துணை பதிவாளர் அலுவலகத்தை திறக்க இருக்கிறோம். அவையாவன, முதுகுளத்தூர் தொகுதி பெருநாழியிலும், தண்டராம்பட்டு தொகுதி தானிப்படியிலும், அறவக்குறிச்சி தொகுதி வெள்ளியணையிலும், ரிஷிவந்தியம் தொகுதியில் ரிஷிவந்தியத்திலும், பேராவூரணி தொகுதி இரண்டாம்புளிக்காட்டிலும், கிருஷ்ணகிரி தொகுதி வேப்பனபள்ளியிலும், பாலக்கோடு தொகுதி காரிமங்கலத்திலும், சீர்காழி தொகுதி கொள்ளிடத்திலும், நாமக்கல் தொகுதி நல்லூரிலும், சிவகாசி தொகுதி திருத்தங்கலிலும், நாட்ராம்பள்ளியிலும் தூத்துக்குடியிலும், பூம்புகாரிலும், தமலிலும், செந்துறையிலும், மண்வாளநகரிலும், அய்யம்பாளையத்திலும், இலுப்பூரிலும், அயோத்தியாபட்டினத்திலும் வேலாயுதம்பாளையத்திலும், வெம்பாக்கத்திலும், மீன்சுருட்டியிலும், மகர்நோம்புச்சாவடியிலும் கட்டமலைக்குண்டிலும், படுகைப்பத்திலும், வீரபாண்டியிலும், அம்மாபேட்டை, சாரவாக்கம், சித்தாமூர் என்று இந்த 30 ஊர்களிலும் இந்த ஆண்டு புதிதாக சார் பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதைப்போலவே புதிதாக மாவட்ட சார்பு அலுவலகம் திண்டிவனத்திலேயும், மத்திய சென்னையில் இரண்டு அலுவலகங்களையும் திறக்க இருக்கிறோம். அதன் காரணமாக மேலும் நிர்வாகம் சீர்படும், செம்மைப்படும், முறைப்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல இன்றையதினம் வெட்டு தீர்மானம் என்ற வகையில் பல விவரங்களை இங்கே நண்பர்கள் முத்திரைத்தாள் விற்பனைப்பற்றியும் அதனுடைய சங்கடங்களைப் பற்றியும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அந்த உணர்வுகளை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு விரைவாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு நான் பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்பொழுது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திரு. செ. சிவசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 5 — முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 98,48,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு.

திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,93,40,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

திரு. த. வேணுகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், கே. ஆர். சுந்தரம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,19,28,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்.

திருவாளர்கள் டி. மணி, எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

(பிற்பகல் 2-40)

திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,86,21,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 56 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லபன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ;

''மானியக் கோரிக்கை எண். 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,10,20,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 25-3-83 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

205. 'எலக்ட்ரோ மோபைக்' (இந்தியா) நிறுவனம் தயாரிக்கின்ற இரண்டு சக்கர, மூன்று சக்கர மோட்டார் வண்டிகளின் விற்பனையின் மீது விதிக்கத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்த வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற 306 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

206. ஸ்ரீ ஜெயின் மருத்துவ நிவாரணச் சங்கத்திற்கு மருந்துகள், மருந்துப் பொருள்கள், சோதனைக் கூடச் சாதனங்கள், கருவிகள் ஆகியவற்றை வாங்குவதன் மீதான ... வரியிலிருந்து விலக்களிப்பது குறித்த வணிகவரிகள்—



சமய அறக்கட்டளைகள் துறையின் 16-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற 324 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

207. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 20-9-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1068 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

208. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி விதிகளின் 26 (1) விதியில் திருத்தமொன்று செய்வது குறித்த வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 16-9-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1056 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

107. கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

108. கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

110. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

111. தொழில் கொள்கையும் திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்), 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

112. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

113. 1982-83 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித்துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

114. 'பணம் தரும் பட்டுத் தொழில்' என்ற புத்தக (தமிழ்).

## இணைப்பு I

( 788ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 5

### முத்திரைத்தாள் நிருவாகம்.

**1. பொது :**

பத்திரங்களுக்கான முத்திரைத்தாள் வாயிலாக வசூலிக்கப்படும் வரிகளே முத்திரைத்தாள் தீர்வை என்றழைக்கப்படுகிறது. சொத்து உரிமை மாற்றங்கள், காப்புறுதி, வருமானம் குறித்த பத்திரங்கள் ஆகியவற்றில் ஒட்டப்படும் முத்திரைத் தாள்கள் மூலமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரை தாள் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 2/1899) வசூலிக் ப்படும் முத்திரைத்தாள் தீர்வையின் மூலம் இம்மாநில அரசு கு கணிசமான வருவாங் கிடைக்கிறது. இந்திய முத்திரைத்தாள் சட்டம் பத்திரப் பதிவுத் துறைத் தலைவரால் நிருவகிக்கப்படுகிறது. இவர் முத்திரைத்தாள் நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் தலைமைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியுமாவார்.

**2. முத்திரைத்தாள் விற்பனை :**

நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாரா முத்திரைத் தாள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 1982-83 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை வசூல் சுமார் ரூபாய் 75 கோடி. இவற்றில், ''நீதித்துறைசாரா'' முத்திரைத்தாள்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகை சுமார் ரூ. 60 கோடியாகும். நாசிக்கிலுள்ள இந்தியப் பாதுகாப்பு அச்சகத்தில் இந்த முத்திரைத்தாள்கள் அச்சிடப்படுகின்றன. சென்னை, முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை அனுப்பும் தேவைக் குறிப்புகளுக்கிணங்க நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரி அவற்றை வழங்குகிறார், முத்திரைத்தாள் விற்பனையை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் கவனிக்கிறார். மாவட்டங்களிலுள்ள கருவூல அதிகாரிகளும், சென்னை மாநகரிலுள்ள முத்திரைத்தாள் உதவிக் கண்காணிப்பாளரும் முத்திரைத்தாள்களை இருப்பில் வைப்பதற்கும், அவற்றை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்கின்றனர். பொது மக்களுக்குத் தேவைப்படும் எல்லா வகை முத்திரைத்தாள்களும் போதுமான அளவிற்கு இருப்பில் உள்ளனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டியதும் இவர்களுடைய பொறுப்பாகும். இந்த முத்திரைத்தாள்கள், உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலம் துணைக் கருவூலங்களால் பொது மக்களுக்கு விற்கப்படுகின்றன. நீதித்துறை சாரா முத்திரைத்



தாள்களை விற்பதில், செயற்கையாக ஏற்படுத்தப்படும் தட்டுப்பாட்டையும், கள்ளச்சந்தை விற்பனையையும் தவிர்க்கும் பொருட்டு, நீதித்துறை சாரா முத்திரைத்தாள்களை, இம்மாநிலம் முழுவதிலுமுள்ள எல்லா பத்திரப்பதிவு அலுவலகங்களிலும் விற்க அரசு தறபோது ஏற்பாடு செய்துள்ளது.

**3. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்ட (மத்தியச் சட்டம் 2/1899) நிருவாகம் :**

இயங்காச் சொத்துக்களை விற்பனை செய்தல், உரிமை மாற்றம் செய்து கொடுத்தல் முதலியவற்றின் மீது முத்திரைத் தாள் தீர்வை விதிப்பதன் மூலம் வருவாயில் பெரும்பகுதி நீதித் துறை சாரா முத்திரைத்தாள்களின் விற்பனையுலிருந்து கிடைக்கிறது. சொத்துக்களின் அங்காடி மதிப்பையொட்டி, முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படத்தக்கதாகும். பத்திரத்தில் கையொப்பமிடும் தரப்பினர்கள் அப்பத்திரத்தில் சம்பந்தப்பட்ட சொத்தின் அங்காடி மதிப்பைக்குறிப்பிட வேண்டும். பத்திரத்தில் குறிப்பிடப்படும் இயங்காச் சொத்துக்களின் அங்காடி மதிப்பு சரியானவையா என்பதை பத்திரப் பதிவு அதிகாரிகள்நன்கறியவும், பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தின் மதிப்பு குறைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளதா? முத்திரைத்தாள் தீர்வை செலுத்துவதினின்று எவரும் தந்திரமாகத் தப்பிக்க முயற்சிக்கின்றனரா என்பதைக் கண்டறிந்து உறுதி செய்யவும், பத்திரப்பதிவு அதிகாரிகளுக்கு வழிகாட்டிப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பதிவேட்டில், நில அளவைகள் அந்நிலங்களின் மதிப்பு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயங்கா சொத்தின் மதிப்பு சரியாகக் குறிப்பிடப்படவில்லை என்று பத்திரப்பதிவு அதிகாரி ஐயுறுவதற்குக் காரணமிருப்பின் அச்சொத்தின் உண்மையான அங்காடி மதிப்பைத் தீர்மானிப்பதற்காக இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் ''மாவட்ட ஆட்சியரிடம்'' (கலெக்டர்) ஆவணத்தை அனுப்ப அச்சட்டத்தின்படி அவருக்கு அதிகாரமுண்டு. இச்சட்டத்தின்கீழ் ''மாவட்ட ஆட்சியரின்'' அதிகாரங்கள் தற்போது கோட்டாட்சியர்கள், சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டங்களின் மாவட்ட உதவி ஆட்சியர்கள், மாவட்ட துணை ஆட்சியர் ஆகியோரிடமும், சென்னை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடமும் நிலைபெற்றுள்ளன. இந்த அதிகாரிகளின் பல்வேறு அலுவல்களுக்கிடையில் அவர்களால் இவற்றை கவனிக்க முடியததால் அரசு இப்பணியில் ஒரு பகுதியை திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், வடஆற்காடு மாவட்டங்களில் இதற்கெனத் தனியாக அனுமதியளிக்கப்பட்ட நான்கு தனி மாவட்டப் பதிவாளர்களிடம் ஒப்படைத்தது. இம்மாவட்டப் பதிவாளர்களுக்கு நில அளவை-நிலவரி ஏற்பாட்டில் தேவையான பயிற்சி

அளிக்கப்பட்டுள்ளது. தனி மாவட்டப் பதிவாளர்கள் செய்த பணியின் முன்னேற்றத்தை ஆய்வு செய்த பின்னர், ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்படும்.

பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடச சொத்துக்களைப் பொறுத்தமட்டில் பத்திரப்பதிவு அதிகாரிகள் இதுவரை பொதுப் பணித்துறை வரையறுத்த கட்டிடப் பகுதி வீதங்களையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. கட்டிடம் அமைந்துள்ள பகுதியையும், கட்டிடத்தின் மதிப்பையும் சரிபார்ப்பதில் பத்திரப்பதிவு அதிகாரிகளுக்கு உதவி செய்யவும், கட்டிட அமைப்பு, மேல்கூரை முதலியவை தொடர்பாகக் கட்டிடத்தின் மதிப்பை ஒருங்கிணைப்பதற்கு பொதுப்பணித்துறையுடன் தொடர்புகொள்ளவும் பத்திரப்பதிவுத் துறைக்கு உதவி நிருவாசப் பொறியாளர் பதவி ஒன்று அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தொடர்புப் பணியை பத்திரப்பதிவுத் துறையின் ஏனைய மண்டலங்களுக்கும் விரிவுபடுத்துவதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

4. உரிமைமாற்றுத் தீர்வை:

அரசுக்குச் செலுத்தத்தக்க முத்திரைத்தாள் தீர்வை தவிர, பல்வேறு உள்ளாட்சி அமைப்புகள், நகரியங்கள், நகராட்சிகள் மாநகராட்சிகள் ஆகியவற்றிற்குச் செலுத்தத்தக்க மேல் வரியாக விற்பனைப் பத்திரங்கள், தானப்பத்திரங்கள், பரிமாற்றப் பத்திரங்கள், பினாமி உரிமைகளை விடுவித்தல், உடைமை உரிமையுடன் கூடிய அறுதியாவணம், அடைமானப்பத்திரம் ஆகியவற்றின்மீது உரிமைமாற்றுத் தீர்வையை வசூலிக்கும் பணியையும் பத்திரப்பதிவுத் துறை செய்து வருகிறது. தற்போது, சொத்தின் அங்காடி மதிப்பில் 5 சதவீதம் உரிமை மாற்றுத் தீர்வையாக வசூலிக்கப்படுகிறது, 1979–80–லிருந்து 1981-82 வரை உரிமை மாற்றுத் தீர்வையாக வசூலிக்கப்பட்டு உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட முத்திரைத்தாள்தீர்வை பற்றிய விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு. | வசூலிக்கப்பட்ட தீர்வை. | ஒதுக்கப்பட்ட தீர்வை |
|---|---|---|
| (1) | (2) (ரூபாய் கோடியில்) | (3) |
| 1979-80 | 13.14 | 12.75 |
| 1980-81 | 15.27 | 15.78 |
| 1981-82 | 17.77 | 17.28 |





5. வருவாய்:

ஒவ்வொரு முத்திரைத்தாள் இனத்தின் கீழும் வரவு, விற்பனை விவரங்கள் வருமாறு:—

1982-83 ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் நிருவாகம் என்பதன்கீழ் வரவு—செலவு பற்றிய விவரங்கள்.

| முத்திரைத்தாள்களின் வகை. | (1981 ஏப்ரல் முதல் 1982 மார்ச் வரையில்) | 1982–83 ஆம் ஆண்டு (1982 ஏப்ரல் முதல் 1982 நவம்பர் வரை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய். | ரூபாய். |
| வரவுகள்: | | |
| 1. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள் | 49,97,10,191.10 | 38,82,45,997.45 |
| 2. நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள் | 6,80,00,561.98 | 4,71,40,452.43 |
| 3. உண்டியல் முத்திரைத்தாள்கள் | 17,40,906.00 | 11,82,267.00 |
| 4. ஒட்டு முத்திரை வில்லைகள் | 2,53,10,314.04 | 1,77,20,118.30 |
| 5. பல்வகை | 5,50,57,410.92 | 4,71,21,217.79 |
| மொத்த வரவு .. | 64,98,19,384.04 | 50,14,10,052.97 |

## இணைப்பு II.

(788ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 6.

பத்திரப் பதிவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு.

கடந்த நூற்றாண்டில், 1834 ஆம் ஆண்டில் பத்திரப் பதிவுத் துறை அமைக்கப்பட்டது. இத்துறை, முக்கியமாக 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுவதை நிருவகிப்பதற்காக அமைக்கப்பட்டது. இத்துறை, இச்சட்டத்தின்கீழ் பத்திரங்களைப் பதிவு செய்வதுடன் பத்திரங்கள் தொடர்பான பதிவேடுகளைப் பாதுகாத்து வைத்து வருகின்றது. எனினும், பின்வரும் சட்டங்கள் செயல்படுவதை நிருவகிக்கும் பொறுப்பும் பத்திரப் பதிவுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

(1) இந்திய கூட்டுப் பங்குச் சட்டம்.

(2) சங்கங்கள் பதிவுச் சட்டம்.

(3) பிறப்பு-இறப்பு, திருமணப் பதிவு குறித்து பல்வேறு சட்டங்கள்.

(4) தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம்.

(5) பார்சி திருமணம், திருமண முறிவுச் சட்டம்.

(6) வரதட்சணை ஒழிப்புச் சட்டம்.

(7) இந்திய முத்திரைத் தாள் சட்டம் (வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்னர்)

(8) வணிகம் சாரா நிறுவனங்கள் சட்டம் (1-7-1981-லிருந்து)

2. துறையின் நிருவாக அமைப்பு —(i) துறைத் தலைவர்: பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருப்பதுடன், பிறப்பு-இறப்பு, திருமணங்களைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராகவும், சீட்டு நிதிகளின் இயக்குநராகவும் செயல்படுகிறார். இவருக்குப் பின்வரும் அதிகாரிகள் உதவி புரிகின்றனர்:

(அ) பத்திரப் பதிவுத்துறைக் கூடுதல் தலைவர் ஒருவர்;

(ஆ) பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் பதவி தரத்தில் சட்ட அதிகாரி ஒருவர் ;

(இ) பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் பதவித் தரத்தில் சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் ஒருவர்;

(ஈ) பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித் தரத்தில் நேர்முக உதவியாளர் (நிருவாகம்) ஒருவர்;

(உ) கணக்கு முதுநிலை அதிகாரி பதவித் தரத்தில் நேர் முக உதவியாளர் (கணக்கு) ஒருவர் ; மற்றும்

(ஊ) இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின்கீழ் கட் டடங்களின் அங்காடி மதிப்பை மதிப்பிடுவதற்குத் தலைமை யிடத்தில் உதவி செயற் பொறியாளர் ஒருவர்.

(ii) பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள், பணியாளர் களின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் (ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில்) | .. | 1 |
| பத்திரப் பதிவுத் துறை கூடுதல் தலைவர் | .. | 1 |
| பத்திரப் பதிவுத் துறை துணைத் தலைவர் பதவித் தரத்தில் சட்ட அதிகாரி | .. | 1 |
| பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர்கள் (மண்டல அதிகாரிகள்) | .. | 4 |
| சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் (பத்திரப் பதிவுத் துறை துணைத் தலைவர் பதவித் தரத்தில்) | | 1 |
| பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் (பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர் பதவித் தரத்தில்) நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | .. | |



| | | |
|---|---|---|
| பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர்கள் | .. | 8 |
| மாவட்டப் பதிவாளர்கள் | .. | 94 |
| மாவட்டத் தனிப் பதிவாளர்கள் (முத்திரைத் தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின்கீழ்) | .. | 4 |
| பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) (கணக்கு முதுநிலை அதிகாரி பதவித் தரத்தில்) | .. | 1 |
| சீட்டு நிதி ஆய்வு அதிகாரி | .. | 1 |
| உதவி செயற் பொறியாளர் | .. | 1 |
| சார் பதிவாளர்கள் (தேர்வு நிலை, நிலை I, நிலை II) | .. | 668 |
| உதவியாளர்கள் | .. | 700 |
| இளநிலை உதவியாளர்கள் | .. | 1,118 |
| சுருக்கெழுத்து தட்டச்சர்கள் | .. | 8 |
| தட்டச்சர்கள் | .. | 91 |
| பிரிவு எழுத்தர்கள் | .. | 617 |
| பதிவறை எழுத்தர்கள் | .. | 84 |
| பதிவேடு கட்டுபவர்கள் (இளநிலை) | .. | 33 |
| அடிப்படைப் பணியாளர்கள் | .. | 1,184 |
| இரவு நேரக் காவலர்கள் | .. | 234 |

சீட்டு நிதிக் கழகம் அமைக்கும் பணி தொடர்பாக தற்காலிகமாக 6 திங்கள் கால அளவிற்கு அல்லது அக்கழகம் அமைக்கப்படும்வரை, ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில் தனி அதிகாரி பதவி ஒன்று தற்காலிகமாக அனுமதிக்கப் பட்டுள்ளது.

(iii) பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர்கள் : இத்துறை, 1-8-1981-லிருந்து 4 மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரின் பொறுப்பில் உள்ளது. ஒவ்வொரு பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் அலுவலகத்துடன் பத்திரப்பதிவு அலுவலக ஆய்வாளர்கள் இருவர் சேர்க்கப்பட்டுள் ளனர். பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர்கள் வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் சுமார் 9 முதல் 15 வரையிலான பத்திரப் பதிவு மாவட்டங்கள் வருகின் றன.

அலுவலகங்களை ஆய்வு செய்தல், விசாரணை செய்தல், மாவட்டப் பதிவாளர்கள், பத்திரப் பதிவு ஆய்வாளர்கள் ஆகியோரின் பணி முன்னேற்ற அறிக்கைகளை ஆய்வு செய்தல் முதலிய பணிகள் இவர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன. அவர்களது அதிகார வரம்புக்குள் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்கள், ஆய்வாளர்கள், மாவட்டப் பதி வாளர்கள், சார் பதிவாளர்கள் ஆகியோர்மீது கட்டுப் பாட்டு அதிகாரத்தையும் மேற்பார்வை அதிகாரத்தையும் இவர்கள் செலுத்துவர். பதிவாளர் அலுவலகங்களின் ஆண்டு ஆய்வுக் குறிப்புகள், பத்திரப் பதிவுத்துறை துணைத் தலை வர்களால் முடிவு செய்யப்படுகின்றன. மேலும், அவர்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும், முத்திரைத் தாள் சட்டத்தின் கீழும், பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழும் கிடைக்கும் வரு வாய் குறித்தும் கண்காணிக்கின்றனர்.

(iv) பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர்கள்: துரை, திருநெல்வேலி, கடலூர், தஞ்சாவூர், சென்னை, திருச்சி ராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆக எட்டு வட்டாரங் களாக இம்மாநிலம் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு வட்டாரமும் பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும்



ஐந்து அல்லது ஆறு பத்திரப் பதிவு மாவட்டங்கள் உள்ளன. சார் பதிவாளர் அலுவலகங்களை திடீரென ஆய்வு செய்தல், தவறான நடத்தை தொடர்பான புகார்கள், சொத்துக்களின் மதிப் பைக் குறைத்து மதிப்பிடுதல் குறித்து விசாரணை செய்தல் முதலியவை பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளரின் முக்கிய அலுவல்கள் ஆகும். மேலும், இவர் சங்கங்களை யும், சீட்டு நிதிக் கம்பெனிகளையும் ஆய்வு செய்கிறார்.

(v) மாவட்டப் பதிவாளர்கள்: இந்த எட்டு வட்டாரங் களும் மேலும் பல பத்திரப் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இம்மாநிலத்தில் தற்போது 44 பத்திரப் பதிவு மாவட்டங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. 9 முதல் 19 சார் பதிவாளர் அலுவலகங்கள் அவரது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. மாவட்டப் பதிவாளர்கள் தலைமையிட அலுவலகத் திலுள்ள நிருவாகப் பணிகள் தவிர தங்களது மாவட்டங் களிலுள்ள சார் பதிவாளர் அலுவலகங்களை ஆண்டுதோறும் திடீரென ஆய்வு செய்கின்றனர். பொது மக்களிடமிருந்து வரும் புகார்களையும், ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத் துக்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுதல்குறித்த புகார் களையும் விசாரணை செய்கின்றனர். மேலும் சார் பதிவாளர் ஆவணங்களைப் பதிவுசெய்ய மறுத்து பிறப்பித்த ஆணைகளுக் கெதிராக வந்த மேல்முறையீடுகளையும் விசாரணை செய்கின் றனர். நிறுவனங்கள், சங்கங்கள், திருமணங்கள் ஆகிய வற்றைப் பதிவுசெய்யும் பதிவாளர்களும் இவர்களேயாவர்.

(vi) சார் பதிவாளர் அலுவலகங்கள்: இம்மாநிலத்தில் 44 தலைமையிட அலுவலகங்களிலுள்ள மூலப் பத்திரப் பதிவு இல்லங்கள் உட்பட தற்போது 524 பத்திரப் பதிவு அலுவலகங் கள் உள்ளன. சார் பதிவாளர் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தின் தலைவராவார். ஆவணங்களைப் பதிவு செய்தலும், அவை தொடர்பான பதிவேடுகளைப் பேணி வரு தலும் அவருடைய முக்கியப் பணிகளாகும். ஆவணங்கள் நிலையானவை. பழைய ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத் திருப்பது சார் பதிவாளரின் பொறுப்பாகும். பிறப்பு, இறப்பு

திருமணங்கள், சீட்டுகள் ஆகியவற்றைப் பதிவுசெய்யும் பதிவாளரும் இவரே. நீதித்துறை சாரா முத்திரைத் தாள்களையும், நீதிமன்றக் கட்டண வில்லைகளையும் விற்பனை செய்ய இவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(vii) இம்மாநிலத்தில் தற்போது 22 துறைத் தணிக்கைப் பிரிவுகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாவட்டப் பதிவாளர், ஒன்று அல்லது இரண்டு உதவியாளர்கள், ஒரு தட்டச்சர் ஆகியோர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொரு காலாண்டிலும் சார் பதிவாளர் அலுவலகங்களுக்குச் சென்று பத்திரப்பதிவுஅலுவலகங்களின் எல்லாகணக்குகளையும் தணிக்கை செய்கின்றனர். அவ்வாறு தணிக்கை செய்கையில், ஆவணங்களின் மதிப்பில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. இத் தணிக்கைப் பிரிவுகள் பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர்களின் மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகிறார்கள்.

பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், பத்திரப் பதிவுத் துறை கூடுதல் தலைவரின் தலைமையின்கீழ் தணிக்கைக் குழு ஒன்றை ஏற்படுத்தி உள்ளார். அப்பிரிவின் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு:—

1. சீட்டு நிதி கூடுதல் இயக்குநர்.

2. பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும், பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் அலுவலகத்திலுள்ள இரு கண்காணிப்பாளர்கள்.

இத்தணிக்கைப் பிரிவு மாநில கணக்குத்துறைத் தலைவரின் தணிக்கை மறுப்புகள் பெருமளவில் முடிவு செய்யப்படாமலுள்ள பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்று, அவற்றை அவ்வப்போது தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கிறது.

<u>3. நிருவாகச் சீர்திருத்தங்கள்:</u>—வருவாய்த்துறை வாரியம் கலைக்கப்பட்ட பின்னர், முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் அதனிடம் நிலை பெற்றிருந்த பல்வேறு அதிகாரங்கள் தற்போது பத்திரப் பதிவுத் துறைத் தலைவரிடம் நிலை பெற்றுள்ளன. தற்போது அவர் முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். தலைமை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு உதவி செய்வதற்காக பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் அலுவலகத்தில் சார் பதிவாளர் ஒருவர் (நிலை, 1), உதவியாளர் ஒருவர், சுருக்கெழுத்து தட்டச்சர் ஒருவர், அடிப்படை பணியாளர் ஒருவர், ஆகியோர் அடங்கிய தனிப் பிரிவு செயல்படுகிறது.



முத்திரைத் தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின்படி சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படும் கோப்புகள் அதிக அளவில் இருப்பதால், 47-ஏ பிரிவின்கீழ் பணியை முடிப்பதற்காக முதல் நடவடிக்கையாக, அரசு தனி மாவட்டப் பதிவாளர் பதவி 4, சார் பதிவாளர் பதவி (தேர்வு நிலை) 4, உதவியாளர் பதவி 4, தட்டச்சர் பதவி 4, அடிப்படைப் பணியாளர் பதவி 4 ஆகியவற்றிற்கு ஒப்புதலளித்துள்ளது. தனி மாவட்டப் பதிவாளர்களின் அலுவலகம், சேலம், திருநெல்வேலி, மதுரை, வேலூர் ஆகிய இடங்களில் செயல்படுகிறது.

1981–82 இல் அரக்கோணம், உதகமண்டலம் ஆகிய இரண்டு பத்திரப் பதிவு மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1982–83இல் புதிதாக சேரன்மாதேவியிலும் தருமபுரியிலும் இரண்டு பத்திரப் பதிவு மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருவாய்க்கோட்டமும், ஒரு பத்திரப்பதிவு மாவட்டமாக மாற்றப்படவேண்டும் என்பதை அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது 52 வருவாய் மாவட்டங்கள் உள்ளன. ஆனால் 44 பத்திரப் பதிவு மாவட்டங்கள் மட்டுமே உள்ளன. புதிய பத்திரப் பதிவு மாவட்டங்களும், சார் பதிவாளர் அலுவலகங்களும் படிப்படியான திட்டத்தின்கீழ் அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

<u>4. பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு மேம்பாடு .—</u>

(i) கட்டிடம்: பத்திரப் பதிவு அலுவலகங்கள் அனைத்தையும் படிப்படியாக அரசுக் கட்டடங்களில் அமைக்கக் கொள்கை அளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மாவட்ட பத்திரப் பதிவாளர் அலுவலகம் ஒன்றுக்கு ஒரு கட்டடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ii) தற்போது 35 மாவட்டப் பத்திரப் பதிவாளர் அலுவலகங்களில் தொலைபேசி வசதிகள் உள்ளன. பத்திரப் பதிவுத் துறைக்குத் தொலைபேசி வசதிக்கு வகை செய்ய 1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 29,000 ஒதுக்கப் பட்டது.

1983–84 ஆம் ஆண்டில் கூடுதல் பத்திரப் பதிவகங்களுக்கு தொலைபேசித் தொடர்புகள் பொருத்துவதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(iii) சார் பதிவாளர் அலுவலகங்களில் உள்ள மேசை, நாற்காலிகள் முதலியன மிகவும் பழையனவாக இருப்பதால், அவற்றிற்குப் பதிலாகப் புதிய மேசை, நாற்காலிகளைப் படிப் படியாக வாங்கும் திட்டத்திற்கு அனுமதி அளிக்க அரசு முடிவு செய்தது. இதற்காக அரசு 1981–82 ஆம் ஆண்டில் 1,00,000 ரூபாய் அனுமதித்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் அரசு 1,00,000 ரூபாய் வழங்க உத்தேசித்துள்ளது.

5. பத்திரப் பதிவு நடைமுறையை மேம்படுத்துதல்: பத்திரங்களைத் தாக்கல் செய்யும் புதிய முறை ஒன்று 1967 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதன்படி பத்திரங்களின் நகலை, பத்திரம் பதிவு செய்ய வருபவர்களே தயாரித்து பதிவு செய்வதற்கு அதன் மூலப் பத்திரங்களுடன் கொடுக்கவேண்டும். தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பத்திர நகல் எழுதுவோர் உரிம விதிகளின்படி சம்பந்தப்பட்ட அலுவலகத்தைப் பொறுத்தவரை யில் முறையான உரிமம் வைத்துள்ளவர்கள் மட்டுமே பத்திரங் களின் நகலை எழுதவேண்டும்.

(ஆ) ஆவண எழுத்தர் உரிம விதிகள் : ஆவண எழுத்தர் களுக்கு ஆவணம் எழுத உரிமம் வழங்கும் முறையை 1982 ஆம் ஆண்டில் அரசு அறிமுகம்செய்து அதற்கான தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளை இயற்றியது. இந்த விதிகளின் படி, பதிவு செய்யப்படவேண்டிய எல்லா ஆவணங்களும், உரிமம் வழங்கும் அதிகாரம் பெற்ற அதிகாரியிடம் அதாவது, பத்திரப் பதிவுத்துறைத் தலைவரிடம் உரிமம் பெற்ற ஆவண எழுத்தரால்



மட்டுமே எழுதப்படவேண்டும். உரிமம் வழங்க அதிகாரம் பெற்ற அதிகாரியால் நடத்தப்படுகிற ஆவண எழுத்தர் உரிமத் தேர்வில் தேர்ச்சி பெறாத வரையில் எந்த ஒரு நபரும் உரிமம் பெறத் தகுதி பெற மாட்டார். ஆவண எழுத்தர்களைத் தேர்வு செய்யும் வகையில் விரைவில் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.

(இ) நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox Machine):— மதுரை, சென்னை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 15 பத்திரப் பதிவு அலுவலகங்களுக்காக மொத்தம் 3,31,344 ரூபாய் செலவில் 15 நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்க அரசு அனுமதித்தது. இந்த 15 நகல் எடுக்கும் இயந் திரங்களும் சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகங்களில் நிறுவப் பெற்று தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்களின் மூலம், நகல்கள் தயாரிக்கப்பெற்று, விண்ணப் பம் செய்துகொண்ட நாளிலேயே உரிய நகல்கள் பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன.

6. பணியாளர் மேம்பாடு :—(i) அடிப்படைப் பணியா யாளர்கள், முறைப்பணியில் இரவு நேரங்களில் பத்திரப் பதிவு அலுவலகங்களை காவல் செய்யும் பணிச் சுமையிலிருந்து அவர் களை விடுவிப்பதற்காக எல்லாப் பத்திரப் பதிவு அலுவலகங் களுக்கும் இரவு நேர காவலாளிகளை நியமனம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. படிப்படியாக ஒரு திட்டத்தின் கீழ் 1980–81, 1981–82, 1982–83 ஆம் ஆண்டுகளில் முறையே 75, 100, 50 பதவியிடங்களுக்கு அரசு இசைவளித்தது. 1983–84 ஆம் ஆண்டில் மேலும் 50 பதவியிடங்களுக்கு அனுமதி யளிக்கக் கருதியுள்ளது.

(ii) பத்திரப் பதிவு அலுவலகங்களில் பெருகி வரும் பணிச் சுமையைக் கருதி, படிப்படியாக ஒரு திட்டத்தில்கீழ் 416 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு அனுமதியளிக்க அரசு முடிவு செய்துள்ளது. 1975–76 முதல் 1982–83 ஆம் ஆண்டு வரையில் 275 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு அரசு இசை வளித்துள்ளது. 1983–84-ஆம் ஆண்டில் மேலும் 50 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு இசைவளிக்க அரசு கருதியுள்ளது.

(iii) தகுதிபெற்ற தற்காலிகப் பிரிவு எழுத்தர் அனைவரையும், இளநிலை உதவியாளராகப் பதவி உயர்த்துவதற்கென்று வரையறுக்கப்பட்ட நியமன விகிதத்தைப் பின்பற்றாமல் பதவியில் காலியிடம் ஏற்படுகிற போதெல்லாம் இளநிலை உதவியாளராகப் பதவி உயர்த்த வேண்டுமென்றும், தற்காலிகப் பிரிவு எழுத்தர்களாக இனி யாரையும் பதவியில் அமர்த்தக் கூடாதென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(iv) 1982–83 ஆம் ஆண்டில் அரசு 10 இளநிலை பதிவேடு கட்டுவோர் பதவிகளுக்கு இசைவளித்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 11 இளநிலை பதிவேடு கட்டுவோர் பதவிகளுக்கு இசைவளிக்கக் கருதியுள்ளது.

(v) தற்போது 22 தணிக்கைக் குழுவினர் உள்ளனர். ஒவ்வொரு குழுவிலும் மாவட்டப் பத்திரப் பதிவாளர் ஒருவரும், உதவியாளர் ஒருவரும், தட்டச்சுப் பொறியாளர் ஒருவரும் உள்ளனர். 1983–84 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 2 தணிக்கைக் குழுக்களுக்கு இசைவளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(vi) பத்திரப் பதிவு அலுவலகம் ஒவ்வொன்றிலும் பதிவறை எழுத்தர் ஒருவரை நியமிக்க அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் 30 பதிவறை எழுத்தர் பதவிகளுக்கு அரசு இசைவளித்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 30 பதவிகளுக்கு இசைவளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. <u>வருவாய் வழிவகைகள்</u> :—பத்திரப் பதிவுக்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரங்கள்மீது விதிக்கப்படுகின்ற முத்திரைத் தாள் கட்டணம், பதிவுக் கட்டணங்கள், நகல் எடுப்பதற்காக விதிக்கப்படுகிற கட்டணங்கள், பத்திரங்களைத் தேடுவதற்கான கட்டணங்கள் முதலியவை இத்துறையின் முக்கிய வருவாய் தரக் கூடியனவாகும். முத்திரைத் தாள் கட்டணமும் பதிவுக் கட்டணங்களும் சொத்துக்களின் அங்காடி மதிப்பையொட்டி விதிக்கப்படு



கின்றன. சொத்துக்களின் அங்காடி மதிப்பைக் குறிப்பிடும் வழிகாட்டிப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு அங்காடி மதிப்பை எளிதில் மதிப்பீடு செய்ய உதவும் வகையில் பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நிலத்தின் மதிப்பு கணிசமான அளவு உயர்ந்துள்ளதால் வழிகாட்டிப் பதிவேடுகள் 1981 செப்டம்பர் திங்களில் திருத்தியமைக்கப்பட்டது. சீட்டு நிதிகள், சங்கங்கள், திருமணங்கள் முதலியவற்றைப் பதிவு செய்வதிலிருந்தும் இத்துறைக்கு ஓரளவு வருவாய் கிடைக்கிறது.

1981–82-ல் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 10,30,384 ஆகும். 1982–83 ஆம் ஆண்டில் 1982 ஏப்ரல் முதல் நவம்பர் வரையில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 6,62,420 ஆகும்.

9. <u>பதிவுக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல்</u> :—ஆவணங் களைப் பதிவு செய்வதற்குச் செலுத்த தக்க கட்டணங்களிலிருந்து கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினரைப் பொறுத்தமட்டில் முழுக் கட்டணச் சலுகையும், அத்தகைய சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஏனைய வகுப்பினரைப் பொறுத்தவரையில் பாதிக் கட்டண சலுகையும் அரசு நிரந்தரமாக அளித்து வருகிறது.

30—6—1984 வரையில் கடன்கள் பெறுவதற்காக வணிக வங்கிகள் சார்பில் உழவர்கள் எழுதித் தரும் ரூ. 5,000 வரையிலான அடைமானப் பத்திரங்கள், உத்தரவாதத்திற்குச் செலுத்தத்தக்க முத்திரைத் தாள் தீர்வையில் பாதியை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

1982–83-ல் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தில் முகமையில் பணியாற்றுகிற முன்னாள் அரசுப் பணியாளர்கள் 9 பேர் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் பெயருக்கு எழுதிக் கொடுத்த அடைமானப் பத்திரத்திற்குரிய முத்திரைத் தாள் தீர்வையையும் பதிவுக் கட்டணத்தையும் அரசு திரும்பச் செலுத்தியுள்ளது.

10 சீட்டு நிதிகள் நிருவாகம்:—(i) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் முதலில் தமிழ் நாட்டில் சில பாகங்களில் [illegible]—7—1964 அன்று செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர் இச்சட்டம் 1—12—1969-லிருந்து மாநில முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டது. பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் அலுவல் முறையில் சீட்டு நிதி இயக்குநராவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவி புரிய பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர் பதவித் தரத்தில் சீட்டு நிதிக் கூடுதல் இயக்குநர் உள்ளார். மாவட்டப் பதிவாளர்கள் (உறுதிமொழி) அந்தந்த மாவட்டகளில் சீட்டு நிதிகளை ஆய்வு செய்யும் அதிகாரிகளாவர். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் மாவட்டப் பதிவாளர் தரத்தில் சீட்டு நிதி ஆய்வு அதிகாரி ஒருவர் தனியாக உள்ளார். இவர் சீட்டு நிதி இயக்குநர் அலுவலகத்தில் இருக்கிறார். 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின்கீழ் சார் பதிவாளர்கள் அனைவரும் சீட்டு நிதிப் பதிவாளர்களாவர். ஒரு சார் பதிவாளருக்கு மேலுள்ள அலுவலகங்களில் பணியில் மிகவும் இளநிலையிலுள்ளவர் சீட்டு நிதிப் பதிவாளராகச் செயல்படுவார்.

(ii) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தை (மத்திய சட்டம்) நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து, இச்சட்டத்தின்கீழ் விதிகள் இயற்றப்பட்டவுடன், சீட்டு நிதிகளை முறைப்படுத்துவதற்கான பயனுள்ள விதித்துறைகளைக்கொண்ட மத்தியச் சட்டம் இம்மாநிலத்தில் கொண்டுவரப்படும்.

(iii) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் செயல்படுவதை நிருவகிப்பதற்கென்றே அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் குறித்த விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | பத்திரப் பதிவுத்துறை துணைத் தலைவர் பதவித் தரத்தில் சீட்டு நிதி கூடுதல் இயக்குநர். | 1 |
| 2. | சென்னை மாநகரத்திற்கு மாவட்டப் பதிவாளர் தரத்தில் சீட்டு நிதிகள் ஆய்வு அதிகாரி. | 1 |





| | | |
|---|---|---|
| 3. | சார் பதிவாளர் (நிலை II) பதவித் தரத்தில், சீட்டு நிதி பதிவாளர்கள் (விசாரணை—வழக்கு தொடருதல்). | 21 |
| 4. | சீட்டு நிதி தணிக்கையாளர்கள் .. .. | 10 |
| 5. | உதவியாளர் .. .. .. .. | 1 |
| 6. | இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 9+32 |
| 7. | சீட்டு நிதிகள் இயக்குநர் அலுவலகத்தில் சார் பதிவாளர் (நிலை I) பதவித் தரத்தில் கண்காணிப்பாளர். | 1 |
| 8. | சார் பதிவாளர்(நிலை II) .. .. .. | 1 |
| 9. | உதவியாளர் (சீட்டு நிதிகள் இயக்குநர் அலுவலகத்தில்). | 1 |

இப்பதவிகளைத் தவிர, சீட்டு நிதிகள், சங்கங்கள் தொடர்பான பணியைக் கவனிப்பதற்காக சார் பதிவாளர் (நிலை II) பதவிகள் 42க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(iv) 1980–81 ஆம் ஆண்டு முடிவில் 17,423 சீட்டு நிதிக் கம்பெனிகள் இருந்தன. 1981–82 ஆம் ஆண்டு இறுதியில் சீட்டு நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை 18,438 ஆக அதிகரித்துள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 14.45 இலட்சம் வருவாய் கிடைத்தது. ஆனால் 1981–82-ல் ரூ. 22·24 இலட்சம் வருவாய் கிடைத்தது. தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் சீட்டு நிதிப் பதிவாளர்கள் வைத்துவரும் பிணைய வைப்புத் தொகையின் மதிப்பு 1981–82-ம் ஆண்டு முடிவில் ரூ. 17·02 கோடியாகும். 1980–81 ஆம் ஆண்டு இறுதியில் பிணைய வைப்புத் தொகையின் மதிப்பு ரூ. 14·59 கோடியாகும்.

(v) 1981–82 ஆம் ஆண்டில் அனுமதியின்றி 107 சீட்டுக் கம்பெனிகள் நடத்தப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது, 89 இனங்களில் சீட்டு நடத்துநர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்

பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய குற்றங்கள் தொடர்பாக நடப்பாண்டில் 2,263 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றின் முந்தைய ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உட்பட 2,787 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப் பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர். வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூ. 55,770 ஆகும். மொத்த செலவு 1980–81-ல் ரூ. 8·55 இலட்சமாகும். 1981–82-ல் ரூ. 14·28 இலட்சமாகும்.

(vi) <u>வருவாய் வாயில்</u>:—சீட்டு நிதிக் கம்பெனிகளிடமிருந்து துணை விதிகளைப் பதிவு செய்தல், பத்திரங்களைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள், தணிக்கைக் கட்டணங்கள் முதலியவை சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் கிடைக்கும் வருவாயாகும். கட்டண அட்டவணை 1981 அக்டோபரில் திருத்தியமைக்கப்பட்டது. 1980–81-ல் ரூ. 14·45 இலட்சம் வருவாய் கிடைத்தது. ஆனால் 1981–82 ஆம் ஆண்டு வருவாய் 22·24 இலட்சமாக உயர்ந்துள்ளது.

(vii) <u>மேம்பாடு</u> : சீட்டு நிதி நிறுவனம் அமைப்பதன்மூலம் சீட்டு நிதிகளை நடத்த அரசு கருதியுள்ளது. தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம் அமைப்பது குறித்த தொடக்கப் பணிகளைக் கவனிப்பதற்காக இ.ஆ.ப., பதவித்தரத்தில் தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம் அமைப்பதற்கான நடைமுறைகள்குறித்து முடிவு செய்யப்பட்டு வருகின்றன.

11. 1977–78 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் வரவு-செலவு குறித்த விவரம் வருமாறு :

| ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. | 359·26 | 218·85 |
| 1978–79 .. .. ... | 537·84 | 334·[illegible]0 |



| ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1979–80 .. .. .. | 568·27 | 265·00 |
| 1980–81 .. .. .. | 559·51 | 299·88 |
| 1981–82 .. .. .. | 912·54 | 354·92 |
| 1982–83 .. .. .. | 570·79 | 313·34 |
| (1982-ஏப்ரல் முதல் அக்டோபர் வரையில்). .. .. . | .. | .. |

## இணைப்பு III.

(788ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக்காண்க).

பால் பண்ணை வளர்ச்சித்துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள்.

கோரிக்கை எண் 10.

கொள்கை விளக்கம்.

1983-84.

மனிதனுக்குத் தேவையான உணவு வகையில் பால் ஒரு முக்கியமான சத்துள்ள உணவு ஆகும். பாலில் எல்லா வகையான தாதுப்பொருள்களும்; வைட்டமின்களும் அடங்கியுள்ளன. பாலை எல்லா வயதினரும் பல வழிகளில் பயன்படுத்தி வருகின்றார்கள். பால் முக்கியமான கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால் அது ஒரு விவசாயத் துணைத் தொழிலாகும். பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் ஆங்காங்கு அமைப்பதின் மூலம் பால் உற்பத்தியாளர்களின் நலன் பேணப்படுவதுடன் நகர்ப் புறங்களில் உள்ள பால் நுகர்வோர்களுக்குச் சிறந்த நல்ல தரமான பாலையும் அதன் உப பொருட்களையும் நியாயமான விலையில் வழங்குவதின் மூலம் அவர்களின் நலனும் பாதுகாக்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர்களது நலனைக் காக்கும் பொருட்டு அனைத்து முன்னேற்பாடான வசதிகளும் அரசால் இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1958 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் பால்பண்ணை வளர்ச்சித் துறை நிறுவப்பட்டது. 1963-ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப் பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. கிராமங்களில் கிடைக்கும் அதிகமான பாலை சென்னை மற்றும் மதுரை பால்பண்ணைகளுக்கு அனுப்பு வதற்கு முன் பக்குவம் செய்யும் பொருட்டு அநேக குளிரூட்டும் நிலையங்கள் அவ்வப்பொழுது நிறுவப்பட்டன. 1972 ஆம் ஆண்டு பால் கொள்முதல், பக்குவப்படுத்த மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு பால்வளநிறுவனம் ஏற்றுக்கொண்டது. பின்பு, 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால் வள நிறுவனம் ''தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமாக'' மாற்றப்பட்டது. பால்பண்ணை வளர்ச்சித் துறை இம்மாநிலத்தில் கிராம அளவில் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதையும் மாவட்ட அளவில் ஒன்றியங்களை நிறுவுவதையு கவனித்து வருகிறது.

பால் பண்ணை வளர்ச்சித் துறை, கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவைகளை மேற்பார்வை செய்து தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. ''பால் பெருக்குத் திட்டம் 1-இல் சேராத தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இத்துறை செயல்பட்டு வருகிறது. ''தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பால் பெருக்குத் திட்டம் 1-இல்'' சேர்ந்த செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மற்றும் மதுரை முதலிய 9 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.



தமிழ்நாட்டில் பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம் :—கிராம அளவில் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. கிராம அளவில் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ''ஆனந்த்'' பாணியில் அமைக்கப் படுகிறது. ஆனந்த் பாணி கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு :—

(அ) முன்பு அமைக்கப்பட்ட வழக்கமான சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அதன் அளவின் அடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டு வந்ததற்கு மாறாக தற்போது அமைக்கப் படும் புதிய சங்கங்களில் உற்பத்தியாகும் பாலை அவ்விடத்திலேயே ஒவ்வொரு அங்கத்தினரும் சங்கத்திற்கு வழங்கும் பாலில் உள்ள கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) இச்சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) இச்சங்கங்கள் உற்பத்தியாளர் நலனை ஆதாரமாகக் கொண்டவையாகும்.

(ஈ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கால்நடை மருத்துவப்பணி, செயற்கைமுறை கருத்தரிப்பு, கால்நடை சமச்சீர்த் தீவனம் போன்ற அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே கொடுக்கப்படுகின்றன. இத்தகைய உற்பத்தி யாளர்களின் சங்க ஊழியர்கள் செயற்கைக் கருதரிப்புப் பணி செய்யும் முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றனர்.

(உ) கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கமும் மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், மாநில அளவில் அவ் ஒன்றியங்களின் உறுப்பினர் களை அங்கத்தினர்களாகக் கொண்ட இணையமும் ஆகிய மூன்று அடுக்கு முறை மலர்ந்துள்ளது.

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதின் வளர்ச்சி.—(அ) தமிழ்நாட்டில் 4,431 ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு நடைபெற்று வருகின்றன.

1982–83 ஆம் ஆண்டில் (1982 டிசம்பர் 31 வரை) 396 சங்கங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 338 சங்கங்கள் மட்டுமே நிறுவப்பட்டன.

1983–84 ஆம் ஆண்டில் புதிதாக 500 உற்பத்தியாளர் சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1982–83 ஆம் ஆண்டில் (1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை) 75 வழக்கமான வர்த்தகச் சங்கங்கள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 1983 மார்ச்சு திங்கள் முடிவடைவதற்கு முன்னால் இன்னும் 75 வர்த்தக சங்கங்கள் மாற்றி அமைக்கப்படும்.

1983–84 ஆம் ஆண்டில் 200 வழக்கமான வர்த்தக சங்கங்களை "ஆனந்த்" முறையிலான பால் உற்பத்தி சங்கங்களாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1982–83 ஆம் ஆண்டு 38 செயல்படாத சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டு "ஆனந்த்" பாணியில் செயல்பட்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டு 39 செயல்படாத சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டன.

1983–84 ஆம் ஆண்டில் 150 செயல்படாத சங்கங்களை புதுப்பித்து உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.



தமிழ்நாட்டில் உள்ள பால்கூட்டுறவு சங்கங்களின் மாவட்டவாரி புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| துணைப் பதிவாளர் (பால் பதம்) வட்டம். | மாவட்டம். | செயல்படும் சங்கங்கள். | | | பிரதான சங்கங்கள். | | | ஒன்றியங்கள். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆனந்த் பாணி | வழக்கமான சங்கங்கள். | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள். | செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள். | மொத்தம். | ஆனந்த் பாணி | கூட்டுறவு பால் ஒன்றியம். | செயல்படாத நிலையிலுள்ள ஒன்றியம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 காஞ்சிபுரம் | செங்கல்பட்டு | 400 | 33 | 1 | 175 | 609 | 1 | .. | .. | 1 |
| | சென்னை .. | 1 | 4 | 15 | 3 | 23 | .. | .. | .. | .. |
| 2 வேலூர் .. | வட ஆற்காடு | 564 | 27 | .. | 110 | 701 | 1 | .. | .. | 1 |
| 3 கடலூர் .. | தென் ஆற்காடு | 241 | 3 | 1 | 315 | 560 | 1 | 3 | .. | 4 |
| 4 சேலம் .. | சேலம் | 474 | 3 | 1 | 108 | 586 | 1 | 1 | .. | 3 |
| 5 தர்மபுரி .. | தர்மபுரி | 264 | 1 | .. | 76 | 341 | 1 | 1 | .. | 2 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | ஈரோடு .. | பெரியார் | 829 | .. | 2 | 16 | 347 | 1 | 1 | .. | 2 |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 293 | 3 | .. | 77 | 373 | 1 | .. | .. | 1 |
| | | நீலகிரி .. | 83 | 14 | .. | 11 | 108 | 1 | .. | .. | 1 |
| 8 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 210 | 40 | .. | 219 | 469 | 1 | 1 | .. | 2 |
| | | தஞ்சாவூர் | 56 | 45 | .. | 179 | 280 | 1 | .. | .. | 1 |
| | | புதுக்கோட்டை | 25 | 16 | .. | 57 | 98 | 1 | 1 | .. | 2 |
| 9 | மதுரை .. | மதுரை .. | 520 | 133 | .. | 497 | 1,150 | 1 | 2 | .. | 3 |
| 10 | விருதுநகர் .. | இராமநாதபுரம் | 381 | 20 | .. | 291 | 692 | 1 | .. | .. | 1 |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி | 519 | 29 | .. | 106 | 654 | 1 | 2 | .. | 3 |
| | | கன்னியாகுமரி | 71 | 9 | 1 | 3 | 84 | 1 | .. | .. | 1 |
| | மொத்தம் .. | | 4,431 | 380 | 21 | 2,243 | 7,075 | 15 | 12 | 1 | 28 |



பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விசேஷ அம்சம் கொண்ட புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) ஆரம்பச் சங்கங்கள்—

| | |
|---|---|
| (1) தமிழகத்திலுள்ள செயல்படும் பால் கூட்டுறவுகளின் எண்ணிக்கை. | 4,811 |
| (2) பால் வழங்கும் கூட்டுறவுகளில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை (செயல்படும் சங்கங்கள் மட்டும்) .. | 11 13 (இலட்சம்). |
| (3) சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (செயல்படும் சங்கங்கள் மட்டும் .. .. .. | ரூ. 230.86 (இலட்சம்). |

(ஆ) கூட்டுறவு பால் ஒன்றியங்கள்—

| | |
|---|---|
| (1) பால் வழங்கும் ஒன்றியங்களின் எண்ணிக்கை .. .. | 12 |
| (2) பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் எண்ணிக்கை .. .. | 15 |
| (3) பால் ஒன்றியங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை .. .. | 27,000 |
| (4) ஒன்றியங்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. .. .. | ரூ. 45.80 (இலட்சம்). |

(இ) உற்பத்தியும் விற்பனையும்.—

| | |
|---|---|
| (1) நாள் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி (சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள் பொறுத்தமட்டில்.) | 7.74 இலட்சம் லிட்டர். |
| (2) உள்ளூர் சராசரி விற்பனை .. | 3.42 இலட்சம் லிட்டர். |
| (3) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு ஒன்றியங்கட்கு நாள்தோறும் வழங்கும் சராசரி பால் அளவு. | 4.32 இலட்சம் லிட்டர். |

திட்ட மதிப்பீடுகள்.—(1) பால் கொள்முதல் குழு—ஏழு பால் கொள்முதல் குழுக்கள் தற்பொழுது "பால் பெருக்குத் திட்டம்" அமுல்படுத்தாத தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(2) நடமாடும் கால்நடை மருந்தகங்கள்—எட்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் (1982–83-ல் ஒப்பளிக்கப்பட்ட நான்கும் சேர்த்து) பால் பெருக்கும் திட்டம் அமுல்படுத்தாத, மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் திட்டமில்லாத மதிப்பீட்டின் கீழ் நான்கு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(3) திருநெல்வேலியில் ஓர் பால் பண்ணை.—ரூபாய் 86 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் நிலையம் ஒன்றை திருநெல்வேலியில் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் அத்திட்டத்தை அமல்படுத்த அரசு ரூபாய் 26 இலட்சம் விடுவித்துள்ளது. திருநெல்வேலியில் கட்டிடம் கட்டுதல், மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திடம் (TURNKEY) முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(4) புதுக்கோட்டையில் ஓர் பால் குளிரூட்டும் நிலையம்.—புதுக்கோட்டையில் ரூபாய் 18.26 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலை கையாளுகிற ஓர் குளிரூட்டு நிலையம் அமைக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த பணியினையும் தமிழ்நாடு கூட்டுறவு பால்உற்பத்தியாளர்கள் இணையத்திடம் (TURNKEY) முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(5) கூட்டுறவுகளுக்கு மானியம்.—(அ) 1982–83 ஆம் ஆண்டிற்கு பால் கூட்டுறவுகளுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப பணியாளர்களுக்காக ரூபாய் 61,000 க்கு மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாட்டுத் தீவன வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு சங்க அங்கத்தினர்களுக்கு தீவன வித்துக்கள் வாங்க சங்கம் ஒன்றிற்கு ரூபாய் 5,00 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. தீவனத்திற்காக ஏக்கர் ஒன்றிற்கு ஒருசங்கத்தின் ஒரு அங்கத்தினருக்கு ரூ. 200 வழங்கப்படுகிறது.

1982–83 ஆம் ஆண்டில் மானியம் ரூபாய் 18,400—11 சங்கங்களில் இருக்கும் 154 அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தீவனப்பண்ணை பராமரிப்புக்கு மானியம் வழங்க 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 0.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



(6) கடன் உதவி.—பால் கூட்டுறவு சங்கங்களுக்குப் பால் குளிர்விப்பான்கள், பால் கருவிகள், குளிர் பதனங்கள், போக்குவரத்து வாகனங்கள், ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்ட கடனுதவி அளிக்க 1983–84 ஆம் ஆண்டில் ரூபாய் 6 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(7) சென்னை நகரிலும் மற்றும் மாவட்டங்களிலும்—கூட்டுறவு பால் நுகர்வோர் சங்கங்கள் அமைத்தல்—(அ) பங்குத் தொகை உதவி.—பால் விநியோகத்தில் ஏற்படும் சிக்கலை பெருமளவில் களைந்தெரியவும், சீர்படுத்தவும் சென்னை நகரிலும் மற்றும் மாவட்டங்களிலும் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நுகர்வோருக்கு பால் விநியோகம் செய்கின்ற பணியினை மேற்கொள்ளும். அத்தகைய சங்கங்களுக்கு பங்கு தொகை மூலமாக நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது சென்னை நகரில் 15 கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களும் மாவட்டப் பகுதிகளில் 6 நுகர்வோர் சங்கங்களும் (செங்கல்பட்டு—1, கடலூர்—1, சேலம்—1, ஈரோடு—2, கன்னியாகுமரி—1) இருக்கின்றன. 1982–83 ஆம் ஆண்டில் 21 சங்கங்களுக்கு அரசு ரூ. 5[illegible],000 பங்குத் தொகையாக வழங்கியுள்ளது.

(ஆ) நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு நிர்வாக பணியாளர் உதவி.—1982-83 ஆம் ஆண்டில் 10 சங்கங்களுக்கு ரூபாய் 60,000 நிர்வாகப் பணியாளர்களின் செலவின்பொருட்டு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நலத் திட்டம்.—ஆதி திராவிடர் நலத் திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவுகளின் ஆதி திராவிட அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்க ஆதி திராவிட நல மதிப்பீட்டில் அரசு மானியம் வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டின் அதிக பட்ச விலை ரூபாய் 2,500 என்று எடுத்துக் கொண்டு மானியத் தொகை 50 சதவீதம் வரை, ஒரு கறவை மாட்டுக்கு ரூபாய் 1,250 (அதிக பட்சம்) என்று நிர்ணயித்து, பிப்ரவரி 1982 மாதத்திலிருந்து வழங்கப்படுகிறது.

1982-83-ஆம் ஆண்டில் ஆதி திராவிட அங்கத்தினர்களில் 1,800 நபர்கள் பயன் அடையும் பொருட்டு ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமூகப் பாதுகாப்பு நலத் துறை மதிப்பீட்டிலிருந்து ஆதி திராவிடராக இருந்து கிருத்துவ மதத்திற்கு மாறிய அங்கத்தினர்கள் பயன் அடையும் பொருட்டு ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல 1983-84 ஆம் ஆண்டிற்கு 2,520 ஆதி திராவிடர் அங்கத்தினர்கட்கு ரூபாய் 21 இலட்சம் நிதி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 360 ஆதி திராவிட கிருத்துவ அங்கத்தினர்கட்கு ரூபாய் 3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் 3,000 ஆதி திராவிடர் அங்கத்தினர்கள்

கறவை மாடுகள் வாங்க ரூபாய் 37.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. இத்தொகை இவ்வாண்டு மார்ச்சு மாதம் இறுதிக்கு முன்பாகவே வழங்கப்பட்டுவிடும்.

1983-84 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.—(1) "பால் பெருக்குத்திட்டம்" அமுல்படுத்தாத மாவட்டங்களில் மேலும் 5 பால் கொள்முதல் குழுக்கள், ரூபாய் 15.08 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்.

(2) ரூபாய் 3.69 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேலும் 5 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல்.

(3) (அ) நிர்வாகத்தை திறன்படுத்தும் பொருட்டு மேலும் ஒரு துணைப் பதிவாளர் (பால் பதம்) அலுவலகம் ரூபாய் 2.88 இலட்சத்தில் தஞ்சையில் ஏற்படுத்தல்.

(ஆ) சென்னை, தலைமை அகத்திலுள்ள கூட்டுறவுப் பிரிவிற்கு உதவி செய்யும் பொருட்டு அலுவலகப் பணியாளர்களை (Ministerial Staff) ரூபாய் 0.40 இலட்சம் செலவில் அமைத்தல்.

(4) 1983-84 ஆம் ஆண்டில், பாலாடையை பதப்படுத்துவதற்கும் பதப்படுத்திய பாலாடையை டப்பிகளில் அடைத்து விநியோகம் செய்வதற்கும் தேவையான கருவிகள் வாங்க கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு ரூபாய் 1.50 இலட்சம் கடனாக அளித்தல்.

(5) ரூபாய் 5.25 இலட்சம் செலவில் வழக்கமான வர்த்தக பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மாற்றி அமைத்தல் மற்றும் செயல்படாத சங்கங்களை புதுப்பித்தல்.

(6) தஞ்சை மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பாலை கையாளுகின்ற குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூபாய் 19 இலட்சம் செலவில் நிறுவுதல். இதற்காக 1983-84-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9 இலட்சம்.

(7) 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சம் செலவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை துவக்குவதற்கும், அவைகளை நிர்வகிப்பதற்கும் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு தக்க பயிற்சி அளித்தல்.

(8) ரூபாய் 17 இலட்சம் செலவில் மாதவரம் பால் பண்ணையில் உள்ள சாலையை மாற்றி அமைத்தல் மற்றும் புதுப்பித்தல். இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 8.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்ட ஒதுக்கீடு.—கோரிக்கை எண் 10.—1981-82 ஆம் ஆண்டின் கணக்குகள், 1982-83 ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு, 1983-84 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு பின்வருமாறு:—



(ரூபாய் ஆயிரத்தில்.)

| அம்சம். | 1981-82 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1982-83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1982-83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பால்பெருக்குத் திட்டத்தின்கீழ் வராத மாவட்டங்களில் பால் கொள்முதல் குழுக்கள் அமைப்பது .. .. | 4,97 | 5,53 | 6,71 | 22,37 |
| 2 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பது .. .. | 1,17 | 7,31 | 5,32 | 5,85 |
| 3 பால் கூட்டுறவுகளுக்கு மானியம் வழங்குதல்:— | | | | |
| (1) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப்பணியாளர்கள் .. .. .. | 18,52 | 75 | 7,61 | 5,9[illegible] |
| (2) இவைப்பண்ணை பராமரிப்பு .. | 10 | 10 | 10 | 10 |

| (1) | 1981–82 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். (2) | 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (3) | 1982–83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு (4) | 1983–84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| 4 துறையின் நிர்வாகத் திறனைப் பலப்படுத்தும் திட்டம் .. .. .. .. | 79 | 1,76 | 1,83 | 5.09 |
| 5 புதுக்கோட்டையில் குளிரூட்டும் நிலையம் அமைத்தல் .. .. .. .. | .. | 81 | 78 | 78 |
| | 25,55 | 16,26 | 22,35 | 40.09 |

கோரிக்கை எண் 10-ன்கீழ் 1983-84 ஆம் ஆண்டின் திட்டத்தின்கீழ் வரும் பணி மற்றும் திட்டத்தின்கீழ் வராத பணி ஆகியவற்றின்கீழ் பால் பண்ணை வளர்ச்சித் துறைக்காக மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 119.28 இலட்சம் அளவில் அமையும்.

திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண் 57 பல்வகை மூலதனச் செலவு.

| அம்சம். (1) | 1981–82 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். (2) | 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (3) | 1982–83 ஆம் ஆண்டின் திருந்திய மதிப்பீடு. (4) | 1983–84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு .. | (—)10 | .. | 50 | .. |
| 2 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி உதவி முதலீடு—நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளரின் ஒன்றியம். | 25,00 | 25,00 | 27.50 | 5,00 |
| 3 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு நிதி உதவி முதலீடு (அலுவலகக் கட்டிடம் கட்ட) .. .. | .. | .. | 7,00 | .. |
| 4 பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் .. .. .. .. | .. | 37,62 | 37,62 | .. |
| 5 பட்டுக்கோட்டையில் குளிரூட்டும் நிலையம் அமைத்தல் .. .. .. .. | .. | .. | .. | 9,00 |
| 6 மாதவரம் பால் பண்ணையில் உள்ள அனுகு சாலையை மாற்றி வடிவமைக்க .. | .. | .. | .. | 8,00 |
| | 24,90 | 62,62 | 72,62 | 22,00 |

திட்ட ஒதுக்கீடு கோரிக்கை எண் 53—மாநில அரசின் கடன்களும் முன் பணங்களும்.

| அம்சம். | 1981–82 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1982–83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1983–84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 1 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள், சோதனைக் கருவிகள், குளிரூட்டும் சாதனங்கள், மற்றும் வாகனங்கள், ஆய்வுக்கூடம், கிடங்கு முதலியன கட்டுதல் போன்றவற்றிற்கு கடனுதவி. | 5,03 | 5 00 | 5,00 | 5,00 |
| 2 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் அளித்தல், நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம். | 25,00 | 25,00 | 27,50 | 7,50 |
| 3 கோயம்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு. | .. | .. | .. | 1,50 |
| | 30,03 | 30,00 | 32,50 | 14,00 |



தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பணிகளின் கொள்கை விளக்கம்.—தமிழக அரசின் கொள்கை அடிப்படையின் முடிவின் காரணமாக தமிழ்நாட்டில் பால்வளத்தை வருங்காலத்தில் மேலும் மேம்பாடு அடையச்செய்ய மூன்று அடுக்கு இணைப்பு அமைப்புகளாக கிராமப்புறத்தில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களாகவும் மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1981 ஆம் ஆண்டு, பிப்ரவரி முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பணிகள் அனைத்தும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் இது வரையில் செயல்படுத்தப்பட்டு வந்துள்ள அனைத்து முன்னேற்ற பணிகளும் மற்றும் பால் பெருக்குத் திட்டமும், தற்சமயம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தினால் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் பால்பெருக்குத் திட்டத்தின்கீழ் 9 மாவட்டங்களில் இது வரைக்கும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள பால் உற்பத்தி, பால் கொள்முதல், பால் பதனிடுதல், பால் விற்பனை ஆகிய வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தனித்து செயல்படுவதற்கான வளர்ச்சி அடைந்தவுடன் படிப்படியாக ஒப்படைக்கப்படுகின்றன:

(அ) இதுவரைக்கும் இணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள பால் உற்பத்தி, பால் கொள்முதல், பால் பதனிடுதல், பால் விற்பனை ஆகிய வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் சேலம், பெரியார், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு 1981 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் மாற்றப்பட்டுவிட்டன.

(ஆ) 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தருமபுரி மாவட்டத்திலுள்ள பால் கொள்முதல், வளர்ச்சிப் பணிகள் ஆகிய அனைத்தும், மற்றும் தருமபுரி கிருட்டிணகிரியிலுள்ள இரண்டு குளிரூட்டும் நிலையங்களும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிருட்டிணகிரியில் உள்ள உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணையின் கட்டுமான வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன. உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணையின் பணிகள் முடிவடைந்தவுடன் விரைவில் தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டுவிடும்.

(இ) 1983 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து மதுரை இணையத்தால் செயல்படுத்திய பால் கொள்முதல் தொழில் நுட்ப வசதி, குளிரூட்டும் நிலையங்கள் இயக்குதல்

ஆகிய பணிகள் அனைத்தும் மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன.

(ஈ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் ஏற்கனவே ஒரு குளிருட்டும் நிலையத்தை இயக்கி வருகின்றது. இம்மாவட்டத்தில் உள்ள பால் பண்ணை வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு கூடிய விரைவில் மாற்றப்பட்டு விடும். இதுபோலவே தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பால்பண்ணை வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிடம் தக்க நேரத்தில் மாற்றப்படும்.

பால் உற்பத்தியினால் பயனடைந்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை, விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் வருமாறு:—

| விவரங்கள். | 1981 1-2-1981 முதல் 31-12-1981 வரை. | 1982 1-1-1982 முதல் 31-12-1982 வரை. | 1983 1-1-1983 முதல் 31-12-1983 வரை (திட்ட மதிப்பீடு சென்னை/ மதுரை பால் பண்ணைகள்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பாலுற்பத்தி (இலட்சம் லிட்டரில்). | 861.15 | 1,100.00 | 1,320.00 |
| பயனடைந்த விவசாய அங்கத்தினர்களின் எண்ணிக்கை. | 5,10,700 | 5,30,460 | 5,50,000 |
| விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை (லட்சம் ரூபாயில்). | 1,820·48 | 2,670·00 | 3,204·00 |



தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் இணைக்கப்பட்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக பால் கொள்முதல் செய்யப்பட்ட விவரங்கள்:

(இலட்சம் லிட்டரில்)

| மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் பெயர். | 1981 1-2-1981 முதல் 31-12-1981 வரை. | 1982 1-1-1982 முதல் 31-12-1982 வரை. | 1983 1-1-1983 முதல் 31-12-1983 வரை. (மதிப்பீடு.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தென் ஆற்காடு மாவட்டம் | 59.64 | 83.97 | |
| வட ஆற்காடு மாவட்டம் | 113.92 | 221.99 | |
| சென்னை-செங்கல்பட்டு .. மாவட்டம். | 59.46 | 84.32 | |
| தருமபுரி மாவட்டம் .. | 72.13 | 110.17 | |
| சேலம் மாவட்டம் .. | 197.93 | 292.25 | 1,710.00 |
| கோயம்புத்தூர் மாவட்டம் | 107.80 | 138.87 | |
| நீலகிரி மாவட்டம் .. | 66.37 | 72.93 | |
| பெரியார் மாவட்டம் .. | 124.78 | 177.25 | |
| மதுரை மாவட்டம் .. | 307.90 | 365.08 | |
| | 1,109.93 | 1,546.83 | |

4.5 விழுக்காடு கொழுப்புச் சத்தும் 8.5 விழுக்காடு கொழுப்பில்லாத இதர திண்மைச் சத்தும் கூடிய, தரப்பட்ட பாலானது முக்கியமாக மதுரை மற்றும் சென்னை பண்ணைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

விற்பனை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| விவரங்கள். | 1981 1-2-1981 முதல் 31-12-1981 வரை. | 1982 1-2-1982 முதல் 31-12-1982 வரை. | 1983 1-1-1983 முதல் 31-12-1983 வரை. (மதிப்பீடு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பால் (இலட்சம் லிட்டரில்) | 1,115.50 | 1,37 .57 | 1,321.00 |
| நாளொன்றுக்கு சராசரியான அளவு (லட்சம் லிட்டரில்). | 3.34 | 3.76 | 3.62 |
| வெண்ணெய் (கிலோ கிராமில் இலட்சத்தில்). | 6.18 | 7.38 | 7 65 |
| நெய் (கிலோ கிராமில் இலட்சத்தில்.) | 3.84 | 6.90 | 0.45 |
| பால் பொடி (கிலோ கிராமில் இலட்சத்தில்) | 6.43 | 7.31 | 1.70 |

தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தின் 1980-81 (ஏப்ரல் 80 முதல் ஜனவரி 1981 வரை) ஆண்டின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 32.02 கோடி. இது 1981 ஆம் ஆண்டில் (1-2-1981 முதல் 31-12-1981 வரை) ரூ. 35.49 கோடியாக உயர்ந்துள்ளது. 1982-ல் (1-1-1982 முதல் 31-12-1982 வரை) ரூ. 51 கோடியாகவும், 1983-ல் (சென்னை திட்டம் மட்டும்) ரூ. 48 கோடியாகவும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கால் நடைத் தீவன ஆலை:—மாதவரம் பால் பண்ணையிலும் வட ஆற்காடு மாவட்ட ஆம்பூரிலும் உள்ள கால்நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் மணியொன்றுக்கு 4 முதல் 5 டன் உற்பத்தி திறனுள்ளவை. இவைகளில் தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரி 1,500 டன் தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது. குத்தகை எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள கால்நடை தீவன உற்பத்தி ஆலை தொடர்ந்து குத்தகையில் செயல்படுகின்றது. இங்கு உற்பத்தியாகும் கால்நடைத் தீவனமானது கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறையிலுள்ள கால்நடைப் பண்ணைகள் மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட்ட கால்நடைத் தீவன அளவின் விவரங்கள் பின்வருமாறு:—

| | 1981 1-2-1981 முதல் 31-12-1981 வரை. | 1982 1-1-1982 முதல் 31-12-1982 வரை. | 1983 1-1-1983 முதல் 31-12-1983 வரை. (மதிப்பீடு) |
|---|---|---|---|
| கால்நடைத் தீவனம் (மெட்ரிக் டன்னில்.) | 15,112 | 18,200 | 20,000 |

ரூபாய் பத்து இலட்சம் செலவில் ஒரு குளிகை வடிவில் தீவனம் தயாரிக்கும் ஆலை (Pellitiser Plant) மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

மேலும் பெரியார் மாவட்டத்தில் மாவட்ட கூட்டுறவு உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் இயங்கும் கால்நடை தீவன ஆலை தீவனங்களை தயாரித்து சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு தேவையானவற்றை அனுப்புகின்றது.

பால் பெருக்குத் திட்டம்—(அ) பால் பெருக்குத் திட்டம் 1, 1981-ம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதியோடு முடிவு பெற்றது.

(ஆ) பால் பெருக்குத் திட்டம் 1, 1972-ம் ஆண்டு ஜூலை மாதம் ரூ. 15 கோடி மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பாலை உற்பத்தி செய்யும் ஒரு புதிய பால் பண்ணை அம்பத்தூரில் நிறுவப்பட்டது. ஈரோட்டில் உற்பத்தியை சமப்படுத்தும் பால் பண்ணை ஒன்றும் (F eder Balancing Dairy) சங்கராண்டபாளையம், சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் புதிய பால் குளிரூட்டும் நிலையங்களும் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்யும் கால் நடை தீவன ஆலையும் அமைக்கப்பட்டுள்ளன. புதிய குளிரூட்டும் நிலையங்கள் முறையே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூரிலும் மற்றும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விழுப்புரம், சின்ன சேலம் ஆகிய இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. நாள் ஒன்றுக்கு 10 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட பால் பொடி உற்பத்தி

ஆலை ஒன்று மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளைக் கொண்டு ஒரு நியுகிளியஸ் ஜெர்ஸி பண்ணை நீலகிரி மாவட்டத்திலுள்ள உதக மண்டலத்தில் நிறுவப்பட்டுள்ளது.

(இ) சேலத்தில் பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் ஏற்று அமைக்கப்பட்டு வந்த உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை யின் கட்டிட வேலைகள் பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. வட ஆற்காடு மாவட்டத் திலுள்ள திருவண்ணாமலையிலுள்ள பால் பதனிடும் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

(ஈ) சென்னையில் உள்ள பால் பண்ணைகளுக்கு தேவை யான ஆடை நீக்கிய பால்பொடி (Skim milk powder) மற்றும் வெண்ணெய் கொழுப்பு (Butter oil) இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் தன்னுடைய சேகரித்து வைக்கப்பட்டுள்ள இருப்பிலிருந்து அளித்து வருகிறது.

(உ) பால் பெருக்குத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் 2, ரூ. 42.87 கோடி மூலதனத்துடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த பால் பெருக்கு திட்டம் செயல்படும் 9 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குப் விரிவான துணைச் செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதற்காக இந்தி ஒப்புதல் இந்திய பால்பண்ணை வளர்ச்சி கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த பால் பெருக்குத் திட்டம் செயல்படும் 9 மாவட்டங் களுக்கும் விரிவான ஒன்றிய செயல் திட்டங்கள் வரையப்பட் டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) 1984-85ஆம் ஆண்டிற்குள் 4,550 பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புறங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது (தற்போது அமைக்கப்பட்டுள்ள 3,107 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இதில் சேரும்).

(2) பால் கொள்முதலுக்காக பதிமூன்று இலட்சம் கறவை மாடுகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 48 சதவீதம் செயற்கை முறை கருத்தரித்தல் திட்டத்தின் கீழ் அமைக்கப் படும். இத்திட்டம் முடியும் தருவாயில் நாளொன்றுக்கு பாலுற் பத்தி 34.8 இலட்சம் லிட்டர் என அதிகரிக்கும்போது பால் கொள்முதல் நாளொன்றுக்கு சுமார் 10.90 இலட்சம் லிட்டர் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3) தமிழ்நாட்டில் உள்ள எல்லா முக்கிய Class I நகரங்களிலும் பால் பெருக்குத் திட்டம் செயல்படும். 9 மாவட் டங்களிலுள்ள எல்லா Class II நகரங்களிலும் பால் விற்பனை செயல்படுத்தப்படும்.

(4) மாநிலத்தில் இத்திட்டத்தின்கீழ் அடங்கும் முக்கிய நகர்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 10 8 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்வதற்காக, 7.17 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தக்கூடிய திறனும், உற்பத்தியை சமப்படுத்தும் திறனும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் II-ன்கீழ் பெறப்பட்ட நிதி உதவியின் முன்னேற்றம் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப் பட்டுள்ளது:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | பால் பெருக்குத் திட்டம் 11-ன்கீழ் முடிவான நிதி ஒதுக்கீடு. | 42,87.00 |
| 2 | இந்தியப் பால்வள வளர்ச்சிக் கழக 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கொடுத்துள்ள நிதி. | 4,06.76 |
| 3 | உபயோகப்படுத்தப்பட்ட தொகை .. (30-12-1982) | 1,97.13 |

(ஊ) ஒன்பது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் முறையே பெரியார், கோயம்புத்தூர், சேலம், உதகமண்டலம், மதுரை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் இந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளன.

9. சிறப்புத் திட்டங்கள்.—தமிழ்நாடு அரசினால் மேற் கொள்ளப்பட்ட சில சிறப்புத் திட்டங்களை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் தொடர்ந்து செயல் படுத்தி வருகிறது. அவைகள் முறையே, தருமபுரி, இராமநாத புரம் மாவட்டங்களுக்கான வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக் கான திட்டம், நீலகிரி மாவட்டத்திற்கான மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டம் மற்றும் கன்று வளர்ப்புத் திட்டம் ஆகியவை களாகும்.

செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்கள், நடைபெறும் மாவட்டம், கொடுக்கப்பட்ட நிதியின் அளவு, செலவிடப்பட்ட தொகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண். (1) | சிறப்புத் திட்டத்தின் பெயர். (2) | செயல் படுத்தப் படும் மாவட்டம். (3) | கொடுக்கப்பட்ட நிதி. (4) | பயன் படுத்தப் பட்ட தொகை. (5) | உருவாக்கப்பட்ட சங்கங்கள். (6) | பால் கொள் முதல் (லிட்டரில்) (7) | பயனடைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சங்களில்.) | | | | |
| 1. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | நீலகிரி | 284.12 | 213.89 | 108 | 33,000 | 16,506 |
| 2. | வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம். | இராமநாதபுரம். | 74.26 | 42.13 | 612 | 65,875 | 5,875 |
| 3. | வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம். | தருமபுரி | 109.59 | 89.20 | 326 | 45,000 | 34,525 |
| 4. | வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம். | கிருஷ்ணகிரி (பால்பொடி ஆலை.) | 175.00 | 243.74 | .. | .. | .. |
| 5. | சிறப்பு கால்நடைப் பராமரிப்புத் திட்டம் (கன்று வளர்ப்புத் திட்டம்). | தென்ஆற்காடு. கோயம்புத்தூர். மதுரை. சேலம். வடஆற்காடு. | 229.36 | 229.36 | .. | .. | 23,795 (திட்டத்தில் கொண்டு வரப்பட்ட கன்றுகள்.) |



வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கான திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரியில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் திறன் கொண்ட உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை நிறுவப்பட்டு வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 175 இலட்சம் (50 சதவீதம் கடனாகவும், 50 சதவீதம் மானியமாகவும்) முழுமையாக பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு இணையம் மேற்கொண்டு இத்திட்டத்திற்காக கேட்டுள்ள ரூ. 100 இலட்சம் அரசின் ஆலோசனையில் உள்ளது.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடியில் ரூ.150 லட்சம் செலவில் ஒரு பால் பதனிடும் ஆலை அமைக்கப்பட உள்ளது. இது தினசரி 50,000 லிட்டர் பாலை பதனிடும் திறன் கொண்டதாக இருக்கும்.

உதக மண்டலத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு புதிய பாலாடைக்கட்டி தொழிற்சாலை (Cheese plant) வளர்ச்சியில் உள்ளது. கட்டுமான பணிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள ரூ. 114 இலட்சம் தவிர இதற்கு தேவையான இயந்திரங்களுக்கு பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய தொழிற்சாலைக்கான முழுமையான தொகை ரூ. 300 இலட்சமாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பாலுக்கு தேவையான கச்சாப் பொருட்கள், ஆடை நீக்கப்பட்ட பால் பொடி/பால் தயாரிக்க உதவும் வெண்ணெய் கொழுப்பு பொருள்கள் விலையில் ஏற்றத்தை ஈடு செய்ததன் பொருட்டு பாலின் விற்பனை விலையில் 1 லிட்டருக்கு 25 பைசா வீதம் 16-6-1982 முதல் கூடுதல் செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரத்தில் விற்பனை செய்யப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 3.13 இலட்சம் லிட்டருக்கு உயர்ந்துள்ளது. மேலும் இனி வரப்போகும் மாதங்களில் பால் விற்பனை செய்யப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 3.60 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும்.

சென்னை நகரில் பால் விநியோக முறையினை சீர்திருத்தி அமைப்பதன்பொருட்டு 17 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பால் நுகர்வோர்களின் நலன்களை கருதி 1983 ஆம் ஆண்டில் சுமார் 50 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும்.

சங்க எண்ணிக்கை, பால் கொள்முதல் மற்றும் பால் விற்பனை, செயற்கை முறையில் கருத்தரித்தல் ஆகியவைகளின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| (1) | 1981. (2) | 1982. (3) | அதிகமான விழுக்காடு. (4) |
|---|---|---|---|
| பால் வளர்ச்சித் துறை — | | | |
| 1 சங்கங்களின் எண்ணிக்கை. | 4,281 | 4,811 | 12 |
| 2 பால் கொள்முதல் (சராசரி லிட்டர் இலட்சத்தில்) | 6.34 | 7.74 | 22 |
| 3 பால் விற்பனை (உள்ளூர்) (சராசரி லிட்டர் இலட்சத்தில்). | 2 20 | 3.42 | 55 |
| 4 செயற்கைமுறை கருத்தரித்தல். | 2,017 | 3,733 | 85 |
| தமிழ் நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம். | | | |
| 1 பால் கொள்முதல் (சராசரி லிட்டர் இலட்சத்தில்). | 2.58 | 3.01 | 16.67 |
| 2 பால் விற்பனை (சராசரி லிட்டர் இலட்சத்தில்), | 3.34 | 3.77 | 12.87 |
| 3 மொத்தம் விற்பனை (சராசரி இலட்சத்தில்). | 11.38 | 13.97 | 22.76 |
| 4 லாபம்/நஷ்டம் (இலட்சத்தில்). | (—)18.75 | +57.00 | .. |

மேலே கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து 1982 ஆம் ஆண்டு பால் கொள்முதல் மற்றும் பால் விற்பனை, 1981 ஆம் ஆண்டைவிட அதிகரித்திருப்பது தெரிய வருகிறது. 1981–ல் இருந்த கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 1982 ல் 12 விழுக்காடு அதிகரித்துள்ளது. செயற்கை முறையில் கருத்தரித்தல் 85 விழுக்காடு அதிகரித்துள்ளது.





## இணைப்பு IV

(788ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பும் திட்டங்களும்

(ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்.)

வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் போதிய அளவில் பரவலாக்குவதற்காகச் சிறு தொழில்களை மேம்படுத்துவது தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கையின் நோக்கங்களில் ஒன்றாகும். தமிழ்நாடு அரசு, பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் தொடங்குவதற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. சிறு தொழில், கிராமத்தொழில்களின் வளர்ச்சிக்காகப் பல்வேறு முகவரமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI), தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC) தொழில் வணிகத் துறை இயக்ககம் ஆகியவை அடங்கும்.

2. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும் தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கியும் சிறு தொழில்களுக்கு நிதியுதவி அளித்து வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் சிறு தொழில் துறையைச் சேர்ந்த பிரிவுகளுக்கு ரூ. 37 கோடி மதிப்புள்ள 5,183 கடன்களை வழங்கியது. இவற்றில் 3,146 தொழில் பிரிவுகள் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன. இவற்றிற்கு அளிக்கப்பட்ட கடன் ரூ. 2[illegible].50 கோடியாகும்

3. 1981–82இல், ரூ. 52 கோடி மதிப்புள்ள 5,699 கடன்கள் வழங்கப்பட்டன இவற்றில் ரூ. 44.4 கோடி 5,646 சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன. 3180 சிறு தொழில் பிரிவுகள் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டன. இவற்றிற்கு ரூ. 26.90 கோடி கடனுதவி அளிக்கப்பட்டது; 198[illegible]–83இல் ரூ. [illegible]2.57 கோடி கடனாக வழங்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கிக்கு அரசுப் பங்குத் தொகையாக ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது வங்கி தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு உதவும்.

[1983 மார்ச் 24

5. நிலக்கரி வரப்பெறாததால், தமிழ்நாட்டிலுள்ள பல சிறு தொழில்களுக்குப் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே பல சிறு தொழிற்சாலைகள், தனியார் நிலக்கரி வணிகர்களையே நம்பியுள்ளன. நிலைமையைச் சீராக்கவும், போதுமான நிலக்கரி கிடைக்கச் செய்யவும் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் 4 நிலக்கரி சேமிப்புக் கிடங்குகள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. அரசு, இச் சங்கங்களுக்கு ரூ. 32 இலட்சம் வழங்கி அவற்றின் பங்கு மூலதனத்தில் பங்குபெறக் கருதியுள்ளது.

6. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தான் தொடங்கியுள்ள பல்வேறு திட்டங்களின்கீழ் சிறு தொழில், மிகச் சிறு தொழில்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தக் கருதியுள்ளது. அத்திட்டங்களாவன:—

(1) வாடகைக் கொட்டகைகளை குத்தகை—விற்பனை அடிப்படை மாற்றுதல்.

(2) வட்டி இல்லாத விற்பனை வரிக் கடன் வழங்குதல்.

(3) நலிவுற்ற சிறு தொழில் பிரிவுகளுக்கு தொடக்க உதவித் தொகை வழங்குதல்.

(4) மத்திய முதலீட்டு உதவித் தொகையை வழங்குதல்.

(5) மாநில அரசு உதவித் தொகை வழங்குதல்.

(6) முக்கியமான மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து வழங்குதல்.

(7) விற்பனை வசதிகள் செய்து கொடுத்தல்.

7. தொழில் வணிகத் துறை இயக்ககம் எடுத்த வளர்ச்சி நடவடிக்கைகளின் பலனாக, நிலையாகப் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1978 மார்ச்சில் 18,780 ஆக இருந்து 1982 நவம்பர் இறுதியில் 44,874 ஆக உயர்ந்துள்ளது. சிறு தொழில்கள் தொடர்பான நடைமுறைகளை எளிதாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்து பல அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

8. 1982-83-ல் தொழில் வணிகத் துறை இயக்ககம் அளித்த நிதியுதவியைக் கொண்டு 43 ஆதிதிராவிடர் தொழில் முனைவர்கள் தொழில் பிரிவுகளைத் தொடங்கியுள்ளனர். ஆதிதிராவிடர், பழங்குடியினர் தொழில் முனைவர்கள் 541 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 19.69 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளனர்.



ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழும் வேலை வாய்ப்புக்காக கிராமப்புற இளைஞர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் பயிற்சியளிக்கும் திட்டத்தின்கீழும், மேற்சொன்ன வகையை சேர்ந்த 4767 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. ரூ. 11.80 இலட்சம் உதவித் தொகை அளிக்கப்பட்டது.

9. தொழில் வளர்ச்சியை வலுப்படுத்த, தொழில் வணிகத் துறை இயக்ககம் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஊக்கமளித்து வருகிறது. 1982 ஏப்ரலுக்கும், டிசம்பருக்கும் இடையே 49 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. இதில் சுமார் 200 பேர் பணிபுரிகின்றனர்.

10. தமிழ்நாடு கைவினைப் பொருள் வளர்ச்சிக் கழகம் 1973 ஆகஸ்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. கைவினைப் பொருள்களுக்காக தனிக்கழகம் அமைப்பதன் முக்கிய நோக்கம், கைவினைஞர்களுக்குத் தொழில் நுட்ப மேம்பாட்டு உதவி அளிப்பதன் மூலமும், இம்மாநிலத்தில் கைவினைப்பொருள்களின் மேம்பாட்டுக்குப் புதிய உத்வேகம் அளிப்பதும் விற்பனை நிலையங்கள் மூலம் அவர்களது உற்பத்திப் பொருட்களை விற்பதுமே ஆகும்.

11. இவ்வாண்டிலும் இந்நிறுவனம் விற்பனை வசதிகளுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்தது. 1982-83 ஆம் ஆண்டில் சுற்றுலாத் தளங்களான கன்னியாகுமரியில் ஒன்றும், பாண்டிச்சேரியில் ஒன்றும் ஆக இரு விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கைவினைப் பொருள்களின் விற்பனை அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1980-81 இல் ரூ. 143 இலட்சமாக இருந்த விற்பனை மதிப்பு 1981-82 இல் ரூ. 197 இலட்சமாக அதிகரித்தது 1982-83 இல் இது ரூ. 210 இலட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகம் 1981-82ல் ரூ. 5.00 இலட்சம் (தற்காலிகமான) ஆதாயம் ஈட்டியுள்ளது. இப்போது இதன் விற்பனை அதிகரித்துள்ளதால் ஆதாயம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

12. 56 உற்பத்தி நிலையங்கள் உள்ள தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) பல திட்டங்களை வகுத்துள்ளது. அரசுத் துறைகளுக்கும் பொதுத் துறை நிறுவனங்களுக்கும் ஆற்றிவரும் பணியும் உற்பத்தியும் இத்திட்டங்களினால் அதிகரிக்கும். தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் சமையல் பாத்திரங்களைக் குறித்த காலத்திற்குள் வழங்கியது. பற்பொடி வழங்கும் திட்டத்திற்கான பற்பொடியை ''சிட்கோ'' நிறுவனம் வழங்குகிறது.

13. பட்டுப்புழு வளர்ப்பு கிராமப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. 1983-84 ஆம் ஆண்டில் மேலும் 8,000 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது. இதனால் முசுக்கொட்டை பயிரிடப்பட்ட பரப்பு 63,000 ஏக்கராக உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாடு முழுவதும் பட்டு நூல் சுற்றும் 36 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் 65 கிராமப் பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்களும் உள்ளன. 1983–84 ஆம் ஆண்டில் மேலும் 5 பட்டுநூல் சுற்றும் தொழில் கூட்டுறவு சங்கங்களையும் 50 கிராமப் பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்களையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பைவோல்டின் இன பட்டுப்புழு வளர்க்கும் திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது.

14. தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் நோக்கோடு ரூ. 10 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தோடு தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தை அரசு அமைத்துள்ளது.

### தொழில் வணிக இயக்குநரகம்.

பொதுவாக, தொழில்களின் மேம்பாட்டிற்கு அதிலும் குறிப்பாக சிறு தொழில்களின் மேம்பாட்டிற்கு, தொழில் வணிக இயக்ககம் திட்டங்களைத் தயாரித்து, அவற்றைச் செயலாக்கி வருகிறது. வேலையில்லாப் பிரச்சினை பெருகியுள்ளதன் காரணமாக, சமீப ஆண்டுகளில், வேளாண்மைத் தொழில்கள் மற்றும் இதர பணிகள் போன்ற பொருளாதார நடவடிக்கைகளின் வாயிலாக அநேக வளர்ச்சித் திட்டங்கள் மாநிலத்தில் செயலாக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் மேம்பாடடையச் செய்வது, மாநில அரசின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும்.

தொழில் வணிக இயக்ககம் மேற்கொண்ட பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளின் விளைவாக, கடந்த நாலரை ஆண்டுகளில் நிரந்தரமாக பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட சிறுதொழில் சான்றிதழ்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 1978–ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் 18,789 ஆக இருந்த சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை, 1982-ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் 44,874 ஆக உயர்ந்துள்ளது. சிறுதொழில் நிலையங்களை அமைக்க முன்வந்த 26,185 சிறு தொழில் முனைவோருக்குத் தற்காலிகச் சான்றிதழ்கள்



வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றை, செயல்படும்தொழில் நிலையங்களாக ஆக்குவதற்குத் தக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்த இயக்ககத்தின் பல்வேறு செயலாக்கப் பிரிவுகளின் நடவடிக்கை பற்றிய சிறப்பம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### I. மாவட்ட தொழில் மையங்கள்:

முன்பெல்லாம் வழக்கப்படி சிறு தொழில்களை முறைப்படுத்துதல் போன்ற பணிகளுக்கே முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள தொழில் வணிக இயக்ககத்தின் கள அமைப்பு தற்போது வளர்ச்சிப் பணிகளில் முனைப்பாக ஈடுபாடு கொண்டு இயங்க வகை செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவர்களை ஊக்குவிப்பதற்காகக் கருத்தரங்குகள் நடத்துவது இந்த மையங்களின் முறையான நடவடிக்கையாக உள்ளது. அந்நடவடிக்கைகளைத் தொடர்ந்து தேவையான உதவிகளை அளிப்பது இப்பொழுது முக்கியத்துவம் அடைந்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில், நவம்பர், 82 வரை, 60-க்கும் மேற்பட்ட வாய்ப்பு விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் 1,90' பேர் அக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். மாவட்ட தொழில் மையங்கள் அமைத்த பின்னர் எளிதாக்கப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் அவற்றின் மூலம் அளிக்கப்பட்ட உதவி ஆகியவற்றின் பலனாக, சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்களிடமிருந்து சுமார் 2,600 தொழில் அனுமதிகள், தகுதி வாய்ந்த சிறு தொழில் முனைவர்களுக்குக் கிடைத்துள்ளன. மாவட்ட தொழில் மையத் திட்டம் செயலாக்கப்பட்ட 1978–ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 1982-ஆம் ஆண்டு டிசம்பர் வரை, சுமார் 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய 22,789 நிரந்தர சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 30,000 பேருக்கு மேல் வேலை வாய்ப்பளிக்கின்ற 14,813 கைவினைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட காலத்தில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து 11,342 சிறு தொழில் முனைவர்களுக்கு ரூ. 24.19 கோடி நிதியுதவி பெற்றுத் தரப்பட்டுள்ளது. 1975-76-க்கு மற்றும் 1977-78-க்கு இடைப்பட்ட காலத்தில் இத்துறை எடுத்துக் கொண்ட முயற்சிகளினால் வங்கிகளிலிருந்து 2,252 சிறு தொழில் முனைவர்களுக்கு ரூ. 2.69 கோடி மட்டுமே நிதியுதவியளிக்கப்பட்டது. இதிலிருந்து, மாவட்டத் தொழில் மையங்களின் சாதனை குறிப்பிடத்தக்கது என்பது புலனாகிறது. இவ்வாறு மாவட்டத் தொழில் மையங்கள் நேரடியாக வங்கிகளிலிருந்து பெற்றுத் தந்த உதவியைத் தவிர, 38,381 சிறு மற்றும் குடிசைத் தொழில் முனைவர்கள் மற்றும் கைவினைஞர்கள் ஆகியோர், தேசிய சிறு தொழில் நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து ரூ. 36.25 கோடி நிதியுதவியைப் பெற்றுள்ளனர்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராம இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், 82,426 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில், 23,847 பேர் மகளிராவர். இத்திட்டங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 382.96 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களிலிருந்து பெற்ற தகவல்களின் படி, பயிற்சி பெற்றவர்களில் சுமார் 12,500 பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர் என தெரிகிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாவட்ட தொழில் மையங்கள் மிக்க ஈடுபாடு கொண்டுள்ளன.

1981–82ஆம் ஆண்டில் கிராமக்கைவினைஞர் திட்டத்தின் கீழ் 657 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, ரூ. 6.57 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் 8 1 பேருக்கு பயிற்சியளிக்கப்படும் திட்டம் அமலாக்கப்பட்டு வருகிறது

ஆதி திராவிடர் மற்றும் மலை சாதி தொழில் முனைவர்களுக்கு சிறப்பு உதவி.

கடந்த இரண்டு ஆண்டுகளில், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி தொழில் முனைவர்களை வளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு முக்கியத்துவ அளிக்கப்பட்டது. சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டதன் பலனாக, 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை, 43 சிறு தொழில் முனைவர்கள் தொழில் நிலையங்களை அமைத்துள்ளனர்; 1,186 கைவினைஞர்களுக்கு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதே காலத்தில் 541 தொழில் முனைவர்களுக்கு ரூ. 19.6 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 4767 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு ரூ. 11.89 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்/மலைச் சாதி தொழில் முனைவர்களுக்கு சிறப்பு திட்டம்.

இந்த இரு வகுப்பினரையும் சார்ந்த தொழில் முனைவர்கள், நிதியுதவி பெறுவதற்கான, நிதி நிறுவனங்கள் கேட்கின்ற ஆரம்ப காலத் தொகையைக்கூட அளிக்க இயலாத நிலையிலுள்ளனர். எனவே கடன் தொகையில் 25 சதவீதம் ஆரம்ப காலத் தொகையாக வழங்கப்படுகிறது. எஞ்சிய 75 சதவீத தொகையை வங்கி கடனாக அளிக்கிறது. இவ்வகையில், 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 14 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை, ரூ. 4.76 இலட்சம் ஆரம்ப கால உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி.

தீப்பெட்டி தொழில்களில் ஈடுபடும்படி ஆதி திராவிட மக்களை ஊக்குவித்து அவர்களது பொருளாதார நிலையை மேம் படுத்துவதற்கு, தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்திட்டத்தின்படி நிதியுதவி (பங்கு மூலதனம் மற்றும் கடன்) அளிக்கப்படுகிறது தாழ்த்தப்பட்ட மக்கள் 51 சதவீத அளவுக்கோ அல்லது அதற்கு மேற்பட்டோ உறுப்பினர்களாக உள்ள சங்கங் களுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. 198 –82 ஆம் ஆண்டில், 18 சங்கங்கள் துவக்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் 19 சங்கங்க பதிவு செய்யப்பட்டன; ஒவ் வாரு சங்கத்திற்கும், அரசு பங்கு மூலதனமாக, ரூ. 7,500 வழங்கப் படும்.

நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்.

குறிப்பாக சிறுதொழில்களைப் பொறுத்தவரை நடைமுறை களை எளிமைப்படுத்துவதில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் இவ்வகையில் அநேக அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. நடைமுறைகளை மேலும் எளிமைப் படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்பொழுது, தொழிற் பகுதியில், குறிப்பிட்ட 14 வகைத் தொழில்களைத் தவிர, ஏனைய சிறு தொழில்களை தொடங்க, பொது சுகாதாரத் துறையிலிருந்து முன் அனுமதி ஏதும் பெறத் தேவையில்லை. உள்ளாட்சி அமைப்பே உரிமம் வழங்க லாம். இப் பட்டியல் மேலும் ஆய்வு செய்யப்பட்டு பட்டியலி லிருந்து மேலும், நான்கு உட்பிரிவுகளில் அடங்கிய தொழில் களையும் மற்றும் 2 தொழில்களையும் நீக்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

ஊராட்சி மற்றும் நகராட்சியில் உள்ள வரையறுக்கப்பட்ட தொழிற் பகுதிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியைச் சாராத பகுதிகளில் 5 குதிரைத் திறன் மின் சக்தி அமைப்புக்கு மேற்படாத தொழிற்சாலையை ஏற்படுத்துவதற் கான விண்ணப்பத்தினை நகரமைப்பு இயக்குநரின் பரிசீலனைக்கு அனுப்பப் தேவையில்லை என சமீபத்தில் ஆணையிடப்பட் டுள்ளது.

எளிமையாக்கப்பட்ட நடைமுறைகளின் பலன்கள் யாவும் பெரும்பாலான தொழில் நிலையங்களுக்குக் கிடைக்க வேண்டு மென்ற நோக்கத்துடன் எல்லை வரையறை செய்யும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் இப்பணி முடிக்கப்பட்டு விட்டது. மாநிலத்தின் பெரும் பகுதிகளில் உரிமம் வழங்குவதைத் துரிதப்படுத்துவதற்கு இது ஏதுவாய் அமையும்.

ஏற்கெனவே பதிவு பெற்றுள்ள முப்பத்திரண்டு தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை மூலதனத்தை அதிகமாக்கு வதற்கும், மத்திய அரசின் சிறப்பு உதவியைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்புக் களை அளித்து அவர்களைத் தாமாகவே சொந்தமாகத் தொழில் களை அமைப்பதற்கு இச்சங்கங்கள் உதவுவதற்கும் 1983-84 ஆம் ஆண்டில் இச் சிறப்புத் திட்டத்தின்படி உதவி அளிக்கப்படும்.

1983-84 ஆம் ஆண்டில் திட்டங்களை அமலாக்குவது, நிதி ஒதுக்கீடு இவற்றிற்கான இலக்கு பின்வருமாறு:—

| திட்டங்கள். | வரவு—செலவுத் திட்டம் 1983-84. | தாழ்த்தப்பட்ட மக்களுக்கு. | சதவீதம். | குடும்பங்கள் தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1. மாவட்ட தொழில் மையங்கள். | 95.12 | 38.05 | 40 | 400 |
| 2. தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு பணியாளர் சங்கங்கள். | 0.01 | .. | 33 | .. |
| 3. நிறைவு செய்யப்பட்ட தோல் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள். | 0.30 | 0.30 | 100 | .. |
| மொத்தம் | 95.43 | 38.35 | 40 | 400 |



## துறையின் நடவடிக்கைப் பிரிவுகள்.

### அ. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:—

கடந்த நான்காண்டுகளில் தொழிற் கூட்டுறவுத்துறை போற்றத் தக்க அளவுக்கு விரிவடைந்துள்ளது. இதனால், தீப்பெட்டி, தென்னை நார் போன்ற பெருமளவில் வேலை வாய்ப்பினை அளிக்கக்கூடிய கிராமத் தொழில்கள் துரித வளர்ச்சியடைந்துள்ளன. சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே வளர்ந்துள்ள சில குறிப்பிட்ட தொழில்கள், அவை தோன்றி வளர்ந்திராத புதிய பகுதிகளிலும் பரவியுள்ளன என்பது இந்த முன்னேற்றத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். பின்வருகின்ற அட்டவணையிலிருந்து தொழிற் கூட்டுறவுத் துறையில் தொழில்கள் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளன என்பதனை அறியலாம்.

| ஆண்டு. | தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | மகளிர் சங்கங்கள். | ஆதிதிராவிடர் சங்கங்கள். | பின்தங்கிய வர்களுக்குரிய சங்கங்கள். | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1977-78 .. .. .. | 297 | 51 | 21 | 3 | 1,509 | 1,762 |
| 1978-79 .. .. .. | 389 | 72 | 23 | 5 | 1,813 | 2,035 |
| 1979-80 .. .. .. | 559 | 217 | 23 | 5 | 2,489 | 2,874 |
| 1980-81 .. .. .. | 702 | 291 | 47 | 5 | 3,377 | 3,748 |
| 1981-82 .. .. .. | 840 | 365 | 72 | 5 | 3,649 | 4,218 |
| 1982-83 (31-12-1982)வரை | 881 | 374 | 100 | 5 | 2,974 | 5,085 |

சில குறிப்பிட்ட தொழில்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங் களின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:—

(i) தீப்பெட்டித் தொழில்.

தீப்பெட்டித் தொழில் வேலைப் பெருக்கத்தை அளிக்கவல்ல தொழிலாகும். இத் தொழிலில் மகளிரும் கூட பங்குகொண்டு குடும்ப வருவாய்க்குத் துணைபுரியக் கூடிய வகையில், ஏற்புடைய கூலியைப் பெற முடியும். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்

கின்ற மக்களுக்கு இது ஒரு ரப் பிரசாதமாகும். பின்வருகின்ற அட்டவணையிலிருந்து, வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சி யடையாத பகுதிகளில் சிறு தீக்குச்சி உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் மற்றும் தீக்குச்சி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை அடைந்துள்ள வளர்ச்சியினை 1977–78 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுவாரியாக அறியலாம்.

| ஆண்டு. | மொத்த பணிச் சங்கங்களின் எண்ணிக்கை. | சங்கங்கள் — இதற்கு முன் வளர்ச்சியடைந்த பகுதி. | சங்கங்கள் — இதற்கு முன் வளர்ச்சியடையாத பகுதி. | பணியாளர் சங்கங்களின் எண்ணிக்கை. | உறுப்பினர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1977-78 | 14 | 10 | 4 | 28 | 898 |
| 1978-79 .. | 18 | 10 | 8 | 99 | 1,377 |
| 1979-80 .. | 48 | 17 | 31 | 255 | 4,138 |
| 1980-81 .. | 85 | 39 | 46 | 335 | 5,513 |
| 1981-82 . | 103 | 48 | 55 | 426 | 8,060 |
| 1982-83 .. (31–12–1982) வரை. | 105 | 48 | 57 | 446 | 7,056 |

அனைத்து தீக்குச்சி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அருகிலுள்ள சிறு தீக்குச்சி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ளன.

மகளிர், ஆதி திராவிடர்கள், முன்னாள் இராணுவத்தினர் உடல் ஊனமுற்றோர் போன்றவர்களின் நலனுக்காகவே இந்த பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. பின்வருகின்ற அட்டவணை பல வகைப்பட்ட மக்களுக்காகத் துவக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையை விளக்குகிறது:—

| | |
|---|---|
| மகளிர் .. .. .. .. | 270 |
| ஆதிதிராவிடர் .. .. .. | 57 |
| முன்னாள் இராணுவத்தினர் .. .. | 2 |
| உடல் ஊனமுற்றோர் .. .. | 1 |
| மற்றவர்கள் | 116 |
| | 440 |

1977–ஆம் ஆண்டிற்குப் பிறகு, மாநிலத்தில் உள்ள சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாக்கம் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| ஆண்டு | உறுப்பினர்களின் பங்கு மூலதனம். | அரசினுடைய பங்கு மூலதனம் — தொழில் துறை மூலமாக. | அரசினுடைய பங்கு மூலதனம் — சமூக நலத் துறை மூலமாக. |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1977-78 .. .. | 30.89 | 2.75 | .. |
| 1978-79 .. .. | 39.00 | 4.00 | .. |
| 1979-80 .. .. | 119.00 | 7.[illegible]0 | 3.00 |
| 1980-81 .. .. | 162.00 | 8.25 | 6.00 |
| 1981-82 .. .. | 207.00 | 12.50 | 7.00 |
| 1982-83 (31–12–1982) வரை. | 217.00 | 13.50 | 7.00 |

| மொத்தம் | உற்பத்தி — கட்டுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | உற்பத்தி — மதிப்பு (ரூபாய் கோடியில்). | விற்பனை — கட்டுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | விற்பனை — மதிப்பு (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|
| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 2.75 | 8.65 | 4.[illegible]2 | 8.94 | 4.04 | 14,910 |
| 4.00 | 11.63 | 5.50 | 11.85 | 6.63 | 19,980 |
| 10.50 | 16.14 | 8.80 | 16.53 | 10.12 | 30,490 |
| 14.25 | 27.65 | 13.90 | 23.95 | 16.69 | 56,892 |
| 19.50 | 28.34 | 14.42 | 30.78 | 19.26 | 70,140 |
| 20.50 | 21.96 | 11.48 | 22.74 | 12.74 | 54,240 |

அரசு வழங்கி வரும் உதவிகள் :

1. முதல் மூன்றாண்டுகளுக்கு அரசு செலவில் தீப்பெட்டிச் சங்கங்களின் நடவடிக்கைகளுக்காகப் பணியாளர் உதவி அளிக்கப் படுகிறது. நான்காவது ஆண்டிலிருந்து ஆறாவது ஆண்டுவரை துறையினது செயலாளர்களுக்காக ஏற்படும் சராசரி செலவில் முறையே 25 சதவீதம் 50 சதவீதம் மற்றும் 75 சதவீத செலவு களைச் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளும். ஏழாவது ஆண்டிலிருந்து பணியாளர்களின் செலவுகளைச் சங்கம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. தீப்பெட்டிப் பணிச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசு ரூபாய் 51 இலட்சம் வழங்கியுள்ளது.

3. ஒவ்வொரு குடிசைத் தொழிலுக்கும் ரூபாய் 2,000 வீதமும், தீப்பெட்டிப் பணியாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500 வீதமும் மாநிலத் தொழில் நிதி உதவிச் சட்டத்தின் கீழ் பங்கு மூலதனம் வழங்க அரசு ஒப்புதலளித்துள்ளது.

| ஆண்டு. | | | ஒப்புதளிக்கப்பட்ட பட்ட தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1977-78 | .. | .. | 2,42,500 |
| 1978-79 | .. | .. | 9,31,000 |
| 1979-80 | .. | .. | 35,09,000 |
| 1980-81 | .. | .. | 23,45,560 |
| 1981-82 | .. | .. | 9,55,000 |
| | | | 79,83,060 |

4. குன்றக்குடியில், ரூ. 31 இலட்ச மதிப்பீட்டில் ஒரு தொழில் கூட்டுறவு பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலை அமைக்க அரசு ஒப்புதல் அளித்து, ரூ. 3 இலட்சம் பங்கு மூலதனமும் கொடுத் துள்ளது. இதற்குத் தேவையான நிதி உதவியை தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி கொடுத்து உதவுகிறது. இத்தொழிற் சாலையில், சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சேவை சங்கங்கள் அனைத்தும் அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளன. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் படும் பொட்டாசியம் குளோரேட்டை தொழிற் கூட்டுறவு





தீப்பெட்டி சேவை சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்; தவத்திரு குன்றக்குடி அடிகளார் இத்தொழிற்சாலைக்கு 4.18 ஏக்கர் நிலம் நன்கொடையாக கொடுத்துள்ளார். இதற்கு தேவையான கட்டிடம், அலுவலகம் மற்றும் கிடங்கு முதலிய வற்றை ரூ. 9.5 லட்சம் செலவில் கட்டுவதற்கு முடிவு செய்யப் பட்டுள்ளது. கட்டிட வேலை விரைவில் துவங்கப்படும். இயந்திரங் கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார நிறுவனம் இத்தொழிற்சாலைக்கு உயர் அழுத்த மின் சாரம் வழங்க இசைந்துள்ளது.

5. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டங்களின் கீழ் இத்தச்சி பணியாளர்களுக்குரிய பயிற்சித் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இது வரையில், தீக்குச்சி செய்வதில் 2,223 ஆடவர்களுக்கும், 897,4 மகளிருக்கும், ரூ. 16.82 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. தீப்பெட்டி தொழிலில் மேலும் பயிற்சி அளிப்பதற்கு அரசு ஆணை வழங்கி யுள்ளது.

6. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன், ரூ. 188 இலட்சம் செலவில் கருவிகள் மற்றும் துணை பாகங்கள் வாங்க வசதி செய்தலும் இதில் அடங்கும்.

மிகச் சிறு தொழிற் கூடங்கள் கட்டுதல்.

| மாவட்டம். | கட்டப் பட்டவை. | கட்டப் பட்டு வருபவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. செங்கற்பட்டு .. | 50 | 10 | 60 |
| 2. சேலம் .. .. | 200 | ... | 200 |
| 3. தர்மபுரி .. .. | 240 | ... | 240 |
| 4. மதுரை .. .. | 65 | .. | 65 |
| 5. இராமநாதபுரம் .. | 30 | .. | 30 |
| 6. தென்னாற்காடு .. | .. | 128 | 128 |
| | 585 | 138 | 723 |

7. கதர் மற்றும் கிராமத் தொழில் குழுவிலிருந்து வட்டி உதவித் தொகை, வாடகை மற்றும் மேலாண்மை உதவித் தொகை ஆகியன வழங்கப்படுகிறது. இச் சங்கங்கள், இதுவரையில், பெற்ற தொகை பின்வருமாறு:—

| ஆண்டு. | ஒப்புதலளிக்கப்பட்ட உதவித் தொகை. | ஒப்புதலளிக்கப்பட்ட வாடகை, மற்றும் மேலாண்மை உதவித் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1977-78 .. . .. | 3,34,450 | 33,979.63 |
| 1978-79 .. .. .. | 5,20,198 | 37,743.00 |
| 1979-80 .. .. .. | 7,99,179 | .. |
| 1980-81 .. .. .. | 16,24,986 | .. |
| 1981-82 .. .. .. | 25,70,532 | 4,200.00 |

8. பத்து சங்கங்களுக்கு அடிப்படை அமைப்பு வசதிகளை அளிப்பதற்கு ரூ. 16.54 இலட்சம் உதவி செய்யப்பட்டது.

9. ஏற்கெனவே மேலே கூறியுள்ளபடி, மைய அரசின் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், பின்வருகின்றவற்றை அரசு ஒப்புதலளித்தது.

1. கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குவதற்கு 100 சதவீத உதவித் தொகையும் 17 ஆதிதிராவிடர் தீக்குச்சிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய முதலாள் (Foreman) செலவும் ஒப்புதலளிக்கப்பட்டது. கருவிகள், சாதனங்கள் வாங்க ஒரு சங்கத்திற்கு ரூ. 10,000மும், முதலாள் ஒருவருக்கு ரூ. 3,600 வீதமும் ஆக மொத்தம் ரூ. 2,31,200-க்கு ஒப்புதலளிக்கப்பட்டது.



2. இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூரில், ஆதி திராவிடர்களுக்காக மரச் சிம்பு தொழிற்சாலை அமைக்கும் திட்டத்திற்கு நிலம், கட்டிடம் மற்றும் இயந்திரத்திற்கு உதவித் தொகையாக ரூ. 1.77 இலட்சமும், ஆரம்பக் காலத் தொகையாக ரூ. 50,000மும் ஒப்புதலளிக்கப்பட்டது. தமிழ்நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கி, தீப்பெட்டி பணிச் சங்கங்களுக்கு இதுவரை ரூ. 2.78 கோடி நடைமுறை மூலதனக் கடன் ஒப்புதலளித்துள்ளது.

தீப்பெட்டித் தொழிலுடன் தொடர்புடைய இதர திட்டங்கள்.

1. தீப்பெட்டிக்குரிய முகப்பு சீட்டுகள் (Labels) அச்சடிக்கின்ற தொழிற் கூட்டுறவு அச்சகம் ஒன்று சிவகாசியில் இயங்கி வருகிறது. இந்தக் கூட்டுறவு அச்சகம் ஆண்டொன்றுக்கு ரூ.52 இலட்சம் மதிப்புள்ள தீப்பெட்டி முகப்பு சீட்டுகளை அச்சிடுகிறது. மேலும் ஒரு தொழிற் கூட்டுறவு அச்சகத்தை கோவில்பட்டியில் துவக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் துவங்கும்.

2. சாத்தூரிலுள்ள தமிழ்நாடு மாநில தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு இணையம், திருநெல்வேலி மாவட்டம் வைப்பாரிலும், கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியிலும் இரண்டு தீக்குச்சி சிம்பு தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. இத் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவக்கியுள்ளன. இவை தீப்பெட்டி சங்கங்களுக்கு மரச் சிம்புகளை வழங்குகின்றன.

சாத்தூரிலுள்ள தமிழ்நாடு மாநில தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு இணையம், மதுரை மாவட்டத்தில் வைவேசபுரத்தில் ஒன்றும், கோயமுத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் ஒன்றும் ஆக இரண்டு தீக்குச்சி சிம்புத் தொழிற்சாலைகளை அமைக்க உத்தேசித்துள்ளது.

3. தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீல காகிதம் மற்றும் கிராப்ட் காகிதம் தயாரிப்பதற்கு, சிறிய காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பற்றி அரசு உத்தேசித்து வருகிறது.

## (i) தேயிலைத் தொழில்

நீலகிரி மாவட்டத்தில் 13 தேயிலைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவற்றில் 11 எற்கெனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இரண்டு தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்தத் தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் 7.128 சிறு தேயிலைப் பயிரிடுவோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு 13,570 ஏக்கர் நிலப்பரப்பு தேயிலைத் தோட்டம் சொந்தமாக உள்ளது. இச்சங்கங்கள், 40,000 பேருக்கு மேல் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலையளிக்கின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த தேயிலையில் 9 சதவீதம் இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றன.

1977–78 ஆம் ஆண்டிற்குப் பிறகு, தேயிலையின் ஏல விற்பனை விலையில் ஏற்பட்ட விலைக் குறைவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய சிக்கல்கள் இந்தக் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. மழை பெய்யாதமையாலும், மின்வெட்டினாலும், நடப்பாண்டில் இச் சிக்கல்கள் மிக மோசமான நிலையை அடைந்துள்ளன.

சிறு தேயிலை பயிரிடுவோருக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, மைய மற்றும் மாநில அரசுகள் கலால் வரி மற்றும் விற்பனை வரி போன்றவற்றைக் குறைத்து, சலுகைகள் வழங்கியுள்ளன. தேயிலைத் தொழிலின் பிரச்சினைகளை அறிவதற்காக ஆலோசனைக் குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது.

''இன்கோசெர்வ்'' என்றழைக்கப்படுகின்ற நீலகிரி சிறு தேயிலை பயிரிடுவோர் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம்தான் அனைத்து கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலைகளுக்கும் மையச் சங்கமாக உள்ளது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு சேமிப்பு கிடங்கு வசதி அளிக்கும் பொருட்டு, குன்னூரில் ஒன்றும், கொச்சியில் ஒன்றும் ஆக இரண்டு சேமிப்பு கிடங்குகளை இச்சங்கம் கட்டியுள்ளது. தேயிலைத் தூள் மற்றும் தேயிலையை 100 கிராம், 250 கிராம், 500 கிராம் கொண்ட பொட்டலங்கள் வடிவில் விற்கும் பணியினைச் சிறிய அளவில் இச் சங்கம் மேற்கொண்டுள்ளது.



மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும், ''இண்ட்கோ செர்வ்'' என்ற மையச் சங்கத்திற்கும், 1980–81 ஆம் ஆண்டில் ரூ.13.98 இலட்சமும், 1981–82 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சமும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், இத்திட்டத்தின் கீழ், ரூ. 15.00 இலட்சமும் செலவிடப்படுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்டப்பட்டு வருகின்ற இரண்டு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுள், ஒன்று சாலிஸ்பரியில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது. இத்தொழிற்சாலை 1983 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் உற்பத்தியைத் துவக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ரூ. 46.40 இலட்சம் இத்தொழிற்சாலைக்கு உதவ ஒப்புதலளித்துள்ளது. இரண்டாவது தொழிற்சாலையின் கட்டுமானப் பணி துவக்கப்பட்டுள்ளது இத்தொழிற்சாலையும் 1983–84 ஆம் ஆண்டின் மத்தியில் உற்பத்தியைத் துவங்கும். இத் திட்டமும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயலாக்கப்படும்.

முதன் முதலில் நிறுவப்பட்ட கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையான குந்தா கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை நவீன மயமாக்குவதற்காக ரூ.11.00 இலட்சம் மதிப்பில் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இத்திட்டத்தைச் செயலாக்கப்படும். இது, 1983–84 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தயாரிக்கப்பட்ட தேயிலையை அனுப்புவதற்கு வேண்டிய பெட்டிகள் பற்றாக்குறையாயுள்ளன. இது தேயிலைத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டுள்ள மற்றொரு பிரச்சினையாகும். இப்பெட்டிகள் தற்பொழுது தனியாரிடமிருந்து வாங்கப் படுகின்றன. தொடர்ந்தாற்போல் இப்பெட்டிகள் கிடைப்பதில்லை. கிடைக்கும் பெட்டிகளும் தரம் குறைந்துகாணப் படுகின்றன. சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும், நியாயமான விலையில் உரிய நேரத்தில் பெட்டிகளை வழங்குவதற்காகவும் முதல் நடவடிக்கையாக 'தமிழ்நாடு பிளைட்-வெனியர்ஸ் லிமிடெட்'' என்றழைக்கப்படுகின்ற தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் துவங்கப்பட உள்ளது. இத்தொழிற்சாலை, 1983–84 ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தியைத் துவங்கும்.

(iii) சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்,

தமிழ்நாட்டில், சுமார் 25,000 பேருக்கு சவ்வரிசித் தொழில் வேலையளிக்கிறது. மரவள்ளிக் கிழங்கு, பயிராகின்ற 50,000 ஹெக்டர் நிலத்தில் 28,000 ஹெக்டர் நிலம் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலுள்ளது.

உற்பத்தியாகின்ற சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களின் பெரும்பகுதி, வட இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. போதுமான நிதி வசதியின்மையால் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் த்யாரிப்பவர்கள் இருப்பு வைக்க இயலாத நிலையில் இருந்தனர். இதன் காரணமாக, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலை பெறமுடியவில்லை. இடைத் தரகர்களின் சுயநலம் காரணமாக, இப்பொருள் விற்பனையாகும் இடங்களில் இருந்த உயர்ந்த விலையின் பலனை இந்தத் தயாரிப்பாளர்கள் பெறமுடியவில்லை,

மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாளர்கள் அவர்களது பொருளுக்கு நல்ல விலை பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், 1981—82 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்களின் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம் அமைக்கப்பட்டது. இது, 1982—83 ஆம் ஆண்டில் வர்த்தகத்தைத் துவக்கியுள்ளது. சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள 500 தொழில் நிலையங்களில் 424 தொழில் நிலையங்கள், இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளன. அவற்றின் உற்பத்திப் பொருள்கள் இச்சங்கத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. இச்சங்கம் அமைக்கப்பட்டதன் பயனாக, உற்பத்தியாளர்களின் வர்த்தகத் திறன் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. முன்பு, உற்பத்தியாளர்கள் சவ்வரிசி மற்றும் மாவுப்பொருள்களை மூட்டை ஒன்றுக்கு முறையே ரூ 225-க்கும், ரூ. 160—க்கும் விற்று வந்தனர். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு மூட்டை ஒன்றுக்கு முறையே ரூ. 440—ம், ரூ. 310—ம் பெற்றுள்ளனர். இச்சங்கம் 31—12—82 வரை ரூ. 19.24 கோடிக்கும் அதிகமான சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களை விற்பனை செய்துள்ளது. 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் அரசுக் கடனகவும், ரூ. 50 இலட்சம் வங்கிக் கடனாகவும் இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தர்மபுரியிலுள்ள சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தொழில் நிலையங்களுக்காக இது போன்ற ஒரு சங்கம், 1982—83 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது, 16—12—82—லிருந்து விற்பனையைத் துவங்கியுள்ளது. இச்சங்கம் செயல்படத் துவங்கிய முதல் பதினைந்து நாட்களில், ரூ. 2.37 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளது. இதுவும் வெற்றிகரமாகச் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 31 தொழில்



நிலையங்களை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கத்திற்கு அரசிடமிருந்து ரூ. 5 இலட்சமும், வங்கியிடமிருந்து ரூ. 10 இலட்சமும் கடனாக அளிக்கப்பட்டுள்ளது.

(iv) கயிறுத் தொழில்.

சமீப ஆண்டுகளில், குறிப்பிடத்தக்க அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் மற்றுமொரு தொழில், கயிற்றுத் தொழிலாகும். 1980 ஆம் ஆண்டு வரை, மாநிலத்தில் 10 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களே இருந்தன. இத்தொழிலை வளர்ச்சியுறச் செய்யும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு கயிறுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு பங்கு கொள்வது, இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குவதற்கு உறுப்பினர்களுக்கு கடனுதவி அளிப்பது, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராம இளைஞர்களுக்கு பயிற்சியளிப்பது, சிறப்புத் திட்டத்தின் கீழ் சலுகை மற்றும் மகளிர் நலத் திட்டம் ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும்.

இச்சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979—80 | கடனுதவி .. .. ... .. | 0.75 |
| 1980—81 | அ. பங்கு மூலதனத்தில் மாநில அரசின் பங்கு. | 10.00 |
| | ஆ. இயந்திரங்கள் வாங்குவதற்கு கடனுதவி. | 4.70 |
| 1981—82 | அ. பங்கு மூலதனத்தில் மாநில அரசின் பங்கு. | 14.80 |
| | ஆ. சிறப்பு திட்டத்தின் கீழ் உதவி | 21.37 |
| | இ. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி. | 5.94 |
| | ஈ. மகளிர் நலத்திட்டத்தின் கீழ் உதவி | 4.48 |
| 1982—83 (31-12-82 வரை) | பங்கு மூலதனத்தில் மாநில அரசின் பங்கு மற்றும் உதவி. | 4.50 |
| | | 66.54 |

500 கிராம இளைஞர்களுக்கும், 100 மகளிருக்கும் அளிக்கப்பட்ட பயிற்சி உட்பட அரசு அளித்த சிறப்பு உதவியின் பலனாக தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை பெருகியிருப்பதோடு வேலை வாய்ப்பும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | சங்கங்களின் எண்ணிக்கை. | வேலை வாய்ப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979–80 .. .. .. | 10 | 1,655 |
| 1980–81 .. .. .. | 10 | 1,000 |
| 1981–82 .. .. .. | 26 | 3,155 |
| 1982–83 .. .. .. | 6 | 1,612 |
| மொத்தம் .. | 52 | 7,422 |

இந்த 52 சங்கங்களில் 10 சங்கங்கள், ஆதி திராவிடர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலைசாதி மக்களுக்காக ஒரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இத் தொழிலின் வளர்ச்சிக்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்றை தமிழ் நாட்டில் அமைப்பதற்கு, கயிறு வாரியத்தின் மூலமாக ரூ. 50.90 இலட்சம் ஒப்புதலளிப்பதற்கு, மத்திய அரசு முன்வந்துள்ளது. இந்த நிலையம் தஞ்சாவூரில் நிறுவப்படும். இந்த நிலையத்திற்கு நிலம் வாங்குவதற்காக ரூ. 5 இலட்சம் தொகையை, மாநில அரசு ஏற்கனவே ஒப்புதலளித்துள்ளது. மேற்கண்ட மண்டல நிலையத்திற்கு துணை நிலையம் ஒன்றை 1983—84 ஆம் ஆண்டில் பொள்ளாச்சியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் நிலம் மற்றும் கட்டிடத்திற்கு ரூ. 5.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1983–84 ஆம் ஆண்டில் சேலம் மத்தியத் தொழிற் கூட்டுறவுக் கயிறு விற்பனைச் சங்கத்தின் மூலதன அமைப்பில் மாநில அரசின் பங்காக ரூ. 5 இலட்சம் வழங்க, அரசு உத்தேசித்து வருகிறது.

(V) பாலிதீன்

மாநிலத்தின், 14 பாலிதீன் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 6 சங்கங்கள் பல்வேறு வகையான பாலிதீன் பைகளை தயாரித்து விற்பனை செய்கின்றன. 1981–82 ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ. 118.49 இலட்சம்



மதிப்புள்ள பாலிதீன் பைகளை உற்பத்தி செய்தன. விற்பனையின் மதிப்பு ரூ. 136.14 இலட்சமாகும். அந்த ஆறு பாலிதீன் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் 319 பேர் பணிபுரிகின்றனர். இவற்றில் 90 சதவீதம் மகளிராவர். எஞ்சியுள்ள எட்டு சங்கங்களும் (ஏழு பாலிதீன் பைகள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பாலிதீன் கோணிகள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம்) புதியவை. இவை இப்போது நிறுவப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உற்பத்தியைத் துவங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. வனத்துறை கேட்டுக் கொண்டுள்ள பைகளை ஏற்கனவே உள்ள சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து தயாரித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(vi) தோல் தொழில்.

பெருரக, நடுத்தர, மற்றும் சிறுரக தோல் பதனிடும் தொழிற் சாலைகள் பெரும்பாலும், செங்கல்பட்டு, வடாற்காடு, திருச்சி, மதுரை மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும், சென்னை துறைமுகத்திலிருந்து சுமார் ரூ. 200 கோடி மதிப்புள்ள தோல் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் இது 60 சதவீதமாகும்.

தோல் தொழிலின் வளர்ச்சிக்காக, மேம்படுத்தப்பட்ட இயந்திரங்களைக் கொண்ட தோல் நிறைவு செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதன் மூலம் சிறிய அளவில் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. எனவே, சிறு அளவில் தோல் பதனிடுபவர்கள் நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டு, அவற்றிற்கு ஏற்றுமதிச் சந்தையில் நல்ல விலையைப் பெற முடிகிறது. அது தவிர, உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது. சிறு தோல் பதனிடுபவர்களுக்கு பணி வசதிகளையளிக்கும் பொருட்டு கூட்டுறவு அடிப்படையில் வாணியம்பாடியில் அமைக்கப்பட்ட முதல் சங்கம் 1979 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவருகிறது. இந்த வாணியம்பாடிதோல் நிறைவு செய்யும் தொழிற் கூட்டுறவுச்சங்கத்தின் வருவாய் 1982–83 ஆம் ஆண்டில் (31–1–83) வரை ரூ. 11.76 இலட்சமாகும். 1981–82 ஆம் ஆண்டில் இதன் வருவாய் ரூ. 12.28. இலட்சமாகும்.

இராணிப்பேட்டை, திண்டுக்கல் மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய இடங்களில் கூட்டுறவு அடிப்படையில் இதுபோன்ற நிலையங்களை அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் சுமார் ஒரு கோடி

செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசு வர்த்தக நிறுவனத்தின் தோல் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை இச் சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் மானியமாக வழங்க உறுதியளிக்கப் பட்டுள்ளது. இயந்திரங்களை வழங்குவதற்கு அரசு வர்த்தக நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அவற்றில் சில கப்பலில் வர உள்ளன. இந்த மூன்று சங்கங்களும் நிறுவப்படும்பொழுது சுமார் 200 சிறு அளவு தோல் பதனிடுபவர்கள் பயனடைவார்கள்.

தோல் பதனிடுவதால் ஏற்படும் கழிவுப்பொருட்கள்.

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிக அளவில் கழிவுகளை வெளியிடுகின்றன. இக்கழிவுப் பொருள்களை வெளியேற்றுவதில் சரியான முறைகளைக் கையாளாவிட்டால் மண், நிலத்தடி நீர், பூமியின்மீது ஓடும் நீர் ஆகியவற்றின் தூய்மையைக் கெடுப்பதோடு துர்நாற்றத்தையும் பார்வைக்கு அருவருப்பான தோற்றத்தையும் ஏற்படுத்துகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் ஏற்படும் தூய்மைக்கேடு பிரச்சினை பல காலமாக இருந்து வருகிறது. பொதுமக்களின் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கின்ற இந்த ஆபத்தினைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளை அரசு பரிசீலித்து வருகிறது. ஊறு விளைவிக்காவண்ணம் இக்கழிவுப் பொருள்களை அகற்றுவதற்குரிய திட்டங்களை வகுக்குமாறு அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. அக்குழு இது பற்றிய ஆய்வினை முடித்து அதன் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

## III. கட்டுப்பாடு பிரிவு

கிடைப்பதற்கரிதாயுள்ள உள்நாட்டு மூலப் பொருள்களையும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களையும் "முன்மாதிரிகள்" பரிசோதனை இயந்திர சாதனங்கள் போன்ற மூலதனப் பொருள்களையும் சிறு தொழில் நிலையங்களுக்கு பெற்று உதவுவதில் இப்பிரிவு ஒரு முக்கிய பணியினை செய்து வருகிறது. மூலப்பொருள்களையும் மூலதனப்பொருள்களையும் பெறுவதற்கு இன்றியமையாத் தேவைச் சான்றிதழ்களை இப் பிரிவு வழங்குகிறது. மேலும், அதிகாரச் சான்றிதழ்கள் உபயோகச் சான்றிதழ்கள் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நுகர்வுச் சான்றிதழ்கள் ஆகியவற்றையும் இப்பிரிவு வழங்குகிறது. பெரிய தொழில்களுக்கு உரிமங்கள் வழங்குவதற்காக தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநருக்கு விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்கிறது. அச்சுத் தொழில்கள், மோட்டார் தொழிற் கூடம் போன்ற தொழில்களுக்குரிய இறக்குமதி விண்ணப்பங்களையும் இப்பிரிவு பரிந்துரை செய்கிறது. தேனிரும்பு இரும்பு கம்பிச் சுருள்கள், இரும்பு பாளங்கள், வர்த்தக தரமுடைய அலுமினியம், செம்பு, துத்தநாகம், ஈ. சி. வகை அலுமினியம், எஃகு, நிலக்கரி மற்றும் கல்கரி போன்ற உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களைப் பெறுவதற்கு இப்பிரிவு உதவியளிக்கிறது.



சமீபகாலம் வரை இன்றியமையாத் தேவைச் சான்றிதழ்கள் வழங்குவது தொழில் துறையின் வழக்கமான முறைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்திருந்தது. சமீப ஆண்டுகளில் இப்பிரிவின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு புதிய வளர்ச்சிப் பாங்கினை அடைந்துள்ளன. நடைமுறைகள் சீரமைக்கப்பட்டு, புதிய முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதனால் கணிப்புகள் மிகவும் அறிவியலடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு நடைமுறையில் நிகழும் தாமதங்கள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் கடைபிடிக்கப்படும் மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகள் காரணமாகவும், இந்திய அரசு அதிகாரிகள் உதவிகரமாக இணைந்து செயல்படுவது காரணமாகவும் மாநில சிறு தொழில் நிலையங்கள் பெற்ற இறக்குமதி உரிமங்களின் மதிப்பு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. 1976–77 இல் வழங்கப்பட்ட இறக்குமதி உரிமங்களின் மதிப்பு ரூ. 556 இலட்சமாகும். இது 1980–8 –ம் ஆண்டில் ரூ. 3037 இலட்சமாக அதிகரித்தது. 1981–82–ம் ஆண்டில் தானியங்கி உரிமங்கள் மற்றும் மூலதனப்பொருள்கள் நீங்கலாக மூலப்பொருள் மட்டும் பெற்றதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகித்தது. 1982–83 ம் ஆண்டில் (31–10–82) வரை வழங்கப்பட்ட உரிமங்களின் மதிப்பு ரூ. 1245 இலட்சமாகும். சிறுதொழில் நிலையங்களுக்கு அளிக்கப்பட்ட இறக்குமதி உரிமங்களை பயன்படுத்துவது பற்றி தகவலறியும் பொருட்டு, நடைமுறை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்துறை செய்துள்ள இந்த நல்ல பணியை இந்திய அரசின் உரிமம் வழங்கும் அலுவலர்கள் பாராட்டியுள்ளனர்.

உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைப் பொறுத்தவரை, தற்பொழுது நிலைமை திருப்திகரமாக உள்ளது. அதாவது, இரும்பு, எஃகு மற்றும் கல்கரி கிடைப்பது பொறுத்து சிரமங்கள் ஏதுமில்லை. இரும்பு பாளங்களின் நிலைமையில் முன்னேற்றம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கல்கத்தாவிலுள்ள போக்குவரத்து இயக்குநர் (இரயில்வே) அவர்களால் மாநிலத்திற்கு 500 சரக்குப் பெட்டிகள் என்று உச்ச அளவு நிர்ணயிக்கப்பட்டிருப்பதன் காரணமாக நிலக்கரி கிடைப்பதில் தொடர்ந்து சிரமம் ஏற்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு 2,500 சரக்குப் பெட்டிகள் தேவையென கணிக்கப் பட்டுள்ளது. எனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த உச்ச அளவுக்கு சரக்குப் பெட்டிகள் ஒதுக்கப்படல் வேண்டும் என்பதை மத்திய அரசிடம் இடைவிடாது கேட்கப்பட்டு வருவதோடு அல்லாமல் போதுமான சரக்குப் பெட்டிகள் கிடைக்காததால் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவர இயலாமல் தேங்கியுள்ள நிலக்கரியை இங்கு எடுத்து வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சிரமங்கள் இருந்துங்கூட மாநில அரசு தக்கசமயத்தில் தீவிர நடவடிக்கை எடுத்து, சாலைப் போக்குவரத்து மூலம் பழுப்பு நிலக்கரி கொண்டுவர ஏற்பாடு செய்தது. இந்த தீவிர நடவடிக்கைகளின் விளைவாக, 1981 ஆம் ஆண்டில் இருந்து நிலைமை ஒப்பிடுகையில் 1982 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிலையங்களுக்கு அதிக அளவில் பழுப்பு நிலக்கரி பெறப்பட்டது.

தொழில் நிலையங்களுக்கு முறையாக மூலப் பொருள்கள் கிடைப்பதற்கு உறுதியளிக்கும் பொருட்டு போலி தொழில் நிலையங்களைக் களைவதற்கு அனைத்து தீவிர நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 1982—83 ஆம் ஆண்டிலும், இதே நடவடிக்கை போக்கு கடைபிடிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தொடர்ந்து வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் 1983-84 ஆம் ஆண்டிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## IV இரசாயனப் பிரிவு.

மாநிலத்தில் இரசாயனத் தொழில் துரிதமாக வளர்ந்துள்ளது. இத்தொழிலில் முதலீடு செய்வதற்கு முன்பு மற்றும் முதலீடு செய்த பிறகு, ஆகிய இரு நிலைகளிலும், இரசாயனப் பிரிவு உதவியளித்து வருகிறது. முதலீடு செய்வதற்கு முன் தொழில் திட்ட ஆலோசனையும்' வழிகாட்டுதல் உதவியும் அளிக்கப்படுகிறது. செயல்படக்கூடிய தொழில் திட்டத்தைக் கண்டறிதல், திட்ட வழங்குதல் மற்றும் ஆய்வுக்கூட அளவில் முன்னோடி திட்ட ஆய்வுகளை நடத்துவதற்கு உதவியளித்தல் ஆகியனவும் இதில் அடங்கும்.

புள்ளி விவரங்களைச் சேகரித்து வைப்பது, தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பது ஆகிய செயல்களை வலுப்படுத்தும் பொருட்டும் அடிப்படைப்புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கும்; இரசாயனத் தொழில் திட்டக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும் ; மாநிலத்தில் சிறு தொழில் துறையில் ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்களை அமைப்பதற்கு தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதற்கும் ஒரு தகவல் களஞ்சியம் நிறுவப்பட்டுள்ளது. இத் தகவல் களஞ்சியம், வழங்கப்பட்ட தகவல்கள் பற்றி ஆய்வும் மேற்கொள்ளுகிறது.

இத் தகவல் களஞ்சியம் துவக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து நவம்பர் 1982 வரை, 6,994 இரசாயனப் பொருள்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை பற்றிய புதிய விவரங்களும் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1975 ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து நவம்பர் 1982 வரை, 388 திட்டத் தொகுப்புகள் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் தகவல் சேகரிப்பு முறைகளும், அவற்றை பயன்படுத்தக்கூடிய முறைகளும் மேலும் சீர்ப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகவல் களஞ்சியம் வழங்கிய திட்டத் தொகுப்புகளைப் பெற்ற சுமார் 60 இரசாயனம் மற்றும் அதன் சார்பு தொழில்களில் அக்கறை கொண்ட தொழில் முனைவர்கள் தொழிற்சாலைகளை நிறுவி வருகின்றனர்.



1982-83 ஆம் ஆண்டில், 16 திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டன; 94 சிறுதொழில் முனைவர்களுக்கு தொழில் திட்ட ஆலோசனையும் வழி காட்டுதலும் வழங்கப்பட்டுள்ளது. 282 சிறு தொழில் முனைவர்கள் மற்றும் ஏனையவர்களிடமிருந்து பெறப்பட்ட தொழில் நுட்ப விசாரணைகளுக்குப் பதிலளிக்கப்பட்டன. இத்தகவல் களஞ்சியம் ஆற்றிவரும் பணிகள் பரவலான பாராட்டினைப் பெற்றுள்ளது.

இரசாயனத் தொழிலில் முதலீடு செய்துள்ள தொழில் நிலையங்களுக்கு, பற்றாக்குறையாக உள்ள அத்தியாவசியமான மூலப் பொருள்களைப் பெறுவதிலும், பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றிலும் உதவி அளிக்கப்படுகிறது.

மேற்கண்டவை தவிர, வெள்ளைச் சிமிட்டி, டிட்டேனியம் டை ஆக்ஸைடு, சூடம் முதலிய பொருட்களைச் சிறு தொழில்கள் பெற அவற்றின் கோரிக்கைகளை, இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது. தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக உலைக்களை எண்ணெய், "இண்டேன் வாயு" ஆகியவற்றைப் பெறுவதற்கும், தொழில் உபயோகத்திற்கு வீரியமற்ற சாராய உரிமம் பெறுவதற்கும் தொழிற்சாலைகளிடமிருந்து வரும் விண்ணப்பங்களை, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது. பூச்சிக்கொல்லி மருந்துக்கள் தயாரிப்பதற்கு, உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களையும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களையும் ஒதுக்கீட்டின் மூலம் சிறு தொழில் நிலையங்கள் பெறுவதற்கு வழி வகுக்கும் வகையில், அத்தகைய தொழில் நிலையங்களின் உற்பத்தித் திட்டங்களுக்கு இப்பிரிவு ஒப்புதல் அளிக்கிறது. இவ்வாறு உதவியளிக்கப்பட்ட சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | 1981-82 | 1982-83 (30-11-82 வரை) |
|---|---|---|
| (1) டி. என். சாராயம் | 30 | 24 |
| (2) உற்பத்தி திட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. | 31 | 28 |
| (3) உலைக்களை எண்ணெய் | 95 | 60 |

பொருள்களைத் தயாரிப்பது, பொருள் அபிவிருத்தி மற்றும் அவற்றை விற்பது ஆகிய நிலைகளில் தரக்கட்டுப்பாடு ஒரு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

ஆதலால் தான் மாவட்டங்களிலுள்ள தொழில்களுக்கு இம் மாதிரியான உதவிகளை அளிப்பதற்காக கிண்டி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவின் உப்பு உற்பத்தியில் நமது மாநிலம் இரண்டாவதாக உள்ளதால், உப்புத் தொழிலை அறிவியல் ரீதியில் வளர்ச்சியுறச் செய்வதற்கும் கடல்படு இரசாயனப் பொருள்களை அபிவிருத்தியடையச் செய்வதற்கும், பரிசோதனைப் பணிகளை மேற்கொள்வதற்கும் மாநில உப்பு மற்றும் கடல்படு இரசாயனப் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அரசு, தூத்துக்குடியில் அமைத்துள்ளது. சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் உற்பத்தியில், இந்தியாவிலேயே சேலம் மாவட்டம் சிறந்து விளங்குகிறது. இந்த உற்பத்திப் பொருள்களுக்கு தரக்கட்டுப்பாடு வசதிகளை அளிப்பதற்காக இத்துறை, சவ்வரிசி ஆராய்ச்சி நிலையத்தை சேலத்தில் அமைத்துள்ளது. இந்த மாவட்டத்தில் சவ்வரிசித் தொழிலின் தரமான வளர்ச்சிக்கு இந்த ஆய்வுக்கூடம் உதவி வருகிறது. புரோட்டீன் மற்றும் வைட்டமின் சத்துக்களைக் கொண்டதாய் அமையவல்ல சவ்வரிசிப் பொருளைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றை இந்த சவ்வரிசி ஆய்வுக் கூடத்தில், இந்திய அரசு நிறைவேற்றியுள்ளது.

இரசாயனப் பிரிவிலுள்ள ஆய்வுக் கூடங்கள் அளித்து வரும் பரிசோதனை வசதிகளால் பயனடைந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | ஆய்வுக் கூடத்தின் பெயர். | 1982-83 ஆம் ஆண்டில் பயன் பெற்ற தொழிற் சாலைகளின் எண்ணிக்கை (30-11-82 வரை). |
|---|---|---|
| 1 | இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம், கிண்டி. | 772 |
| 2 | வட்டார ஆய்வுக் கூடம், மதுரை .. .. | 645 |
| 3 | வட்டார ஆய்வுக் கூடம், கோயம்புத்தூர் .. | 231 |
| 4 | சவ்வரிசி ஆய்வுக் கூடம், சேலம் .. .. | 101 |
| 5 | உப்பு, கடல்படு இரசாயனப் பொருள்களுக்கான மாநில ஆராய்ச்சிக்கூடம், தூத்துக்குடி. | 14 |
| | மொத்தம் .. | 1,763 |

உப்பு உற்பத்தி செய்வதற்காகத் தக்க பகுதிகளைத் தேர்ந்
தெடுக்க முறையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் நட
வடிக்கை எடுப்பதற்கும் குறிப்பிட்ட கருத்துரை வழங்குவதற்கும்
ஏற்கெனவே உள்ள உப்புத் தொழிற்சாலைகளின் உற்பத்தித்
திறனை விரிவாக்கம் செய்வதற்கு வேண்டிய வாய்ப்புகளைக்
கண்டறிவதற்கும், புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்து
வதற்கும், இது சம்பந்தப்பட்ட தொழில்பற்றி அரசுக்கு
ஆலோசனை வழங்குவதற்கும், தமிழ் நாடு மாநில உப்பு—
கடல்படு இரசாயனப் பொருள்கள் வாரியம் ஒன்றை, அரசு
அமைத்துள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் மேட்டூர் அணையில் நடைபெற்ற
வட்டார உப்புத் தொழில் ஆலோசனைக் குழு கூட்டத்திலும்.
டெல்லியில் நடைபெற்ற மைய உப்பு ஆலோசனைக் குழு கூட்டத்
திலும், தொழில் வணிகத்துறை கலந்து கொண்டது. வேதா
ரண்யத்தில் அமைக்கப்படும் ஒரு திட்டத்திற்கு ஒரு மைய உப்பு
ஆலோசனைக்குழு, ரூ. 5 இலட்சத்தைக் கூட்டு மானியமாக
அளிக்க ஒப்புதலளித்துள்ளது. உப்பு வாரியத்தின் முயற்சி
களினால், லெவிங்கிபுரம், பிரதான வாயிலிலிருந்து தூத்துக்குடி
வரை செல்லும் சாலை முழுவதையும் கான்கிரீட் சலையாக
மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்
திட்டத்திற்காகும் செலவு ரூ. 20 இலட்சத்தையும் உப்பு ஆய்வுத்
தீர்வைத் தொகையிலிருந்து செலவழிக்கப்படும். கீழே குறிப்
பிடப்பட்டுள்ள நான்கு பகுதிகளில் பெரிய உப்பு தொழிற்
சாலைகள் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறு அறிக்கையினை
இவ் வாரியம் தயாரித்துள்ளது.

1. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம்,

2. இராமநாதபுரத்திலுள்ள மாரியூர்.

3. வைபார்—வேம்பார்.

4. தூத்துக்குடியின் தென் பகுதி — திருநெல்வேலி
மாவட்டத்தின் புதிய துறைமுகம்.

மேற்கண்ட நான்கு பகுதிகளில் கோவளத்திற்கு அருகி
லுள்ள பகுதிகளை, திருவாளர்கள் மாருதி "கிரிஸ்டல்" உப்பு
நிறுவனத்தார் எடுத்துக் கொண்டுள்ளனர். சென்னை, தமிழ்
நாடு உப்பு நிறுவனம் மாரியூருக்கு அருகிலுள்ள பகுதிகளை
எடுத்துக் கொண்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உப்பு
உற்பத்தி குறைந்துள்ளது பற்றிய காரணங்களைக் கண்டறியும்
பொருட்டு, இத்துறையின் உப்புப் பிரிவு ஒரு ஆய்வறிக்கையைத்
தயாரித்துள்ளது. உப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழி
வகைகளை, தொழில் வணிகத்துறை பரிந்துரை செய்துள்ளது.

இந்த இயக்கத்தின் உப்புப் பிரிவு, தமிழ் நாட்டில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை மேற்கண்டவற்றிலிருந்து அறியலாம். இப்பிரிவு, ஆய்வுகளை மேற்கொண்டும், வட்டார ஆலோசனைக் குழு மற்றும் மைய உப்பு ஆலோசனைக்குழு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டும் தமிழ் நாட்டில் உப்பு உற்பத்தியில் பல்வேறு திட்டங்களுக்கு உப்பு ஆயத் தீர்வையிலிருந்து அதிக உதவியைப் பெற்று தர எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

## V தொழில் தொடர்பு பிரிவு

விற்பனை என்பது தொழில் முனைவரது பொறுப்பே என்ற போதிலும், பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் வசதி குன்றிய நிலையில் உள்ள சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் நிலையங்களுக்கு உள்ள சிரமங்களைக் களையும் நோக்குடன் அவற்றிற்கு உதவியளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 401 வகையான பொருள்களை சிறு மற்றும் குடிசைத் தொழில் நிலையங்களிலிருந்துதான் வாங்கப்பட வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த தொழில் நிலையங்கள் 15 சதவீதம் வரை விலையில் சலுகை பெறத் தகுதியுடையனவாகும். இந்த வாய்ப்பினைச் சிறு தொழில் நிலையங்கள் யாவும் நன்கு அறியும்படி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. 1978—ஆம் ஆண்டிற்குப் பிறகு, விற்பனை உதவித் திட்டங்கள் சிறப்புப் பெற்றுள்ளன. வழங்கல்—விற்பனைத் தலைமை இயக்குநர் மேற்கொள்ளும் பொருள் கொள்முதல் திட்டத்தில் அதிக அளவில் சிறு தொழில்கள் பங்கேற்கும் பொருட்டு 14 கருத்தரங்கு கூட்டங்களை இயக்ககம் நடத்தியுள்ளது. இதில் தேசிய சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சிறு தொழில் சேவை நிலையம் ஆகியவற்றின் அலுவலர்களும், சிறு தொழிலதிபர்களும் நேரடி ஆலோசனைகளில் கலந்து கொண்டனர். 284 இனங்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்த இந்த இயக்கம் பரிந்துரை செய்தது. அவற்றுள், 223 இனங்களுக்கு தேசிய சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சான்றிதழ்கள் வழங்கியுள்ளது.

பொருள்களை வாங்கும் துறைகளிலிருந்து பெறப்படுகின்ற விசாரணைகள் யாவும் அவற்றை விற்கத் தகுதி வாய்ந்த தொழில் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில், இதுபோன்ற 560 விசாரணைகளை அவற்றை நிறைவேற்றுவதற்காக சிறு தொழில் நிலையங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்முதல் திட்டத்தில் 102 சிறு தொழில் நிலையங்கள் பங்கு பெற்றுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவதில் சிறு தொழில்களுக்கு ஏற்படும் சிக்கல்களைப் பற்றி சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசித்து அவற்றிற்குத் தீர்வு காணப்படுகின்றது. இது போன்ற 247 இனங்களில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்

[illegible] விளைவாக 1981-82 ஆம் ஆண்டில் சிறு தொழில் நிலையங்கள் ரூபாய் 30.68 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை [illegible] வழி வகுத்துத் தரப்பட்டது.

## VI கிராமத் தொழில் திட்டப் பிரிவு

### (அ) தொழில் மேம்பாட்டுப் பணி.

மாநில அரசு இத்துறைக்கு அனுப்பும் அனைத்து இனங்கள் விண்ணப்பங்கள் குறித்து' இப்பிரிவு, தொழில் முனைவர்களுடன் தொடர்பு கொண்டு ஆய்வறிக்கைகளை அரசுக்கு அனுப்பி வைக்கிறது. 1982-ஆம் ஆண்டில் அரசு கேட்டுக் கொண்ட 56 இனங்களுக்கு இவ்வித ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பல்வேறு மாவட்டங்களில் கிடைக்கின்ற வளங்களை அறிந்து, கிராமப் பகுதிகளில் அந்த வளங்களை அடிப்படையாகக்கொண்ட தொழில்களை ஏற்படுத்த தொழில் முனைவர்களுக்கு ஆலோசனை அளிக்கப்படுகிறது.

### (ஆ) கிராம கைவினைஞர் திட்டங்கள்.

இத்திட்டம் 1979-80 ஆம் ஆண்டில் அமலாக்கப்பட்ட மைய அரசுத் திட்டமாகும். திருத்தி அமைக்கப்பட்ட நிதி அமைப்பின் படி, இத்திட்டத்திற்காகும் செலவினை மாநில அரசும் மத்திய அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

நவீன கருவிகளையும் தொழில் நுட்ப உதவிகளையும் கொண்டு கிராம கைவினைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைத் திறமை மிக்கவர்களாகச் செய்வதும், அதன் மூலம் அவர்கள் தங்களது வர்த்தகத்தில் ஈடுபடுத்திக் கொண்டு வருவாயை உயர்த்திக் கொள்ள வழிவகுப்பதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத் திட்டத்தின்படி பின் வருகின்ற வகையைச் சார்ந்தவர்கள் உதவி பெறத் தகுதியுடையவராவார்கள்.

(அ) அனைத்து கிராம கைவினைஞர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள்-

(ஆ) 5 ஏக்கர்களுக்கும் குறைவாக நிலம் உள்ள விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள்.

(இ) கைவினைஞர்களாக ஆவதற்கு விருப்பப்படுகின்ற நிலமற்ற தொழிலாளர்கள்.

பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் பயிற்சி காலத்தில் மாதமொன்றுக்கு ரூபாய் 75 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் ரூபாய் 250 வரை மதிப்புள்ள கருவிகள் 100 சதவீத உதவித் தொகை அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

பயிற்சிக்குப் பிறகு ஒரு கைவினைஞர் அவருடைய தொழில் நிலையத்தில் இயந்திரத்தை அமைக்க விரும்பினால், அத்தகைய ஒவ்வொருவருக்கும் ரூபாய் 3,000 வரை உதவித்தொகை பெற முடியும். இச்சலுகை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 5,000 ஆகும். மூலப் பொருள்களுக்காக பயிற்சி பெறுவோர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூபாய் 50 வழங்கப்படுகின்றது. 1981—82 ஆம் ஆண்டில் பல்வேறு தொழிற்பாங்கான பயிற்சி முறைகளில் மொத்தம் 657 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இதற்காக ரூபாய் 6.57 இலட்சம் செலவிடப்பட்டது. 1982-83ம் ஆண்டில், பல்வேறு தொழில் பாடமுறைகளில் 831 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

(இ) மாவட்ட தொழில் மையக்கடன்

1979-80-ஆம் ஆண்டிலிருந்து மைய அரசு துவங்கிய இத்திட்டத்தை, தமிழ் நாட்டில் சென்னை தவிர, அனைத்து மாவட்டங்களிலும் அமலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினத்தை 50:50 என்ற அடிப்படையில் மைய மாநில அரசுகள் சமபங்காக ஏற்றுக் கொள்வது என்று திருத்தி அமைக்கப்பட்டது.

சிறு தொழிலதிபர்களுக்கு ரூபாய் 10,000 வரை மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் கடனுதவி அளிக்கின்றனர். பொதுவாக இயந்திரங்கள் வாங்குவதற்கும், தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், பொறியியல் "பிளாஸ்டிக்" இரசாயனம் மற்றும் மின்னணு போன்ற சிறப்பு வகைத் தொழில்களுக்கும் கடன் வழங்கப்படுகிறது. சாதாரண தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர்களது பரிந்துரையின் பேரில் ரூபாய் 10,000 முதல் ரூபாய் 25,000 வரை தொழில் வணிக இயக்குநர் கடனுதவி அளிக்கிறார்.

1982—83 ஆம் ஆண்டில் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 4.00 இலட்சம் வீதம் 14 மாவட்ட தொழில் மையங்களுக்கு ரூபாய் 56 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 5½ சதவீதத்திலிருந்து 6¼ சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

VII. ஆய்வு மற்றும் புள்ளிவிவரப் பிரிவு

1973-ஆம் ஆண்டு முடிய பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களிடமிருந்து முக்கியமான விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு 1974—ஆம் ஆண்டில், அனைத்திந்திய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிறுதொழில்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பின்போது சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் யாவும் திட்டமிடுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தமையால் ஒவ்வொரு ஆண்டும், முறைப்படி, சிறு தொழில்களிடமிருந்து இவை போன்ற விவரங்களைச் சேகரிப்பது என இந்திய அரசு



முடிவெடுத்தது. இச் செயலை நிறைவேற்றும் பொருட்டு தலைமையிடத்தில் ஒரு உதவி இயக்குநர் மற்றும் மூன்று உதவியாளர்கள், மாவட்ட அளவில் 30 புள்ளி விவர ஆய்வாளர்கள் அடங்கிய சிறு அமைப்பு ஒன்றினை 100 சதவீத மைய அரசின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டது. 20 சதவீத அளவுக்கு கணக்கெடுப்பு மற்றும் மாதிரி ஆய்வுப் பணி 1983—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து துவங்கப்பட உள்ளது.

31—12—1980 வரை தொழில் வணிக இயக்ககத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் நிலையங்கள் அடங்கிய சிறுதொழில் பேரேடு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த சிறுதொழில் பேரேடு வெளியிடுவதற்குத் தயாராக இருக்கும் வகையில், 1—1—1981க்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

VIII மின் மற்றும் மின்னணுப் பிரிவு

நவீன வாழ்க்கையின் அனைத்துத்துறைகளிலும் மின்னணு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. எனவே, மாநிலத்தில் மின்னணுத் தொழிலின் வளர்ச்சிக்கு எல்லாவகையிலும் ஊக்கமளிப்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முக்கிய நோக்கங்களாவன;—

1. குறைந்த மூலதனத்துடன் பெரும்பான்மையோருக்கு வேலையளிப்பது.

2. உள்ளூரில் மின்னணுத்துறையில் தொழில் நுட்பத் தகுதிபெற்ற ஆடவர் மற்றும மகளிருக்குப்பயனுள்ள வகையில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு அமைந்துள்ள அறிவுத் திறனைப் பயன்படுத்துவது, மற்றும்.

3. நவீன தொழில் நுட்பவியலை ஈடுபடுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்வது.

மின்னணு தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு இயக்ககம் அளித்துவரும் சலுகைகளையும், வசதிகளையும் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1 மின்சாரம், நீர், சாலைகள் போன்ற அடிப்படை வசதியமைந்த தொழிற் பேட்டைகளை அமைப்பது.

2. நவீன வசதிகள் கொண்ட பரிசோதனை நிலையங்களின் மூலம் எளிய கட்டணத்தில் பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு வசதிகளை அளிப்பது;

3. மின் மருத்துவக் கருவி செப்பனிடு நிலையங்கள் மற்றும் மின்னணு ஆய்வுக் கூடங்கள் மூலம் மின் மருத்துவச் சாதனங்களை செப்பனிடுதல்.

4. புதிய மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களைத் துவங்குவதற்கு, தகவல் களஞ்சியம் மூலம் அடிப்படைத் தகவல்களையும் ஆலோசனைகளையும் அளித்து தொழில் முனைவர்களுக்கு வழிகாட்டுவது.

அடிப்படை வசதிகள்—

மின்சார தொழில், மின்னணுத் தொழில் மற்றும் அவற்றின் சார்புத் தொழில்தொழில்களுக்காகவே, மாநிலத்தின் பல இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதன்மையாகத் திகழ்வது, திருவான்மியூரில் அமைந்துள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டை ஆகும். இத்தொழிற்பேட்டை 1970–71 ஆம் ஆண்டில் 12 95 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டு இரு கட்டங்களில் செயல்படத் துவங்கிற்று. முதல் கட்டத்தில் 37 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டன; இரண்டாவது கட்டத்தில் மேலும் 41 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டன; இந்த 78 தொழிற் கூடங்களும் 74 தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இவர்களில் 16 பேர் மகளிராவர். இந்தத் தொழில் நிலையங்கள், 2,000 பேருக்கு வேலையளிக்கின்றன. இவர்களில் 100 பேர் பொறியியல் பட்டதாரிகள், 250 பேர் தகுதிப்பட்டயம் பெற்றவர்கள். மற்றும் சுமார் 500 பேர் தொழில் நுட்பப் பணியாளர்கள். ஊழியர்களில் 60 சதவீதத்தினர் மகளிராவர்

தொழிற் கூடங்கள் அதிகமாகத் தேவைப்படுவதால், இத் தொழிற்பேட்டையில் மூன்றாவது கட்டமாக மேலும் 26 தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்புதலளித்தது. இவற்றுள் நான்கு மகளிருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தக் தொழிற் கூடங்களை மிகவும் முனைப்பாயுள்ள தொழில் முனைவர் களுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. இவை மேலும் 3 0 பேருக்கு உடனடியாக வேலையளிக்கும். இது தவிர, பெருங்குடியிலுள்ள தொழிற்பேட்டையில் செப்பனிட்ட மனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத் திட்டமும் பல கட்டங்களில் நிறைவேற்றப் பட்டு வருகிறது. முதல் கட்டத்தில், 65 ஏக்கர் நிலத்தை 121 மனைகளாக உருவாக்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் 40.11 ஏக்கர் நிலத்தை 53 மனைகளாக உருவாக்கப்பட்டது. இந்தச் செப்பனிட்ட மனைகளில் 140 மனைகள் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுவிட்டன. இவற்றில் 20 தொழில் நிலையங்கள்



தோன்றியுள்ளன. இத்தொழில் நிலையங்கள் 'மைக்ரோ மோட்டார்கள்' மின்னணு இசைக்கருவிகள், மருத்துவச் சாதனங்கள், தானியங்கி மின்னணுப் பாகங்கள் போன்ற பொருள் களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன. கூடிய விரைவில், மேலும் 120 தொழில் நிலையங்கள் உருவாக இருக்கின்றன. இவை, மின்னணு பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மருத்துவச் சாதனங்கள், "கம்ப்யூட்டர்கள்" மின்னணுக் கருவி போன்ற பலவகையான மின்னணுப் பொருட்களைத் தயாரிப்பதில் ஈடுபடும். இவை சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

இம் மின்னணு தொழிற்பேட்டையில், 1981–82 ஆம் ஆண்டில் உற்பத்தி ரூ. 10·00 கோடியாக இருந்தது வரும் ஆண்டில், மின்னணு தொழிற்பேட்டையிலும் செப்பனிட்ட மனைத் தொழிற்பேட்டையிலும் உற்பத்தி ரூ. 20 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செப்பனிட்ட மனைகள் அதிகமாகத் தேவைப்படுவதால், பெருங்குடியில் ஏற்கெனவே உள்ள செப்பனிட்ட மனைத் தொழிற்பேட்டைக்கருகில் மேலும் 150 ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்தும் திட்டத்திற்கு, அரசு சமீபத்தில் ஒப்புதலளித்துள்ளது. இத்தொழிற்பேட்டை முழு வளர்ச்சி அடைகின்ற போது, 5,000 ஆடவருக்கும் மகளிருக்கும் வேலையளிக்கக்கூடிய 250 தொழிற்சாலைகள் இங்கு அமைந்திருக்கும். இப் பகுதி முழுவதும் (அடையாறு-திருவான்மியூர்-பெருங்குடி சுற்றுப்புற பகுதி) மின்னணு நகரமாக உருவாகும் என்பது திண்ணம்.

காக்களூர், ஒசூர், திருச்சி, மதுரை மற்றும் கோயமுத்தூர் ஆகிய இடங்களிலுள்ள இதரஐந்து தொழிற்பேட்டைகளில் அரசு அமைத்துக்கொடுத்த தொழிற்கூடங்களில் சுமார் 70 தொழில் நிலையங்கள் அமைந்துள்ளன. அவையாவும் 5,000 பேருக்கு வேலையளிக்கின்றன. ஒசூரிலும் மதுரையிலும் அமைந்துள்ள தொழில் நிலையங்கள் மிக நுட்பம் வாய்ந்த மின்னணுச் சாதனங்களையும், பாகங்களையும் தயாரிக்கின்றன. இவற்றின் ஏற்றுமதிக்கு மிக நல்ல வாய்ப்புகள் உள்ளன.

பரிசோதனை மற்றும் தரக்கட்டுப்பாடு வசதிகள்

அ. மைய மின் ஆய்வுக்கூடம், காக்களூர்.

நாட்டில் விளங்குகின்ற மின் ஆய்வுக் கூடங்களில் இதுவும் ஒன்றாகும். இந்திய தர நிர்ணய நிறுவனம், ரெயில்வே, பொருள் வழங்கல்-விற்றல் தலைமை இயக்குநரகம் ஆகிய நிறுவனங்கள் இந்த ஆய்வுக்கூடத்தை அங்கீகரித்துள்ளன. ஒளியமைப்பைப் பரிசோதிக்கத் தக்க பரிசோதனை வசதிகளும் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக அரசு ரூ2.5 இலட்சம் ஒப்புதலளித்துள்ளது.

ஆ. மின்னணு பரிசோதனை மற்றும் வளர்ச்சி நிலையம்.

இந்திய அரசின் தரக்கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் அனைத்திந்திய தர நிர்ணயப்படுத்தல் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு பரிசோதனை வளர்ச்சி நிலையங்களுள் முதன்மையானது இந்த மின்னணு பரிசோதனை மற்றும் வளர்ச்சி நிலையமாகும். இந்திய அரசின் மின்னணுத் துறை, பரிசோதனைச் சாதனங்கள் வாங்குவதற்கு மானியம் அளிப்பதோடு அல்லாமல் தொழில் நுட்பக் கொள்கையை வகுத்தளிக்கிறது. இந்த நிலையத்தின் நோக்கங்களாவன:

1. இந்திய தர நிர்ணய நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட குறியீடுகளின்படி மின்னணு பாகங்களை பரிசோதனை செய்வது;

2. தயாரிப்புப் பொருள் அபிவிருத்தி மற்றும் பல்வேறு முன்னோடி இயந்திர அமைப்பு வகைகளைப் பரிசோதனை செய்வதில் தொழிற்சாலைகளுக்கு உதவுவது;

3. பொருள் அபிவிருத்திக்காக இந்த நிலையத்தின் சாதனங்களை சிறு தொழில் நிலையங்கள் உபயோகப்படுத்துவதற்கு உதவியளிப்பது;

4. அனைத்து தொழிலியல் தர ஆய்வு மற்றும் அளவிடும் கருவிகளுக்கு மதிப்பாய்வு வசதி அளிப்பது;

5. தொழில்களுக்கு நூலக வசதி அளிப்பது;

1973 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட மின்னணுச் சோதனை மற்றும் அபிவிருத்தி நிலையம் ரூ. 40 இலட்சம் மூலதனத்தில் 3.29 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந் நிலையம் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களைப் பலவகைகளில் சோதனை செய்வதனை மேற்கொண்டுள்ளது.

இ. வீட்டு உபயோக மின்சார சாதனங்கள் (தரக்கட்டுப்பாட்டு) விதிகள், 1981 செயலாக்கம்

வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரத்தை நிலை நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், பொருள்களைத் தயாரிப்பதிலும், பல்வேறு வகை தயாரிப்புப் பொருள்களை விற்பதிலும் தரக்கட்டுப்பாட்டினைப் புகுத்தும் பொருட்டு, இந்திய அரசு ஒரு சட்டம் இயற்றியது. தொழில் வணிக இயக்குநர், இந்த தரக்கட்டுப்பாட்டு ஆணையை செயல்படுத்த அதிகாரம் பெற்றுள்ளார். தரக்கட்டுப்பாட்டினை செயலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



மின் மருத்துவச் செப்பனிடும் நிலையங்கள்

சென்னை, கோயமுத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மின் மருத்துவச் செப்பனிடும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் ''இ.சி.ஜி.'' ''இ.இ.ஜி.'' மின் அலை வெப்பமூட்டல், உயர் அழுத்தம் நிலைப் படுத்தும் கருவி, புகைப்பட மின்னணு கலோரி மீட்டர் போன்ற அரசு மருத்துவமனைகளைச் சார்ந்த மின்னணு மருத்துவச் சாதனங்களைப் பழுது பார்த்துச் செப்பனிடும் பணியை மேற் கொள்ளுகின்றன.

தொழில் முனைவர்களுக்கு வழிகாட்டி.

புதிய மின்சார மற்றும் மின்னணுத் தொழில்களை ஏற்படுத்து வதற்கு இன்றியமையாத தகவல்களை வழங்கும் பொருட்டு, 1974 ஆம் ஆண்டில் தேர்ந்த தகவல் களஞ்சியம் ஒன்று துவக்கப்பட்டது. தொழில் முனைவர்களுக்கும் ஏற்கனவே உள்ள தொழில்களுக்கும் தகவல் அளிப்பதில் இது ஒரு சிறந்த மைய மாகத் திகழ்கிறது. இந்நிலையம் மின் மற்றும் மின்னணுத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்கள், தயாரிப்பு பொருள்கள் வாரியாகத் தயாரிப்புத் திட்டங்கள் மற்றும் மூலதன விவரங்கள் போன்ற தகவல் களைச் சேகரித்து வழங்கி வருகிறது. தொழில் நுட்பவியல் வளர்ச்சிகள், தொழில்கள் பற்றிய அரசு கொள்கை, மூலப் பொருள்களை இறக்குமதி செய்தல், வர்த்தக அமைப்புகள் மற்றும் இதர பல தகவல்களை இத்தகவல் களஞ்சியம் பெற்று வருகிறது.

இ தகவல் களஞ்சியம், 168 மின் மற்றும் மின்னணுத் தொழில் களுக்கான தொழில் திட்ட அறிக்கைகளை வைத்திருக்கிறது. விருப்பமுள்ள தொழில் முனைவர்களுக்கு இவை வழங்கப் படுகின்றன, ஒவ்வொரு ஆண்டும் மாநில வாரியான மின் மற்றும் மின்னணுத் தொழில்களின் தொகுப்புகள் வெளியிடப் படுகின்றன. இந் நிலையத்தில் மின் மற்றும் மின்னணுப் பொருட்கள் சம்மந்தப்பட்ட சுமார் 600 புதிய தொழில் நுட்ப நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்றும் உள்ளது. இதனை பெரும்பாலான வாசகர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனைத் தவிர, மின் மற்றும் மின்னணுத் தொழில்கள் சம்மந்தப்பட்ட பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகளும் வாங்கப்படுகின்றன. இந் நிலையத்தில் உள்ள வசதிகளை 2,500 பேர் இந்த ஆண்டிற் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் 250 தொழில் திட்ட அறிக்கைகளை இந்நிலையத் திலிருந்து வாங்கியுள்ளனர். இந்த அறிக்கைகளைப் பயன்படுத்தி மின் மற்றும் மின்னணுத் தொழிலில் சுமார் 40 தொழில்கள் துவக்கப்பட்டுள்ளன.

## IX இதர நடவடிக்கைகள்

### தயாரிப்புத் திட்டங்களுக்கு ஒப்புதலளிப்பது

மின்னணுத் தொழில்களின் வளர்ச்சி உரிய வழிகளில் அமைத்தல்பொருட்டு, இந்தியாவில் துவக்கப்படவுள்ள எந்த புதிய மின்னணுத் தொழிலும் அதன் உற்பத்தித் திட்டத்திற்கு முன் ஒப்புதல் பெற வேண்டுமென இந்திய அரசு வரையறுத்துள்ளது. இத்திட்டத்தின்படி, 71 இனங்கள் (தயாரிப்பு பொருள்கள்) அடங்கியுள்ளன. தொழில் வணிக இயக்குநரை தலைவராகக்கொண்ட இந்த மாநில அளவிலான தொழில் நுட்பக் குழு, இவற்றிற்கு ஒப்புதலளிக்க அதிகாரம் பெற்றுள்ளது. இதர இனங்கள் பற்றிய உற்பத்தித் திட்டத்திற்கு தொழில் வணிக இயக்குநரின் பரிந்துரையின் பேரில் புதுடெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையாளர் (சிறு தொழில்கள்) ஒப்புதலளிக்கிறார். 1982-83 ஆம் ஆண்டில், 71 இனங்களுக்கு தயாரிப்பு பொருள்களுக்கு) ஒப்புதலளிக்கப்பட்டது இதில் மாநில அளவிலான தொழில் நுட்பக் குழு, 39 இனங்களுக்கும், புதுடெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையாளர் (சிறு தொழில்கள்) 32 இனங்களுக்கும் ஒப்புதலளித்துள்ளனர். இவற்றில், 'டாடா [illegible]ம்ஸ்'' ''டெலிபோன் டையலஸ்,'' மின்னணு எடை இயந்திரம் போன்ற ஆறு இனங்கள் மரபு சாரா இனங்களாகும்.

தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் மாநிலத்தில் இருப்பதால், மற்ற தொழில்களைவிட மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்கு மிக நல்ல வாய்ப்புள்ளது. எனவே இத்தொழில் மேலும் மேலும் வளர்ச்சியுறச் செய்வதற்கு மாநில அரசு மிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

### பட்டுப்புழு வளர்ப்பு இயக்குநகரகம்

பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் கிராமப்பகுதிகளில் அதிக வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பளிப்பதால், கடந்த சில ஆண்டுகளாகப் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

1983-84 ஆம் ஆண்டில் முசுக்கொட்டைப் பயிரிடும் பரப்பின் கீழ் மேலும், 8,000 ஏக்கர் பரப்பு கொண்டு வரப்பட்டது. எனவே முசுக்கொட்டைப் பயிரிடும் பரப்பு தற்போது 63,000 ஏக்கராக உயர்ந்துள்ளது. தற்போது 36 பட்டு நூற்புத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் மேலும் 5 பட்டு நூற்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் தற்போது கிராம அளவிலான இளம்பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் 65 உள்ளன. இம்மையங்களில் பெருமளவு பயன்



கிடைத்ததால், 1983-84 ஆம் ஆண்டில், கிராம அளவிலான இளம்பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் மேலும் 50 மையங்களைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில், பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு 83 இலட்சம் பட்டுப்புழு முட்டைகள் வழங்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் 65.7 இலட்சம் முட்டைகளே வழங்கப்பட்டன. 180 இலட்சம் நோயற்ற பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்வது 1983-84 ஆம் ஆண்டின் திட்ட இலக்காகும். 1982-83 ஆம் ஆண்டில் 40 இலட்சம் கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யவேண்டுமென்று மதிப்பிடப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் பட்டுக்கூடு உற்பத்தி 21.00 இலட்சம் கி.கிராம் ஆகும். 1982 டிசம்பர் வரை இத்தொழிலில் 2.8 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. இவ்வாண்டு 1982 டிசம்பர் வரை, 44,430 பேர் புதிதாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நடப்பாண்டில், இதுவரை, கூடுதலாக 8,886 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டுள்ளது. உழவர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ், 4800 உழவர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். ஓர் உழவருக்கு ஒரு திங்களுக்கு பயிற்சியுதவித் தொகை ரூ.150 வீதம் மூன்று திங்களுக்கு வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்னர், உழவர்கள் பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் வாங்குவதற்காக 50 சதவீதம் உதவித் தொகை (ரூ. 150) வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பயிற்சித் திட்டத்துடன், உழவர்களுக்குப் பட்டுப்புழு வளர்ப்பு கருவிகள் வாங்குவதற்காக ரூ. 500 உதவித் தொகையும் (விலையில் 25 சவவீதம்) பட்டுப்புழு வளர்ப்புக் சொட்டகைக் கட்டுவதற்கு ரூ. 750 உதவித் தொகையும் (கட்டுமானச் செலவில் 25 சதவீதம்) வழங்கப்படுகிறது. பட்டுப்புழு வளர்ப்புக் சொட்டகை கட்டுவதற்கும் பட்டுப்புழு வளர்ப்புக் கருவிகள் வாங்குவதற்கும், உழவர்களுக்குத் தேவையான கடன் பெறுவதற்காக, மாவட்டங்களிலுள்ள அதிகாரிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளையும், நிதியுதவிக் கழகங்களையும் அணுகுகின்றனர்.

பட்டுப்புழு வளர்ப்பவர்கள், தங்கள் பொருள்களை நியாய விலையில் விற்பதற்கு இயலும் வகையில் பல்வேறு மையங்களில் பட்டுக்கூடு விற்பனை அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளில் பெண்களுக்கென்றே இரு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று பட்டு நூற்புக் கழிவுகளுக்காகவும், மற்றொன்று ஈரி பட்டுப்புழுக் கூடுகள் விற்பனைக்காகவும் தொடங்கப்பட்டுள்ளன. ஈரி பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி பெறுவதற்காக இவ்வாண்டு 200 உழவர்கள் முன்வந்துள்ளனர். 1982-83 ஆம் ஆண்டில ஈரி பட்டுப்புழு முட்டை உற்பத்தி நிலையம், முட்டை சேமிப்பு நிலையம் ஆகியவற்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. கட்டுமானப் பணி நடந்தேறி வருகிறது.

பைவோல்டின் இனப்பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாண்டு 2,000 உழவர்கள் பைவோல்டின் இனப் பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொண்டுள்ளனர். இப்பட்டுப் புழு வளர்ப்பு திட்டத்தின் கீழ் சுமார் 5 இலட்சம் கி.கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யக் கூடுமென்று மதிப்பிடப்படுகிறது. 117.70 இலட்சம் ரூபாய் செலவில் பைவோல்டின் இன பட்டுப் புழு வளர்ப்பு செயல் விளக்க பயிற்சிப் பிரிவுகள் அமைக்கக் கருதப் பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கெனத் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மூலப்பட்டு விற்பனையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாண்டு, இவ்விணையம் 82,400 கி.கிராம் எடையிள்ள மூலப்பட்டை விற்பனை செய்தது.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம்

தமிழ் நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் நிறுவப்பட்டது. கைத்திறன் தொழில் கைவினைஞர்களுக்கு தொழில் நுடப உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப் பதன் மூலமும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும் இம்மாநிலத்தில் கைத்திறத் தொழில் வளர்ச்சியில் தனியான தோர் எழுச்சியை உருவாக்கிட கைத்திறன் தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கம கக் கொண்டு இந்த நிறுவனம் தனியாக அமைக்கப்பட்டது.

இந்நிறுவனம் நடப்பு ஆண்டில் விற்பனையில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 1982-83 ஆம் ஆண்டில் சுற்றுலா மையங்களான கன்னியாகுமரி மற்றும் பாண்டிச்சேரியிலும் இரண்டு விற்பனை நிலையங்கள் துவங்கப்பட்டன. இந் நிறுவனம் பிற சுற்றுலா மையங்களான பழனி, இராமேஸ்வரம், திருப்பதி, ஹைதராபாத், விஜயவாடா மற்றும் மைசூர் ஆகிய இடங்களில் புதிய விற்பனை நிலையங்களை துவக்குவதற்கு அனைத்து இந்திய கைத்திறன் வாரியத்திடம் நிதியுதவி கோரி உள்ளது. மலை ஜாதியினர் கைவினைப் பொருட்களையும் மற்றும் இம்மாதிரி தனிப்பட்ட கைவினைப் பொருட்களையும் விற்பதற்காக மகாபலிபுரம் மற்றும் உதக மண்டலத்தில் இரண்டு கூடுதல் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது.



இந்நிறுவனம் கைவினைப் பொருட்கள் விற்பனையை அதிகரித்துள்ளது. இந்நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டின் வாணிபத்தொகை ரூ.143.00 இலட்சமாக இருந்தது. 1981-82ல் ரூ. 197.00 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1982-83-ல் இது ரூ. 210.00 இலட்சம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1983-84-ல் வாணிபத்தொகை ரூ. 225.00 இலட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் 1981-82-ல் சுமார் ரூ 5.00 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. அடுத்து வருகின்ற ஆண்டுகளில் விற்பனையை எதிர்பார்த்து தொடர்ந்து அதிகப்படியான இலாபத்தை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிக அழகிய வேலைப்பாடுகள் அமைந்த தமிழ்நாட்டு கைவினைப் பொருட்களை மிக அதிகமான அளவில் மக்கள் காண இயலும் வகையில் இந்நிறுவனம், இந்தியாவின் இதரப் பகுதிகளில் நடைபெறும் பொருட்காட்சிகளில் கலந்து கொண்டு இந்தப் பொருட்களை அந்தப் பகுதி மக்கள் அதிக அளவில் காண வகைசெய்து வருகிறது, இவ்வாறு கலந்து கொண்டுள்ள பொருட் காட்சிகளில் பெரும்பாலவை வியாபார ரீதியிலும், விளம்பர ரீதியிலும் வெற்றிகரமாய் அமைந்தன.

இந்நிறுவனம் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நேரடியாக கொள்முதல் செய்து விற்பதைத் தவிர, தன் சொந்த உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களையும் விற்பனை செய்து வருகிறது. இது குறித்து விசேஷமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் 1981-82 ஆம் ஆண்டு ரூ. 64.00 இலட்சம் பெறுமான கைவினைப் பொருட்களை இந்நிறுவனத்தின் உற்பத்தி நிலையங்கள் தயார் செய்து ஒரு சாதனையை உருவாக்கியுள்ளன. இப்பொருட்களின் உற்பத்தி மதிப்பு 1982-83-ல் ரூ. 70.00 இலட்சமாகவும் 1983-84-ல் ரூ. 8 .00 இலட்சமாகவும் உயரக் கூடும். என எதிர்பார்க்கப்படுகிறது. வெண்கலப் பொருட்கள் மற்றும் உலோக சிற்பங்களைத் தயாரித்தல் போன்ற சில குறிப்பிட்ட கைவினைக் கலைப்பொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு நாச்சியார்கோவில் மற்றும் சுவாமிமலை ஆகிய இடங்களில் புதிய உற்பத்தி நிலையங்கள் துவக்கப் பட்டுள்ளன.

இந்நிறுவனம் தொடர்ந்து கைவினைஞர்களுக்கு அரசுத் துறை திட்டங்கள் மூலமும், ஊரக கைவினைஞர்கள் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் இதர திட்டங்கள் மூலமும் பயிற்சி அளித்து வருவது இந்நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளில் ஒன்றாகும்

இந்நிறுவனம் சூரத்தில் உள்ள இந்திய வைர நிறுவனத்தின் வைரக் கற்கள் வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டுதலில் ஓராண்டு பயிற்சி பெற சில கைவினைஞர்களை அனுப்பி பயிற்சி பெற வைத்துள்ளது. மேலும் இந்நிறுவனம், ஆமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தில் உயர் பயிற்சி பெறவும் சில கைவினைஞர்களை அனுப்பி பயிற்சி பெற செய்துள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்(சிட்கோ)

''சிட்கோ'' என்றழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 1971-ல் தொடங்கப்பட்டது. இது 1971-ல் பொது நிறுவனமாக மாற்றப்பட்டது.

தொழிற்கூடங்கள் கட்டுதல், இன்றியமையாத மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், வழங்குதல், விற்பனைக்கு உதவியளித்தல், முகவாண்மை அடிப்படையில பல வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்குதல், ஆகிய இந்நிறுவன முக்கியமான பணிகள் பெருமளவு அதிகரித்துள்ளன.

கடந்த இரண்டாண்டுகளில், பிள்தங்கிய நிலையிலுள்ள 24 வட்டங்களில் மாநில மூலதன உதவத் தொகை வழங்கும் திட்டமும், விற்பனை உதவித்திட்டமும் புதிதாகச் செயலாக்கப் பட்டுள்ளன. புதிய தொழில்கள் மின்னணு தொழில்கள், மோட்டார் வாகனத் துறைத தொழில், மருந்து தயாரிப்பு (பார்மசியூடிக்ல்ஸ்) ஆகியவற்றுக்கென்று ஏற்படுத்தப்பட்ட தொழில்களுக்கு அதன் சொத்து மதிப்பில் 10 சதவிதத்தை உதவித் தொகையாக வழங்கும் திட்டம் அண்மையில் செயலாக்கப்பட்டுள்ளது. சிறு தொழில்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற, வட்டியில்லா விற்பனை வரிக்கடன் தொகை மேலும் தளர்த்தப்பட்டுள்ளது.

1. நிதி நிலை:

31-3-1982 அன்றுள்ளவாறு இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப் பட்ட மூலதனம் ரூ. 10 கோடியாகும். 31-3-1983 வரை திரட்டப்பட்டு: பயன் படுத்தப்பட்ட நிதி ரூ. 1,659.60 இலட்சமாகும்: 1983-84 ஆம் ஆண்டில் கூடுதலாக, ரூ. 861.62 இலட்சத்தைப் பயன் படுத்தக் கருதப்பட்டுள்ளது.

2. தொழில் பேட்டைகள்—சீரமைக்கப்பட்ட மனைகள்:

(அ) முகவாண்மை தொழிற்பேட்டை.—தவணைமுறைத் தொழிற்கூடங்களைக் குத்தகை—விற்பனை அடிப்படையில் மாற்றுவது குறித்த கொள்கை முடிவு 1982 மார்ச்சில் அரசால் அறிவிக்கப்பட்டது. இதில் 33 தொழில் பேட்டைகளும் அடங்கும். இது பற்றி 675 தொழில் முனைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதில் சேர்க்கப்படவேண்டிய 108 தொழில் கூடங்கள் தவிர, பிற தொழில் கூடங்களை வைத்திருப்பவர்கள் இக்கொள்கை முடிவை ஏற்றுக்கொண்டுள்ளனர்.



(ஆ) மேம்படுத்தப்பட்ட மனை தொழிற்பேட்டைகள்

மேம்படுத்தப்பட்ட மனைகள் கிடைக்கச் செய்யும் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அம்பத்தூர், கிண்டி ஆகிய இடங்களிலுள்ள மனைகள், பெரும்பாலும், முழுவதுமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. துவரக்குடி, கப்பலூர், மேட்டூர் ஆகிய மூன்று தொழில் பேட்டைகளில். முறையே 36, 52, 90 ஏக்கர் மனை உள்ளது.

(இ) 'சிட்கோ' தொழிற்பேட்டை.

1981-82 வரை, 912, பெரிய தொழில் கூடங்களையும் 1,611 சிறுதொழில் கூடங்களையும், இந்நிறுவனம் கட்டியுள்ளது. 1982-83.ல் 239 பெரியதொழில் கூடங்களும் 381 சிறுதொழில் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஈ) ஆலத்தூரில் மருந்து தயாரிப்பு தொழில் மையம்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஆலத்தூரில் மருந்து தயாரிப்புக்கான தொழில் மையம் ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது மேற்படி தொழிற்பேட்டைக்காக 150 ஏக்கர் நிலத்தை வாங்கி சிட்கோவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. மேலும் 50 ஏக்கர் நிலத்தை பெரிய தொழில்களுக்காக சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இந்த மையத்தில் அமைக்கப்படும் தொழில்களுக்கு அதன் நிலையான சொத்தின், மதிப்பில் 10 சதவீதம் உதவித்தொகை அல்லது ஒரு சீரான தொழிலாளிக்கு ரூ. 20,000 இதில் எது குறைவோ அது உதவித் தொகையாக அளிக்கப்படும். இந்த உதவித்தொகையின் உச்ச வரம்பு ரூ. 10 இலட்சமாகும்.

3. தொழில் ஊக்குவிப்புத் திட்டங்கள்.—

மத்திய அரசு, குறிப்பிட்ட கால இடைவெளியில் உதவித் தொகை வழங்கியதால், பல விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. 1982-83 ல்(1982 டிசம்பர் வரையில்) மொத்தத்தில் ரூ. 761.73 இலட்சம் கேட்புத் தொகை கொண்ட, 2,181 விண்ணப்பங்கள் வந்தன. இதே போன்று மாநில அரசால் அறிவிக்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளுக்கு உதவித்தொகை வழங்குவது தொடர்பாக வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்நிறுவனம், பிற திட்டங்களுக்காக வழங்கிய நிதி உதவியும், அதிகரித்துள்ளது. அவ்விவரம் வருமாறு:—

| | | 1981-82. | | 1982-83. | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை, | எண்ணிக்கை | தொகை. |
| | | | | | (ரூ. இலட்சத்தில்) |
| 1 | நலிவுற்ற தொழிற்களுக்கான புனரமைப்புத்திட்டத்தின் கீழ் முன்தொகை உதவி. | 9 | 11.47 | 6 | 15.37 |
| 2 | துவக்க நிதி உதவி | 296 | 9.38 | .. | .. |
| 3 | வட்டியில்லா விற்பனை வரிக் கடன். | 27 | 15.11 | 35 | 23.2 |
| 4 | குறைவழுத்த மின் மின் கட்டண உதவித் தொகை | 179 | 1.23 | 472 | 3.26 |

4. இன்றியமையாத மூலப்பொருள்கள்:

(அ) இரும்பு-உருக்கு.—இரும்பும் உருக்கும் அதிக அளவில் வழங்கப்படுகிறது. மொத்தம் 20,00 மெட்ரிக் டன் என்று உற்பத்தியிருக்க, 1982–83-ல் 12,100 மெட்ரிக் டன் விற்பனையாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) கல்கரி. 1981–82-ல் கல்கரி விற்பனை 18,000 மெட்ரிக் டன்களாக இருக்க, 1983-84-ல் 16,000 மெட்ரிக் டன் விற்பனையாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், கல்கரி தேவைப்படுமளவு கிடைக்கிறது.

(இ) மெழுகு—''சிட்கோ'' மெழுகை நல்ல முறையில் விற்பனை செய்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 7,000 மெட்ரிக் டன் விற்கப்பட்டிருக்க, இதற்கடுத்த ஆண்டில் இவ் விற்பனை 7,300 மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



(ஈ) பொட்டாசியம் குளோரேட்.—இந்நிறுவனம், 1982–83ல் 600 டன் பொட்டாசியம் குளோரேட்டை வழங்கியது. இது முந்தைய ஆண்டில் (1981–82) வழங்கிய 450 மெட்ரிக் டன்னைக் காட்டிலும் மிகையாகும்.

(உ) துத்தநாகம்-ஈயம். 1981–82ஆம் ஆண்டுக்குரிய துத்தநாகம்—ஈயம் விற்பனை 1.146 மெட்ரிக் டன்னாகும். இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1982–83—ல் துத்தநாகம்-ஈயம் விற்பனை 1,320 மெட்ரிக் டன்னாக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

(ஊ) மாட்டுக் கொழுப்பு.—1981–82-ல், 217 மெட்ரிக் டன் மாட்டுக் கொழுப்பு வழங்கப்பட்டது. இந்த ஆண்டில், 300 மெட்ரிக் டன் மாட்டுக் கொழுப்பு வழங்கப் பட்டுள்ளது.

5. சிறுதொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வசதி:

1982-83—ல் சத்துணவுத் திட்டத்தின்கீழ், பல்பொடி வழங்கும்' பணியை, தமிழக அரசு ''சிட்கோ,, நிறுவனத்திடம் ஒப்படைத்தது. விற்பனை வசதி திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தேவைக் குறிப்புத் தொகை முன்னர், 400 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. இது தற்போது ரூ.550 இலட்சமாக அதிகரித்துள்ளது. பல்பொடி, ஆய்வுக் கூட சாதனங்கள், கல்வி கற்பித்தலுக்குப் பயன்படும் உபகரணங்கள், பிற பொருட்கள் ஆகியவை, அடங்கிய ரூ. 475 இலட்சம் மதிப்புள்ள தேவைக் குறிப்பை 'சிட்கோ, நிறுவனம் ஏற்று, அப்பொருள்களை வழங்கவிருக்கிறது.

நடப்பாண்டில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வசதி அளிக்கும் திட்டம், குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்ற மடைந்துள்ளது. 1981–82–ல்150 சிறுதொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட விற்பனை உதவியின் மதிப்பு ரூ. 221.66 இலட்ச மாகும். இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நடப்பாண்டில் மொத்த விற்பனை உதவி சுமார் ரூ. 475 இலட்சமாக இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆகவே விற்பனை உதவி கடந்த ஆண்டைக் காட்டிலும், இருமடங்கிற்கு மேலாக அதிகரித்துள்ளது என்பது தெரிகிறது.

6. 1983–84 ஆம் ஆண்டிற்குரிய திட்டங்கள்;

இந்நிறுவனம் தற்போதுள்ள பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றும், இந்நிறுவனம் ரூ. 500 இலட்சத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதென்றும் சுமார் ரூ. 2,000 இலட்சம் பெறுமான இன்றியமையாத மூலப்பொருள்களை வழங்குவதென்றும் திட்டமிட்டுள்ளது. விற்பனை நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ், ரூ. 500 இலட்சம் வரையில் நிதி உதவி வழங்கவும் கருதியுள்ளது. மேலும் மாநில மூலதன

பொறியியல் பிரிவு

இப்பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 50 அடி உயரத்தில் 24' 5' × 8' அளவுள்ள நீர்த்தொட்டி ஒன்றைத் தயாரித்து நிறுவியுள்ளது.

தச்சுத் தொழில் பிரிவுகள்

இவ்வாண்டில் இப்பிரிவு மொத்தம் ரூ. 35 இலட்ச மதிப்பில் பள்ளிக்கட்டிடங்களுக்குத் தேவையான கட்டுமானங்களையும் ரூ. 2 லட்சம் செலவில் பாலிட்டி நூலகங்களுக்குத் தேவையான எஃகு அடுக்குகளையும் தயாரித்து வழங்கியுள்ளது.

வார்ப்படத் தொழில் பிரிவு

கிண்டியிலுள்ள வார்ப்படத் தொழில் பிரிவு, பம்பாய் கதர்க்குழுவின் உதவியுடன் சமையல் எண்ணெய் எடுப்பதற்கான மேம்பாடடைந்த விசைசெக்கு (power Ghani) ஒன்றைத் தயாரித்து உள்ளது. அந்த இயந்திரங்கள் மாநிலக் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு விற்கப்பட்டன.

சிறப்பு வகையிலான பல்வகைத் தொழில் பிரிவுகள்

வேலூரில் உள்ள தொழில் பிரிவு ஸ்ரீஹரிக்கோட்டாவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு கண்ட்ரோல் பானல்களைத் (Control panels) தயாரித்து வழங்கியதோடு, கல்பாக்கம் அணுசக்தி நிறுவனத்திற்கு, சிறப்பு வடிவமைப்பிலான ஆய்வக மற்றும் அறிவியல் சாதனங்கள் அடங்கிய மேசைகளையும் தயாரித்து வழங்கியுள்ளது.

உதகமண்டலத்திலுள்ள கடிகாரத்தில் தயாரிப்புத் தொழிற் பிரிவு நாளொன்றுக்கு 1,000 கடிகாரங்களைத் தயாரிக்கிறது. இந்துஸ்தான் இயந்திரத் தளவாட நிறுவனம், நாடு முழுவதிலும் அமைந்துள்ள 17 துணைப் பிரிவுகளிடையே, இப்பிரிவு முதல் இடத்தை வகிக்கிறது.

திருச்சிராப்பள்ளியில் உள்ள டான்சி இணைக் கருவிகள் பிரிவு கொள்ளிடம் பாலத்திற்குத் தேவையான கட்டுமானங்களைத் தயாரித்து நிறுவியுள்ளது. இப்பாலம் ஒரே தூணில் 2 மீட்டர் விட்டத்தில் ஒவ்வொன்றும் 30.45 மீட்டர் அளவுள்ள 27 கண்களைக் கொண்டதாகும். இப்பிரிவு மேற்கொண்ட பணிகளில் இது ஒரு புதுவகையாகும்.

இவ்வாண்டில், அம்பத்தூர், டான்சி பாலிஷ் பிரிவு தனது உற்பத்தியைப் பெருக்கியுள்ளது, சிவப்பு ஆக்ஸைடு எனாமல், சாலையில் அடையாளக் குறியிடும் பெயிண்ட். மெலைக் ரெசின் ஆகியவற்றை தயாரிக்கும் திட்டம் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. பின்வரும் குறிப்பிட்ட சில புதிய திட்டங்கள், டான்சி நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளன.

(1) மருந்துகள்–மருந்துப்பொருள்கள் தயாரிக்கும் திட்டம்.

(2) இரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்.

(3) மொக்காசின் காலணி தயாரிக்கும் திட்டம்.—
(டான்சி தோல் பதனிடு நிறுவனத்தில் தயாரிக்கப்படும் தோலுக்கு விற்பனை வாய்ப்புகளைக் கண்டறிதலும், காலணிகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளை அறிந்து ஏற்றுமதி செய்தலும் ஆகிய இரட்டை குறிக்கோள்களுக்காக)

(4) இந்துஸ்தான் இயந்திரத் தளவாட நிறுவனத்தின் உடனுழைப்புடன் பல்புத் தயாரிக்கும் திட்டம் (இந்துஸ்தான் இயந்திரத் தளவாட நிறுவனம், அதன் வணிகக் குறியீட்டுப் பெயரில் விற்பனை செய்தல்).

6. டான்சி நிறுவனம், சுமார் 6,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. மேற் கூறிய புதிய திட்டங்களைச் செயல் படுத்தினால், சுமார் 820 பேர்களுககு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

தமிழ்நாடு மொப்பெட்ஸ் நிறுவனம்

டான்சியின் கிளை நிறுவனம் 19—8—1977 முதல் செயல் பட்டு வருகிறது. இந்நிறுவனம் ''மொபெட்'' வண்டிகளை ''மயூரம்'' என்ற வணிகப் பெயரில் தயாரித்து வந்தது. 1981 சனவரியில் இருந்து ''மொபெட்'' வண்டிகளின் விற்பனை குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, 1–7-1981 முதல் இந்நிறுவனம் மூன்று தனிப் பிரிவுகளை, அதாவது இயந்திரப் பட்டறை, தளவாட அறை இணைப்பு மற்றும் உருக்கு உலோகப் பணிகள் ஆகிய மூன்று பிரிவுகளை அமைத்து குறைந்த அளவு ''மொபெட்' வண்டிகளைத் தயாரிப்பதுடன் வெளியார் கொடுக்கும் பணிகளையும் ஏற்று நிறைவேற்றவும் முடிவு செய்தது. மறைமலை நகரில் மொபெட் தயாரிக்கும் திட்டத்தை ஒரு தனி நிறுவனமாக அமைப்பதற்கும் தயாரிக்கப்படுகின்ற ''மொபெட்'' வண்டிகளின் எண்ணிக்கையை 20,000 வரையில் உயர்த்துவதற்குமான செயற்குறிப்புப் பரிசீலிக்கப்பட்டது.

இதில் அதிகளவு முதலீடு செய்ய வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டும், நிலையான விற்பனை இல்லாததாலும் இந்தியா முழுவதிலும் விற்பனை பணி வசதிகளை ஏற்படுத்துவதில் உள்ள இடையூறுகளினாலும், இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்த இயலாது என்று முடிவு செய்யப்பட்டது. இந்நிறுவனத்திற்குத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் இழப்பைக் கருத்தில் கொண்டு அரசு இதன் வருங்கால செயல்பாடு குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாட்டில் தோல் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அரசு நிறுவியுள்ளது. இதன் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 கோடி. இதன் பதிவு அலுவலகம் வடஆர்க்காடு மாவட்டம் வேலூரில் அமைக்கப்படும். இந்நிறுவனத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

[1983 மாாச ௨௪

(1) சிறுதோல் பதனிடுவோர், ஓரளவு பதனிடப் பட்ட தோலினைச் செய்டவும். அவைனை முற்றுப்பெற்ற தோலாக உற்பத்தி செய்யும் பொருட்டு பரவலாக வசதிகளை ஏற்படுத்துதல்.

(2) காலணி மற்றும் இதர தோல் பொருட்களை, வரைபடம் மற்றும் உருவக் குறிப்புகளைக் கொண்டு தயாரிப் பதற்கான நிலையங்கள் அமைத்தல்.

(3) அவ்வாறு அமைக்கப்பட்ட நிலையங்களின் பொருட்களை விற்பனை செய்ய மற்றும் ஏற்றுமதி உட்பட போதிய உதவியளித்தல்.

(4) தொழிலாளிகளின் தொழில் திறமை மேம்பாடடைய நிலை ான பயிற்சிக்கான ஒருங்கிணைந்த கூட்டுச் சாதனம் அமைத்தல் மற்றும் தோல் தொழிலை நவீனப்படுத்துதல்.

(5) மையக் கேந்திரங்களுக்கு வெளியே தனித்தியங்கும் அடிப்படையான தோல் தொழிலாளர்களை அவர்கள் தொழில் புரியும் சுற்றுப்புறங்களிலேயே ஒன்று சேர்த்துச் செயல்படுத்தச் செய்தல், மூலப் பொருட்கள் அளித்தல், செய்பொருள் மேம்பாடு உற்பத்தியைப் பலதிறப்படுத்துதல், திறனான பொருட்கள் உற்பத்தி, ஏற்றுமதி உட்பட விற்பனைக்கு, தோல் பொருட்களின் பெரிய சந்தைகளில் அவர்களது பொருட்களை ஏற்றுக்கொள்ளல் ஆகியவை போன்ற தோல் தொழிலின் முன்னேற்றத்திற்கான செயல்களை மேற்கொள்ளல். மேலும் ஆதிதிராவிடர்களின் நலனுக்காக சிறப்புப் பகுதித்திட்டத்தின் கீழ் தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள வகுப்பினரின் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை மேற்கொள்ளல்:

(6) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலுள்ள கழிவுநீர்ப் பிரச்சினைகளை மத்திய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தீர்க்கவும், அரசு வர்த்தக நிறுவனம், தோல் வளர்ச்சி நிதியிலிருந்து உதவும் தோல் தொழில் வளர்ச்சி திட்டங்களுக்கான உதவியைப் பெற்றுத் தரும், முறைப்படுத்துசி நிறுவனமாக செயல் படுதல், மற்றும் தோல் மேம்பாட்டிற்கான இதர பல திட்டங்களையும் மேற்கொள்ளல்.

இந்நிறுவனம் அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் பணிகளைத் துவக்க ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

Y211,31'N83
N83-46-4
136014